# MATHIVEERAN.

AN INTERESTING TAMIL NOVEL

BY

S. Selva Raju Reddiar, B.A., L.T.

PRINTED AT THE UNION PRINTING WORKS,
40, HARRIS RD., PUDUPET,
MADRAS.
1924.



...s an ada...

# மதிவீரன்.

ஓர் இனிய செந்தமிழ் நாவல்.



ச. செல்வராஜு ரெட்டியார், பீ.ஏ., எல். டி.,

இயற்றியது.



யூனியன் பிரின்டிங் ஒர்க்ஸ், 40, ஹாரிஸ் ரோட்,
புதுப்பேட்டை,
சென்னை,
1924.



... , it is
. is an adaptation or an

# Introduction.

I am glad to see that Mr. S. Selvaraju Reddiar, B.A., L.T., of St. Gabriel's High School, Madras, is gradually coming to the front as a writer in the field of Tamil literature. He has already published such delightful novels as "சோமசுந்தரம்," "காஸில்டா" "கமலா", etc., and has translated into Tamil, under the caption "லாபமென்ன?" the sublime drama **"What doth it profit?"** (depicting some of the notable incidents in the life of St. Francis Xavier) whose author is no less a person than His Grace the Archbishop of Bombay. Having carefully studied this drama in the original and its Tamil version I was agreeably surprised to see how faithfully, yet not slavishly, Mr. Reddiar has brought out the spirit of the poetical words which Dr. Goodier has put into the mouths of the various characters.

As regards the present work "மதிவீரன்," I have gone through it, as it appeared in the columns of the weekly journal "போதுநலம்" (which is ably edited by Mr. Reddiar himself), and also the original which is one of Scott's famous novels. Here again the author has hit off the spirit of the various incidents and characters of the story in such a natural way that, in my opinion, it is impossible to say whether the work is an adaptation or an original composition.

I am not a Tamil scholar, but I can appreciate good Tamil. Though an amateur, I can say, without fear of contradiction, that Mr. Reddiar writes a simple, clear and manly style and never fails to use the right words to express the most complicated ideas. I am sure that some of his works deserve to be prescribed as Text books in our schools and colleges, not only on account of the merit of the language in which they are written, but also in view of the spirit of morality which pervades through them all. Even elderly persons are sure to find profit and pleasure in these delightful books.

MADRAS, 1—6—1924. S. AMIRTHASWAMI PILLAI, B.A., *Deputy Collector.*

# மதிவீரன்.

## அதிகாரம் 1.

### வழிப்போக்கன்.

இளவேனிற் காலத்தில் ஒருநாள் காலை ஒருயௌவன புருஷன் சித்திரக் கோட்டையின் அருகில் ஓடும் அருவியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். அக்கோட்டை மாதலநாட்டு வள்ளலாகிய விஜயசேன மகாராஜாவுக்குச் சொந்தமானது. அக்கோட்டையும் அதனருகிலிருந்த சித்திரப்புரி என்னும் சிறு நகரமும் மாதல நாட்டின் களஞ்சியம் என்று சொல்லக்கூடியதாய் வயல்களும், சோலைகளும், நதிகளும், ஏரிகளும் நிறைந்த செழிப்பான பாகத்தில் விளங்கின. அக்கோட்டையின் ஒரு பக்கத்தில் மட்டும் மரங்களடர்ந்த ஒரு பெரிய ஆரண்யம் இருந்தது.

வழிப்போக்கன் ஆற்றண்டை வருவதை எதிர் கரையில் நின்ற இரண்டு மனிதர் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தனர். அவன் அன்னிய தேசத்தனுப் 20 வயது இன்னு முடியாத வனப்புவாய்ந்த இளங்காளை என்று அன்னுர் புத்தியிற்பட்டது. அவன் அணிந்திருந்த ஆடையைக்கொண்டு மலைநாட்டு மாந்தனு யிருக்க வேண்டுமென யூகித்துக் கொண்டனர். கையில பெருங்கழி யொன்று வைத்திருந்தான். அவன் வயதிற் குறைந்தவனேனும், பருத்து வளர்ந்திருந்த அவனுடைய தேகம் அவன் மிக்க பலசாலியெனக் காட்டிற்று. அன்னிய நாடேனும், சற்றுங் கலவரமின்றி சாதாரணமாய் நடந்து வந்த விதத்தில் அவன் அஞ்சா நெஞ்சம் படைத்த

இளவலென்று நினைக்க இடமிருந்தது. அவன் வதனம் கண்டவர் மனதைக் கவரும் வசீகரமுடையதாய், எப்போதும் புன்னகை பூத்து விளங்குந் தன்மை வாய்ந்திருந்தது.

அவ்விளைஞன் ஆற்றைக் கடந்து போகத் தண்ணீர் ஓரம் வருகையில், எதிர் கரையிலிருந்த இருவரில் இளையோன், "அவன்தான் நாம் தேடும் குறப்பயல் குப்பன். முகம் நன்றாய்த் தெரியாவிட்டாலும், அவன் நடையுடை பாவனையால் குப்பன் என்று அநேகமாய் நிச்சயமாகச் சொல்வேன். அவன் நிற்கும் இடத்தில் இறங்கிறானே செத்தான். ஆறு பெருக்காயிருப்பதுடன், அவன் நிற்குமிடந் தரையுமல்ல. ஆ, என்ன சத்தம்? தண்ணீர் ஆழமா இல்லையாவென்று கேட்கிறான்போலும்?" என்றான்.

"நமக்கென்ன? அவனே தெரிந்து கொள்ளட்டும். ஆற்றோடே தொலைந்து போனால் சனியன் விட்டது." என்று மற்றவன் சொல்லிக்கொண்டிருக்கையில் அந்நிய நாட்டிளவல் தண்ணீரிற் குதித்து நீந்த ஆரம்பித்தனன். அவன் முகத்தை முதியவன் பார்த்ததும் தன் தோழனை விளித்து, "அடடா, என்ன தவறுதல் செய்துவிட்டாய்! நாம் எதிர்பார்க்கும் மனிதன் இவனல்லவே, பார்". என்று அவனை எச்சரிப்பவன்போற் பேசினான்.

வழிப்போக்கனுக்கு இந்த எச்சரிப்பால் யாதொரு பிரயோசனமுமில்லை. ஏனெனில் அது அவன் காதில் விழுந்ததும் விழாததும் தெரியவில்லை; ஏற்கெனவே அவன் ஆழமான பாகத்துக்கு வந்துவிட்டான். நதியோ நீந்தமுடியாத அவ்வளவு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது; ஆனால் இளைஞன் நீந்துவதிற் கைதேர்ந்தவனாய்க் காணப்பட்டான்.

இதைக்கண்ட முதியவன், "மிக்க சாமர்த்தியசாலிபோல் தோற்றுகிறது. ஓடி யவனுக் குதவிசெய், தாமதியாமல் ஓடு." என்றேவினான்.

தோழனும் கரையை நோக்கி வேகமாய்ச் சென்றான். ஆனால் அவன் வந்து துணைபுரிவதற்கு முன்னதாகவே மலைநாட்டினவன் கரை யேறிவிட்டான்.

"அயோக்கிய நாயே! நான் கூவினது உன்காதிற் பட்டும் ஏன் அதற்கு விடையளிக்கவில்லை? அன்னியரிடம் எவ்வாறு நடந்துகொள்வதென்று உனக்குப் புத்தி படிப்பிக்கிறேன் பார்." என்று அவ்விளைஞன் தன் கையிற் பிடித்திருந்த தடிக்கழியை தலைக்கு மேற் சுழற்றினான். அவன் எதிரியும் உடனே தன்னுடைவாளை எடுத்து போர்புரிய எத்தனிக்கையில் முதியவன் அவண் குறுகித் தன் தோழனை யதட்டி, அன்னியனைப் பார்த்து, "அப்பா நீ செய்தது தப்பிதமாயிருக்க, மற்றவர் பேரிற் குறை கூறுவது சரியல்ல. ஆழமறியாமல் காலைவிடாதே என்னும் பழமொழியை மறந்து, முன்பின் யோசியாமல் தண்ணீரிற் குதித்ததுமன்றி, உனக் குதவி புரிய வந்தவனைத் தூஷித்து சண்டைக் கிழுக்கிறாய். மேலும் நீ அன்னியன். நீ பேசுவது தமிழ் பாஷையேனும், சுலபமாய்க் கண்டுபிடிக்க முடியவில்லை என்ப தனக்குத் தெரியாதுபோலும்." என்று பொறுமையாய்ச் சொன்னான்.

முதியவர் ஒருவர் தன்னை இவ்வாறு கடிந்து பேசும்படி நடந்துகொண்டோமே என்று இளைஞன் வெட்கித் தன் கோலைத் தாழ்த்தி, "ஐயன்மீர், நான் செய்த பிழையை மன்னிக்கவேண்டும். பார்க்கப்போனால் நான் செய்தகாரியம் காலைக்குளியலே யொழிய வேறொன்றுமில்லை. என் ஈரத்துணியை உலர்த்திக் கொள்ளத் தகுந்த இடத்தை எனக்குத் தயவுசெய்து காட்டுவீரா?" என்று தாழ்மையாய்க் கேட்டான்.

முதியவன் :-அப்பா, எங்களை யாரென்று நினைக்கிறாய்?

இளைஞன் :-நீங்கள் இருவரும் இந்நாட்டுக் குடிகள் என்பது நிச்சயம். நீர் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் வர்த்தகரா

யிருக்கலாம். அவரோ கலாப்பு வேலை செய்பவர்போல் தோற்று கிருர்.

முதியவன் சிரித்துக்கொண்டே, "நீ யூகித்தது சரிதான். என் வேலை பண வியாபாரமே; என் தோழர் செய்வது கலாப்பு வேலைக்குச் சமானமானதுதான். உன்னுடைய துணியை உலர்த்திக் கொள்ளவேண்டிய தவசியந்தான். ஆனுல் உனக்கு நான் இடங் காட்டுமுன், நீ யாரென்றும், எங்கே போகிருயென்றும் நான் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் இக்காலத்தில் வழிப் போக்கர் அநேகமாய் அயோக்கியராக இருத்தல் சாதாரணம்." என்முன்.

இளைஞன் அவ்விருவரையும் உற்றுப் பார்த்தான். அவர்களை நம்பலாமா கூடாதா என்னும் சந்தேகம் அவன் மனதில் ஜனித்தது. இருவரில் முதியோன் ஒரு வியாபாரிபோலவே காணப்பட்டான். அவன் அணிந்திருந்த ஆடை பலதரஞ் சலவைசெய்து நாள் பலக் கண்டதெனத் தெரிந்தது. முதிர் வயதானபடியால் அவன் கன்னங்கள் ஒட்டி, கண்கள் குழிவிழுந்திருந்தன. ஆயினும் புத்தி கூர்மையும் சாதுர்யமும் உடையவனென அவன் முகக்குறிகள் காட்டின. மற்றவர்களை ஏவல்கொள்ளும் பழக்கமுடையவனுய்த் தோற்றினுன். அவன் விழி யமைப்பை நோக்கு மளவில், அவன் கட்டளையை மீறி நடப்போர்க் கனர்த்தமே என்று சொல்லக் கூடியதாயிருந்தது. மலைநாட்டிளவல் அம்முதியவன் மட்டில் நல்லபிப்பிராயமுடையவனுய், அவன்மேற் கொஞ்சம் பிரியங்கொண்டான். அனுல் அவன் இவ்வாறு ஏழையைப்போல் உடைதரித்திருப்பது அவனுக்கு ஆச்சர்யத்தை விளைத்தது.

அவன் தோழனே நடுவயதினனுய் சற்றேபருத்த சரீரமும், விகாரமுகமும், கெடுதற்குறியான புன்னகையுங் கொண்டவன்.

அவன் உடைவாளுங் கத்தியுமணிந்து, மேற்சட்டைக்குள் கவசந் தரித்திருந்தான்.

இளைஞன் கடைசியில் அவ்விருவரையும் நம்புவதே சரியெனத் தீர்மானித்து, "நான் மலைநாட்டில் வசிப்பவன். பிழைப்புக்காக இந்நாட்டுக்கு வந்தேன்." என்று பதில் அளித்தான்.

முதியவன்:-திரம்ப சந்தோஷம்! பார்வைக்கு நல்லவனாகவே தோன்றுகிறாய். நான் வர்த்தகன் என்று நீயே சொன்னாய். என் வியாபாரத்துக் குதவியாயிருக்க ஒரு வாலிபன் தேவை. என்னிடம் வேலைக்கமரப் பிரியந்தானா? என்ன சொல்லுகிறாய்?

இளைஞன்:-நீர் செய்ய இருக்கும் உபகாரத்திற்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நீர் சொல்லும் வேலைக்கு நான் தகுந்தவனல்லவே.

முதியவன்:-என்ன? கணக்கெழுதுவதினும் கவண்கல்லெறிவதும் அம்பெய்வதும் உனக்குச் சுலபமாய் வரும் போலும்?

இளைஞன்:-மெய்தான். வில்வித்தை கொஞ்சந்தெரியும். எழுதப் படிக்கவுங் கற்றிருக்கிறேன்.

முதியவன்:-திரம்ப சந்தோஷம்! உன்னைப்போன்ற வாலிபன் கிடைத்தலரிது!

இளைஞன், தன் புதிய நண்பர் தன்னை ஏளனம் செய்து பேசுவதாக நினைத்து சற்றே மனம் புழுங்கி, "ஐயோ, நான் தங்கள் வினாக்களுக்கு விடையளிப்பதில் வெகுநேரம் போக்கிவிட்டேன். உடையை உலர்த்தவேண்டும், போய் வருகிறேன்." என்றான்.

வர்த்தகன் சிரித்துக் கொண்டே, "மலைநாட்டு வாலிபனே, உன் ஜாதியார்க் கியல்பாயுள்ள பெருமை நின்னிடமு மில்லாமற் போகுமா? நல்லது நானும் மலைநாட்டில் வியாபாரஞ் செய்திருக்

கிறேன்; அத்தேசத்தார் மட்டில் எனக்கெப்போதும் அபிமானம். அதோ தெரியும் ஊருக்கு என்னுடன் வந்தால் நீ யுண்டு களைப்பாறலாம். ஏ, கையில் வைத்திருப்பதென்ன? கவணுங் கல்லுமோ? இந்த அரசனுக்குச் சொந்தமான காடென்பதை யறியாயோ? இங்கே எவரும் வேட்டை யாடலாகாதென்று கண்டிப்பான உத்திரவாயிற்றே." என்றான்.

இளைஞன்:-இதை எனக்குக் கற்பித்தவன் மந்திர நாட்டதிபதியின் வனக்காவலனே. நான் கவண் கல்லெறிந்து ஒரு புறாவை வீழ்த்தினேன். அவன் அதை யெடுத்துக்கொண்டு அதிகாரியிடம் போக எத்தனித்தான்.

வர்த்தகன்:-நீ என்ன செய்தாய்?

இளைஞன்:-அவனைப் பிடித்துச் சரியான உதை கொடுத்துப் படுக்க வைத்துவிட்டேன்.

வர்த்தகன்:-சரிதான், மந்திர நாட்டதிபதியின் கையிற் சிக்கியிருந்தால், உன்னைத் தூக்கிலிடும்படி உத்திரவா யிருக்கு மென்று உனக்குத் தெரியுமா?

இளைஞன்:-அத்தகைய வேலையில் அவர் மாதல நாட்டு மன்னனைப்போலவே தீவிர புத்தியுடையவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நான் அந்நாட்டெல்லையில் இருந்தபடியால், அதைக் கடந்தப்பால் வந்த அவனைப் பார்த்து நகைத்துக் கேலி செய்தேன். அவ்வனக்காவலன அவ்வளவு ஆத்திர முடையவனாயில்லா விட்டால், அந்நாட்டிலேயே வேலை சம்பாதித்திருப்பேன்.

வர்த்தகன்:-அவனுக்கும் விஜயசேனனுக்கும் சமாதானங் குலைந்து போர் நிகழுமாயின், உன்னைப்போன்ற வீரர் சேவை அவனுக் கவசியமே.

இளைஞன்:-ஐயன்மீர், நான் பேசுவது உங்களுக்குக் கேலியாகவும், காலப்போக்காகவும் இருக்கிறது போலும். ஜாக்கிரதை! என்னை ஒரு குழந்தையென்று நினைத்துக் கொண்டீர்களா, என்ன? எனக்குக் கோபமூட்டினால், உங்களிருவரையும் நையப் புடைக்க வல்ல மனிதன் நான் என்பது ஞாபகத்திலிருக்கட்டும்.

இந்தப்பதிலைக் கேட்டு வர்த்தகன் உடல் குலுங்க நகைத்தான். ஆனால் அவன் தோழனோ கோபக்குறியுடன் வாள்பிடிமேல் கை வைத்தான். அதைப்பார்த்த இளைஞன் உடனே தன் கழியால் அவன் மணிக்கட்டில் அடித்தான். வர்த்தகனுக்கு இச்செய்கையால் சிரிப்பு அதிகரித்ததேனும், அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு இளைஞனைக் கடுகடுத்த முகத்துடனோக்கி, "ஏ, இந்தத் துஷ்டச்செயல் கூடவே கூடாது. என்னை இவ்வாறு எவரும் நடத்தினதில்லை. என் தோழனுக்குக் கிடைத்தது போதுமானது. ஆதலால் இத்தகைய முரட்டு வேலையைவிட்டு, உன்பேர் என்னவென்று சொல்." என்றான்.

இளைஞன்:-என்பேர் மதிவீரன். நான் உயர் குலத்துதித்தவன். எனக்கு இராணுவத்திற் சேரப்பிரியம்.

வர்த்தகன்:-மலைநாட்டு மாந்தர்க்குரிய தைரியம் இவ்விளவலிடம் இல்லாமற் போகுமா? பெருமையிற் குறைவில்லை, ஆனால் வறுமை வாட்டுகிறது. நல்லது, நண்பா, முன்னதாகப்போய், காலையுணவிற்கு வேண்டிய ஏற்பாடு செய்; போ.

அவன் நண்பனும் உத்திரவின்படியே புறப்பட்டுப்போயினன். முதியவனும் மதிவீரனும் மெதுவாய் நடந்து மரங்களடர்ந்துள்ள வனத்திற் புகுந்தனர். அவ்வனத்தின் மத்தியில் ஒரு பாதையிருந்தது. அப்பாதையில் கலைமான்கள் தொலையில் ஓடுவதை இளைஞன் பார்த்தான். உடனே முதியவனைப் பார்த்து. "என் வில் வித்தையைக் காணவிருப்பமானால் ஒரு வில்லும் அம்பும் கொண்டு

வாரும். ஒரே அம்பினால் அம்மானைக்கொன்று உம்மிடம் கொண்டு வருகிறேன்." என்றான்.

வர்த்தகன், "ஜாக்கிறதையாயிரு. இந்த மான்கள் யாவும் என் சிநேகிதனுடைய காவலில் இருக்கின்றன. அவன் மிகக் கண்டிப்புடையவன்." என்று தான் சொல்லியது அவ்வளவாய் விரும்பத்தகாததுபோல், ஒருவாறு புன்னகை கொண்டான்.

"நான் இப்பாகங்களில் கள்வர் உண்டெனக் கேள்விப்பட்டிருக்கிறேன். இக்கிழப்பயல் கருத்தென்னவோ? ஒருக்கால் என்னைத் தன் நண்பனிட மழைத்துக் கொண்டுபோய் கொல்ல யோசித்திருக்கிறானோ? எதற்கும் நாம் ஜாக்கிரதையாயிருத்தல் நல்லது." என்று தனக்குள்ளாகவே நினைத்துக் கொண்டான் மலைநாட்டு மைந்தனாகிய மதிவீரன்.

இவ்வாறு இருவரும் நடக்கையில் வனத்தின் மத்தியில் இருந்த ஒரு சிறு கோவிலண்டை வந்ததும், முதியவன் அங்கேநின்று சற்றே ஜெபித்தான். இதைப்பார்த்த மதிவீரன் தான் கொண்ட சந்தேகம் தவறென்று தெரிந்து கொண்டான். கோவிலை விட்டுப் புறப்பட்டுக் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஊரைக் குறுகினர்.

வர்த்தகன் :-சித்திரக் கோட்டை சமீபத்தில்தான் இருக்கிறது. இந்த வழியைத் தவிர மற்ற இடமெல்லாம் அபாயகரமானது. எங்கே பார்த்தாலும் கண்ணுக்குத் தெரியாத பொறிகள் இருக்கின்றன. ஆங்காங்கிருக்கும் படுகுழிகளில் விழுபவர்கள் மீண்டும் உயிரோடு வெளியேறுவது கஷ்டம்.

மதிவீரன் :-நான் மட்டும் மாதல நாட்டு மன்னனாயிருந்தால், இத்தகைய பொறிகளைக்கொண்டு என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பதிலாய், தேசத்தை நீதியோடாண்டு, கெட்ட எண்ணத்துடன் எவரும் என் வாசஸ்தலத்தண்டை வாராதிருக்கு மார்க்கத்தைத் தேடிக்கொள்வேன்.

வர்த்தகன் :-உஸ், சத்தமாய்ப் பேசாதே. இங்கே இருக்கும இலைகள் ஒவ்வொன்றும் செவியைப் போலிருந்து, வருகிறவர் போகிறவர் பேசுவதனைத்தையும் அரசனுக்குத் தெரிவிக்கின்றன. பகலில் பக்கம் பார்த்துப்பேசு, இரவில் அதுவும் பேசாதே என்னும் மூதுரையை மறவாதே.

மதிவீரன் :-அதனால் எனக்கென்ன? என் மனதிலுள்ளதை விஜயசேன மன்னரிடமே நேரிற் சொல்லுவேன். கடவுள் அவரைக் காப்பாராக!

---

## அதிகாரம் 2.

---

### சித்திரக் கோட்டை.

மதிவீரனும் அவன் நண்பனும் இவ்வாறு பேசிக்கொண்டே சித்திரக்கோட்டையின் முன்மதிலருகில் வந்துவிட்டனர். அபாயம் நிறைந்த அக்காலத்தில் கனவான்களும் தனவான்களும் காவல் நிறைந்த கோட்டைகளில் வசிக்கவேண்டியிருந்தது. அதிலும் இந்தக் கோட்டையோ காவல் விஷயத்தில் மற்ற கோட்டைகளைவிட விசேஷ ஏற்பாடுகள் செய்யப் பெற்றதாயிருந்தது.

இருவரும் வனத்தினோரத்தில் சற்று நின்றனர். மதிவீரன் அக்கோட்டையை மிக்க ஆசையும் சிரத்தையும் நிறைந்த பார்வை போடு கூர்ந்து நோக்கினன்.

அக்கோட்டையைச் சுற்றிலும் ஒன்றன்பின் ஒன்றாய் மூன்று மதில்கள் நின்றன. நான்கு மூலைகளிலும் கோபுரங்கள் விளங்கின. ஒவ்வொரு மதிலைச் சுற்றிலும் நீர் நிறைந்த அகழியிருந்தது. இவை

களுக்கு நடுவில்தான் அரசனுடைய மாளிகையும் சேனைகளின் வாசஸ்தானங்களும் அமைக்கப்பட்டிருந்தன. கருங்கற்களால் கட்டப்பட்டுப் பலகணிகள் உட்பாகத்திலிருந்த முற்றத்தில் திறக்கும்படியாயிருந்தன. மத்தியில் ஒருயர்ந்த கோபுரம் வானுறவோங்கி விளங்கிற்று. வெளி மதிற்பக்கம் உள்ளே நுழைவதற்காக அமைக்கப்பட்டிருந்த ஒரே வாயிலின் இருபக்கமும் இரண்டு சிறிய கோபுரங்கள் நின்றன. அகழியைக் கடப்பதற்கு அவ்வாயிலுக் கருகில் ஓர் இழுவைப் பாலம் இருந்தது. அது மதிவீரன் பார்க்கையில் வாயிலை மூடிக்கொண்டிருந்தது.

"தம்பி, இத்தகைய பலமான கோட்டையை நீ எங்கேனும் பார்த்திருக்கிறாயா? அதைத் தாக்கும் தைரியம் வாய்ந்த வீரரும் இருக்கின்றனரா?" என்று வர்த்தகன் கேட்டான்.

மதிவீரன் முகம் சிவந்தது. "இக்கோட்டை மிகப் பலமான தென்பது உண்மையே; காவலும் பலமாகத்தானிருக்கிறது. ஆனால் துணிச்சல்கொண்ட பராக்கிரம சாலிகளுக்கு எதுவும் பிரமாதமாகத் தோற்றாது." என்று பதிலுரைத்தான்.

வர்த்தகன் :-நீ அவ்வாறு செய்யத் துணிவாயா?

மதி :-என் தந்தை செய்யாத வீரச்செயலா? சிங்கத்தின் வயிற்றிற் பிறந்தது சிறு பூனைபோல் நடக்கவுங் கூடுமோ?

வர்த்த :-நீ அவ்வாறு செய்ய முயன்றால், உன் சாட்டினையே அங்கே காண்பாய். அக்கோட்டையைக் காப்பவர் மலைநாட்டு வீரரே. உயர்குலத்தி லுதித்த ஐந்நூறு வீரர் விஜயசேனரின் மெய்க் காப்பாளர் என்ப துனக்குத் தெரியாதுபோலும்.

மதி :-நான் விஜயசேன மன்னராயிருந்தால், என்ன செய்வேன் தெரியுமா? அந்த மலைநாட்டு வீரரின் காவலை நம்பி, இந்த

மதில்களை யெல்லாந் தகர்த்தெறிந்து, அகழிகளைத் தூர்த்து மட்ட மாக்கி, நாட்டிலுள்ள பிரபுக்களை வரவழைத்துப் பெரிய விருந்து வைப்பேன்.

வர்த்தகன் இதைக்கேட்டுப் புன்னகை புரிந்தான். பின்னர் இருவரும் கோட்டையைவிட்டு வேறு பக்கமாய் வர்த்தகன் முன் னும் மதிவீரன் பின்னுமாக வழிநடந்தனர். "இந்த வழியே போனால் சித்திரப்புரி யென்னும் சிற்றூருக்குக் கொண்டுசேர்க்கும். அங்கே ஒரு சத்திரம் இருக்கிறது. ஆனால் உனக்குத் தெரிந்தவர்கள் இப்பக்கத்தில் யாராவதுண்டா? ஒருக்கால் அவரைத் தேடி வந்தனை போலும்?" என்று முதியவன் கேட்டான்.

மதி:-எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவர் என் தாயின் சொந்தச் சகோதரர். அவர் நாமம் வாதுசர்.

வர்த்த:-அவரை நான் அறிவேன். அவர் தைரியம் வாய்ந்த உத்தமவீரர்; அரசன் மெய்க்காப்பாளரில் ஒருவர். உன் மாமனோடு நீயும் காவற்படையிற் சேவை செய்ய விரும்புவாயென்று நினைக்கிறேன்.

மதி:-ஒரு சமயத்தில் அப்படியே நினைத்திருந்தேன். ஆனால் கூண்டிலடைப் பட்டிருக்கும் குருவியைப்போல் அக்கோட்டைக்குள் வாசஞ்செய்வதென்றால் என்னால் முடியாது. ஆகாயத்திற் பறக்கும் பட்சியைப்போல் வெளியில் உலாவித் திரிவதே எனக்குப் பிரியம். மேலும் நான் வரும்போது என்னைப்போன்ற ஒரு மனிதன் கழுத்திற் கட்டிய கயிற்றுடன் மரத்தில் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன். அத்தகைய வழக்கமெல்லாம் எனக்குப் பிடிக்காது.

வர்த்த:-அக்காட்சியில் விசேஷமொன்று மில்லை. பகல் குறைந்தும் இரவு நீண்டுமிருக்கும் இப்பருவத்தில் கள்வர் அதிகமாயிருப்

பதால், ஒரேதினத்தில் பத்து அல்லது இருபது பேர்கூட இவ்வாறு தொங்குவதைக் காணநேரும். இஃதோர் அதிசயமல்லவே. இவை எங்கள் அரசரின் நீதியைக் காட்டுங் குறிகளாம்.

மதி :-நான் விஜயசேன வேந்தராயிருந்தால், என் அரண்மனைக்கு வெகு தூரத்தில் அவர்களைத் தூக்கிலிட உத்திரவு செய்திருப்பேன். ஆ, இதோ ஊருக்குள் வந்துவிட்டோம். சத்திரத்துக்கு விரைந்து செல்வோம். பசியெடுக்கிறது. எல்லாம் சரிதான், இவ்வளவு தூரம் பேசியும் உமது பேரை எனக்குச் சொல்லவில்லையே.

“வெற்றியாளன் என்றென்னைக் கூப்பிடுவோர்கள்.” என்று வர்த்தகன் சொல்லி, ஊரின் நடுவீதியை விட்டு ஒரு சந்திற்புகுந்து தனிமையான ஒரு கட்டடத்துக்கு மதிவீரனை யழைத்துச் சென்றான். “இந்தச் சத்திரம் சாதாரண வழிப்போக்கர் வந்து தங்குவதல்ல; உயர்குல மாந்தருக்கே இஃது உரியது. நிற்க, நீ இன்றைக்கு ஆற்றில் நனைய நேர்ந்தது என் தப்பிதத்தாலல்லவா? அதற்குப் பதிலாய் நான் உனக்குப் போசனம் செய்துவைப்பது என் கடமையாயிருக்கட்டும்.” என்று வர்த்தகன் மொழிந்தான்.

மதி :-ஆமாம், நனைந்த விஷயத்தை மறந்துபோய்விட்டேன். என் ஆடையும் அநேகமாய் உலர்ந்துவிட்டது. நீர் அன்புடன் செய்யும் உபசரிப்பை நான் வேண்டாமென்று சொல்வது மரியாதையாகாது. உமதிஷ்டப்படிச் செய்யும்.

இவ்வாறு பேசிக்கொண்டே சத்திரத்தை நெருங்கிவிட்டனர். மாதல நாட்டின் அரசசின்னமாகிய மகரமீன்கொடி அங்கே பறந்தது. கோட்டைக்கு அலுவலாய் வரும் பிரபுக்கள் அச்சத்திரத்தில் தங்கிப்போவது வழக்கம். ஏனெனில் விஜயசேன வள்ளல் தன்னைக் காண வருபவர்களைக் கோட்டையில் தங்கியிருக்க அநு

மதிப்பதில்லையாம். ஆனபோதிலும் அச்சமயத்தில் சத்திரத்தண்டை ஜனச் சந்தடியே இல்லாமலிருந்தது. அதனால் விருந்தாடிகள் எவரும் அங்கேயில்லையெனத் தெரிந்தது. சாதாரணமாய்ச் சத்திரஞ்சாவடிகளில் ஜனக்கும்பல் இருப்பது வழக்கம். ஆனால் அந்தச் சத்திரமோ நிர்மானுஷ்யமான காட்டில் நிருமாணிக்கப்பெற்றதுபோல் தோன்றிற்று.

வெற்றியாளன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போக, நமதினவனும் அவனைப் பின்பற்றினன். அறை விசாலமாகவும் வழிப்போக்கர் தங்குவதற்கான சௌகர்யங்கள் நிறைந்ததாகவும் இருந்தது. வர்த்தகன் ஏதோ பேர்சொல்லி யழைத்தான். உடனே அச்சத்திரச் சொந்தக்காரன் உள்ளே நுழைந்து, போசனத்துக்கு வேண்டியவைகளைத் தயார்செய்தனன்.

---

## அதிகாரம் 3.

---

### காலைபோசனம்.

காலைபோசனம் வெகு திருப்திகரமாகவே இருந்தது. சடந்த இருதினங்களாய் மதிவீரன் சரிபாய்ச் சாப்பிடவில்லை; அவனுடைய பெரும்பசி சத்திரக்காரனுக்கே ஆச்சர்யத்தை விளைத்ததென்றால் அதன் கோரத்தைச் சொல்லவும் வேண்டுமோ? வெற்றியாளனும் அவன் சாப்பிடுவதை வேடிக்கையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான்.

மதிவீரன், "என் பசியைப் பார்த்தால் உமக்குச் சிரிப்பு வருகிறது போலும்? சரி, நீர் ஒன்றும் சாப்பிடாமல் உட்கார்ந்துகொண்டிருக்கிறீரே" என்று கேட்டான்.

"எனக்கின்றைக்கோர் விரதம். மத்தியானந்தான் நான் சாப்பிடக்கூடும். குளிர்ந்த ஜலமும் ஒரு வாழைப்பழமும் வேண்டுமானால் சாப்பிடலாம்." என்று வெற்றியாளன் சத்திரககாரன் பக்கந் திரும்பி, "அப்பா நீ போய் கொஞ்சம் பழமுந் தண்ணீரும் பெரியவனிடங் கொடுத்தனுப்பு." என்றான்.

சத்திரக்காரன் அறையை விட்டகன்றான். "நான் மலை நாட்டைவிட்டு வந்ததுமுதல் இதுகாறும் இன்றைய போசனத்தைப்போல் அருந்தினதே யில்லை." என்றான் மதிவீரன்.

வெற்றி:-மலைநாட்டு மெய்க்காப்பாளர் இதைவிட மேலான உணவை தினமும் அருந்தி வருகிறார்களே. நீயேன் அவர்களோடு சேர்ந்து கொள்ளக்கூடாது? உன் மாமன் அது விஷயத்தில் உனக்குதவி செய்யக்கூடுமென்று நினைக்கிறேன். எனக்கும் கொஞ்சம் செல்வாக்குண்டு.

மதி:-உமது அன்பிற்கு வந்தனம். ஆனால் நல்லுணவும் அலங்காரமான ஆடையுமிருந்தாற் போதுமா? என் பராக்கிரமத்தைக் காட்டி முன்னுக்கு வரவேண்டுமென்பது என்னாவல். விஜயசேன மன்னர் இந்தக் கோட்டையில் தங்கியிருப்பார், அல்லது ஒரு கோட்டையிலிருந்து மற்றொரு கோட்டைக்குப் போவார். யுத்தகளத்தில் போர் புரிந்து நாடு நகரங்களைப் பிடிப்பதற்குப் பதிலாய் கய வஞ்சகத்தாலும் மற்றும் பல தந்திர யுக்தியாலும் அவைகளைக் கைப்பற்றி வருகிறார். அத்தகைய இடத்தில் என் விருப்பம் எவ்வாறு நிறைவேறும்?

வெற்றி:-வாலிபா, மன்னர்தஞ் செய்கைகளிற் குற்றங் காண்பது சரியல்ல. விஜயசேனர் தன் குடிகளின் உயிரைக் காப்பாற்

றுகிறார். தன்னுயிரைத் திரணமாய் மதிக்கிறார். செங்காட்டில் நடந்தபோரில் அவர் காட்டிய வீரச்செயலைப்பற்றி நீ கேட்டதில்லையா?

மதி:-அது பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னல்லவா? போர்முனையில் நின்று எதிரியைத் தாக்கும் வீரதீரம் வாய்ந்த மன்னனைப் பின்பற்றிப்போவதே என் விருப்பு.

வெற்றி:-அப்படியாயின், மந்திர நாட்டதிபனிடம் ஏன் வேலைக்கமரவில்லை? அவனிடம் தினமும் உன் எலும்புகளை முறிப்பதற்கான சந்தர்ப்பம் இருந்துகொண்டே யிருக்கும்.

மதி:-காரணம் முன்னமே சொன்னேனே. அவருடைய வனக்காவலனை நையப்புடைத்தேன். அதனால் அவரிடம் சேவை செய்யத் துணியவில்லை.

வெற்றி:-மதியீனராகிய சிறுவர் சேவைசெய்யத் தகுந்த வீரர் தானா அகப்படமாட்டார்கள்? காலாடி வில்லியனோடு போய் சேர்ந்து கொள்ளலாமே.

மதி:-என்ன சொன்னீர்! அக்காலாடியுடனா? கள்வருக்குங் கொலைப் பாதகருக்குந் தலைவனாகிய வில்லியனோடா? கொலை களவுக் கஞ்சாக் கொடும்பாவியாயிற்றே அவன! பெண்களென்றும் பிள்ளைகளென்றும் பாராத பஞ்சமாப்பாதகனிடமா என்னைப் போய்ச் சேரச் சொல்லுகிறீர்?

வெற்றி:-அப்படியானால் நீயே தலைவனாயிருந்து ஒரு படையைச் சேர்த்துக்கொள். உன்னை அதிகாரஞ் செய்வதற்கேற்ற தலைவர் எவரும் இல்லையென்று நினைக்கிறேன்.

அச்சமயத்தில் கதவைத் திறந்துகொண்டு உத்தேசம் பதினாறு வயதுள்ள இளநங்கை யொருவள் ஒரு தட்டில் இரண்டு மூன்று வாழைப் பழங்களும் ஒரு வெள்ளி லோட்டாவில் கொஞ்சம் தண்ணீரும் எடுத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தாள். உடனே மதிவீரன் பார்வை அம்மாதின்பாற் சென்றது. அவளுடைய நீண்டு வளர்ந்த கருங்கூந்தலைப் பின்னி முடித்த சடைமேல் மல்லிகை மலர் சூடியிருந்தாள். குவளை மலரை நிகர்த்த அவள் கருவிழிகளினின்றும் கருணைப் பிரகாசம் வீசியது. அவள் அங்க அமைப்பும் முகவனப்பும் கண்டவர் மனதைக் கவரும் பான்மையன. ஆனால் அவள் வதனம் ஒளிமங்கிய சந்திரன் போலிருந்தது. அவ்விளம்பாவை ஏதோ ஒரு பெருங் கஷ்டத்துக்காளாய் வருந்துவதாக மதிவீரன் உத்தியிற்பட்டது.

"என்ன அமலா, இதன்பொருள் எனக்கு விளங்கவில்லையே. உன் அத்தையை யல்லவோ எடுத்து வரும்படிச் சொன்னேன்? எனக்குப் பணிவிடை செய்வது அவள் கௌரவத்துக்குப் பொருந்தாதென நினைத்தனள் போலும்." என்று வெறியாளன் பயமுறுத்துவதுபோல் கோபமாய்ப் பேசினான்.

அமலா என்னும் அப்பெண்மணி, "என் அத்தைக்குச் சௌக்கியமில்லை." என்று அச்சத்துடன் தாழ்மையாய் விடை பகர்ந்தனள். அவளுடைய அச்சம் நிறைந்த பார்வையானது வர்த்தகன் மனதில் இரக்கத்தை யெழுப்புவதுபோலிருந்தது. ஏனெனில் அவன், "அமலா, உன்மேல் குறை கூறவில்லை. என்னை யுபசரிப்பதற்கும் தகுந்த வயது உனக்கில்லை யென்றெனக்குத் தெரியும். ஆனால் உலகில் பெண்களை நம்பொணாது; இது மெய்தானா வென்று இம்மேனாட்டு வீரரைக் கேள். அவரும் அதே அபிப்பிராயமுடையவராகவே இருப்பதை யறிவாய்." என்று அமைதியாய் மொழிந்தான்.

மதிவீரனுடைய அநுதாபத்தையும் ஆதரவையும் நாடுபவள் போல் அமலா அவனை நோக்கினாள். இளைஞன் வர்த்தகன் பக்கந் திரும்பி, "இம்மாதரசியின் இன்பப் பார்வையைப்போலவே மனமும் உண்மையும் தூய்மையும் நிறைந்திருக்காதெனச் சொல்லுந் துணிச்சலுடையவன் எவனாயினுஞ் சரி, அவனோடு நான் சமராடத் தயார்." என இரைந்து பேசினான்.

அமலாவுக்கு அச்சம் அதிகரித்தது. என்ன நேருமோவென வெற்றியாளனைக் கிலேசம் நிறைந்த முகத்தோடு பார்த்தாள். அவனோ சிரித்துக்கொண்டே, "நீயோ இளைஞன். அநுபோகம் போதாது. அரசரைப்பற்றி எவ்வளவு தெரியுமோ, அவ்வளவே பெண்களைப்பற்றியுனக்குத் தெரிந்ததும்." என்றான்.

இந்த அதிசயக் கிழவனுடைய வார்த்தைகளும் செய்கைகளும் மதிவீரனுக்கு ஆச்சர்யத்தையும் அச்சத்தையுந் தந்தன. ஆனால் தான் ஒரு மலைநாட்டு உயர்குல வீரன் என்றும், மற்றவன் மாதலநாட்டு வர்த்தகனே என்றும் தனக்குள்ளாகவே நினைத்துப் பார்த்துத் தன்னையே திடப்படுத்திக்கொண்டான்.

இதற்கிடையில் வெற்றியாளன் அமலாவின் தலையைத் தடவிக்கொண்டு புன்னகையோடு, "இவ்விளைஞன் எனக்கு வேண்டியதைச் செய்வான், அமலா. நீ போகலாம்." என்றான். அவ்வனிதையும் சொன்னதே போதுமென்று உடனே அவ்வறையை விட்டகன்றாள்.

வெற்றியாளன் எழுந்து அங்கே போடப்பட்டிருந்த சாய்ப்பாசனத்திலமர்ந்து அவனது கூரிய கண்கள் மறையும்படியாக நெற்றியைச் சுளித்துக்கொண்டு யோசனையிலாழ்ந்தான். பின்னர் தலையை நிமிர்த்தி, "அச்சிறுமாதைப் பார்த்தனையா, மதிவீரா? அவ்வளவு பேரழகு வாய்ந்த பெண்மணி இந்த விடுதியில் பணிப்

பெண்ணையிருப்பது உனக்கு விபரீதமாய்த் தோன்றவில்லையா?" என்று கேட்டான்.

அழகெல்லாந் திரண்டு உருவெடுத்து வந்த தென்னும்படியான சித்திரப் பாவைபோன்ற அவ்வாரணங்கு பணிப்பெண்ணென்றறியவே மதிவீரன் மனதில் ஒருவித ஆசாபங்கம் உண்டாயது. வெற்றியாளன் யாரென்று தெரிந்துகொள்ளும் ஆவல் அதிகரித்தது. அவன் முகம் பார்வைக்கு அவ்வளவு சந்தோஷகரமாகத் தோற்றவில்லை; அவன் தேக அமைப்பும் வளர்ந்தன்றிச் சுருங்கியிருந்தது. அவன் அணிந்திருந்த ஆடையும் கிழிந்து மாசுபடிந்திருந்தது; ஆயினும் கட்டளையிடுவதும் வணக்கம் பெறுவதுமே அவனுக்குப் பழக்கம் என்று நினைக்க இடமிருந்தது. அம்மாகாணத்தின் பெரிய உத்தியோகஸ்தரில் ஒருவனாயிருப்பினும் இருக்கலாம் எனக் கருதினான்.

வெற்றியாளன் தன்னிடுப்பிலிருந்து ஒரு பணப்பையை எடுத்து சில வெள்ளி நாணயங்களை வெள்ளி லோட்டாவில் போட்டு மதிவீரனிடந் தந்து, "இதை யுன் செலவுக்கு வைத்துக்கொள். உன் மாமனைப் பார்க்குமளவும் நீ இங்கேயே தங்கியிருக்கலாம். இன்றைய பிற்பகல் உன் மாமனுக்கு வேலையில்லை யென்று நினைக்கிறேன். நான் ஓரலுவலாய்க் கோட்டைக்குப் போகிறேன். அப்போது நீ வந்திருப்பதை அவனுக்குத் தெரிவிக்கிறேன்." என்றான்.

மதிவீரன் பணம் வேண்டாம் என்று சொல்ல வாயெடுத்தான். உடனே வர்த்தகன் அவன் கரத்தைப் பற்றிக்கொண்டு, கண்களையுயர்த்தி நிமிர்ந்து நின்று, "அப்பா, ஒன்றும் பேசாமல் நான் கட்டளையிடுவதுபோல் செய்வாயாக." என்று வெகு காம்பீரமாயுரைத்து, அறையினின்றும் வெளியேறினான்.

மலைகாட்டினவல் ஆச்சர்யத்தால் அசைவற்று நின்றான். இரண்டொரு நிமிஷம் பொறுத்து, வர்த்தகன் கொடுத்த பணத்தைப் பார்க்கும்போது, தான் இதுகாறும் அவ்வளவு பணத்தை ஒரே தடவையில் பார்த்தது கிடையாதென அறிந்தான். வெள்ளி லோட்டாவைக் கொடுக்கப்போன காரணமும் தெரியவில்லை. ஆதலால் பணத்தைத் தன் மடியில் வைத்துக்கொண்டு, லோட்டாவைத் திருப்பிக் கொடுக்கும்பொருட்டுச் சத்திரக்காரனைக் கூப்பிட்டான். மேலும் அவனுக்கு அந்த உதாரகுணமுள்ள வர்த்தகன் யாரென்று கேட்டறிந்துகொள்ள வேண்டுமென்னும் பிரியமும் இருந்தது.

சத்திரக்காரன் வந்ததும், லோட்டாவை எடுத்துப்போகும்படி சொல்ல, அவன் மறுத்து, "அது என்னுடையதல்ல. அவ்வளவு நேர்த்தியான பாத்திரம் என்னிடமேது? அது வெற்றியாளர்க்குச் சொந்தம்; அதை அவர் உமக்கே கொடுத்துவிட்டார்." என்றான்.

மதி :-வெற்றியாளர் யார்? அன்னியர்க்கு இத்தகைய சம்மானஞ் செய்யும் அவ்வர்த்தகர் யார்? போசனம் தயார் செய்யும்படி அவர் சொல்லியனுப்பிய ஆள் யார்?

சத்திரக்காரன் :-வெற்றியாளர் யாரென்று அவரையே நீர் கேட்டிருக்கவேண்டும். மற்றவனோடு நாம் நெருங்கிப் பழகாமலிருக்கக் கடவுள் கிருபை புரிவாராக.

மதி :-இவை யனைத்தும் மர்மமாகவே யிருக்கின்றன. வெற்றியாளர்க்குப் பழங் கொணர்ந்த மடமங்கை யார்?

சத்தி :-அம்மாது தன் அத்தையுடன் தங்கியிருக்கிறாள்.

மதி :-இங்கே வந்து தங்குகிறவர்களை ஏவல்கொள்வது உன் வழக்கம் போலும்?

சத்தி:-தலைவந்தர் தமதிஷ்டப்படி மற்றவர்களை நடத்த கொள்ளும்படிச் செய்யலாமன்றோ? வெற்றியாளர் உயர்குல மாதரைத் தனக்குப் பணிவிடை செய்யும்படி வைத்துக்கொண்டது இது முதல் தடவையல்ல.

மதி:-இரண்டொரு தினம் நான் இங்கு தங்கியிருக்க நீர் அறை ஒழித்துக் கொடுக்கக் கூடுமா?

“நல்லது, அப்படியே ஆகட்டும்.” என்று சத்திரக்காரன் இளைஞனை அழைத்துக்கொண்டு மேல்மாடிக்குச் சென்று ஒரு அறையைக் காட்டினான். அது சிறிதேனும், சுத்தமாயும் சௌகரியமாயும் இருந்தது. சத்திரக்காரன் அவனை அங்கே விட்டுப் போயினன்.

மதிவீரன் இருந்த அறையிலிருந்து பார்த்தால் கீழே சத்திரத்தில் நடப்பவை யனைத்தும் தெரியும். மேலும் அவனறைக்கு எதிர் பக்கத்தில் மற்றோர் அறையிருந்தது. ஜன்னல் பாதி திறந்தபடியிருந்தது; ஒருமாது கையில் வீணையொன்று வைத்துக் கொண்டிருந்ததுபோல் அதன் வழியாய் தோன்றிற்று. வெற்றியாளர்க்குப் பணிவிடை செய்த பெண்மணிதானோ என்று நினைத்தான். உடனே அவன் ஜன்னல் திரைமறைவில் நின்று அந்தப் பக்கமாகவே பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது அம்மாது வீணையை மீட்டி வாசித்துக்கொண்டே குயிலினும் இனிய குரலைத் திறந்து சோகரசம் நிறைந்த பாடலொன்றைப் பாடினாள். மதிவீரன் மனம் பூரித்தது; அவ்வினிய கீதாமிர்தத்தைத் தன் செவிமடுத்து இன்பப் பரவசனாய் நின்றான். கொஞ்ச நேரத்துக்குப்பின் அவ்வினிய பாடல் கேட்கவில்லை. உடனே இளைஞன் தன் மறைவிடத்தினின்றும் வெளிப்போந்து அக்கீதாமிர்தம் பொழிந்த மங்கை யாவ

னென்று பார்க்க எத்தனித்தான். அப்போது ஜன்னலின் திரைச்சீலை விடப்பட்டது. அதே சமயத்தில் ஒரு வேலைக்காரன் அறைக்குள் நுழைந்து யாரோ பார்க்க வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

---

## அதிகாரம் 4.

### வாகுசன்.

---

மதிவீரன் மாடியை விட்டிறங்கி, தான் காலைபோசனம் அருந்திய அறைக்குள் நுழைந்து, அங்கே தனக்காகக் காத்திருந்த அறையனது மெய்க்காப்பாளரில் ஒருவனைக் கண்டான்.

மாதல நாட்டில் இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் அரசனுக்கு விரோதமாய்ப் பெருங் கலகம் ஏற்பட்டிருந்தபோது, உள்நாட்டுப் படைவீரரை நம்பாமல் மலைநாட்டு மாந்தரை வரவழைத்து மெய்க்காப்பாளராக நேமித்திருந்தனர். அது முதல் அந்நாட்டாரே அரசனுக்குரிய மெய்க்காவலராக இருந்து வந்தனர். அஞ்ஞர் உயர்குலத் துதித்தவராய், உண்மைக் குத்தாரமுடைமை, தைரியம், பராக்கிரமம் முதலிய சிறந்த குணங்கள் வாய்க்கப்பெற்றவர். மாதல நாட்டரசரும் அவர்கள் மட்டில் மிகப் பிரியம் வைத்து, அவர்களுக்கு நல்ல சம்பளங் கொடுத்துவந்ததுமன்றி, சமயாசமயங்களில் உயர்ந்த வெகுமதிகளையுங் கொடுத்து சன்மானித்து வந்தனர். அவ்வீரர் சிறந்த ஆயுதங்களை அலங்காரமா யணிந்து, அழகிய அசுவங்களிற் சவாரி செய்தனர். அவர்களுக்குக்

குற்றேவல் புரிய வேலையாட்களும் உண்டு. ஆதலால் அரசனுடைய மெய்க்காப்பாளர் என்றால் அந்நாட்டில் மிக்க மதிப்பும் மரியாதை யும் ஜனங்கள் காட்டிவந்தனர்.

மதிவீரன் மாதுலனாகிய வாருசன் ஆறடி உயரமுள்ளவனாய், தேக வலிமையும், புஜபலபராக்கிரமமு முடையவன். அவன் முகத் தைப் பார்த்தளவில் அவன் போர் மிகக் கண்ட புருஷோத்தமன் என்று எளிதில் தெரிந்துகொள்ளலாம். கோடையிலும் மாரியி லும் போரினிமித்தம் பலகாடுகளிலும் அலைந்து திரிந்ததால் கருத் துப்போன அவன் முகம் நெற்றியிலிருந்து வலது காதளவும் ஓடிய ஒரு காயத்தின் வடுவால், பார்ப்பதற்குச் சற்றுப் பயங்கர மாகவே யிருந்தது. அவன் அணிந்திருந்த ஆடையும் தரித்திருந்த ஆயுதங்களும் மிக்க விலையுயர்ந்தவைகளா யிருந்தன. அவன் உடற் கவசம் தரித்து, கூரிய வாளாயுதமொன்றை இடையிற் கட்டித் தொங்க விட்டிருந்தனன்.

இத்தகைய போர்வீரனைத் தானிதுகாறும் பார்த்ததேயில்லை யென்று மதிவீரன் நினைத்தான். ஆயினும் தன் மாமன் முகம் அவனுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் வாருசன் அவனைக் குறுகக் கைலாகு கொடுத்து அணைத்துக் கொள்ள வரும் போது, சற்றுப் பின்னடையும் எண்ணம் அவன் மனதில் உண்டா யிற்று.

வாருசன் :-என்ன, மதிவீரா! எப்போது வந்தாய்? மலை நாட்டிலிருந்து என்ன செய்தி கொணர்ந்தாய்?

மதி :-விசேஷமொன்றுமில்லை, மாமா. ஒரு வருஷத்துக்கு முன் எங்கள் கோட்டையை அயலார் வந்து எதிர்த்து முற்றுகை போட்டனர். அப்போது நடந்த போரில் என் தந்தையும் இரு சகோதரரும் உயிரிழந்தனர்.

வாகு:-போர் பலமாகவே நடந்திருக்கவேண்டும். நிர்ப்பாக்கியச் செய்தி! இந்தப் போரில் நீ என்ன செய்தாய்?

மதி:-நானும் மற்றவர்களோடு சண்டை செய்தேன். பல காயம் படவே எதிரி என்மேல் மனமிரங்கி, நான் சன்னியாசம் மேற்கொள்ள வேண்டும் என்கிற நிபந்தனையின்மேல், என்னைப் போகவிட்டான்.

வாகு:-நல்ல நிபந்தனைதான்! சன்னியாசமேன்?

மதி:-நான் சன்னியாசி யாகிவிட்டால் எதிரி கைப்பற்றியிருக்கும் என் சொத்துக்களை மீண்டும் அடைய முயற்சிசெய்ய மாட்டேனன்றோ? அப்படியே நான் ஒரு மடத்திற் புகுந்தேன்; அங்கே கொஞ்சகாலம் தங்கி எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டேன். பின்னர் என்னைத் தாயார் மரணமடைந்தனர். இதற்குள் என் காயமாறி தேக சுகம் பெற்றேன். சன்னியாச தத்துவம் இன்னும் மேற் கொள்ளாததால், அம்மடத்தின் தலைவருடைய அநுமதி பெற்று, "திரைகட லோடியுந் திரவியந் தேடு" என்னும் முதுரைக் கிணங்க தேசாந்திரியாய்ப் புறப்பட்டேன்.

வாகுசன்:-நல்லவேலை செய்தாய்! இப்போது உன்னிடம் பணம் அதிகமில்லையென்று நினைக்கிறேன்.

மதி:-என்னிடம் இருப்பவையெல்லாம் சில வெள்ளி நாணயங்களே.

வாகு:-என்ன கஷ்டம்! என் சம்பளத்தையெல்லாம் நான் செலவழித்துவிட்டபோதிலும், ஏதாவது ஒரு பொன் சங்கிலி அல்லது நகையை, வேண்டும்போது விற்றுக்கொள்ளலாமென்று

நான் எப்போதும் வைத்திருப்பது வழக்கம். மாதலநாட்டு மாவீர வன்னாலே யன்றி சேவை செய்யும் தைரிய புருஷன் எவனாயினும் சரி, அவனுக்கு எப்போதும் கைநிறையப் பணம் கிடைத்துக் கொண்டே யிருக்கும்; வறுமை யென்பதை அவன் கனவிலுங் கண்டறியான்.

மதி:-நீர் சொல்வது உண்மையாயிருக்கலாம். ஆனால் மந்திர நாட்டதிபதியின் அரண்மனையின் செல்வ நிலைமைக்குமுன் நீர் சொல்லும் விஷயம் ஒன்றுமில்லை யென்கிறார்களே. மேலும் அவர் சேவையிலிருக்கும் வீரருக்கு, தங்கள் வீரதீரப் பராக்கிரமத்தைக் காட்டிப் புகழடையுஞ் சந்தர்ப்பங்கள் அநேகம் உண்டென்று கேள்வி. அவ்வதிபர் போரில் சமர்த்தரென்றுங் கேள்வி; தனக்கு வேண்டியவைகளைச் சமராடியே சம்பாதிக்கின்றனராம்; உங்கள் அரசரோவென்றால் மற்றவர்களிடத் துதவிபெற்றுத் தனது காரியத்தைச் சாதிப்பதில் சமர்த்தராமே.

வாகு:-மதிவீரா, நீ புத்தியில்லாப் பேதையைப்போல் பேசுகிறாய். ஓர் அரசன் எப்போதும் தன் சிம்மாசனத் தமர்ந்து, தன் மந்திரி பிரதானிகளுடன் விருந்துண்டு பொன்முடி தரித்து விநோத களிபாட்டயர்ந்து காலம் போக்குவார் அல்லது தன் படைகளை நடத்திப் போர்முனையில் நின்று யுத்தஞ் செய்வார் என்று நினைக்கிறாய்போலும். இந்த மாதலநாட்டு மன்னர், அரசர் யாவரிலும் மிக்க புத்திசாலியெனப் பேர் எடுத்தவர். பிறருடைய வாளாயுதத்தைக் கொண்டு போரிடுகிறார்; பிறருடைய திரவியத்தைக் கொண்டு படை சேர்க்கிறார்.

மதி:-அன்னிய நாட்டில் சேவை செய்ய வந்திருப்பதால், எங்கே என் பராக்கிரமத்தைக் காட்டிப் புகழடையலாமோ அங்கேயே சேவை செய்ய எனக்குப் பிரியம்.

வாருணன் :-தெரிகிறது உன் யோசனை. ஆனால் மந்திர காட்டதிபதி மூர்க்கனைக்கொண்ட மூடனாயிற்றே. அவனிடமிருக்கும் அன்னியரை அவன் சன்மானிப்பது வழக்கமில்லையாம். அவன் தன் காட்டினரையே சன்மானித்து, அவர்களுக்கு வேண்டியதைச் செய்வானாம். மாதனைகாட்டின் அவ்வாறு செய்வதில்லையென்றறி.

மதி :-ஆனால் கைக்கட்டிக்கொண்டு விபத்தை விலக்கி நடந்தால் கீர்த்திப் பிரதாபம் சித்திப்பதெங்ஙனம்? தனக்குத் தீங்குசெய்ய எவரும் நினையாத ஒரு வயது முதிர்ந்த மன்னனை அக்கோட்டைக்குள் அல்லும் பகலுங் காவல் புரியும் வேலை ஒரு வேலையா? அதில் என்ன விபத்திருக்கின்றதோ தெரியவில்லையே.

வாரு :-என்ன தீரம்! பையன் தைரியசாலிதான்! நல்லது நான் சொல்லுவதைக் கேள். பணமும் புகழுஞ் சம்பாதிக்கத்தக்க வேலை ஏதாவதொன்று அநேகமாய் நாள்தோறும் செய்யவேண்டி வரும்.

வாருணன் கடைசியாய் மொழிந்த வார்த்தைகள் மதிவீரனைச் சற்றே சிந்திக்கச் செய்தன. கொஞ்சநேரம் மௌனமாயிருந்து, "புகழைத்தராத வேலைகளிலும் ஆபத்திருக்கக்கூடும். நீர் சொல்லும் வேலைகள் என்ன, கண்ணிய முடையவைதானே?" என்று கேட்டான்.

"மானக் குறைவான வேலைக்கு நான் சிபார்சு செய்வேனா? நான் சாதித்த கருமங்களை இத்தேசத்தின் பெரிய பிரபுக்களும் யாதொரு கூச்சமின்றிச் செய்ய முன் வருவார்கள் என்பது நிச்சயம்." என்று வாருணன் சற்றுக்கடுமையாய்ப் பேசினான்.

மதி :-உமது வார்த்தையில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன். அரசர் தன் பிரஜைகளிடம் அபிமானமின்றி,

கீழோரையே தன் ஆதாரக் கம்பமாய் வைத்து அவர்களிடமே ராஜீய விஷயங்களைக் கலந்தாலோசித்து, ஒன்றுக்குமுதவாத அம்மனிதரை உன்னதப் பதவிக் குயர்த்தி ஆட்சிபுரிகிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் அவருக்குத் தன் பதவிக்கேற்ற வாழ்க்கையில்லையென்றுங் கேள்வி. இஃது உண்மைதானா?

வாகுசன் :- இது குழந்தைகள் விளையாட்டுப்பேச்சு! அரசர் செய்வதனைத்தும் யோசித்தே செய்கிறார். உன்னைப்போலும் திரவியந்தேடி அன்னியதேசம் வந்திருக்கும் ஒரு வீரனுக்குத் தகுந்த எஜமானர் அவரே. ஆனால் கேள், நேரம் ஆகிறது; நான் கோட்டைக்குள் சீக்கிரம் போய்விடவேண்டும். நாளைகாலை 8 மணிக்கு இழுவைப் பாலத்தண்டை வந்து அங்கே இருக்குங் காவற் சேவகனிடம் என் பேரைச் சொல். நீயே அரசரை நேரிற்பார்த்து, அவர் எத்தகையினர் என்று கண்டு கொள்ளுவதற்கான ஏற்பாடு செய்கிறேன். நேரம் ஆகிறது, போய் வரட்டுமா?

வாகுசன் உடனே விடைபெற்றுச் சத்திரத்தை விட்டகன்றான். மதிவீரன் தான் காலையிற் கடந்த ஆற்றின் பக்கம்போய் உலாவி வரவேண்டுமெனத் தீர்மானித்தான். அவன் தன்னூரை விட்டு புறப்பட்டது முதல் நடந்த விஷயங்களை யெல்லாம் யோசித்துப்பார்த்து, மேற்கொண்டு தான் செய்வதின்னதெனத் தனக்குள்ளாகவே ஒருவித முடிவுக்கு வரவேண்டுமென்னுங் கருத்துடனேதான் அவன் ஏகாந்தத்தை நாடி உலாவப் புறப்பட்டது.

## அதிகாரம் 5.

### குறக்கூட்டம்.

தன் மாதுலனைப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல் மதிவீரனுக்கு வெகு நாளாய் இருந்துவந்தது. அவனுடைய வீரச்செயல்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். தன் மாமன் சகல புருஷலக்ஷணங்களும் நிறையப்பெற்ற வீரர் திலகம் என்பது அவன் எண்ணம். ஆனால் வாருசனைப் பார்த்ததும் அவன் எண்ணிய தனைத்தும் சரியல்லவெனத் தெரிந்தது. தன் குடும்பத்துக்கு நேர்ந்த துன்பத்தைப்பற்றி அவனிடஞ் சொல்லும் போது, அவன் கிஞ்சித்தேனும் வருத்தப்படாமல் ஏதோ அன்னியனைப் போல் கேட்டுவிட்டு வேறு விஷயங்களைப் பேசியதானது நமதிளவலுக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. தன் வறுமையான நிலைமையைக் கேட்டறிந்த பின்னரும், ஏதாவது உதவிசெய்ய முன் வாராததும் அவன் மனதை உருத்தியது. வாருசன் சிறந்த வீரன் என்பது மெய்தான். ஆனால் சயநலங் குடிகொண்டவன்; மனிதர் படுங் கஷ்டத்தைக்கண்டு கொஞ்சமும் அநுதாபங் காட்டாத கல்நெஞ்சன்; ஜீவ இம்சையைப் பார்ப்பது வழக்கமாய் விட்டபடியால், ஜீவகாருண்யம் என்னும் ஊற்று அவன் இருதயத்தில் வரண்டு போயிற்று.

வெற்றியாளரைப்பற்றிய விபரங்களைத் தன் மாமனிடங் கேட்டறிய மறந்தோமே என்று மதிவீரன் வருந்தினான். அக்கிழ வர்த்தகன் பிடிவாதக்காரனாகவும் முன் கோபியாகவும் தோற்றின போதிலும், அவன் செய்கைகள் பரோபகாரத்தைக் காட்டின. ஆதலால் அவனைத் தேடிப் பிடித்து ஆலோசனை கேட்பதெனத் தீர்மானித்தான்.

நம்மலைநாட்டிளவல் இவ்வாறு சிந்தித்துக்கொண்டே போகையில், வழியில் சில குடியானவர்களைச் சந்தித்தான். அவர்களை நிறுத்தி வெற்றியாளன் வீட்டைக் காட்டும்படிக் கேட்டான். ஆனால் அவர்களுக்கு வெற்றியாளன் என்னும் பேரே நூதனமாயிருந்ததால், அவனைப்பற்றித் தங்களுக் கொன்றுந் தெரியாதெனச் சொல்லிவிட்டார்கள்.

மதிவீரன் அவர்களை விட்டுக் கொஞ்சதூரம் நடந்தான். அங்கே சில குடியானவர்கள் மரங்களிடையே எதையோ மிரள மிரளப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். கிளைகளில் ஏதோ தொங்குவதுபோல் தோன்றியது. மதிவீரன் வேகமாய் நடந்து போய்ப் பார்க்கையில், என்ன பயங்கரம்! அங்கே ஒரு மரக்கிளையில் குற்றுயிராயிருந்த ஒரு மனிதன் கழுத்திற் சுருக்கிடப்பட்டுத் தொங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. உடனே அங்கு நின்றவர்களை நோக்கி "ஏ, அக்கயிற்றையேன் அறுத்து விடாமல் விரைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கூவினான்.

அப்போது குடியானவன் அச்சம் நிறைந்த முகத்துடன் அவன் பக்கந் திரும்பி, ஒரு மரத்தில் செதுக்கப்பட்டிருந்த மகர மீனுருவத்தைச் சுட்டிக் காட்டினன். இவ்வுருவத்தைச் சத்திரத்தில் பார்த்ததாக மதிவீரனுக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அதன் பொருளைக் கவனிக்க நேரமில்லை; ஒரு மனிதன் சாகுந் தருவாயில் இருக்கும்போது, இதையெல்லாம் யோசிப்பவனல்ல நமது வீர சிகாமணி. உடனே ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து மரத்தின் மீதேறி, கயிற்றை யறுத்துவிட்டுக் கீழே குதித்தான்.

அவனது செய்கையைக் கண்டு பயந்தவர்களாய் குடியானவர்கள் ஓட்டம் பிடித்தனர். மதிவீரன் அவர்கள் ஓடினதையுங் கவனியாமல், அந்நிர்ப்பாக்கிய மனிதன் கழுத்தைச் சுற்றியிருந்த

கயிற்றை யவிழ்த்தெறிந்து, அவனுயிரைக் காப்பாற்ற முயன்றான். ஆனால் போன உயிர் மீண்டும் உடலிற் புகுவ தெங்ஙனம்?

அப்போது திடீரென ஓர் பேரிரைச்சல் கேட்டது. மதிவீரன் திரும்பிப் பார்ப்பதற்குள் ஆடவரும் பெண்டிருமாகிய அநேக மாந்தர் வந்து அவனைச் சூழ்ந்துகொண்டனர். ஒருவன் அவனைக் கெட்டியாய் பிடித்துக்கொள்ள, மற்றொருவன் அவன் தொண்டைக் கருகே கத்தியொன்றை நீட்டினான். வந்தவர்கள் பேசிய பாஷையாலும், நடையுடை பாவனையாலும் குறவர்கள் என்று தெரிந்து கொண்டான் மதிவீரன். "ஏ, பாதகா! எங்களாட்களில் ஒருவனைக் கொன்றுவிட்டு அவனிடமிருக்கும் பொருளைக் கொள்ளையிடுகிறாயோ?" என்று ஒரு குறவன் கூவினான். அப்போது நாலாப் பக்கத்திலும் உருவிய கத்திகள் ஜொலித்தன. ஆனால் ஒன்றுக்கு மஞ்சா உத்தமனாகிய நமதிளவல் மிக்க அமைதியோடு, "என்ன வென்று நினைத்தீர்கள்? நன்று, நன்று, உங்கள் நன்றி! உங்கள் நண்பனை மரத்தினின்றும் கீழிறக்கி, அவனுக்குயி ரிருக்கிறதாவென்று சோதித்துக் கொண்டிருக்கிறேன். இதற்கு கைம்மாறு உடனே சித்தித்துவிட்டது போலும்!" என்று மொழிந்தான்.

இதைக் கேட்டதும் அக்குறவர் ஓவென்றலறி யழ ஆரம்பித்தனர்; ஆடவர் மண்ணை வாரித் தலையிற் போட்டுக்கொண்டனர்; பெண்களோ தங்கள் மயிரைப் பிய்த்துக்கொண்டும் மார்பிலறைந்து கொண்டும் அழுதனர். மதிவீரன் இவர்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்த போதிலும் இதுகாறும் பார்த்ததே கிடையாது. இக் குறஜாதி மாந்தர் நிலையாக ஓரிடத்தில் தங்கியிராமல் ஊரூராய்த் திரிந்து காலங் கழிப்பவர். மாசுபடிந்த உடையணிந்து, பார்ப்ப தற்கு விகார ரூபமுடையவராய்த் தோன்றுபவர். பெண்கள் கழுத்தில் பலவித பளிங்கு மணிகள் கோத்த மாலைகளும், கையிலும் காதிலும் பித்தளை யாபரணங்களும் அணிந்திருப்பர்.

மதிவீரன் அவர்களைவிட்டு அப்புறம்போக எத்தனிக்கையில், குதிரைகள் வரும் காலடிசத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அப்போது இறந்துபோனவனைத் தூக்கிச் செல்லும் குறவரை சிலப் போர்வீரர் வந்தெதிர்த்தனர். குறவர் பயத்தால் கிலேசித்துக் கூச்சலிட்டு, சவத்தைப் போட்டுவிட்டு ஓட்டம்பிடித்தனர். ஆனால் அவர்களில் இருவர் வீரர் கையகப்பட்டனர். அவர்களையும் மதிவீரனையும் பிடித்துக் கட்டினர். மதிவீரனும் ஏதாவது உதவி கிடைக்குமா என்று சுற்று முற்றும் பார்த்தான். அப்போது அங்கு வந்த சேவகருக்குத் தலைவன் காலையில் ஆற்றண்டை தான் பார்த்த வெற்றியாளனுடைய தோழனென்றறிந்து ஆச்சரியப்பட்டான். சேவகர் தலைவன், "வீரா, சப்பா," என்று இருவரை விளித்து, "இந்த மரங்கள் நமது வேலைக்குத் தக்கவை. அரசர் கட்டளைக்கு விரோதமாய் நடப்பதால் கிடைக்கும் லாபம் என்னவென்று இத் துஷ்ட பயல்களுக்குக் கற்பிக்கிறேன். இறங்கி உங்கள் வேலையைப் பாருங்கள்." என்றான்.

அவ்விரு சேவகரும் சுருக்கிடத் தகுந்த கயிறுகளைக் கையில் வைத்திருப்பதை மதிவீரன் பார்த்துவிட்டான். மூன்று கயிறுகளை எடுத்து அச்சேவகர் சுருக்குப் போடுவதைக் கண்ட மதிவீரன், அம்மூன்றில் தனக்கொன்றென்று தெரிந்துகொள்ளவே, அவன் தேகம் சிலிர்த்தது. தலைவனை நோக்கிக் காலையில் அவனைச் சந்திக்க நேர்ந்த சம்பவத்தை ஞாபகப்படுத்தித் தான் நிரபராதியென்றும், தன்னுடன் பிடிபட்டுள்ள இருவருக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றும் கூவிப் பேசினான் நமது கதாநாயகன். தலைவன் ஒன்றும் கவனியாதவன்போல், "இந்த துஷ்டர்களுடன் அப்பயல் இருந்ததைப் பார்த்தாயா?" என்று அங்கு நின்ற ஒரு குடியானவனைக் கேட்டான்.

"ஆம், ஐயா, இருந்தான். மேலும் அவன்தான் மரத்திலேறிக் கயிற்றை யறுத்தவன்." என்று குடியானவன் பதிலளித்தான்.

தீர்த்தன் என்னும் அந்தச் சேவகர் தலைவன், "போதும் போதும்!" என்று வேலையை நடத்தும்படி சேவகரை ஏவி, குரூரத்தைக் காட்டும் புன்சிரிப்புடன், காலையில் மதிவீரன் தடியால் அடி பட்டதால் தன்கரங்களுக்கிருக்கு மிடத்தைக் காட்டினன். பின்னர் மற்ற சேவகரைத் தன்னோடுவரும்படிக் கட்டளையிட்டு அவ்விடத்தை விட்டகன்றான்.

இரண்டு மூன்று காவல் சேவகரே வீரன், சுப்பன் என்னும் இருவருக்கும் உதவியாக அங்கே நின்றனர். கொலையாளிகளிருவரும் உருவத்திலும் குணத்திலும் மாறுபட்டவராகவே தோற்றினர். வீரன் நெட்டையாய் வளர்ந்திருந்தபோதிலும், மெலிந்த தேகத்தையும் கடுகடுத்த பார்வையு முடையவனாய்க் காணப்பட்டான்; சுப்பனோ மலர்ந்த முகமும், பருத்த சரீரமும், சுறுசுறுப்பான தன்மையுங் கொண்டவன். ஆனால் இருவரையும் ஜனங்கள் ஒரே விதமாகவே வெறுத்துவந்தனர்.

அவர்கள் மதிவீரனை யணுகி வரவே, அவன் மிரண்டப் பார்வையுடன் சுற்று முற்றும்பார்த்து, "அரசர் மெய்க்காப்பாளரில் ஒருவராகிய வாருசரைக் கண்டு, அவருடைய மருகனை அநியாயமாய்க் கொல்லப்போகிறார்கள் என்று சொல்பவர் எவருமில்லையா?" என்று கூவினன். அப்போது அங்கே நின்று கொண்டிருந்த மலைநாட்டுக் காவல்வீரன் ஒருவன், உடனே, "நீங்கள் செய்வதை யோசித்துச் செய்யுங்கள்! இவ்விளவல் மலைநாட்டான் என்பதுண்மையானால், அவனைக் கொல்லும்படி நான் பார்த்திருக்கமாட்டேன். தெரியுமா?" என்று கொலைஞரைப் பயமுறுத்துபவன் போல் பேசினன்.

இதைக்கேட்ட வீரன், "நாங்கள் என்னசெய்வோம்? உத்திரவின்படி நடக்கவேண்டியது எங்கள் கடமை, ஐயா!" என்று மதிவீரன் கரத்தைப்பற்றி யிழுத்தான். ஆனால் நமதிளவல் பிடித்த பிடியைத் திமிறிக்கொண்டு இருகொலைஞரையும் தள்ளிவிட்டு, மலைநாட்டு வீரனிடம் ஓடி, "ஐயா, ஐயா, உமது தேசத்தவனாகிய எனக்குதவி செய்யும். நான் நிரபராதி; என் கைக்கட்டுகளை அவிழ்த்துவிட்டால் நானே என்னைக் காத்துக்கொள்வேன்," என்றான். காவல்வீரனும் அவ்வாறேசெய்ய, இளைஞன் திரித்தன் ஆட்கள் ஒருவனிடமிருந்த கட்டியொன்றைப் பிடுங்கிக்கொண்டு, "எ, இப்போது வாருங்கள், பார்ப்போம்!" என்று கூவினான்.

வீரனும், சுப்பனும் ஏதோ குசுகுசுவென்று மெதுவாய்ப் பேசிக்கொண்டு, "ஒருவர் ஓடி நமது தலைவரை யழைத்து வாருங்கள். மற்ற காவல் வீரரின் உதவியால் இவர்களைப் போகவிடாமல் பார்த்துக் கொள்ளுகிறேன்." என்றான் வீரன். காவல் வீரருக்கும் மலைநாட்டு வில்வீரருக்கும் எப்போதும் பகையிருந்து வந்தது. ஆதலால் காவல்வீரரில் ஒருவன், "இந்த மலை நாட்டாரை வெல்வது ஒரு கஷ்டமல்ல. ஆதலால் வாருங்கள் ஒரு கை பார்ப்போம்!" என்றான். ஆனால் வீரன் தந்திரசாலி; எதையும் யோசித்தே செய்பவன். ஆதலால் அவன் மலைநாட்டு வில்வீரனைப் பார்த்து "ஐயா, அரசர் கட்டளையை நிறைவேற்றமுயன்ற எமது தலைவரை உமது செய்கையால் அவமானப்படுத்தினீர் என்பதை நீர் கவனிக்கவில்லை போலும்!" என்று மரியாதையாய்ச் சொன்னான்.

வில்வீரன் :-இவ்விளைஞன் செய்த குற்றம்யாது? உடனே சொல்.

வீரன் :-தூக்கிலிடப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தவன் கயிற்றை யறுத்துவிட்டான்.

வில்வீரன் :-இளைஞா, மெய்தானா? இவ்வாறு செய்யலாமா?

மதிவீரன் :-நான் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். ஒருவன் மரத்தில் தொங்குவதைப் பார்த்தேன். உடனே கயிற்றை அறுக்க விரைந்தோடினேன். அரசர் கட்டளைக்கு விரோதமாய் நடக்கிறேன் என்றெனக்கு அப்போது தெரியாது.

வில்வீரன் :-கேட்டாயா, வீரா, காரியம் தவறுதலாய் நடந்துவிட்டதாம்.

இச்சமயத்தில் சுப்பன் அங்கே தோன்றி, "சும்மா இரு, வீரா! அதோ நமது தலைவர் வருகிறார்." என்றான்.

"நல்ல வேளையாய், எங்களுக்கு வேண்டியவர்களும் இதோ வருகின்றனர்." என்றான் வில்வீரன்.

அப்படியே திரித்தனும் அவனுடைய காவற்சேவகரும் ஒரு பக்கமிருந்து வர, மற்றொரு பக்கமிருந்து வாகுசனும் ஐந்து அல்லது ஆறு மலைநாட்டு வில்வீரரும் வந்துகொண்டிருந்தனர்.

வாகுசன் மதிவீரனையும் தன்னினத்தானையும் பார்த்ததுதான் தாமதம், உடனே தன் குதிரையைத் தட்டிவிட்டு, "நண்பரே, உதவிக்கு வாரும். அதோ நிற்கும் இளைஞன் என் மருகன்!" என்று கூவினான்.

இருதரத்தாருக்கும் கைகலக்கும்போலிருந்தது. ஆனால் திரித்தன் முன்னோக்கி வந்து, குற்றவாளியொருவனை நியாயப்படி தண்டிப்பதைத் தடுப்பதற்கு அவர்களுக்கு என்ன சுதந்திரம் உண்டென்று கேட்டான்.

வாகுசன் :-குற்றவாளியை எது வேண்டுமாயினுஞ்செய். ஆனால் என் மருகனைக் கொல்லும்படி விடமாட்டேன். மேலும்

மலைநாட்டு வில்வீரராகிய எங்கள்மேல் ஏதாவது குற்றமிருந்தால், அதை விசாரணை செய்யக்கூடியவர் எங்கள் தளகர்த்தர் அல்லது அரசரே. இதுதான் எங்களுக்கிருக்கும் சுதந்திரம்!''

திரித்தன் :-ஆனால் இவ்விளைஞன் உங்கள் படையைச் சேர்ந்தவனல்லவே?

வாருசன் சற்றுத் தயங்கினான்; பின்னர் தன் மருகன் அன்றே வில்வீரர் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டான் என்று உறுதியாய்ச் சொன்னான்.

திரித்தன்,-''நல்லது, ஐயா. இவ்விஷயத்தை நான் மகாராஜாவுக்குத் தெரிவிக்கிறேன். அவரே இந்த வழக்கைத் தீர்க்கட்டும்.'' என்று தன் சேவகரை யழைத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கினான்.

உடனே, வில்வீரரில் ஒருவன், ''நாமும் விஷயத்தை நமது தளகர்த்தரிடஞ்சொல்லி, இவ்விளைஞன் பேரைத் தாக்கல் செய்யும்படிக் கேட்டுக்கொள்ளவேண்டும்.'' என்றான்.

'' அரசனுடைய அந்தரங்க நண்பனாகிய நாவிதன் உலகநாதனிடம் எல்லாவற்றையுஞ் சொல்லிவிட்டால் அவன் ஒழுங்காக்கிவிடுவான். அவன் வில்வீரருடைய நண்பனல்லவா? திரித்தன் போகுமுன், அவன் போய் அரசரைப் பார்த்துவிடுவோன். அவனுக்கு ஏதாவது பணங்கொடுத்தால் போகிறது.'' என்றான் மற்றொருவன்.

மதிவீரன் :-ஐயன்மீர், நான் உங்கள் படையில் சேர்வதா, இல்லையா என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லையே.

வாருசன் :-சரிதான், இப்போதே தீர்மானித்துவிடு. இல்லையேல், திரித்தன் கையிற்சிக்கி நீ கட்டாயம் உயிர்துறக்க வேண்டிவரும் என்பதை மறவாதே.

## அதிகாரம் 6.

### புதிதாய்ச்சேர்ந்த வீரன்.

மதிவீரன் ஒரு குதிரையின் மேலேறி, தன் நாட்டினரைப் பின்பற்றிக் கோட்டைக்குச் சென்றான். அவர்கள் கோட்டையை நெருங்கினதும், இழுவைப் பாலம் விடப்பட்டு, கோட்டை வாயில் திறந்தது. அவ்வீரர் ஒவ்வொருவராய்க் கோட்டைக்குள் நுழைந்தனர். ஆனால் மதிவீரன் நுழையப் போகையில், காவற்சேவகர் அவன் புதிதாயிருந்தபடியால் போகக்கூடாதென்று தடுத்தனர். உடனே வாகுசன் அவனுடைய விருத்தாந்தத்தைச் சொல்லி, அவனைத் தங்கள் தலைவரிடங் கூட்டிப்போவதாய்த் தெரிவித்து, உள்ளே அழைத்துப்போயினன்.

மலைநாட்டு வில்வீரருக்குத் தலைவராகிய கருணாபரர், ஒருயர்குல மாந்தர். பிரபு வம்சத்தைச் சேர்ந்தவர். மலைநாட்டு வில்வீரர் படை மாதலநாட்டில் ஆதியில் ஏற்பட்டபோதே அதில் சேர்ந்தவர். அநேக போர்க்களங்களில் அவர் தம் பராக்கிரமத்தைக் காட்டிப் பேரெடுத்தவர். சாதாரணமாய் எவரையும் நம்பாத விஜயசேன மகாராஜாவுக்கு கருணாபரம் பிரபுவின்மேல் மெத்த விசுவாசம்.

வாகுசனும் மற்றொரு வில்வீரனும் மதிவீரனை யழைத்துக்கொண்டு கருணாபரர் விடுதிக்குள் நுழைந்தனர். தளகர்த்தருடைய காம்பீரத் தோற்றமும், மற்ற வில்வீரர் அவரிடங் காட்டும் மேரைமரியாதையும் மதிவீரனை வியக்கச் செய்தன. கருணாபரர் பார்வைக்கு மெலிந்த தேகமுடையவர்; வயது சென்றவரேனும் பலமுடையவராகவே காணப்பட்டார். போர் முனையில் கிடைத்த காயங்க

னின் லக்ஷணங்கள் அவர் முகத்திலில்லாமலில்லை; முகச்சாயல் அச்சத்தை வருவிக்கத்தக்க கடுமைவாய்ந்ததாய் இருந்தது. வாருசன் தன் மருகன் சங்கதியை ஒன்றும் விடாமல் தளகர்த்தரிடம் கூறி, அவனை எப்படியாவது காப்பாற்றவேண்டுமென மன்றாடினன். காட்டில் நேர்ந்த சச்சரவைக் கேட்டுக்கொண்டிருந்த கருணாபரர், "இந்த சத்துருக்களுடன் சண்டையிடலாகாதென்று உங்களுக்கு எத்தனையோ விசை சொல்லியிருக்கிறேன். நீங்கள் கேட்கமாட்டீர்கள் போலும். ஆனால் உன் மருகனுக்குதவி செய்ய நீ இந்தப் போரிற் கலந்தது சகஜமே; அதுவும் ஊர் காவலாளியாகிய திரித்தனுடன் சச்சரவிட நேர்ந்ததென்றறிந்து சந்தோஷிக்கிறேன். அந்தப் பயலுக்கு வில்வீரர் என்றால் பிடிப்பதில்லை. இவ்விளைஞனுக்கு யாதொரு கெடுதலும் சம்பவிக்கலாகாது. புஸ்தகத்தைக் கொண்டு வா, அவன்பேரை இப்போதே தாக்கல் செய்துவிடுகிறேன். வாருசா, இவனை நல்ல ஆயுதப்பயிற்சி யுள்ளவனாக்கவேண்டியது உன் கடமை. கூடிய சீக்கிரத்தில் போர் நிகழும்போலிருக்கிறது." என்று முடித்தார்.

"மெத்த சந்தோஷம், பிரபு!" என்று தம் தலைவருக்கு வந்தனங்கூறி, வாருசனும் மற்ற வீரரும் அறையை விட்டு வெளியே வந்துவிட்டனர்.

அன்றிரவு வாருசன் புதிதாய்ச் சேர்ந்த வீரனுடைய பேரால் மற்ற வீரர்க்கெல்லாம் ஒரு நல்ல விருந்து நடத்திவைத்தான். அதற்குக் கருணாபரரும் வந்திருந்தனர். எல்லோரும் சந்தோஷமாக விருந்துண்டு, மதிவீரனையும் அவன் மாதுலனையும் வாழ்த்தினர். இதற்கிடையில் திரித்தனுக்கு விரோதியாகிய உலகநாதன் அரசனைக் கண்டு பேசி, மதிவீரனைக் காவலதிபன் தொந்தரவொன்றுஞ் செய்யலாகாதென உத்திரவு வாங்கிவிட்டதாகக் கருணாபரர் வாருசனிடம் தெரிவித்தார்.

விருந்து வெகு சம்பிரமமாய் நடந்தது. சிலர் பாடினர்; வேறு சிலர் மதிவீரனை வாழ்த்திப் பேசினர். கண்ணையன் என்னும் வீரன் எழுந்து, "மாதல நாட்டின் மகரமீன்கொடி கூடிய சீக்கிரம் உயர்த்திப் பிடிக்கப்படுவதாக!" என்று கூவினான். உடனே எல்லோரும் எழுந்து கரகோஷஞ் செய்து ஆர்ப்பரித்தனர்.

"நீங்கள் யாவரும் மாதலநாட்டு மாவீரவள்ளலின் உண்மை யூழியர்களானபடியால் உங்களிடம் சொல்லவேண்டிய செய்தியொன்றுளது. மந்திரநாட்டதிபதியாகிய சமரவர்மரிடமிருந்து ஒரு தூதுவன் வந்திருக்கிறான். அவன் கொண்டு வந்திருக்குஞ் செய்தி நல்ல தல்லவெனத் தெரிகிறது." என்றார் கருணாபரர்.

"தாங்கள் சொல்வதுண்மையே. யானும் இன்று சீரகத்தாமப் பிரபுவின் வேலைக்காரரைச் சத்திரத்திற் கண்டேன். அவர் கோட்டைக்குள் நுழைய நமது அரசர் உத்திரவளிக்கவில்லையெனப் பேசிக்கொண்டனர்." என்று அங்கே யிருந்த வில்வீரரில் ஒருவன் மொழிந்தான்.

"சமரவர்மரின் முறைப்பாடுதான் என்ன?" என்றான் மற்றொருவன்.

"அவர் முறைப்பாடா? அவர் தன் எல்லைப்புறம் மாதலநாட்டாரால் கொள்ளையிடப் பட்டதாம். தமது பாதுகாவலிலிருந்த உயர்குல மாதொருவளை தனக்கு வேண்டியவனாகிய கமலநாதனுக்கு மணம்புரிவிக்க வேண்டுமென்பது அவர் விருப்பமாம். ஆனால் அம்மாது அதற்கிணங்காமல் தன் அத்தையுடன் மந்திரநாட்டைவிட்டு இங்கே வந்து விட்டனளாம். இவை தாம் அவர் கோபத்துக்குக் காரணம் எனக்கேள்வி." என்று கருணாபரர் சொன்னார்.

"இரண்டு மாதர் இன்று காலை ஒரு மூடுவண்டியேறிக் கோட்டைக்கு வந்தனர்." என்றான் ஒரு வில்வீரன்.

"அந்த இரண்டு பெண்களும் உயர்குல மாதரென்றும், சில தினங்களாய்ச் சத்திரத்தில் தங்கியிருந்தனரென்றும், நமது மன்னா போய் அவர்களை அடிக்கடி சந்தித்து வந்தனரென்றும், மந்திரநாட்டுப்பதியின் தூதவர் வருஞ்செய்தி கேள்விப்பட்டே அவர்கள் கோட்டைக்குப் போயினர் என்றும் பேசிக்கொள்ளுகிறார்கள்." என்றான் மற்றொரு வீரன்.

"அப்படியானால் சற்றுமுன் நான் இங்கே வருகையில் வீணை வாசித்துப் பாடிக்கொண்டிருந்த சீமாட்டியே நீ கூறும் உயர்குல மாதாயிருத்தல் வேண்டும்." என்று கன்னியன் தனக்குத் தெரிந்ததைச் சொன்னான்.

இவ்வாறு விருந்தினர் பேசிக்கொண்டிருக்கையில், கோவில் மணியடிக்குஞ் சத்தங்கேட்டு, நேரமாயிற்றென எல்லோரும் பிரிந்து போயினர். சமதினனுக்கு மதிவீரனுக்கு அவன் மாமன் அறைக்குப் பக்கத்தில் ஓரறை கொடுக்கப்பட்டது. கோட்டைக்குள் வந்திருக்கும் சீமாட்டியைப்பற்றிப் பேசிய விஷயங்களை ஒன்றும் விடாமல் கேட்டுக்கொண்டிருந்தபடியால், சத்திரத்தில் இனிமையாய்ப் பாடித் தன் மனதைக் கவர்ந்தவளும் வெறுதியானர்க்குப் பழங்கொணர்ந்தவளுமே அவ்வுயர்குல மாதாயிருக்கவேண்டுமென உறுதியாயுணர்ந்தான்.

---

## அதிகாரம் 7.

### தூதுவன்.

மதிவீரன் அதிகாலையிலேயே எழுந்து, வாருசன் கொடுத்த போர்வீர ருடைகளைத் தரித்துக்கொண்டான். அச்சமயத்தில் இரவில் காவல் புரிந்திருந்த வீரர்கள் தத்தம் அறைகளுக்கும், அவர்களுக்குப் பதிலாய்ச் சில வீரர் காவல் புரியவும் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்தான். கொஞ்ச நேரத்துக் கெல்லாம் வாருசன்

அங்கே வந்து, "மதிவீரா, நின் புதிய உடைகள் உன் காம்பீரத் தோற்றத்தை யுயர்த்துகின்றன. உன் தோற்றத்தைப்போலவே உன் விசுவாசமும் தைரியமும் இருக்கக்கடவன. இப்போது என்னைப்பின்பற்றிவா; அரசனிடம் கூட்டிப்போகிறேன்." என்றான்.

இருவரும் அரசர் மாளிகையின் உட்பாகத்துக்குச் சென்றனர். அங்கே வேட்டைக்காரர் சிறந்த குதிரைகளையும், வேட்டை நாய்களையும் கையிற்பிடித்து நின்றனர். வேறொரு பக்கத்தில் நின்ற மெய்க்காப்பாளர் சிலரைப் பின்பற்றி மதிவீரன் சபா மண்டபத்துக்குள் புகுந்தான். போகும்போதே வாகுசன் அரசன் வன வேட்டையில் மிகப்பிரியமுடையவன் என்று தன் மருகனுக்குச் சொன்னான். சபா மண்டபத்தில் இருந்தவர்களனைவரும் அரசர் உடனே வருவாரென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஆனால் அரசவையின் அலங்காரத்தைக் கண்ட நமதிளவல், ஒரு வித ஏமாற்றத்தை யடைந்தனன் என்றால் மிகையாகாது. அவன் எண்ணியபடி அங்கே ஒன்றுந்தோன்றவில்லை. போர்வீரர் அணிந்திருந்த உடைகளும் ஆயுதங்களும் விலையுயர்ந்து விளங்கினபோதிலும், அரசருக்கு ஆலோசனை கூறும் பதவியில் உள்ளோர் மிகக் கேவலமான தோற்றத்தை யுடையவரென அவன் புத்தியிற்பட்டது. அன்றியும் சிலர் கீழ்க் குலத்துதித்தோராய், பிரபுக்களுக்குரிய காம்பீரத் தோற்றமின்றிக் காணப்பட்டனர். அவர்கள் அரசனுக்குச் செய்த ஏதோ சில நற்காரியங்களுக்காக இப்பதவிக்குயர்த்தப் பட்டனர்போலும். ஆதிகாலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் மந்திராலோசனை சபையாரும், உயர்ந்த உத்தியோகஸ்தரும், பேர்போன வீரசிகாமணிகளும் அங்கே காணப்படவில்லை. விஜய சேன மகாராஜாவின் தந்தையர் காலத்திருந்த சிறந்த உத்தியோகஸ்தரில் ஒருவராவது அங்கில்லாததின் காரணம் அரசருடைய கபட தந்திரமான சூழ்ச்சிகள் அவர்களுக்குப் பிடிக்காததே. ஆயினும் அங்கே கூடியிருந்தவர்களில் இரண்டொருவர் மற்றவர்களைவிடச்

சற்றே சிரேஷ்டமானவராய்த் தோற்றினர். அன்னர் யாரென்றறியும் ஆவலுடையவனும் மதிவீரன் தன் மாமனைக் கேட்டான்.

அவர்களில் ஒருவராகிய கருணாபரம் பிரபுவை நமது வாசகர் அறிவார்கள். ஆதலால் அவரைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. மற்றொருவர் அரசருக்குச் சொந்தக்காரனாகிய பாலகனே. பிரபுக்களும் மற்ற குடி ஜனங்களும் எப்போதும் விரும்பத்தக்க நற்குண நற்செய்கைகள் வாய்ந்தவனானதால், அரசன் அவனை எப்போதும் தன்னருகிலேயே இருக்கும்படிக் கட்டளையிட்டிருந்தான். அவன் குள்ளனாயினும் சற்றே பருத்த தேகத்தை யுடையவன். அவன் முகம் விகாரமுடையதேனும், அதன்கண் தோன்றிய குறிகள் அவனை உயர்குலத்தானென்று காட்டின. அவன் ஒன்றுக்கும் அஞ்சாத தீரம்படைத்தவன். சிறந்த மனதுடையவன் என்று யாவருக்குந் தெரிந்திருந்தமையால், இயல்பாகவே சந்தேகங் குடிகொண்ட மனத்தராகிய விஜயசேனரும் அவனைத் தன் அந்தரங்க நண்பரில் ஒருவனாக மதித்து வந்தார். அவனுடைய கம்பீர நடையும், கூரிய பார்வையும், திடக்காத்திரமும் அவன் குலத்தையுங் குணத்தையும் விளக்கின.

அவன் பக்கத்தில் நடந்துவந்தவன்தான் விஜயசேனரது குமாரனுக்குப்பின் பட்டத்துக்குரியவன். அவன் பேர் துரைராஜன். உறந்தையூர் பிரபு. அவன் அரசனுக்கு விரோதமாக ஏதாவது சூழ்ச்சி செய்வானென்னுங் காரணத்தாலேயே அவன் அரசனிருக்கு மிடத்திலேயே எப்போதும் இருக்க நேர்ந்தது. அவன் நோயுற்றவளாகிய சந்திரவதி யென்னும் அறையன் மகளின் மணாளனெனக் குறிக்கப்பட்டிருந்தான். துரைராஜன் சாந்தகுணசீலன்; ஆனால் சுயேச்சையின்றி அரசனுடைய கட்டளையை மீறக்கூடாதவனாயிருந்தபடியால் அவன் சந்தோஷமாயிருப்பதற்கு வழியில்லாதிருந்தது.

பின்னர் வாகுசன் அரசனுடைய பிரதான மந்திரியான பால சுந்தரத்தைச் சுட்டிக்காட்டினன். அவன் பேருக்கு மட்டும் பால சுந்தரமே யொழிய, ரூபத்தில் வயது முதிர்ந்த விகார ரூபி. அவன் ஒரு குடியானவன் மகன்: கல்வித்திறமையாலும் தந்திரச் செய்கையாலும், அரசனுடைய நட்பைப்பெற்று இந்த உன்னதப் பதவிக்குயர்த்தப் பட்டவன். தனக்கு வேண்டிய தெதுவாயினும் அதை அரசனிடம் பெறுவது நிச்சயம் என்னும் நம்பிக்கையு முடையவன். உயர்ந்து வளர்ந்த தேகத்தை யுடையவனாய் பார்ப்பதற்கு விகாரமான உருவத்தை யுடையவனேனும் தன்னைப்போலும் அழகிய மாந்தர் கிடைப்பதருமையென்னுங் கர்வங்கொண்டவன். அவன் மிக்க இறுமாப்புடன் அங்கிருந்தவர் எவரையும் ஏறெடுத்து முதலாய்ப் பாராமல் நடந்து சென்றதை மதிவீரன் கவனித்துக் கொண்டிருந்தான்.

பாவகன்:-ஐயா மந்திரியாரே, மந்திர நாட்டிலிருந்து தூதுவன் வந்திருக்குஞ்செய்தி நமதரசருக்குத் தெரியுமோ?

பாலசுந்தரம்:-தெரியும் என்று நினைக்கிறேன். அவருடைய கருத்தின்ன தென்று நமக்குத் தெரிவிக்க இதோ வருகின்றனன் உலகநாதன்.

இவ்வாறு சொல்லுகையில் நமதிளவல் இதுகாறும் பார்த்திராத ஓரன்னியன் ஆஸ்தான மண்டபத்துள் நுழைந்தான். வெளுத்து மெலிந்த சரீரமுடையவனாய்க்கையில் வெள்ளிக்கிண்ணமொன்றைப் பிடித்துக்கொண்டிருந்தனன். அவன் கூரிய பார்வையும் தீவிரபுத்தியும் உடையவனென அவன் முகங் காட்டிற்று. குனிந்த வண்ணம் ஒரு பூனையைப்போல் ஓசை படாமல் மெதுவாய் நடந்து வந்தான். இவன்தான் உலகநாதன் என்னும் நாவிதன்; மிக்க தந்திரசாலியெனப் பேரெடுத்தவன். அவனுக்கு அரசனிடத்திலும்

மந்திரி பாலகந்தரத்தினிடத்திலும் செல்வாக்கதிகம். அவன் வந்ததும் பாலகனிடம் ஏதோ சொன்னான். உடனே பாலகன் அவ்விடத்தை விட்டகன்றான். உலகநாதன் வாருசன் மட்டில் நல்ல அபிப்பிராயங் கொண்டிருந்தான் என்பதற்கடையாளமாய் அவனது க்ஷேமலாபத்தை விசாரித்தனன். இவ்வாறு உலகநாதன் லை மனதுவைத்துப் பேசியது இரண்டொருவரிடமே. இதனால் மற்றவர்களுக்கு எவ்வளவு மனவெரிச்சல் உண்டாயிருக்கும் என்று நாம் சொல்லவேண்டியதில்லை.

இதற்கிடையில் தன்னுடைய உத்தியோகத்துக்கேற்ப நல்லுடையணிந்து திரித்தன் சபா மண்டபம் அடைந்தனன். நேரே வாருசனண்டை நெருங்கி முந்தினதினம் நடந்த விஷயத்துக்குத் தான் வருந்துவதாயுரைத்துத் தன்னிடத்துக்குப் போயினன். உடனே வாருசன் தன் மருகன் பக்கம் திரும்பி, "மதிவீரா, இப்பயல் இனி நம்மேல் கண்ணாயிருப்பானென்பது நிச்சயம். அவன் நமக்குப் பகைவன்," என்றான். திரித்தன் பார்த்த பார்வையைக் கொண்டே தன் மாமன் சொல்லியதுண்மையென அறிந்துகொண்டான் மலைநாட்டிளவல்.

அச்சமயத்தில் சபா மண்டபத்தின் ஒரு புறத்திலிருந்த கதவு திறக்க, விஜயசேனமகாராஜா உள்ளே நுழைந்தனன். எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர். அவர்கள் கண்கள் யாவும் அவரையே நோக்கின. நமது மதிவீரனும் மற்றவர்களைப் போல, அவரையே இமைக்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். என்ன ஆச்சர்யம்! தான் ஆற்றோரத்தில் முதல் முதல் கண்ட வெற்றியாளன் என்னும் வர்த்தகனே விஜயசேன மகாராஜாவென்றறிந்தான். பின்னர் அரசன் அங்கிருந்த மற்றவரெவரையுங் கவனியாமல் நேரே தன்னை நோக்கி வருவதையுணர்ந்த மதிவீரனுடைய ஆச்சரியம் அதிகமாயிற்று.

விஜயசேனர், "இளைஞா, நீ நமது நாட்டில் காலடி வைத்ததும், சண்டையில் ஆரம்பித்துவிட்டாய் எனக்கேள்விப்படுகிறேன். ஆயினும் உன்னை மன்னிக்கிறேன்; ஏனெனில் நீ அவ்வாறு நடந்து கொண்டதற்குக் காரணம் ஒரு கிழவர்த்தகன் என்றெனக்குத் தெரியும். அவனைக் கண்டுபிடித்தால் என்ன செய்வேன் என்று அப்போது அறிவாய். வாருசா," என்று மதிவீரன் மாமனை விளித்து, "உன் மருகன் நல்ல பையன்தான், ஆனால் கொஞ்சம் பதஷ்டமுடையவன். அத்தகைய இளைஞரை யூக்குவதில் எனக்கு மெத்தப் பிரியம்." என்றார்.

வாருசன் வணங்கி மரியாதை செய்தான். மதிவீரனோ எதிர்பாராத இந்த இராஜ பட்சத்தில் உண்டான மனத்தடுமாற்றத்தினின்றும் ஒருவாறு தேறி, அரசனுடைய தோற்றத்தைக் கூர்ந்து கவனித்தான். விஜயசேனர் அச்சமயத்திலும் சாதாரண உடையே அணிந்திருந்தார். அவர் சிரத்தில் சாமான்ய மாந்தரைப்போல் சருகைத் தலைப்பாகை யணிந்திருந்தார். ஊதியத்தின் மேலேயே நாட்டமாயிருக்குங் கருத்தைக் குறித்துக் காட்டுவதாக நினைத்த அவருடைய கூரிய விழிகளில், அரசர்க்குரிய காம்பீரப் பார்வை ஜொலித்ததுபோல் அவன் புத்தியிற்பட்டது.

எல்லோரும் வந்து விட்டனரா என்று ஒரு தடவை நாலாப்பக்கத்திலும் சுற்றிப்பார்த்த பின்னர், விஜயசேனர், "வேட்டைக்கு யாவும் சன்னத்தமாயிருக்கின்றன என்று நம்புகிறேன். ஏன், புறப்படலாமே." என்றார்.

அப்போது பாவகன் அரசரை யணுகி, "அண்ணலே, தங்கள் பயணம் சற்றே தடைபடும் என்றஞ்சுகிறேன். மந்திர நாட்டுத் தூதுவன் கோட்டைக்கு வெளியில் நின்று தங்களை யுடனே பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறான்." என்றான்.

விஜய:-உலகநாதனிடம் நான் சொல்லியனுப்பியதுபோல், இன்னும் மூன்று தினங்கள் நான் அவனைப் பார்க்க முடியாதென் றும், ஆயினும், கூடிய சீக்கிரம் அவனுக்குப் பேட்டிதர முயல்வேன் என்றும் அத்தூதனிடம் சொன்னாயா?

பாவகன்:-சொன்னேன். ஆனால்......

விஜய:-ஆனால் என்ன?

பாவகன்:-அத்தூதயன் சொன்ன பதிலுக்கு, தங்கள் உத்தரவுமட்டு மில்லாவிட்டால், என் வாளாயுதத்தைக்கொண்டே விடையளித்திருப்பேன்.

விஜய:-நல்லது பாவகா, மந்திரிகாட்டான் செய்தி நமக்குத் தெரிந்ததுதானே. அவன் முரடனென்றும் பிடிவாதகுண முடைய வனென்றும் உனக்குத் தெரியாதா? அவனுடைய வீண்டம்பத் தையும் பயமுறுத்தலையும் நான் இலக்ஷியம் செய்வதில்லையே.

பாவகன்:-அண்ணலே, தாங்கள் அவனைப்பார்க்க முடியா தென்று சொல்வதால், வேண்டுமானால் நடுச்சாமம் வரையில் கோட் டைக்கு வெளியில் காத்திருந்து எந்நேரமாயிருந்தாலும் தங்களைப் பார்த்தே தீருவதாகச் சிரகத்தாமன் சொல்லுகிறான்.

விஜய:-அப்படியானால் நான் இன்றைக்குக் கோட்டைக்குள் ளேயிருந்து, வேட்டையாடுவதற்குப் பதிலாய் இராச்சிய காரியத் தைக் கவனிப்பேன். வேட்டை நாய்களைப் பட்டிக்குக் கொண்டு போங்கள்.

பாவகன்:-சிரகத்தாமனை ஒழிக்கப் பார்ப்பது இவ்வழியால ல்ல. அவனுக்குத் தாங்கள்பேட்டி கொடுக்க மறுத்தால், அவ னுரை யொழிந்து புறச்சென்னத்தரா யிருக்கும்படி யுன்கோட்டை

விட்டுப்போய் விடுவானும். அவன் எஜமானரும் அநேகருந் துடன்தான் தூதனுப்பியிருக்கின்றனராம்.

விஜய:-மெய்தானா? என் உறவினனாகிய மந்திர நாட்டானா என்னை இவ்வாறு நடத்தத் துணிந்தான்? அப்படியானால், பாவகா, நாம் நமது கொடியை விரித்துயர்த்திப் பிடித்துப் போரொலி முழக்கவேண்டியதுதான்.

“நாங்கள் விரும்புவதும் அதுவே! குருடன் கேட்பதெல்லாம் கண்தானே!” என்றான் வீரகேசரியாகிய பாவகன். சபாமண்டபத்தில் நின்ற காவல்வீரரும் தமது ஆயுதங்களை யசைத்து ஓசை செய்தனர்.

ஆயினும் மந்திர நாட்டதிபதியே வெளிப்படையாய் யுத்தத்துக்கழைத்தல் அபாயத்துக் குரியதாகுமென விஜயசேனர் சற்றே சிந்தித்துப் பார்த்தார். போர் தொடங்கினால் சமரவர்மன் மாதல நாட்டின் மேல் படையெடுத்துவருவான் என்பது நிச்சயம். அவனுக்குதவியாய் அவன் மைத்துனனாகிய மாங்கல தேசத்து மன்னன் வருவான். மாதல நாட்டில் இருக்கும் சில பிரபுக்கள சமரவர்மனுக்கே சகாயமாய் நிற்பர். ஆகலால் விஜயசேனர் கொஞ்சநேரம் மௌனமாயிருந்து, “வீணாக இரத்தஞ்சிந்துவதற் கிடங்கொடுப்பவன் நானல்ல. அத்தகைய பழியினின்றும் கடவுள் நம்மைக் காப்பாராக! மானத்துக் கழிவின்றிப் போரை விலக்கக் கூடுமானால் நாம் ஏன் அவ்வழியைப் பின்பற்றலாகாது? ஆகையால் தூதனை அழைத்துவாருங்கள். அவன் சொல்வதைக் கேட்போம்.” என்று கட்டளையிட்டார்.

இந்த வெட்கக் கேடான வார்த்தைகளைக் கேட்டதும் அநேகர் தங்கள் அரசனுடைய கோழைத்தனத்தில் வெறுப்புக் கொண்டவர்

களாய், நாணித் தலைகுனிந்தனர். அச்சமயத்தில் ஒருவரும் பேசத் துணியவில்லை; எல்லோரும் மௌனஞ் சாதித்தனர். உடனே கோட்டை வாயிலண்டை எக்காளத்தொனி கேட்டது. சிரகத்தாமன் என்னும் மந்திர நாட்டுத் தூதுவன் ஆஸ்தான மண்டபத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறான் என்று யாவரும் அறிந்தனர். அவன் அநேக யுத்தகளங்களில் சண்டைசெய்து வாகை சூடி வெற்றியடைந்தவன். மந்திரநாட்டில் மிக்கப் பிரக்கியாதிப் பெற்ற பிரபு வம்சத்தைச் சேர்ந்தவன். அவன் கொலுமண்டபத்தையடைந்ததும், அவனோடு வந்த வீரரில் ஒருவன் ஒரு நிருபத்தை கையிலேந்தி முன்னே போக, தூதுவனாகிய சிரகத்தாமன் பின்னால் வெகு காம்பீரமாய் நடந்து அரசனை யணுகினான். வீரன் அரசனைப் பணிந்து நமஸ்காரஞ்செய்து நிருபத்தை நீட்டினான்.

தூதுவனோ அரசன் பேசிய பின்னரே தான் அவரை யணுக வேண்டும் என்னும் எண்ணத்துடன் மண்டபத்தின் மத்தியிலேயே நின்றுவிட்டான். "வாரும், வாரும் சிரகத்தாமரே. மந்திர நாட்டிலிருந்து என்ன செய்தி கொண்டு வந்தீர்?" என்றார் விஜயசேனர்.

தூதுவன் தலைகுனிந்து நமஸ்காரஞ் செய்து, அங்கிருந்த யாவருக்கும் கேட்கும்படி உரத்த சத்தமாய்ப் பின்வருமாறு பேசினான்:- "மாதல நாட்டு மன்னரே, எங்களதிபதியாகிய சமரவர்மர், உமது போர்வீரர் எங்கள் எல்லைப்புரத்தில் செய்திருக்கும் அக்கிரமங்களை எல்லாங் குறிப்பிட்டு நீண்டு உமக்கோர் நிருபம் வரைந்தனுப்பியிருக்கிறார். அவற்றிற்குப் பரிகாரஞ் செய்யவேண்டுமென்னுங் கருத்து உமக்குக்கிஞ்சித்தேனும் உண்டா என்பதுதான் எனது முதற் கேள்வி."

அரசர் நிருபத்தைப் படித்துப்பார்த்து, "இவ்விஷயங்களைப் பற்றி எனது ஆலோசனை சபையார் கவனித்து வருகின்றனர். அவர

றில் சில எனது குடிகளுக்கு நேர்ந்த கஷ்டங்களுக்குப்பதிலாய்ச் செய்யப்பட்டன. சில வற்றிற்கு ருசுவேயில்லை. அப்படிக் கேதாவது தீங்குகள் நேர்ந்ததாக ருசுப்பித்தால் நான் அவைகளுக்குப் பரிகாரந் தேடத் தயார். ஆயினும் அவைகளுக்கு நான் உத்திரவாதியல்ல; ஏனெனில் அத்தகைய துஷ்டச் செயலகள் ஒன்றும் புரியலாகாதென்று கண்டிப்பாய்க் கட்டளையிட்டிருக்கிறேன் என்றறியவும்.'' என்று விடை பகர்ந்தார்.

சிரகத்தாமன் :-தங்கள் பதிலை எனது எஜமானருக்குத் தெரிவிக்கிறேன். ஆனால் இந்தப்பதிலில் நூதனம் ஒன்றுமில்லை. தாங்கள் இதற்குமுன் கொடுத்த பதிலுக்கும் இதற்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை யாதலால், இதனால் மாதலநாட்டுக்கும் மந்திர நாட்டுக்கும் சிநேகப்பான்மை ஏற்பட்டு சமாதானம் உண்டாகும் என்று நினைக்க இடமில்லை யெனறஞ்சுகிறேன்.

விஜய :-கடவுள் சித்தம்! நாம் என்ன செய்யலாம்! நான் உன் எஜமானர் அனுப்பிய கடுமையான நிருபத்துக்கு இவ்வளவு சாந்தமாய்ப் பதிலளிப்பது, சமாதானத்தை நாடியே யொழிய, போருக்கஞ்சியல்ல வென்றறியவும்.

சிரக :-என் எஜமானர் தங்களிடம் இரண்டாவதாகக் கேட்பது யாதெனில், அவருக்குச் சொந்தமாகிய திருநகரி, முல்லையூர், கருணைவாசல் முதலிய பட்டணங்களில் வசிக்குங் குடிகளிடம் இரகசியமாய்க் கலந்து எனது எஜமானருக்கு விரோதமாய் அவர்களைக் கலகஞ் செய்யும்படித் தூண்டுவதை நிறுத்த வேண்டும் என்பதே.

விஜய :-அவ்வாறு நான் இரகசியமாய் ஒன்றும் செய்கிறதில்லை யென்று உன் எஜமானருக்குத் தெரிவி. எனக்கும் அந்நகரத்தாரு

2-0
7-3.
9-3

க்கும் இருக்கும் சம்பந்தம் பகிரங்கமானதே. அதுவும் வியாபாரத்தின பொருட்டாம். இவ்வளவுதானா? இன்னும் ஏதாவதுண்டா?

சிரக:-ஆம், உண்டு. திரையூர் ஜமீன்தாரரின் ஏகபுத்திரியாகிய அமலாம்பாளும் அவளுடைய அத்தை கனகவல்லியும் தங்களிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறார்களாம். என் எஜமானர் பாதுகாவலில் இருந்த அமலாம்பாளை அவருக்கு விரோதமாக நடக்கும்படித் தூண்டிவைத்துவிட்டு, அவளையும் அவளுடைய அத்தையையும் உடனே தன்னிடம் ஒப்புவித்துவிடும்படியாய்க் கேட்கிறார்.

விஜய:-பேஷ், நன்றாயிருக்கிறது உன் பேச்சு! உன் எஜமானருடைய கோப குணத்துக்கஞ்சி உங்கள் நாட்டைவிட்டு ஓடுகிறவர்களுக்கெல்லாம் நானே பிணை? நீ கூறும் இந்த இரண்டு மாதரும் இங்கே இருக்கின்றனர் என்று உறுதியாய்ச் சொல்லக்கூடியவர் யாவர்? அப்படியே அன்னார் இங்கே இருக்கின்றனர் என்று வைத்துக்கொண்டாலும், அவர்களைத்தமது நாட்டை விட்டோடும்படித் தூண்டியதும், அவர்களுக் கடைக்கலந்தந்ததும் நானே என்று சொல்லத் துணிபவர் யார்?

சிரக:-அரசே, யாரென்று கேட்கிறீர்கள்? நெருப்பின்றி புகை எவ்வாறுண்டாகும்? சித்திரப்புரி சத்திரத்தில் அம்மாதர் தங்கியிருந்ததையும் தாங்களே ஒரு வர்த்தகனைப்போல கேவல உடை தரித்து, அவர்களோடு பேசிக் கொண்டிருந்ததையும் நேரிற் கண்டதாக, கருணைவாசலிலிருக்கும் அவர்களுடைய சிநேகிதர்களுக்குத் தங்கள் முன்னிலையிலேயே அவர்கள் கொடுத்த கடிதத்தைப் பெற்ற மனிதனே எங்கள் எஜமானரிடஞ் சொன்னான். இதைவிட வேறு சாட்சி வேண்டுமோ?

விஜய :-அவனைக் கொணர்ந்து என்முன் நிறுத்து; அவன் வாய்ப்பிறப்பை யறிவோம்.

சிரக :-ஐயனே, தாங்கள் இப்போது வெற்றியாளர்போல் தைரியமாய்ப் பேசமாட்டீரா? அம்மனிதன் இவ்வுலகில் இல்லையென்பது தங்களுக்குத் தெரிந்த விஷயந்தானே. அவன் உயிருடனிருக்கையில் அவனைக் குப்பனென்று ஜனங்கள் கூப்பிட்டார்களாம். தங்கள் உத்திரவின்படியே அவன் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டான். அவன் உயிருடனிருந்தால் தங்களுக்குப் பாதகமாகச் சாட்சிசொல்ல நேருமென்றஞ்சியே அவன் உயிருக்குலைவைத்திராக்கும்.

விஜய :-நன்று, நன்று, உன்பேச்சு! நீ குற்றஞ்சாட்டும் விதத்தைக் கேட்கும்போது சிரிப்புண்டாகிறதே யொழிய கோபம் வரவில்லை. எனது காவற்சேவகர் தினந்தோறும் எத்தனையோ திருடரையுங் கொலைப்பாதகரையுந் தூக்கிலிடுகின்றனர். அத்தகைய பாதகர் எனக்கு விரோதமாய்ப் பேசும் பொய்மொழிகளை எனது பந்துவாகிய மந்திரநாட்டதிபதி நம்புகிறாரா என்ன? என் பொறுமைக்கும் வரம்புண்டென்பதை மறந்தனைபோலும்! என்னை அவமானஞ்செய்யவே இங்கு உன்னை அனுப்பிவைத்தாரோ? குருவுக்கு மிஞ்சிய சிஷனாயிருக்கிறாய் என்று நினைக்கிறேன்.

சிரக :-அப்படியல்ல, அரசே! என் வேலை இத்துடன் முடிந்ததென்று நினைக்காதீர். மாதலநாட்டு மன்னராகிய விஜயசேன மகாராஜாவே கேளும்! இங்கே கூடியிருக்கும் பிரபுக்கள் சாட்சியாகச் சொல்லுகிறேன், மாதலநாட்டரசராகிய நீர் என் எஜமானருக்கு விரோதமா யிழைத்திருக்குந் தீங்குகளுக்குத் தகுந்த பரிகாரஞ் செய்ய மறுத்தபடியால், எனது தலைவர் உம்மைத் திரஸ்கரித்துப்

போருக்கழைக்கிறார் என்று அவருடைய நாமத்தால் சிரகத்தாமனாகிய நான் எல்லோருமறியச் சொல்லுகிறேன்.

தூதவன் இவ்வாறு ஆணுரை மொழிகையில்; ஆஸ்தான மண்டப முழுவதும் நிசப்தமாயிருந்தது. ஆனால் அவன் பேசி முடிந்ததுதான் தாமதம், அங்கேயிருந்த அமைதி போனவிடம் தெரியவில்லை. எங்கும் ஒரே குழப்பமாயிருந்தது. பாவகன், கருணாபரர், துரைராஜன் முதலியோர் தங்களிருக்கைவிட்டெழுந்தனர். "பிடி, கட்டு", "அவனை உதை", "எங்கள் அரசரை அவருடைய அரண்மனையிலேயே அவமானப்படுத்தவா வந்தான்?" என்னும் வார்த்தைகள் அம்மண்டபத்தின் பலபக்கங்களினின்றும் கிளம்பின.

ஆனால் விஜயசேனர் எழுந்து நின்று மேக கர்ச்சனைபோல் உரத்த சத்தமாய், "போதும், போதும்! குடிகளே பேசினதுபோதும் நிறுத்துங்கள்! இவன்மேல் கைவைக்கப் போகிறீர்கள், ஜாக்கிரதை! சிரகத்தாமா, நின்னுயிரை இவ்வாறு திரணமாய் மதித்ததென்னனம்? நின் தலைவர் தமக்கிருக்கும் முறைப்பாடுகளை, மற்ற அரசரைப்போலின்றி இவ்வளவு சாந்தமாய்த் தெரிவிக்கத் துணிந்தாரே. அவருக்கும் மற்றமன்னர்களுக்கும் பேதமுண்டாகும்!" என்றார்.

"அதற்கும் சந்தேகமா? மற்ற அனைவரினும் அவர் மிகுந்த பெருந்தன்மையுடையார் என்பதை அறியீரோ? உமது தந்தையார் உம்மை பழிவாங்கும் எண்ணத்துடன் தேசப் பிரஷ்டஞ்செய்தபோது, மற்ற தேச மன்னர்கள் உமக்கு அபயம் அளிக்க அஞ்சி நிற்க, வருவது வரட்டுமென்று உம்மைத் தமது சகோதரனாப் பாவித்து உமக்கடைக்கலந் தந்து காப்பாற்றியவர் அவரே யல்லவா? நல்லது, அரசே, என் வேலை முடிந்தது. நான் செலவு பெற்

துக்கொள்ளுகிறேன்.'' என்று கடுமையாய்ப் பேசி சிரகத்தாமன் மண்டபத்தைவிட்டு வெளியேறினன்.

பிரதான மந்திரியாகிய பாலசுந்தரம் மெதுவாய் எழுந்து தூதுவனைப் பின்பற்றிப்போயினன்.

விஜய :-சிரகத்தாமனைப் போன்ற தைரியசாலியைத் தன்னூழியரில் ஒருவனாகக்கொண்டிருத்தல் மந்திரநாட்டரசன் அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

பாவகன் :-அண்ணலே, தங்கள் தேசப் பிரபுக்களுக்குள் அவனைப்போன்ற வீரர் உண்டென்பதை மறந்தீரோ; அவனைவிட மிக்க தைரியமாய் மந்திரநாட்டுக்குச் சென்று உருவின வாளுடன் அத்தேசாதிபனைப் போருக்கழைக்கும் ஆற்றல் வாய்ந்தவர் இல்லையா? எங்களுக்கும், தங்களுக்கும், மாதலநாட்டுக்கும் புகழும் பெருமையுங் கொண்டுவரக் கூடிய ஊழியத்தில் பிரவேசிக்கும்படி எங்களை நீர் விடுவதில்லையே.

விஜய :-அற்ப காரியத்தில் புகழடையலாமென்று மாதலநாட்டைக் கஷ்டத்துக்குக் கொண்டுவரக்கூடிய உங்கள் மதிகேடான செயலுக்கு நான் இடந்தரேன் என்று சொன்னால் பொருந்தும். நமது தேசம் இப்போதிருக்கும் நிலைமையில் அதற்குச் சமாதானம் அத்யாவசியமான காரியம் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. அப்படியிருக்க நாடோடியாகிய ஒரு குறப்பயல் கூறிய கட்டுக் கதையை முன்னிட்டோ அல்லது நாட்டை விட்டோடி வந்த ஒரு சிறுமியை முன்னிட்டோ, நீங்கள் எல்லோரும் தொடையைத் தட்டிக்கொண்டு சண்டைக்குப் போகவேண்டுமென யோசிக்கிறீர்கள். ஆ, இதோ நமது மந்திரியார் வருகிறார். அமைச்சரே, சிரகத்தாமனைச் சரிப்படுத்திவிட்டீரா? அவசரக்காரனுக்குப் புத்திமட்டு என்பது அவன்பாற் பலித்தது போலும்.

பாலகசுந்தரம்:-அவனைச் சரிப்படுத்துவது அவ்வளவு கஷ்டமான காரியமா? ஆயினும் அவனை ஒரு தினம் தங்கிப்போகும்படி சம்மதிக்கச் செய்தது எமப்பிரயத்தனமாய் விட்டது. அவன் சத்திரத்தில் தங்கியிருக்கிறான்.

விஜயசேனர் "நல்லது அவனைத் தகுந்தவிதமாய் உபசரித்து, வேண்டிய சௌகரியங்களைச் செய்வதிற் கொஞ்சமும் பின்னிடையாதீர். செலவைக் கவனிக்கவேண்டாம்." என்று, "ஒரே தினம். இது போதுமா? ஆயினும் இந்த 30 நாழிகைக்குள் என் காரியம் சித்தியாகவேண்டும். தந்திரமும் யுக்தியும் அவசியமானவை!" எனத் தனக்குள்ளாகவே முணுமுணுத்துக்கொண்டு, மீண்டும் சபையோரைப் பார்த்து, "நமது வேலை முடிந்தது. பிரபுக்களே, இனி வேட்டைக்குப் போகலாம் என்று நினைக்கிறேன். யாவும் சித்தமாயிருக்கின்றன. ஆதலால் உடனே புறப்படுவோம்!" என்று மனக்கவலை யொன்றுமில்லாதவர்போல் உரத்த சத்தமாய்ப் பேசி சபை கலைத்தார்.

---

## அதிகாரம் 8.

---

### வனவேட்டை.

அரசனுடைய குணாகுணங்களை அமைச்சனாகிய பாலகசுந்தரம் அனுபவத்தில் பார்த்திருந்தும், இச்சந்தர்ப்பத்தில் அவைகளை யறியாதவன்போல் நடந்துகொள்ள நேர்ந்தது அவனுடைய துர்அதிர்ஷ்டமே. சமரவர்மன் தூதுவனைத் திரும்பிப்போகாமல் தடுத்து, சித்திரப்புரியிலேயே நிறுத்திவிட்டது தன்னுடைய சாமர்த்தியத் திறல்தான் என இறுமாப்புக்கொண்டான். அத்தகைய வேலை

மற்றெவராலும் செய்யமுடியாதென்பது அவனுடைய வீண் எண்ணம். அதற்காகத் தன்னை அரசர் புகழ்ந்து பேசுவார் என்று நினைத்து, வேட்டையாடக் காட்டுக்குப்போகையில், அவன் தன் அசுவத்தை அரசர் பக்கமாகவே செலுத்திப்போய், அன்று காலை நடந்த சம்பவத்தைப்பற்றி எப்படியாவது அரசனைப் பேசும்படித் தூண்டுவதென முயன்றான். மந்திரியின் செய்கை அவ்வளவு யுக்தமானதல்ல; ஏனெனில் விஜயசேனர், தனக்குச் செய்யும் குற்றேவல்களுக்கு வெகுமதி எதிர்பார்க்கிறவர்களையும், தன் இரகசியங்களையறிய விரும்புவோரையும் எப்போதும் வெறுத்து வந்தார்.

பாலசுந்தரத்தின் நோக்கத்தை யறிந்துகொண்ட அரசர் கொஞ்ச தூரத்தில் போய்க்கொண்டிருந்த பாலகனை விளித்துத் தன் பக்கல் வரும்படி ஏவினார். "வனவேட்டையாடிக் களிப்பெய்ய யான் இங்கு வந்தேன். அமைச்சரோ ராஜீய விஷயங்களையே பேசிவருகிறார். மந்திராலோசனைசபை இவ்விடத்துங் கூட்டவேண்டும் என்பது அவர் கருத்தாக்கும். கோட்டை வாயிலில் சிரகத்தாமன் கூறியவை யனைத்தையும் ஒன்றும்விடாமல் சொல்லிவிட்டார். அமைச்சரே, சொல்லவேண்டியது இன்னும் ஏதாவதுண்டா? எல்லாம் சொல்லிவிட்டீரா?" என்று பாலசுந்தரத்தின்பால் தன் கூர்மையான பார்வையைச் செலுத்திக் கேட்டார்.

பாலசுந்தரத்தின் பாவி விலவிலத்து விட்டது. அரசரிடம் அவன் இதை எதிர்பார்க்கவேயில்லை. குளறிக்கொண்டே ஏதோ பதிலளித்தான். மந்திரநாட்டதிபதியுடன் தான் ஏதோ சதியாலோசனை செய்வதாக அரசர் சந்தேகிக்கும் விஷயம் அவனுக்குத் தெரியும்.

"இந்தப்பேச்சை உடைப்பிற்போடு. நாம்வந்த காரியத்தைக் கவனிக்கவேண்டும். அதோ அங்கு நின்ற பன்றி யோடி ஒளிந்தது.

வாருங்கள் அதைத் துரத்திச் செல்வோம். [illegible]கள்.” என்று அரசர் கூறி, குதிரையைத் தட்டிவிட்டார். அவருடைய கொம்பினோசை அடவி முழுவதும் பிரதிதொனித்தது. அவரைப் பின்பற்றி இரண்டு மூன்று காவல்வீரர் சென்றனர். அவர்களில் ஒருவன் சம்மதிவீரன்.

பாலசுந்தரமும் அரசர் கூடவே சென்றான். ஆனால் அவன் குதிரை யேற்றத்தில் அவ்வளவு தேர்ந்தவனல்லவென்று அரசருக்குத் தெரியும். ஆகவே அச்சமயத்தில் அவனைக் கேலிசெய்து அவமானப்படுத்தவேண்டும் என்னும் எண்ணத்துடன் விஜயசேனர் வேட்டையின்மீது கண்ணுங் கருத்துமாயிருந்தபோதிலும், பாலசுந்தரத்தைக் கேலி செய்வதற்கும் அவருக்கு அவகாசங் கிடைத்தது. பாலசுந்தரம் தற்பெருமை கொண்டவன்; வேட்டையாடுவதில் தனக்கு நிகரானவர் எவருமில்லையென்னுங் கர்வமதிகம். இவ்விஷயமும் அரசருக்குத் தெரியும். அவர் தன் குதிரையை ஒரு சமயம் வேகமாகவும் மற்றொரு சமயம் மெதுவாகவும் முறையே தூண்டியும் அடக்கியும் நடத்தினதால், பாலசுந்தரத்தின் குதிரை தன்னைச் சவாரி செய்பவன் திறமையில்லாதவனென்னத் தெரிந்துகொண்டதுபோல், காலைத்தூக்குவதும், பின்னுக்குப் போவதும், பக்கவாட்டாய் தலையைச் சாய்த்துக்கொண்டு இழுப்பதுமாய் முரட்டுத்தனஞ் செய்ய ஆரம்பித்தது. இதனால் பாலசுந்தரம் கடைசி மட்டும் தன் குதிரையின்மேல் அமர்ந்திருப்பான் என்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லாமலிருந்தது. ஒவ்வொரு நிமிஷமும் அவன் வேறு குதிரை வேறாகப் பிரிந்துவிடும்போல் தோன்றிற்று.

அப்போது அரசர் அவனைப்பார்த்து வேட்டையின்மட்டில் அவனுக்கவ்வளவு ஆவல் கூடாதென்று பரிகாசமாக மொழிந்தார். குதிரையின் சேஷ்டைகளால் என்ன நேருமோவென்று பயப்பிராந்திகொண்டிருந்த அமைச்சனுடைய நிலைமையைப் பார்க்கப்பார்க்

கப் பாவகனுக்குச் சிரிப்பு அடக்க முடியவில்லை. "நல்லது, இனிமேல் உன்னை அடக்கவில்லை. நீ போகலாம்." எனப் பாலசுந்தரம் தன்கையில் இழுத்துப் பிடித்திருந்த கடிவாளவாரைத் தளரவிட்டனன். இதுதான் சமயமென்று அக்குதிரையும் ஓட்டம் பிடித்தது. விஜயசேனரும் பாவகனும் பின்னடைய, அக்குதிரை அமைச்சனைத் தாங்கிக் கடுகியோடி முன்னே சென்ற நாய்களையும் வேட்டைக்காரர்களையும், தூரத்தில் தென்பட்ட காட்டுப்பன்றிகளையும் கடந்துசென்றது. பாலசுந்தரம் அப்போது மிகவும் அபாயகரமான நிலையில் இருந்தானென்று சொல்லவும் வேண்டுமா? குதிரை இவ்வாறு ஓடுகையில் அவன் அதை அடக்க எவ்வளவோ முயன்றும் பயன்படவில்லை. எங்கே விழுந்துவிடுவோமோ என்று குதிரையின் பிடரிமயிரைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தான். என்ன பரிதாபகரமானக் காட்சி! காட்டுப் பன்றியைக் கண்டதும் அவன் குதிரை இன்னும் அதிவேகமாய் ஓடவே, பாலசுந்தரம் இன்னது செய்வதென்று தோன்றாமல் உதவிவேண்டுமெனக் கூவினன். அந்தச் சத்தத்தால் குதிரையும் பயந்துவிட்டது. பன்றிகளில் ஒன்று அவனைத் துறத்தி வருவதாகக் கண்டுகொண்ட குதிரைத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுத் தன்மேலிருப்பவனை ஒரு குதிகுதித்துக் கீழே தள்ளிவிட்டுக் காற்றெனப் பறந்தது. நல்ல காலம்! அரசரும் பரிவாரங்களும் அந்தப் பன்றியைத் துறத்தி வந்தமையால், அது பாலசுந்தரத்தை எதிர்க்காமல் ஓடிவிட்டது. கீழே விழுந்ததால் அவமானமும், அடிப்பட்டதால் நோயும் மிகுந்து கஷ்டப்படும் அமைச்சன் மெதுவாய் நகர்ந்துவழியை விட்டு ஒருபக்கம் போயினன். அவ்வாறு போயில்லாவிடில், வேகமாய் வந்துகொண்டிருக்கும் குதிரையின் கால்களிற் சிக்கி மிதியுண்டு சின்னாபின்னமாகப்போயிருப்பான். அரசரும் மற்றவர்களும் அவன் பக்கமாய்ப் போகையில் முதலாய் அவனுக் குதவிசெய்ய எவரும்

வரவில்லை. அரசர் போகையில் பாலசுந்தரத்தின் நிலையை ஏளனஞ் செய்பவர்போல் அவனைப் பார்த்துக்கொண்டே போயினர். அச்சமயம் அமைச்சன் மனம் இருந்த நிலையை என்னென்போம்! வேண்டுமென்றே தன்னை அரசன் இப்படி அவமானப் படுத்தினனென்று நினைத்து பாலசுந்தரம் பழிக்குப்பழிவாங்காமல் இருப்பதில்லையெனத் தன் மனதில் தீர்மானித்துக்கொண்டனன்.

இராஜப் பரிவாரங்கள் அவனைக் கடந்துசென்று கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஒருவன் குதிரையேறி அங்கேவந்து அமைச்சன் இருந்த நிலையைப்பார்த்துப் பரிதபித்து ஆச்சர்யம் எய்தினன். அவன்தான் மந்திரநாட்டிலிருந்து தூதுவனாக வந்த சிரகத்தாமன். அவன் குதிரையை விட்டுக் கீழே இறங்கி, பாலசுந்தரத்தைக் கைலாகுகொடுத் தெழுப்பித் தன் அசுவத்தின்மேல் ஏற்றி, "இத்தகைய விபத்தில் விஜயசேனர் தமது மதியூகியாகிய மந்திரியாருக்குதவி செய்யாமல் விட்டுச் சென்றது வியப்புக்குரியதே." என்றான். அன்று காலையில் பாலசுந்தரத்துடன் பேச நேர்ந்தபோது, அவனை மந்திரநாட்டதிபதியுடன் சேரும்படித் தூண்டிய சிரகத்தாமன் இதுதான் சமயம் என்று அதே விஷயத்தைப்பற்றி இப்போதும் பேசினான். அவன் சொன்னயோசனை அமைச்சனுக்குத் திருப்தியாகவேயிருந்தது; நல்ல சன்மானம் கிடைக்குமெனத் தூதுவன் சொன்னது, பாலசுந்தரத்தின் பேராசையைத் தூண்டும் சாதனமாயிற்று. காட்டுக்கு வருமுன் விஜயசேனரை காட்டிக்கொடுப்பதா கூடாதா என்று மனத்தடுமாற்ற முடையவனாயிருந்தவன், தனக்கு அடவியில் நேர்ந்த அவமானத்துக்குப்பின், அரசரைத் தன் பகைவனாய் மதித்து அவருக்கு விரோதமாய்த் தன்னால் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவையுஞ் செய்வதே சரியெனத் தீர்மானித்தான். இருவரும் ஒன்றாயிருப்பது மற்றவர்கள் சந்தேகத்துக் கிடமாகும் என்று அன்றுமாலை இரகசியமாய் அவனைப் பார்ப்பதா

கவும், அதுவரையில் தன்னைவிட்டுப் பிரிந்திருப்பது உசிதம் என்றும் சேகத்தாமனிடம் சொன்னான். அப்படியே அவ்விருவரும் உடனே பிரிந்துவிட்டனர்.

இதற்கிடையில் விஜயசேனர் காட்டுப் பன்றியைத் துரத்திச் சென்றனர். அப்பன்றி யோடிய வழியில் குறுக்கே மற்றொரு பன்றி தென்படவே, மற்றவர்கள் எல்லோரும் இரண்டாவது தோன்றிய மிருகத்தை நாடிச் சென்றனர். பாவகனும் இவ்வாறு போனது அரசருக்குச் சந்தோஷமே; ஏனெனில் அவனிருந்தால் வேட்டையில் சில வேளை தனக்கு வரக்கூடிய ஜெயத்தை அவன் அபகரித்துக் கொண்டாலும் கொள்ளலாம். இப்போது தான் மட்டும் முதற்பன்றியைத் தொடர்ந்து போய் அதைக் கொன்று வெற்றியாளராய் வெளிப்பட வழியுண்டல்லவா? அப்படியே வேட்டை நாய்களுடனே பன்றியைத் தனியே துரத்திச்சென்ற விஜயசேனரை அப்பன்றியானது ஒரு சதுப்பு நிலத்தண்டை எதிர்த்தது. அவர் உடனே அதைத் தன் ஈட்டியால் குத்தினார். ஆனால் அது குறிதவறவே, அவர் கீழே குதித்துத் தன் வாளையுருவிக்கொண்டு பாதசாரியாய் அதை எதிர்த்தார். பன்றியும் அவரை நோக்கி பாய்ந்தது. விஜயசேனர் அதன் மார்பில் தன் வாளைப் பாய்ச்ச எத்தனமாயிருந்தார். அச்சமயம் அரசர் சேற்றில், கால் சறுக்கிக் கீழே விழுந்துவிட்டார். இன்னுங் கொஞ்சந் தாமதித்திருந்தால் விஜயசேன மகாராஜா அந்தக் காட்டுப் பன்றியால் உயிர் துறக்க நேரிட்டிருக்கும். நல்ல வேளையாக அப்போது நமது மதிவீரன் அரசருக்குதவியாக அவ்விடம் அகஸ்மாத்தாய் வந்துவிட்டான். உடனே தன் குதிரையைச் செலுத்தி அப்பன்றியைத் தன் ஈட்டியால் குத்திக் கொன்றான்.

இதற்கிடையில் அரசன் எழுந்து மதிவீரனண்டை வந்து, தன் வாளால் அப்பன்றியின் கழுத்தை வெட்டினார். “மலைநாட்டிளைஞா,

நீயோ இங்கு வந்து தோன்றினை? உன் வேட்டையை நீ ரொம்ப நன்றாகவே ஆரம்பித்திருக்கிறாய் என்று சொல்லவேண்டும். நீ ஏன் பேசாமல் மௌனஞ் சாதிக்கிறாய்? அரண்மனையில் உன் தைரிய மனைத்தையும் இழந்தனை போலும்!" என்றார்.

வல்லப மிருந்த தன் எஜமானரைப் பார்க்கப் பார்க்க மதிவீரனுக்கு நம்பிக்கையைவிடப் பயமே அதிகமாயிற்று. "அடியேன் தங்கள் சன்னிதானத்தில் பேசத் துணிவதற்கு முன், தங்களை முதல்தடவை நான் பார்த்தபோது தங்களிடம் சங்கையீனமாய் நடந்துகொண்டதற்குத் தங்களிடம் மன்னிப்படைவது அவசியம்.' என்று வினயமாய்ப் பதிலளித்தான்.

"சட், அதைப்பற்றி இப்போதென்ன? உன்னுடைய வீரதீரத்தையும் புத்திக் கூர்மையையும் மெச்சி உனது துணிச்சலை மன்னிக்கிறேன். வா, என்னைக் குதிரைமேல் ஏற்று. உன்மேல் எனக்குப் பிரீதி அதிகரிக்கின்றது. அதனால் உனக்கு நன்மையே விளையும்." என்றார் விஜயசேனர்.

அரசர் தன் எக்காளத்தை முழக்கவே, பாலகனும் மற்றவர்களும் அங்கே வந்து, அவ்வளவு பெரிய மிருகத்தைக் கொன்றதற்காக அவனைப் புகழ்ந்து கொண்டனர். மதிவீரன் செய்த உதவியை அதிகமாய் விவரிக்காமல் விஜயசேனர் ஏதோ தன் சாமர்த்தியத்தாலேயே அம்மிருகத்தை எமலோகம் அனுப்பியவர்போல் அவர்களிடம் பேசினார்.

"நல்லது, பாலசுந்தரத்தின் கதி என்ன? அவரை யாராவது பார்த்தீர்களா?" என்று மன்னர் வினவினார்.

எல்லோரும் மௌனமாயிருக்க, மதிவீரன், "அண்ணலே, அவர் வேறொரு குதிரைமேலேறிக் காட்டைவிட்டு ஊரை நோக்கிப் போவதை நான் கண்டேன்." என்றான்.

"எல்லாம் தெய்வச் சங்கல்பம்! பிரபுக்களே வாருங்கள் கோட்டைக்குத் திரும்புவோம். இன்று வேட்டையாடியதுபோதும் இளைஞா. என் கத்தியை எடுத்துவா, அதுபன்றியின் பக்கம் நழுவி விழுந்துவிட்டது. பாவகா, குதிரையைத் தட்டிவிடு; நானும் இதோ புறப்படுகிறேன்." என்று அரசர்மொழிந்து, கத்தியைக் கொண்டுவரப்போன மதிவீரன் தன்னிடம் வருமளவும் நின்றார்.

இவ்விருவரும் தனித்திருக்கையில், "அமைச்சருக்கு அக்குதிரையைத் தந்தது யாரென நீ சொல்லக்கூடுமா?" என்று கேட்டார்.

"சமரவர்மரிடமிருந்து வந்த தூதுவர் என்று நினைக்கிறேன்." என்று பதிலளித்தான் நமதிளவல்.

"ஆ, அப்படியா? இருக்கட்டும்! மாதலநாட்டு மன்னன் அவர்தம் சூழ்ச்சிக்கிளைத்தவனல்ல." என்று விஜயசேனர் தனக்குள்ளாகவே பேசிக்கொண்டார்.

பின்னர் அவர் தன் குதிரையைத் தட்டி மற்ற பிரபுக்களோடு சேர்ந்து கோட்டையை நோக்கிப் போயினர்.

## அதிகாரம் 9.

## காவலாளி.

மதிவீரன் தன் அறைக்குத் திரும்பிப் போனதும் அவன் மாமன் வனவேட்டையில் நிகழ்ந்ததென்னவென்று விசாரித்தான். இளைஞன் நடந்தவற்றைச் சொல்லிமுடிக்கும் சமயத்தில் யாரோ

கதவை மெதுவாய்த் தட்டுகிற சத்தம் கேட்டது. உடனே விநய சேனருடைய நாவிதனுகிய உலகநாதன் உள்ளே நுழைந்தான்.

அரசர் வனவேட்டையில் மதிவீரன் காட்டிக்கொண்ட வீரத்தை மெச்சி அவனுக்கு உடனே ஒரு வேலை கொடுக்க யோசித்திருப்பதாக வாருசனுக்குத் தெரிவித்தான்.

வாருசன் :-அவனையா தெரிந்து கொண்டார்? என்னை என்பதற்குப் பதிலாய் அவனை என்று தப்பிதமாய்ச் சொல்லுகிறுயாக்கும்.

உலகநாதன் :-நான் சொல்வதில் தவறென்றுமில்லை. உன் மருகனுக்கு ஒருவேலை அரசர் வைத்திருக்கிறுர். வாலிப வீரரே, உமது துப்பாக்கியை எடுத்துக்கொண்டு என்னேடுவாரும். நீர் காவல் வேலை செய்யவேண்டி யிருக்கிறது.

வாருசன் :-காவலாளியா? என் மருகன் இன்னும் வில்வீரனுக வில்லையே. அவன் என் வேலையாள்தானே.

உலகநாதன் :-மன்னிக்கவேண்டும். அரை மணி நேரத்துக்கு முன்தான் அரசர் உமது மருகனை காவல்வீரனுக நியமித்தார்.

இச்செய்தியைக் கேள்விப்பட்டதும் மதிவீரனுக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவில்லை. தன் பராக்கிரமத்தைக் காட்டி புகழ் பெறும் சந்தர்ப்பம் வாய்த்திருப்பதாக நினைத்தான். உடனே தன துப்பாக்கியை எடுத்து தோளில் வைத்துக்கொண்டு உலகநாதனை பின்பற்றிச் சென்றுன்.

நாவிதன் இரகசிய வழிகளூடே அவனை அழைத்துச்சென்று நாற் பக்கங்களிலும் திரைகள் தொங்க விட்டிருந்த ஒரு கூடத்தில் கொண்டு வந்துவிட்டான். "இங்கே காத்துக்கொண்டிரும். அ

சர் உமக்கு உத்தர வளிப்பார். நீர் எதற்காக இங்கே வரவழைக்கப்பட்டீர் என்பதைச் சீக்கிரம் தெரிந்துகொள்வீர். போய்வருகிறேன். ஜாக்கிரதையாய்க் காத்துக்கொண்டிரும்.'' என்று ஓசைபடாமல் மொழிந்து போயினன்.

“ஜாக்கிரதை! என்ன காவல்! யாரைக்காப்பது?'' என்று மௌன வீரன் தனக்குள்ளாகவே நினைத்துக்கொண்டான். மலைநாட்டுப் பாடல்களை மெதுவாய்ப் பாடிக்கொண்டே காலத்தைக் கழித்தான். ஆயினும் பிற்பகல் இரண்டு மணியானபோது அவனுக்கு பசிதாள முடியவில்லை.

கூடத்தின் இரண்டு பக்கங்களிலும் பெரிய கதவுகளிருந்தன. ஒரு கதவின் பக்கத்திலிருந்து திடீரென சங்கீத ஓசை கேட்டது. சத்திரத்தில் அவன் செவிமடுத்த கதாமிர்தமே இதுவென்று நினைத்தான். சந்தோஷத்தால் இன்னது செய்வதென்று தோன்றாமல் அப்படியே அசைவற்று நின்று, ஐம்புலன்களையும் அந்தச் சங்கீதத்தின்பால் செலுத்தினன்.

மறைந்து நின்று பாடிய அம்மாதரசி சத்திரக்காரன் மகளல்லவென்றும், மந்திரநாட்டை விட்டு ஓடிவந்து அந்தரங்கமாய் அடைக்கலம் புகுந்த அமலாம்பாளென்றும் மதிவீரன் அச்சமயத்தில் நிச்சயித்துக் கொண்டான். அவளை முன்னிட்டல்லவா அரசரும் பிரபுக்களும் யுத்தஞ் செய்ய எத்தனிக்கின்றனர் என்று நினைத்தான். அவன் இவ்வாறு பல விஷயங்களையும் நினைத்து பகற் கனவு கண்டுகொண்டிருக்கையில், அவன் பிடித்திருந்த ஆயுதத்தைத் திடீரென யாரோ ஒருவர் முறட்டுத் தனமாய்ப் பிடிப்பதுபோல் தோன்ற திடுக்கிட்டான். “ஆ, என்ன செய்கிறாய்? தூங்கிக் கொண்டு காவல் புரிகிறாயா என்ன?'' என்னும் சத்தம் அவன் காதில் விழுந்தது.

வெற்றியாளரின் ஞானமேயாவிருந்தமையால் அவன் திரும்பிப் பார்க்கவே விஜயசேன மகாராஜா தன் பக்கத்தில் நிற்பதைக் கண்டான். தனக்குத் தெரியாமல் எதிர் பக்கத்திலிருந்து இரகசியமாய் தன்னருகில் வந்து தன் காவலைப் பங்கப்படுத்திய அரசரைக் கண்டதும் வெட்கத்தால் நாணித் தலைகுனிந்தான். அவனுக்கு அப்போதுண்டான ஆச்சரியத்தால் தூண்டப்பெற்று ஒன்றையும் பாராமல் தன் பலத்தைப் பிரயோகித்து துப்பாக்கியை அரசர் பிடியின்றும் பிடுங்கிக்கொண்டான். அவன் பிடுங்கிய வேகத்தால் அரசர் சற்றே பின்னடைய வேண்டியதாயிற்று. பிறகு சற்று நிதானித்துத்தான் செய்த தவறை உணர்ந்தவனாய் மதிவீரன் துப்பாக்கியைத் தோளில் வைத்துப் பிடித்தவண்ணம், சிலைபோல அரசன் முன் நின்றான். "இன்று காலையில் நீ எனக்குச் செய்த உதவியே உனது அஜாக்கிரதையை மன்னித்தது. சாப்பிட்டாயா?" என்று விஜயசேனர் கேட்டார். மதிவீரன் பயந்தெளிந்து தாழ்மையாய் இல்லையென்றான்.

விஜய:-இளைஞா, உணவின்றி இன்னும் ஒரு மணிநேரம் இருக்கக்கூடுமா?

மதி:-ஒன்றல்ல இரண்டல்ல! வேண்டுமானால் இருபத்தினாலு மணிநேரம் உணவின்றி இருப்பேன்.

விஜய:-அமைச்சரும் சிரகத்தாமனும் என்னோடு இன்றைக்கு தனிமையாய் விருந்துண்பார்கள். ஏதேனும் அசந்தர்ப்பம் நேரிடலாம்.

அரசர் அதற்குமேல் ஒன்றும் பேசாமல் மௌனமாய் ஏதோ மனக்கலக்கம் கொண்டவர்போல் சற்றே நின்றார். மதிவீரன் நெஞ்சம் பொறுத்து தன் கடமை யென்னவென்று கேட்டான்.

விஜய :-உன் துப்பாக்கியை தயாராய் வைத்துக்கொண்டு காவலிருக்க வேண்டும். இராஜ துரோகம் ஏதாவது ஏற்பட்டால் உடனே அத்துரோகியைச் சுட்டுக் கொல். இதுதான் உன் அலுவல்.

மதி :-இராஜதுரோகமா? கடுங்காவல் செய்யப்படும் இந்தக் கோட்டையிலேயா?

விஜய :-இராஜதுரோகம் எங்கும் உண்டு. சந்து பொந்துகளில் நுழைந்து வரக்கூடும். மந்திராலோசனை சபையில் இராஜதுரோகமுண்டு. இப்போது நேசபான்மையாய் நடந்துகொள்ளும் நமது எதிரியாகிய சீரகத்தாமனிடம் இராஜதுரோகம் மறைந்திருக்கலாம். நான் ஒருவரையும் நம்புவதில்லை. அமைச்சன் மீதும் அத்தூதுவன் மீதும் ஒரு கண்ணாகவே இருப்பேன். "மலைநாடு" என்று நான் குறிப்பாய்ச் சொன்னதும் சீரகத்தாமனைச் சுட்டுக் கொல்.

மதி :-அண்ணலே, தங்களுக்குத் தூதுவன்மேல் அவ்வளவு சந்தேகமிருந்தால் உம்மைத் தனிமையில் நெருங்கும்படி விடுவது ஆச்சரியமே.

விஜய :-குலைக்கிற நாயிடம் தைரியமாய்ச் சென்று தட்டிக் கொடுத்தால் அது அநேகமாய்ச் சாந்தமாகிவிடும். அதற்குப் பயந்தால் தான் அது நம்மேற் பாய்ந்துவிழும். தூதுவன் கோபத்துடன் தன் எஜமானிடம் திரும்பலாகாது. ஆதலால்தான் நான் இவ்வாறு செய்கின்றேன். என் ராஜ்ஜிய நன்மையின் பொருட்டு என் உயிருக்கே தீமைவரினும் நான் கவனிப்பதில்லை. என்னைப் பின் பற்றிவா.

அரசர் நமது இளவலை அழைத்துக்கொண்டு ஒரு சிற்றறைக்குள் நுழைந்தார். அதன் மத்தியில் மூவர் சாப்பிடுவதற்கு யாவும் தயாராயிருந்தன. அங்கேயிருந்த தட்டு முட்டு சாமான்கள் வெகு

சாமான்யமானவை. மதிவீரனை ஒரு அலமாரியின் பின்னால் ஒருவர் கண்ணுக்கும் படாதபடி மறைத்து வைத்தனர். இளவீரன் மட்டும் தானிருந்த இடத்திலிருந்து அவ்வறையில் நடப்பவையனைத்தையும் பார்க்கக்கூடுமாயிருந்தது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் விருந்தினர் இருவரும் உள்ளே வர, அரசர் அவர்களை வரவேற்று மிகுந்த வாஞ்சையுடன் உபசரித்தனர். அவர்களிருவரையும் சகலத்திலும் தான நம்பியிருப்பது போல் விஜயசேனர் நடந்துகொண்டார். அவர்களை மரியாதையாக நடத்துவதே தன் முக்கிய நோக்கமெனக் காட்டிக்கொண்டார்.

பாலசுந்தரத்தின் அடக்கமான நடத்தையும் சிரகத்தாமனின் கள்ளங்கபடற்ற பேச்சும் மன்னருடைய சந்தேகங்களை ஒருவாறு போக்கின என்று மதிவீரன் நினைத்தான். ஆனால் விருந்தினர் தத்தம் இடத்தில் அமர்ந்ததும் விஜயசேனர் அவர்களைக் கூர்ந்து நோக்கி மதிவீரனைப் பார்த்தார். இது ஒருவிநாடியில் நடந்ததேனும் மலைநாட்டிளவல் அரசன் முகத்தில் ஐயமும் பகைமையும் ஜாக்கிரதையாய்க் காவல் புரியும்படியான கட்டளையும் தெற்றென விளங்கியதாகத் தெரிந்து கொண்டான்.

விஜயசேனர் தூதுவனிடம் பழைய கதைகளைப் பேச ஆரம்பித்தார். தன்னை வந்தவர்கள் எதிர்ப்பார்கள் என்று அவர் அஞ்சுவதாக காட்டிக் கொள்ளவேயில்லை. அரசனுடைய விநோத சம்பாஷணையில் சிரகத்தாமன் ஈடுபட்டுத் தோன்ற பாலசுந்தரம் சதா சிரித்துக்கொண்டே இருந்தனன்.

சுமார் ஒன்றரை மணிநேரம் இவ்வாறு கழிந்தது. விருந்தினர் அரசனிடம் விடைபெற்றுச் சென்றனர். உடனே விஜயசேனர் யௌவன வீரனைத் தன்னருகில் அழைத்தார். சந்தோஷமாயிருந்த அவருடைய முகம் அப்பொழுது மாறுபட்டு ஒளிமங்கி

மிகக் களைப்படைந்ததுபோல் தோன்றிற்று. "உன்னுடைய காவல் இன்னும் முடியவில்லை. இதோ இருக்கும் உணவையருந்து. நீ இனிச் செய்யவேண்டியது இன்னதென்று சொல்லுகிறேன்." என்று தன்னுடைய ஆசனத்தில் சாய்ந்து கரத்தை நெற்றியில் வைத்து மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார்.

---

## அதிகாரம் 10.

### கூடத்தில் நிகழ்ந்தவை.

மாதலநாட்டு மன்னர் மதிவீரன் சாப்பிட்டு முடியும் வரையில் பொறுமையாகக் காத்துக்கொண்டிருந்தார். பின்னர் அவனைக் கூடத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய், "நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். இன்று மாலை உலகநாதன் அல்லது என்னைத் தவிர வேறொரு மனிதனும் இங்கே வரமாட்டான். ஆயினும் சில மாதர் வருவார்கள். தமிழ் பாஷைத் தெரியாத மலைநாட்டானைப் போல் நீ நடந்துகொள்ளவேண்டும். அதையறிந்து அப்பெண்கள் அச்சமின்றித் தாராளமாய்ப் பேசுவார்கள். அவர்கள் பேசுவதையெல்லாம் ஒன்றும்விடாமல் கவனமாய் உற்றுக்கேள். அவற்றை என்னிடம் கூறுமளவும் நினைத்துக் கொண்டிரு; பிறகு மறந்துவிடு. போய் வருகிறேன்." என்று விஜயசேனர் மறைந்தார்.

தனியே விடப்பட்ட மதிவீரன் தான் பார்த்தவைகளையும், கேட்டவைகளையும் சிந்தித்தனன். அரசர் எதிர்பார்த்த மாதர்க்குள் ஒருவள் வீணை வாசிக்கும் நங்கையென தன் மனதில் நிச்சயித்துக் கொண்டான். அவள் வாயிலிருந்துவரும் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் கவனமாய்க் கேட்பதென்றும், ஆனால் அவளுக்குக் கெடுதலை உண்டுபண்ணக்கூடிய விஷயங்களை விஜயசேனரிடம் தெரிவிப்பதில்லையென்றும் தனக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

கடைசியில் ஒரு கதவு திறக்கப்பட்டு ஒரு யௌவன மாது கூடத்துக்குள் நுழைந்தாள். அவள் அரசனுடைய இளைய குமாரத்தியென நமதிளவல் தெரிந்துகொண்டனன். அவள் தன் பக்கமாய்ப் போகையில் மதிவீரன் அவளை வணங்கி மரியாதை செய்தான். ஏதோ நோயால் வருந்தி அந்நோயை வெளிக்காட்டாமல் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டிருந்த அவ்வறையன் மகளின் வெளுத்த முகத்தையும் பரிதாபகரமான நிலைமையையும் கண்டு நமதிளவல் வருந்தினன். பின்னர் மற்றொரு பக்கத்திலிருந்து இரண்டு மாதர் கூடத்துக்குள் நுழைந்தனர். ஒருத்தி சத்திரத்தில் தான் பார்த்த இளம் பாவையெனத் தெரிந்துகொண்டான். அவள்தான் திரையூர் ஜமீன்தாரின் புதல்வியாகிய அமலாம்பாள் என்று தனக்குள் நிச்சயித்துக்கொண்டான். அவளை எப்படி ஒரு பணிப்பெண்ணாக தான் அன்று மதிக்க நேர்ந்ததோ என்று அவனுக்கே ஆச்சர்யமாகவிருந்தது. அவள் துக்க உடை அணிந்து யாதொரு அலங்காரமுமின்றி இருந்த போதிலும், அவள் இயற்கை யழகும் பெருந்தன்மையும் அவளை ஓர் உயர்குல மாதென்று தெளிவாய்க் காட்டின. மதிவீரன் அவ்விருவரையும் வணங்கி நமஸ்கரித்தான். அவர்களும் அவனை நமஸ்கரித்துவிட்டு சென்றனர். இளையவளாகிய அமலாம்பாள் தன்னைக் கண்டதும் முகமாதியதாக அவன் புத்தியிற்பட்டது. சத்திரத்தில் தன்னைக் காண நேர்ந்த சந்தர்ப்பம் அவள் ஞாபகத்தில் இருந்ததோ இல்லையோ எனச் சந்தேகித்தான். அவளோடு வந்த மற்றொருத்தி அவளுடைய அத்தையாகிய கனகவல்லி. அவளும் அழகில் சிறந்தவளாயினும் சற்றே கர்வங்கொண்டவள்போல் காணப்பட்டாள். அவளுக்குச் சுமார் முப்பத்தைந்து வயதிருக்கும். அவள் இளமையில் இன்னும் அதிக வனப்புடையவளாய் இருந்திருக்கவேண்டுமென மதிவீரன் யூகித்துக்கொண்டான். அரசன் மகள் அவ்விரு மாதருக்காகவும் காத்துக்கொண்டு நின்றாள். அவர்கள் வந்ததும் அவர்களுக்கு நல்வரவு கூறி உட்கார்ந்தாள். கனகவல்லி அவளை

ராஜகுமாரியென்று அறியாமல் ஏதோ சாமான்ய பெண்பிள்ளையிடம் பேசுவதுபோல் அவளிடம் பேச ஆரம்பித்தான்.

கனகவல்லி:-அம்மா, உன்னைக் கண்டது எங்களுக்குச் சந்தோஷமே. உன்னைப் பார்த்தால் உயர்குல மாதுபோல் இருக்கிறது. விஜயசேன மகாராஜாவுக்கு நாங்கள் நன்றி காட்டக் காரணமேயில்லை. ஏனெனில் இவ்விடம் வந்தது முதல் எங்களைக் கைதிகளைப்போல் நடத்திவருகிறார். தன்னிடம் வந்த அடைக்கலம் புகும்படி எங்களைப் பல தடவைகளிலும் அழைத்துவிட்டு அவர் முதலில் ஒரு கேவலமான சத்திரத்தையும் பின்னர் இந்த பழைய அரண்மனையில் ஒரு மூலை அறையையும் வாசஸ்தானமாகக் கொடுத்திருக்கிறார். பொழுதுபோன பிறகுதான் நாங்கள் அம்மூலையை விட்டு வெளி வரலாகாதாம். இஃதென்ன அநியாயம்!

அப்புஜம்:-உங்களிருவரையும் தகுந்த விதமாய் வரவேற்க முடியவில்லையே என்று விசனிக்கிறேன். அமலாம்பாள் உம்மைப்போல அதிருப்தியாய் இருப்பாளென்று நான் நினைக்கவில்லை.

அமலாம்பாள்:-எனக்கு ஒருவித குறைவுமில்லை. நான் விரும்பிய அடைக்கலத்தோடு அந்தரங்கமும் கிடைத்தது மிகவும் நல்லதே.

கனக:-அமலா, வாயைமூடு. மனதிலிருப்பதை ஒளிப்பானேன்? அதோ நிற்கும் அழகிய வீரனைப்பற்றி யோசியாதே. அவனுக்கு நமது பாஷை தெரியாதாம். இத்தேசத்துக்கு நாமேன் வந்தோம் என்று வருந்த வேண்டியிருக்கிறது. இந்த அரசர் மிகக் கருமிபோலும். அவர் உருவத்தைப்போலவே அவருடைய நடத்தையும் இருக்கிறது.

அப்பு:-போதும், கனகா. நீ யாரைப்பற்றி பேசுகிறாயென்று உனக்குத் தெரியுமா? அவர் என் தந்தை யென்பதை மறந்தனையா?

கனக் :-உமது தந்தையா ?

அம்பு :-ஆம், நான் மாதலகாட்டு மாவீரவனவனின் இளைய புதல்வி அம்புஜம். ஆயினும் நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். அவனைத்தாக்கிப் பேசவேண்டுமென்பதல்ல உன் எண்ணம் என்று எனக்குத் தெரியும். நானும் அதைப்பற்றி வருந்தவில்லை.

கனகவல்லி தான் செய்த தப்பிதத்தை யுணர்ந்து பயந்தவளாய்த் தன்னை மன்னிக்கும்படி வேண்டினுள். இரு மாதரும் அம்புஜம் விரும்பியவாறு அவன் பக்கத்திற்போய் அமர்ந்தனர். அவர்கள் கொஞ்ச நேரம் மெதுவாகப் பேசிக்கொண்டிருந்ததில் மதிவீரனுக்கு ஒன்றும் புரியவில்லை. அச்சமயத்தில் ஓர் ஆடவன் அங்கே திடீரென நுழைந்து அவர்கள் சம்பாஷணையில் குறுக்கிட்டான். அரசன் கட்டளையை நினைத்துக்கொண்டு மதிவீரன் அவனிடம் சென்று அவனை உடனே வெளியே போகும்படி ஏவினுன்.

"யார் உத்தரவின்பேரில் என்னை இவ்வாறு வெளியில் தள்ளுகிறாய்?" என்று வந்தவன் மிக்க அதிகாரத்தோடு கேட்டான்.

"அரசர் ஆக்ஞை இதுவாகும். அவர் கட்டளையை நிறைவேற்றவே நான் இங்கிருக்கிறேன்." என்று மதிவீரன் உறுதியாய்ப் பதிலளித்தான்.

"அரசர் ஆக்ஞை என்னைப்பற்றி இராதே. நான் யாரென்று உனக்குத் தெரியுமா? நானே தான் துரைராஜன்." என்று தன் போர்வையை எடுத்துவிட்டு அவன் எதிரில் நின்றுன்.

மதிவீரன் என்ன செய்வான் பாவம்! சற்றே திகைத்தான். பின்னர் "தங்கள் விருப்பம் இதுவாயின் நான் என்ன செய்ய வல்லேன்? நான் என் கடமையைச் செலுத்துவதில் கொஞ்சமும் பின்வாங்கவில்லையென்பதற்குத் தாங்களே சாட்சி." என்றுன்.

துரைராஜன், "நல்லது வீரா, உன்மேல் குற்றம் வராமல் பார்ப்பது என் கடமை." என்று கூடத்தில் வீற்றிருந்த மாதரை நெருங்கி வந்தனம் புரிந்தான். துரைராஜன் தன் மகள் அம்புஜத்தை விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்பது விஜயசேனரின் விருப்பம். அவனுக்கு இந்த ஏற்பாட்டில் கொஞ்சமும் பிரியமில்லையேனும் அரசர் கோரிக்கைக்கு மாறாக நடக்கத் துணியவில்லை. "இந்தக் கூடத்தில் நீங்கள் கூடி பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டே நான் இவ்விடம் வரத்துணிந்தேன்." என்றான் துரைராஜன். அவன் வந்தது அம்புஜத்துக்குச் சந்தோஷந்தான். உடனே எழுந்து அன்னியராகிய மற்ற இரண்டு மங்கையரையும் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். துரைராஜன் அம்புஜத்தைப் பார்த்த வண்ணம் அழகிற் சிறந்த அமலாம்பாள் எதிரில் அமர்ந்து அவளிடமே பேசிக்கொண்டிருந்தான். அவளுடைய வனப்பைப் புகழ்ந்து பேசி வருகையில் இராஜகுமாரி தன்னருகில் இருப்பதையும் மறந்தனன்.

துரைராஜன் இவ்வாறு தன் மருமகளைப் புகழ்ந்து பேசியதில் கனகவல்லிக்கு மெத்த சந்தோஷமே. ஆனால் அமலாம்பாள் அவன் பேச்சில் வெறுப்புக்கொண்டவளாய் மிக்க பரிதாபத்துடன் அம்புஜத்தை நோக்கினாள். பேதையாகிய அம்புஜம் அச்சந்தர்ப்பத்தில் ஒன்றும் செய்யமுடியாதவளாய் கலங்கி நின்றாள். கடைசியில் அமலாம்பாள் அம்புஜத்தைப் பார்த்து, "அம்மா, திரையூர் மாதராகிய நாங்கள் இப்பிரபுவினுடைய வீண் புகழ்ச்சியை விரும்பவில்லையென்று அவருக்குத் தாங்களே தெரிவிக்கவேண்டும்." என்று மன்றாடினாள்.

அம்புஜம் பதிலளிப்பதற்குள், துரைராஜன், "என் புகழ்மொழிகள் மெய்யானவையல்ல என்று நீ நினைக்கிறாய் போலும். ஆயினும் மாதர்நாட்டு பிரபுக்களாகிய நாங்கள் யுத்த முனையில்

எவ்வளவு துரிதமாய் நடந்து கொண்டீரோ, அவ்வளவு துரிதமாகவே காதலிலும் நடந்துகொள்வோம் என்பது உனக்கு ஞாபகத்திலிருக்கட்டும்.'' என்றான்.

அம்புஜத்திற்கு இம்மொழிகள் மிக்க வருத்தத்தைத் தந்தன என்று சொல்லவும் வேண்டுமோ? அவள் உடனே ஸ்மரணையிழந்தவளாய்த் தன் நாற்காலியில் சாய்ந்து விட்டாள். கனகவல்லி உடனே எழுந்து அவளுக்குதவி செய்ய முயன்றாள். துரைராஜனோ தான் யோசியாமல் வீண் மொழிகளைப் பிரயோகித்ததாலல்லவோ இக் கஷ்டம் நேர்ந்தது என்று தன்னையே தான் நிந்தித்துக்கொண்டு அம்புஜத்தின் தாதியரை யழைக்கும் பொருட்டு வெளியிற் சென்றான். இரண்டொரு நிமிஷத்தில் அவன் திரும்பிவந்து தன்னுடன் கூடிய பிரயாசைப்பட்டு அவள் மூர்ச்சையைத் தெளிவிக்க முயன்றான். அவன் கூறிய நயமொழிகளால் ஆச்சரியப்படத்தக்கவாறு மாது ஒருவாறு மனந்தேறி மூர்ச்சை தெளிந்து வரும் சமயத்தில் திடீரென விஜயசேனர் அங்கே தோன்றினார்.

---

## அதிகாரம் 11.

### அரசன் செய்த சூழ்ச்சிகள்.

அரசர் அக்கூடத்துக்குள் நுழைந்ததும் அங்கிருந்தவர்கள் அனைவரையும் கூர்ந்து கவனித்தார். பின்னர் துரைராஜனைப் பார்த்து, "நீயா இங்கிருக்கின்றாய்?'' என்று சொல்லிக்கொண்டே மகிவீரன் பக்கந்திரும்பி சிடுசிடுத்த முகத்துடன், "இப்படித்தானா என் கட்டளையின்படி நீ நடப்பது?'' என்றார். உடனே துரைராஜன், "அண்ணலே, அவ்விளைஞனை மன்னியும். அவன் தன் கடமையை அசட்டை செய்யவில்லை. இக்கூடத்தில் அரசிளங்குமரி

இருப்பதாகக் கேள்விப்பட்டு,... ........'' என்று முடிப்பதற்குள் அரசர் அவனைத் தடுத்து, ''நீ காதலைக் கருதி இங்கு வந்தனைபோலும். அதனுல்தான் காவல் வீரனை அவனுக்கிட்ட கட்டளையை மீறி நடக்கும்படி தூண்டினுயாக்கும். என் மகளுடைய உடம்பு சுகமில்லைபோல் தோன்றுகிறது. நீ அவளுக் குதவியாய் நின்று அவளுடைய அறைக்குக் கொண்டுபோய் விடு. நான் இம்மாதரை அவர்கள் அறைக்கு அழைத்துப் போகிறேன்.'' என்று கட்டளையிட்டார்.

துரைராஜன் பதில் சொல்லத் துணியாமல் இராஜ குமாரத்தியுடன் கூடத்தை விட்டகன்றுன். விஜயசேனரும் அமலாம்பாளையும், அவளுடைய அத்தையையும் அழைத்துப்போய் அவர்களுக்கென்று விடப்பட்டிருந்த அறைக்குள் விட்டு கதவைச் சாத்திப் பூட்டினுர். பின்னர் மெதுவாகத் திரும்பி மதிவீரனிடம் வந்து, ''நீ செய்தது பெருந் தப்பிதம். அதற்குத் தண்டனை மரணமே'' என்றுர்.

மதி :-அண்ணலே, துரைராஜப் பிரபுவே வந்து என்னை மீறி நடக்கத் துணிந்தபோது, நான் என்ன செய்யக்கூடும் ?

விஜய :-எவனுயிருந்தால்தான் என்ன ? வந்தவன் உன் கட்டளைக்குக் கீழ்ப்படியாதபோது நீ அவனை அங்கேயே சுட்டுக்கொன்றிருக்கவேண்டும். போ, உலகநாதன் இருக்குமிடம் தெரிந்து அவனை என்னிட மனுப்பு.

மதிவீரன் பதில் பேசாமல் வேகமாய் கீழே இறங்கிவிட்டான். வெளிமுற்றத்தில் உலகநாதன் நிற்பதைக் கண்டு அவனை அணுகி அரசர் விருப்பைத் தெரிவித்தான்.

ஜயவஞ்சகனாகிய உலகநாதன் அரசனைப் போய் பார்த்ததும் அவர் கொஞ்சம் கோபக்குரலுடன் அவனைப் பார்த்து, "அப்பா, உலகநாதா, உன் சூழ்ச்சிகள் யாவும் பரிதிமுன் பனிபோல் பறந்து போகின்றனவே." என்றார்.

உலக:-ஐயனே, நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். எனக்கு மிக்க விசனமாயிருக்கின்றது.

விஜய:-கேள்விப்பட்டாயா? மெய்யாகவே உன் சூழ்ச்சிகள் பயனற்றவையாயின. சமரவர்மன் நமக்கு விரோதமாய் போர்புரிய தயாராயிருக்கிறதுமன்றி, மற்ற அரசர்களையும் துணைக் கழைக்கின்றானாம். உலகநாதா, இது உன் தவறுதல். அந்தப் பெண்பிள்ளைகளுக்கு அடைக்கலம் தரவும், அவர்களுக்கு ஆதரவாயிருக்க குப்பனை அமர்த்திக்கொள்ளவும் நீயே யோசனை சொன்னாய்.

உலக:-அப்போது நான் கூறிய காரணங்கள் தங்களுக்குத் தெரியாததல்ல. அமலாம்பாளுக்குச் சொந்தமாகிய திரையூர் சமஸ்தானம் மந்திரநாட்டிற்கும், முல்லையூர் திருநகரி முதலிய இடங்களுக்கும் மத்தியிலிருக்கிறது. அவளுடைய கோட்டையோ மிக்க பலமானது. நமது நாட்டிற்குச் சாதகமாயிருக்கக்கூடிய ஒருவரை அவள் விவாகம் செய்துகொண்டால் மந்திரநாட்டிற்குப் பல விதத்திலும் இன்னல் விளைக்கக் கூடுமன்றோ?

விஜய:-மெய்தானப்பா மெய்தான். அவள் வருகை யாருக்கும் தெரியாமல் இரகசியமாயிருந்திருந்தால், மாதலநாட்டிற்கு எவ்வளவோ நன்மையாயிருந்திருக்கும். ஆனால் அந்தக் குறப்பயலை அனுப்ப நீ எப்படி சிபார்ஸு செய்தாய்?

உலக:-அன்றிலே, நான் சொன்ன யோசனைக்குமேல் அதிகமாய் அவனைத் தாங்கள் நம்பிவிட்டீர்கள். கடிதமொன்றைக் கொண்டுபோவதற்குத் தகுந்தவனே யொழிய, அவன் இரகசியத்தைக் காப்பாற்றக் கூடியவனல்ல. தாங்கள் அவன் குறி சொல்வதில் கெட்டிக்காரன் என்று நம்பி சமரவர்மனிடம் தெரிவிப்பதால் பயம் படக்கூடிய சில இரகசியங்களை அவனிடம் தெரிவித்துவிட்டீர்கள்.

விஜய:-நீ சொல்வது சரிதான். நான் செய்தது எனக்கே வெட்கமாயிருக்கிறது. ஆயினும், உலகநாதா, குறி சொல்வதில் இக்குறவர் மிகத் தேர்ந்தவர்களென்று சொல்லுகிறார்களே.

"குப்பன் குறி சொல்வதில் தேர்ந்தவனா யிருந்திருப்பின் தன் மரணம் நெருங்கியிருப்பதை யறிந்து சித்திரபுரிக்குத் திரும்பி வந்திருக்கமாட்டான்." என்று உலகநாதன் பதிலளித்தான்.

விஜய:-இம்மாதர்க்கு அபயம் தந்ததால் சமரவர்மன் சமர் புரிவதாக பயமுறுத்துவ தொருபுறமிருக்க, அவர்களால் என் குடும்ப ஏற்பாட்டிற்கும் இடைஞ்சல் உண்டாகும்போல் தோன்றுகிறது. துரைராஜன் அமலாம்பாளைக் கண்டது முதல் அவளையே நினைத்துக் கொண்டிருக்கிறான். அவன் அவ்விளமாது இங்கிருக்கும் வரையில் என் மகளை மணம் புரிய சம்மதியானென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும்.

உலக:-அப்படியானால் அம்மாதரை மந்திர நாட்டிற்கு அனுப்பி விடுகிறதுதானே. அவ்வாறு செய்வதில் சமரவர்மன் திருப்தி கொள்வார்.

விஜய:-அமலாம்பாள் விஷயமாய் நான் கொண்டுள்ள சூழ்ச்சியை அவ்வளவு சுலபத்தில் கைநெகிழ விடுவதா? அவளை எப்படி

யாவது நமது நண்பரொருவருக்கு விவாகம் செய்து கொடுக்க வேண்டும்.

உலகநாதன் சற்றே நிதானித்து, "அண்ணலே, அம்மங்கையைத் தாங்கள் நம்பத்தகுந்த நண்பரொருவர்க்கு மணஞ்செய்து கொடுக்கலாமே. ஆனால் அந்நண்பர் அந்தரங்கத்தில் தங்கள் சார்பாக இருந்து ஏதாவது குற்றங் குறைகள் ஏற்பட்டால் அவற்றைத் தன்மேல் ஏற்றுக்கொள்ள தாங்கள் பகிரங்கமாய் அவரை மறுதலிக்கத் தகுந்தவரா யிருக்கவேண்டும்." என்றான்.

விஜய:-அத்தகைய நண்பன் எங்கே அகப்படுவோன்? என்னுடைய பிரபுக்களோ அவ்வளவு நம்பத் தகுந்தவர்களல்ல. அப்பெண்ணை நம்மூரைவிட்டு வெளி தேசத்துக்கு அனுப்புவோமென்றால், அங்கே அவள் சமரவர்மனுக் குகந்தவர்களெவரையேனும் விவாகஞ் செய்து கொள்ளக்கூடும். உலகநாதா, இந்தச் சூழ்ச்சி நமக்கு நன்மை விளைக்கும் என்பதில் தடையில்லை. ஆதலால் அதை நாம் விட்டுவிடலாகாது. சமரவர்மனை எதிர்த்து நிற்கும் முல்லையூர் ஜனங்களுக்கு உதவியாக இரையூர் ஜமீன்தார் இருப்பரேல் சமரவர்மன் நம்மீது போர் தொடுப்பதற்குப் பதிலாய் அவர்களோடு சண்டை செய்து கொண்டிருப்பான். இன்னும் ஒரு வருஷத்துக்கு நமக்கு அவன் தொல்லையே இருக்காது. ஆகையால் நாம் இந்தச் சூழ்ச்சியைக் கைவிடுதல் கூடாது. அமலாம்பாளை யாருக்கு மணமுடிக்கலாம்? ஆ, நல்லயோசனை. அவளை யேன் வில்லியனுக்குக் கொடுக்கலாகாது?

உலக:-வில்லியனு? ஐயனே, அவன் எல்லைப்புறத்தில் பேர்போன கள்வனுயிற்றே. அவன் உயர் குலத்தானென்பது மெய்தான். ஆனால் அவன் முகத்தைப் பார்த்தவர்கள் அவனைப்போலும் கொலைப்பாதகன் எவரும் இல்லை யென்று சொல்வார்களன்

ளே? அமலாம்பாள் அவனை விவாகஞ் செய்துகொள்ள சம்மதிக்க வே மாட்டாள்.

விஜய :-அவள் விருப்பத்தைக் கவனித்தால் நமது காரியம் கைகூடுமோ? அவ்விரு மங்கையரும் இனி நமது நாட்டில் தாமதித் தால் சமரவர்மனுக்கும் நமக்கும் கட்டாயம் போர் நிகழுமென் றும், அவர்களைச் சமரவர்மனிடம் ஒப்புவிக்க எனக்குப் பிரியமில்லை யாதலால் அவர்களிருவரும் ஒருவருக்கும் தெரியாமல் நமது நாட் டை விட்டுப் போய்விடவேண்டுமென்றும் நான் அவர்களுக்குத் தெரிவிப்பேன்.

உலக :-அப்படியானால் அவர்கள் மாங்கில நாட்டிற்குப் போக வேண்டுமென்பார்கள்.

விஜய :-மாங்கிலநாட்டிற்குப் போக நான் இடங்கொடுத்தால் சமரவர்மன் கோபங் கொண்டு கட்டாயம் என்மேல் போர் தொடு ப்பான். ஆதலால் நான் செய்யக்கூடியதெல்லாம் அவர்களை உரு மாறச் செய்து என் தேசத்தை விட்டுப்போக ஏற்பாடு செய்வதே. அவர்கள் சென்று முல்லையூர் அதிபரிடம் அடைக்கலம் புகுந்திருக் கட்டும்; அவன் அமலாம்பாளைக் காப்பாற்றுவான் என்று அவர் களிடம் சொல்லுவேன்.

உலக :-சரிதான். ஆனால் முல்லையூர் அதிபதி வில்லியனுக் கிட ங்கொடாமல் இருந்தால் தாங்களென்ன செய்யக்கூடும்?

விஜய :-நல்லது, நான் சொல்வதைக் கேள். நான் செய்யும் பண உதவியால் வில்லியனிடம் அநேக வீரர்க ளிருக்கின்றனர். அவர்கள் எத்தகைய பாதகத்தையும் துணிந்து செய்யக்கூடிய வர்கள். ஆதலால் சமரவர்மனுக்கும் முல்லையூர் அதிபனுக்கும் வி... லியனென்றால் அச்சம் அச்சமே. தற்சமயம் அவனுக்கு நிலயலங்

கன் இல்லாமல் காட்டில் வசிக்கின்றனளல்லவா, பணக்காரியும் ஒரு கூட்டினுக்குச் சொந்தக்காரியுமாகிய மணமகனொருவன் கிடைப்பதாயின் அவனை வேண்டாமென்பாளோ? சமரவர்மன் அவளைத் தேசப்பிரஷ்டம் செய்திருக்கிறான். ஆகவே காலம் வில்லியனை நிரையூர் ஜமீனடைப்பற்றி முல்லையூர் வாசிகளைத் தன்பக்கம் இருப்பிவிட்டால் சமரவர்மனுக்கு மாதலநாட்டைப்பற்றி நினைக்கவும் நேரமிருக்குமா? உலகநாதா, இந்த என் சூழ்ச்சியைப்பற்றி என்ன நினைக்கிறாய்?

உலக:-சிறந்த சூழ்ச்சிதான். ஆனால் அமலாம்பாள்பாடுதான் கஷ்டம்.

விஜய:-அஃதிருக்கட்டும். உடனே பயணப்படும்படி அம்மாதரை நாளை தூண்ட வேண்டும். நீ அம்மாதர்கள் போகும் மார்க்கத்தைப்பற்றி வில்லியனுக்குத் தெரிவித்தல் வேண்டும். பின்னர் அமலாம்பாளைக் கண்டு பேசி அவளை மணமுடித்துக் கொள்ளுதல் அவன் பாடு. என்னுடைய சூழ்ச்சியைக் கண்டு பிடிக்கமுடியாத ஒருவன் அம்மாதருடன் துணையாகப் போதல் வேண்டும். அவன் யாரென்று உனக்குத் தெரியுமா? அவன்தான் மலைநாட்டினனாகிய பதிவீரன். அவன் அம்மங்கையர் இருவருக்கும் துணையாகச் சென்று அவர்களை முல்லையூர் அதிபனிடம் கொண்டு சேர்த்தல் வேண்டும். அவர்களுக்கு வழிகாட்டும் மனிதன் ஒருவனைத் தவிர மற்றெவருக்கும் வில்லியன் சமாச்சாரம் தெரியவே கூடாது. அத்தகைய வழிகாட்டியைத் தெரிந்தெடுத்தலும் உனது கடமை.

உலக:-வில்லியன் எதிர்த்தால் மலைநாட்டினன் சும்மா விடுவானோ? போர் நிகழ்ந்தால் இருவருள் உயிரிழத்தல் கூடும் என்பதைத் தாங்கள் யோசித்தீர்களா?

விஜய:-தூதுவன் வேலை முடிந்ததும் அவன் கொல்லப்பட்டால் என்ன கெடுதல்? மதிவீரன் உயிரிழந்தால் நமக் கவசியமில்லை. மாதர் பயணத்தைத் துரிதப்படுத்தவேண்டும். அவர்கள் போய்விட்டால் நமக்குத் தெரியாமல் ஓடி விட்டனரென்றும் அவர்களை மந்திரநாட்டுக்குத் திரும்பி அனுப்ப யோசித்திருந்தோமென்றும் சிரகத்தாமனிடம் சொல்லிவிடலாம்.

உலக:-சில சமயம் சிரகத்தாமனும் அவன் எஜமானரும் அதை நம்பாவிட்டால் என்ன செய்வீர்கள்?

விஜய:-நம்பமாட்டார்களா? உலகநாதா, அவர்கள் கட்டாயம் நம்புவார்கள். சமரவர்மனை நம்பும்படிச் செய்வது என் பாரம். வேண்டியானால் எனக்குரிய நண்பனாகிய உன்னைத் தவிர வேறெந்தக் காவலுமின்றி நானே அவனிடம் சென்று அவனை நம்பும்படிச் செய்வேன்.

உலக:-சமரவர்மர் நங்களைத் தமது பகைவரென்று நினைப்பதற்குப் போதிய காரணங்களிருக்கும்போது, தங்கள் யோசனைக்குப் பணிந்து தங்களைப் பின்பற்றுவதிலும் வேலாயுதம் தாங்கிய அநேக வீரர்களை நான் எதிர்க்கவும் துணிந்து விடுவேன்.

விஜய:-உலகநாதா, உனக்கு யோசனை போதாது. அவசியமிருந்தால்தானே நான் சொன்னதுபோல் செய்யப்போகிறேன்.

விஜயசேனர் தன்னுடைய எதிரியை ஏமாற்றக் கருதி, பிற்பாடு அதேமாதிரி செய்து, தனக்கே கஷ்டத்தை உண்டுபண்ணிக் கொள்ளக்காரணமாயிருந்த அந்த அசாதாரணமான சூழ்ச்சியைப்பற்றி பட்டும்படாமல் பேசியது இதுதான் முதல் தடவை

அரசர் உலகநாதனை விட்டுப்பிரிந்து அமலாம்பாளிருக்கும் அறைக்குச் சென்றார். அங்கிருந்த மாதரிருவரும் மந்திரநாட்டி

பதியினிடமிருந்து தங்களைக் காப்பாற்ற முடியாதென்று கேள்விப்பட்டதும் சித்திரப்புரியை விட்டேக தயாராயிருப்பதாக சொன்னார்கள். முல்லையூரை மறைவிடமாகத் தெரிந்து கொள்ளும்படி அவர்களைத் தூண்டுவது விஜயசேனருக்கு மிக்க கஷ்டமாயிருந்தது. அவர்கள் வெளிநாட்டுக்குப் போய் சமரவர்மன் கோபமடங்கும் வரையில் தங்கியிருக்க உத்தரவு கேட்டார்கள். ஆனால் இந்த ஏற்பாடு விஜயசேனருடைய சூழ்ச்சிக்கு மாறாயிருந்தமையால் மிகுந்த பிரயாசைப்பட்டு அவர்களைத் தன் ஆலோசனைக் கிணங்கும்படிக் கடைசியில் ஏற்பாடு செய்தார்.

முல்லையூர் அதிகாரி விசேஷ சுதந்தரங்கள் வாய்ந்தவன். எந்நாட்டினின்றும் அபயம் என்று தன்னிடம் வருவோரைக் காப்பாற்றும் உரிமை வாய்ந்தவன். மேலும் அவனுடனிருந்த வீரர்கள் அவனையும் அவன் ஊரையும் விரோதிகள் திடீரென வந்து எதிர்த்தால் அவர்களிடமிருந்து காப்பாற்றும் ஆற்றலுடையவர்கள். யாதிருவரும் வழியில் யாதொரு சங்கடமுமின்றி முல்லையூர் அரண்மனை போய் சேருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்வதாக விஜயசேனர் வாக்களித்தார். "நீங்களிருவரும் இரவில் ஒருவருக்கும் தெரியாமல், சிரகத்தாயனோடு போகவேண்டுமென்று அஞ்சி, கோட்டையினின்றும் தப்பி கடற்கரையை நோக்கி ஓடிவிட்டதாக நான் ஒரு வதந்தியைக் கிளப்பி விடுகிறேன். மேலும் உங்களிருவருக்கும் பிரயாணத்தில் யாதொரு ஆபத்தும் நேராதிருக்கும் பொருட்டு பிரமாணிக்கமுள்ள காவல் வீரரை அனுப்புகிறேன், அஞ்சாதீர்கள்," என்றான்.

அன்றிரவே புறப்பட உத்தரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விஜயசேனர் சரியென்று சம்மதித்தார். உடனே மதிவீரனை அழைத்து வரும்படி அரசர் ஏவினார். அவன் வந்ததும்

திரையூர் பெண்களை முல்லையூருக்கு ஜாக்கிரதையாக அழைத்துப் போவதற்கென்று தான் நேமிக்கப்பட்டிருப்பதாக அரசரிடம் தெரிந்துகொண்டான். மதிவீரனுக்கு இதனால் உண்டான சந்தோஷம் அதிகமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. கூடியவரையில் வேகமாகவும், இரகசியமாகவும் அவன் பிரயாணஞ் செய்யவேண்டும். திரையூர் மாதரிருவரும் அந்நியநாட்டு பிரபு வம்சத்திலுதித்த பெண்களென்றும், திருஸ்தலங்களைச் சந்திக்கும்பொருட்டு பிரயாணஞ் செய்வதாகவும் சொல்லிக் கொள்ளவேண்டும். மதிவீரன் அவர்களுடைய ஊழியனாக மற்றவர்கள் மதிக்கும்படி நடந்துகொள்ளவேண்டும். இதுதான் அரசர் மதிவீரனுக்கு அளித்த கட்டளை. சத்திரத்தில் பாடிய யௌவனமாதின் அருகில் இருந்து அவளைக் காப்பாற்றும் சிறந்த தொழிலைத் தான் மேற்கொள்ளப் போவதை நினைத்து நினைத்து மலைநாட்டிளவல் மனம் பூரித்தான். வழியில் நேரும் விபத்துக்களினின்றும் அம்மாதைக் காப்பாற்றி குறிக்கப்பட்ட இடத்துக்கு அவளைக் கொண்டு சேர்க்கும் வல்லமை தனக்கு இருப்பதாக அவன் உணர்ந்து சந்தோஷித்தான்.

பின்னர் விஜயசேனர் மதிவீரனைக் கூட்டிக்கொண்டு கோட்டையின் மற்றொரு பக்கத்தில் கந்தசாமி யென்னும் ஜோஸியன் வசிக்கு மிடத்திற்குச் சென்றார். இந்த மனிதன் ஜோஸியத்தில் பேர்போனவனென்று எல்லோராலும் மதிக்கப்பெற்றவன். இவன் ஆதியில் அன்னிய நாட்டில் வசித்தவன். விஜயசேனர் கேட்டுக்கொண்டதின்பேரில் மாதலநாட்டுக்கு வந்து கொஞ்ச காலமாய் அரசசேவையில் இருந்து வந்தான். அவனுடைய அறை மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அரண்மனையில் வேறெந்த அறையும் அவ்வளவு அலங்காரமாய் இல்லை என்று மதிவீரன் நினைத்தான். ஜோஸியன் உயர்ந்து வளர்ந்த தேகத்தையும் காம்பீரமான தோற்றத்தையும் உடையவனாய் விளங்கினான். அவன் சிறுவத்தில்

போர் வீரனாக இருந்தவன். அரசர் அறைக்குள் நுழைந்ததும் அவன் தன் ஆசனத்தை விட்டெழுந்து வணங்கி மரியாதை செய்தான்.

“ஜோஸியரே, இந்த வினைஞனைப்பற்றித்தான் நான் தங்களிடம் பேசியது. இவன் பிரமாணிக்கமுள்ள ஊழியனாய் இருப்பானா என்றறியும் ஆவலுடன் இவனை உம்மிடம் கொண்டுவந்தேன்.” என்றார் விஜயசேனர்.

கந்தசாமி தன்னுடைய கூரிய கண்களால் மதிவீரனை உற்று நோக்கியவண்ணம், “உன் கையை நீட்டு பார்ப்போம். உன்னுடைய வருங்கால நிலைமையை அதன் ரேகைகள் காட்டிவிடும்.” என்றான். அவன் உள்ளங்கையை நன்றாய்ச் சோதித்தபின் அரசரை ஒரு பக்கம் அழைத்துப் போய், “அண்ணலே, இவ்வினைஞன் தைரியசாலியாகவும் பாக்கியசாலியாகவும் இருப்பான் என்று தெரிகிறது.”

விஜய: பிரமாணிக்கமுள்ளவனாயிருப்பானா?

கந்த: இருப்பான். ஆனால்............

விஜய: ஆனால் என்ன? ஏன் யோசனை? ஒன்றும் ஒளியாமல் விவரமாய்ச் சொல்லும்.

கந்த: அப்படியானால் சொல்லிவிடுகிறேன். இவ்வினைஞன் மனசாக்ஷிக்கு விரோதமாய் நடப்பவனல்ல. ஆதலால் தாங்கள் அவனுக்குக் கொடுக்கும் வேலை எத்தகையினதென்று யோசனை செய்துகொடுக்கவும்.

விஜய: அந்தோ, என்ன செய்யலாம்? தேச நன்மையைக் கோரி வேந்தரும் சிலசமயங்களில் கேவலமான செய்கைக்குத் தாழ வேண்டியிருக்கிறது. நான் செய்யும் வேலையிலுள்ள இழிவை இவ்வினைஞனிடம் ஒப்படைத்து அதற்குக் காரணம் நான்தானென்று அவன் அறியாவண்ணம் மறைவாக இருந்துவிடுவேன்.

கந்த : தாங்கள் செய்யும் யோசனையே சரியானது. சிலசமயங்களில் அவன் ஆத்திரக் குணமுள்ளவனாய்க் காணப்படுவான். ஆயினும் அநேகமாய் தங்களுடைய காரியத்திற்கு அவன் உபயோகமாயிருப்பான்.

விஜய : அபாயம் நிறைந்த ஒரு பிரயாணத்தைத் தொடங்குவதற்கு இன்றைய நடுச்சாமம் தகுந்த நேரந்தானா?

கந்தசாமி ஏதோ யோசிப்பவன்போல் சற்றே மௌனமாயிருந்து, "பயணங் கூட்டி யனுப்புவோருக்கு ஜெயமுண்டாகும். அநுப்பப்படுவோருக்குப் பிரயாணத்தில் விபத்து நேரிடலாம். கஷ்டமும் சிறைவாசமும் கிடைக்கும் என்று முன்னதாகவே எச்சரிக்கிறேன்." என்றான்.

அரசர் தன் சட்டை பையினின்றும் ஒரு கடிதத்தைக் காட்டி, அதில் கண்டிருக்கும் விஷயத்தைப்பற்றி ஆலோசனை கேட்க வேண்டும் என்று அவனை எச்சரித்து, அதைப் படிக்க ஆரம்பித்தார். "பெருஞ் சச்சரவில் சம்பந்தப்பட்டிருக்கும் ஒருவன் தன் எதிரியை நேரிற் கண்டு யாவற்றையுஞ் சீர்செய்ய ஆசிக்கிறான். அதற்குத் தகுந்த நாள் எது, அதில் ஜெயம் பெறுவானா, அந்தச் சந்திப்பினால் அவனுக் கேதாவது மோசம் வருமா என்றறிய விரும்புகிறான்."

"இஃதோர் சாமான்ய காரியமல்ல. கிரகங்களின் நிலைமையை யாராய்ந்தறிந்த பின்னரே நான் பதில் சொல்லக்கூடும்." என்று ஜோசியன் சிந்தாக் கிராந்தனாய்ப் பதில் அளித்தான்.

"நல்லது, ஜோசியரே, அப்படியே செய்யும். கிரகங்கள் என் பக்ஷத்தில் இருக்குமானால், இந்தச் சண்டை சச்சரவுகளை நிறுத்துவதில் என் உயிரையுங் கொடுக்கத் துணிந்திருக்கிறேன்." என்று மொழிந்தார் சமரவர்மனைப் பார்க்கவேண்டுமெனத் தான் செய்துள்ள சூழ்ச்சியின் பலாபலனை அறியும் ஆவலுடைய விஜயசேனர்.

"கடவுள் உங்களை யாதொரு பொல்லாப்புமின்றி பாதுகாத்து ரக்ஷிப்பாராக!" என்றான் ஜோசியன்.

உடனே, விஜயசேனன், "வந்தனம் ஜோசியரே," என்று ஒரு பணப்பையை அவனிடம் கொடுத்து, மதிவீரன் பக்கமாய்த் திரும்பி சொல்வான்: "மதிவீரா, வா, போவோம். உன்னுடைய தைரியத்தையும் வீரத்தன்மையையும் காட்டுவதற்குத் தகுந்த சமயம் வாய்த்திருக்கிறது. உன் துணிச்சலை இந்த விஷயத்தில்தான் பார்க்க வேண்டும்."

அரசரும் மதிவீரனும் அறையைவிட்டு அகன்றதும் கந்தசாமி பணப்பையை எடுத்து கையில் பிடித்துக்கொண்டு, "கருமிப்பயல்! என்னை நயவார்த்தைகள் சொல்லி இவ்விடத்துக்கு வரவழைத்து இந்தக் கோட்டையில் கூட்டி லடைத்த குருவியைப்போல் வசிக்கும்படிச் செய்து, கூலியும் சரியாய்க் கொடுக்காமல் கஷ்டப்படுத்துகிறான். இதற்கொன்றும் மாற்றமில்லையா? உண்டு. பாலசுந்தரம் தந்திரசாலியேனும் உதாரகுணமுடையவன். அரசன் பேசிய விஷயத்தை அவனிடம் சொல்லுவேன். அதன் பொருள் அவனுக்குத் தெரியும். மந்திரியின் விருப்பத்தின்படியே அரசனுக்குப் பதிலளிப்பேன்." என்று தனக்குள்ளாகவே பேசிக்கொண்டான்.

## அதிகாரம் 12.

### புறப்பாடு.

மதிவீரன் தன் விடுதிக்குச் சென்று தனக்கு வேண்டிய ஆடை ஆயுதங்களை துரிதமாய் அணிந்து கொண்டான். ஒரு பிரபுவின் வீட்டுத் தலைமை வேலைக்காரனைப்போல் அவன் காணப்பட்டான்.

உலகாதன் வழியில் நேரும் செலவுக்கென்று இளைஞனிடம் ஒரு பை பணத்தைக் கொடுத்து, "உன் மாமன் காவல் புரிகின்றார். ஆதலால் உன்னை எவரும் தடுக்கமாட்டார்கள். சுலபமாகக் கோட்டையைவிட்டுப் போகலாம்." என்றான்.

நடுச்சாம வேளையில் அமலாம்பாள் தங்கியிருக்கும் விடுதிக்கு மதிவீரன் சென்று, அங்கே தனக்குத் துணையாய் வரப்போகும் மனிதர் குதிரைகளுடன் காத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தான். பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களனைத்தும் இரண்டு குதிரைகளின்மேல் ஏற்றப்பட்டிருந்தன. உயர்குல மாதர் இருவருக்கும் அவர்களுடைய பணிப் பெண்ணுக்கும் என்று ஒரு வண்டியும், மதிவீரனுக்காக ஒரு சிறந்த குதிரையும் அங்கே நின்றன.

ஒரு வார்த்தையும் பேசாமல் அங்கேயிருந்த மனிதர் மௌனமாய் குதிரைகளின்மேல் வீற்றிருந்தனர். அவர்களில் ஒருவன், "வழிகாட்டுவோன் மணியூருக்கப்பால் வந்து சேருவான்." என்று மதிவீரனிடம் மெதுவாய் மொழிந்தான்.

கடைசியில் ஒரு சிறிய கதவைத் திறந்துகொண்டு மூன்று மாதரும் போர்வை யணிந்த ஒரு மனிதனும் அங்கே வந்தனர். மாதர் வண்டியில் ஏறிக்கொள்ள மற்றவர்கள் குதிரை மீதுவந்து கோட்டை வாயிலை நோக்கிச் சென்றனர். வாயிலைக் கடந்ததும் போர்வை யணிந்த மனிதன் சற்றே நின்று வண்டியிலிருந்தவர்களிடம் ஏதோ பேசினான்.

"கடவுள் தங்களை ஆசீர்வதிப்பாராக! என் நன்மைக்காகத் தாங்கள் செய்திருக்கும் ஏற்பாடே மேலானது. அதைவிட எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லை." என்று பதில் கூறிய பெண் குரலோசை மதிவீரன் செவியில் விழுந்தது.

போர்வைக்காரன் ஏதோ சொற்ப வென்று சில வார்த்தைகள் கூறி கோட்டைக்குள் போய்விட்டான். சந்திரொளி மங்கலாயிருந்தமையால் அவன் யாரென்று மதிவீரனால் தெளிவாய்த் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் போர்வை யணிந்த மனிதன் அரசனாகத்தான் இருக்கவேண்டுமென அவன் யூகித்துக் கொண்டான்.

சுமார் அரை மணிநேரம் பிரயாணஞ்செய்து மணிபுரக் கருகில் வந்துகொண்டிருக்கையில், மதிவீரன் சந்திரனொளி பரவி வனப்பு வாய்ந்திலகும் இயற்கை நலத்தைக் கண்டானந்த மெய்தினன். அப்போது கனகவல்லி தனக்குத் துணையாய்வரும் வீரர்களின் தலைவனோடு பேசவேண்டும் என்றாள். உடனே மதிவீரன் தன் குதிரையை வண்டியின் பக்கல் நடத்திச் சென்று, அம்மாது கேட்ட பல கேள்விகளுக்கும் விடையளித்தான்.

கனக:-நாம் போகும் மார்க்கம் உனக்குத் தெரிந்தது தானே.?

மதி:-நன்றாய்த் தெரியுமென்று சொல்லமாட்டேன். ஆனால் அதைப்பற்றி போதுமான விவரங்களைக் கேட்டறிந்து கொண்டிருக்கிறேன். நாம் போய் முதல் முதலாகத் தங்குமிடத்தில் வழிகாட்டி ஒருவன் நம்மோடு வந்து சேருவான். இதற்கிடையில் எங்களுக்குள் ஒருவன் வழிகாட்டிக்கொண்டு வருகிறான்.

கனக:-நல்லது வாலிபா, இந்த வேலைக்கு உன்னை ஏன் தெரிந்து கொண்டனர்? இத்தகைய வேலைக்குத் தகுந்த அநுபோகம் உனக்கில்லை யென்று நினைக்கிறேன். மேலும் நீ மிக்க இளைஞனாயிருக்கிறாய்; நாட்டிற்கு அன்னியன்; பாஷை முதலாய் உனக்குத் தெரியாதே.

மதி:- அம்மா, அரசர் பெருமானுடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு அதன்படி நடப்பதே என் கடமையாகும். அதைப்பற்றி நான் பேசுவது கூடாது.

"நான் சத்திரத்தில் அரசருக்குப் பணிவிடை செய்கையில் பார்த்த மனிதரல்லவா நீர்?" என்று இளையாளாகிய அமலாம்பாள் சற்றே அச்சங்கொண்டவள்போல் வினவினாள். "ஆம்' என்று விடையளித்தான் மலைநாட்டினவன்.

அமலா :-அப்படியானால் இந்த வீரருடைய பாதுகாவலில் நாமிருக்கு மளவும் நமக்கு யாதொரு பொல்லாப்பும் நேராது என்று நினைக்கிறேன். வஞ்சகச் சூழ்ச்சியை மேற்கொண்டு, திக்கற்ற இரண்டு மாதரை ஏமாற்றி யழைத்துப்போய்த் துன்பத்துக்குள்ளாக்கக் கூடியவரைப்போல் இவர் தோற்றவில்லை.

மதி :-அம்மா, இந்த மாதலநாடனைத்தும் என் வசமாவதாயிருப்பினும், உங்கள் விஷயத்தில் வஞ்சகம் அல்லது குரூர சிந்தையுடையவனா யொழுகத் துணியேன். இது சத்தியம்!

கனக :-பேசினால் மட்டும் போதுமா? மாதல நாட்டு மன்னரும் அவருடைய ஊழியரும் இனிய மொழிகள் பேசுவதில் திறமை வாய்ந்தவர் என்றெனக்குத் தெரியும். இந்நாட்டில் மனிதர் பேசுவதொன்று செய்வதொன்றாயிருக்கிறதே. அரசர் எங்களை நாட்டை விட்டு ஓடிவரும்படி கல்ல வார்த்தைகள் சொல்லித் தூண்டிய பின்னை, எங்களை அந்த நிர்ப்பாக்கிய கோட்டையில் அடைத்து வைத்தார்.

இந்த வார்த்தைகளை மதிவீரன் கவனியாதவன்போல், துணைக்கு வந்த மற்ற வீரர்களோடு போய்ச் சேர்ந்துகொண்டான். அவர்களில் ஒருவன் திரித்தனுடைய ஆட்களில் ஒருவனாகிய சுப்பன். அவன் பொழுது புலர்ந்ததும், ஒரு சத்திரத்தில் போய் இறங்கலாமென்றும், அப்போது வழிகாட்டி யொருவன் வருவான் என்றும் மதிவீரனுக்குத் தெரிவித்தான்.

இவ்வாறு அவர்கள் போய்க்கொண்டிருக்கையில், வண்டியிலிருந்த மாதர், "வீரரே, அதோ, அதோ! யாரோ நம்மைத் துரத்தி வருகிறார்கள்! திரும்பிப் பாருங்கள்! ஜாக்கிரதையாயிருங்கள்!" என்று பயத்தால் கூச்சலிடுவதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து, "அதோ வருகிறவர்கள் திரிதனுடைய ஆட்களாக இருத்தல் வேண்டும். காட்டைச் சுற்றிக்கொண்டு வருகிறார்களாக்கும். சுப்பா, பார்! வருகிறவர்கள் யாரென்று நீ சொல்லக்கூடும் என்று நினைக்கிறேன்." என்றான் கதாநாயகன்.

"அவர்கள் எங்களைச் சேர்ந்த ஆட்களுமல்ல, வில்வீரருமல்ல." என்று சுப்பன் விடை பகர்ந்தான்.

மதிவீரன் வண்டியை யணுகி, "நீங்கள் இருவரும் வண்டியைச் செலுத்திக்கொண்டு சுப்பனோடு முன்னேறிச் செல்லுங்கள். நான் வருகிறவர்களை எதிர்க்கிறேன்." என்றான்.

அமலாம்பாள் சுப்பனைப் பார்த்த வண்ணம் தன் அத்தையின் காதில் ஏதோ ஓதினாள். கனகவல்லியும் உடனே மதிவீரனைப் பார்த்து, "வில்வீரா, அவன் முகம் எங்களுக்குப் பிடிக்கவேயில்லை. அவனோடு போவதினும் வருவது வரட்டும் என்று உன்னருகிலேயே இருப்பது உத்தமம் என்று நினைக்கிறோம்." என்றாள்.

"நல்ல தம்மணி, உங்களிஷ்டம் போலாகட்டும். நம்மைத் துரத்திவருவோர் இருவரே. அவர்களணிந்திருக்கும் ஆயுதங்களைப் பார்த்தால் அவர்கள் பிரபுக்கள்போல் தோன்றுகிறது. அவர்கள் ஏதாவது கெட்ட எண்ணத்துடன் நம்மைத் தொடர்வார்களாயின், மலைநாட்டிளைஞன் தன் கடமையைச் செலுத்துவதிற் கொஞ்சமும் பின்வாங்கமாட்டான் என்று சீக்கிரம் தெரிந்து கொள்வார்

கள்." என்று மதிவீரன் மொழிந்து, தன்னோடு வந்த மற்ற வீரரைப் பார்த்து, "என்னோடு சேர்ந்தெதிர்க்க உங்களில் யாருக்குப் பிரியம்?" என்று கேட்டான்.

அவர்களில் இருவர் மௌனமாயிருந்தனர். மூன்றுமவன் தான் சேர்வதாகச் சொல்லி முன்வந்தான். அப்போது அன்னிய ரிருவரும் வழிப்பிரயாணிகளிருக்குமிடம் வந்துவிட்டனர். அவர்களிருவரும் ஆயுதபாணிகளாய், இன்னாரென்று மற்றவர் தெரிந்து கொள்ளாவண்ணம் தங்கள் முகத்தை மறைத்துக்கொண்டிருந்தனர்.

அவர்கள் நெருங்கி வருகையில் ஒருவன் மதிவீரனை விளித்து, "விலகி நில், உயர்குலத் துதித்த மங்கையரிருவருக்குங் காவல் செய்யும் வேலை உன் போன்ற சாமான்யனுக் குரியதல்ல. அந்த வேலையை மேற்கொள்ளவே நாங்கள் வந்திருக்கிறோம். ஆதலால் இந்தச் சீமாட்டிகளை எமது வசம் ஒப்புவித்து நீ போய்விடுவதே உத்தமம்." என்று கூவினான்.

"ஐயன்மீர்! மாதலாநாட்டு மன்னர் எனக்கிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு அதன்படி அணுவளவும் பிசகாமல் நடக்கக் கடமைப்பட்டவன் நான் என்பதைத் தாங்கள் அறியவேண்டும்." என்று பதில் கூறினான் மதிவீரன்.

அன்னியன், "விலகி நிற்கிறாயா, என்ன? நாடோடியாகிய நீயா இரண்டு பிரபுக்களை எதிர்க்க வல்லவன்?" என்று மிகுந்த இறுமாப்புடன் கேட்டான்.

"உம்முடைய அக்கிரமச் செய்கைக் கிடங்கொடுப்பவன் நானல்லை. நீர் யாராயிருந்தபோதிலும் உம்மை எதிர்க்காமல் விடேன். வாளை யுருவிக்கொள்ளும். வேண்டுமானால் வேலாயுதத்தைத் தா

க்கிப் போரிடவுந் தயார்." என்று மதிவீரன் அச்சம் என்பது அணுவளவுமின்றி விடை பகர்ந்து யுத்த சன்னத்தனாயினன். அன்னியராகிய அவ்விரு வீரரும் மலைநாட்டினனுடன் அழைப்புக் கிணங்கியவர்போல் கொஞ்சதூரம் பின்னிடைந்து போக, அமலாம்பாளும் அவள் அத்தையும் வண்டியிலிருந்த வண்ணம் நடக்கப் போகும் யுத்தத்தைக் கவலையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

தனக்குத் துணையாகப் போரிடத் துணிந்தவனைத் தைரியமுடனிருக்கும்படி ஏவி, மதிவீரன் தன் குதிரையைத் தட்டிவிட்டான். அப்படியே மற்றவனுஞ் செய்ய நான்கு வீரர்களும் போரிடத் தொடங்கினர். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மதிவீரன் தோழன் படுகாயம் பட்டிறந்தான். மதிவீரனுக்கோ கன்னத்தில் எதிரியின் ஈட்டி உராய்ந்து கொண்டுபோயிற்றே யொழிய வேறொன்றுமில்லை. மேலும் முன்னவனீட்டி பின்னவனுடைய மார்பைத் தாக்க, அவன் குதிரையினின்றுங் கீழே விழுந்துவிட்டான்.

உடனே நமதிளவல் குதிரையினின்றுங் குதித்து, கீழே வீழ்ந்த எதிரியின் கவசத்தைக் கழற்ற எத்தனிக்கையில், எதிரியின் தோழன் அவனுக்கு முன் குதித்து ஸ்மாரணை யற்றிருந்த தன் நண்பனுக்கும் மதிவீரனுக்கும் மத்தியில் வந்து நின்று, "ஏ, வாலிபா, குதிரையேறி அம்மாதரை அழைத்துக்கொண்டு ஓடிப்போ; நிற்காதே. இன்று காலை நேர்ந்த செய்தி போதுமானது!" என்றான்.

"நல்லதையா! ஆனால், என் ஆளைக் கொன்றவர் யாரென்று நான் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்." என்றான் தைரியசாலியாகிய மதிவீரன்.

"அதுவரையில் உன்னுயி ரிருந்தா லல்லவோ அவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளக்கூடும். கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது. நான் சொல்வதைக் கேள். மனச் சமாதானத்துடன் இதை விட்டேகு. நீ எங்களைத் தோற்கடித்துவிட்டாய். நீ எங்களுக்குச் செய்த கெடுதிக்குப் பதிலாக உன்னுயிரையும் உன்னைச் சேர்ந்தவரின் உயிர்களையுங் கொடுத்தாலும் தகுந்த பரிகாரம் ஆகாது." என்று மற்றவன் சொல்லிக்கொண்டு வருகையில், மதிவீரன் தன் உடைவாளை யுருவிக்கொண்டு எதிர்நோக்கி வருவதைக் கண்டு, "சரிதான், உன்னிஷ்டம் போலாகட்டும். இதைப்பெற்றுக்கொள்." என்று தன்வாளை யோங்கி மதிவீரன் சிரத்தி லடித்தான். அவ்வாளானது அவனுடைய தலைச்சீராவை ரோமம் வரையில் பிளந்து சென்றது. காயமொன்று மில்லையேனும் அடியின் வேகத்தால் அவன் சற்றே மயங்கினவனாய்க் கீழே உட்கார்ந்து விட்டான். அச்சமயத்தில் எதிரி அவனை எமலோகம் அனுப்பியிருப்பான். ஆனால் மதிவீரனுடைய யௌவனத்துக் கிரங்கியோ அல்லது அவன் வீரத்தன்மையி லீடுபட்டோ, எதிரி ஒன்றுஞ் செய்யாமல் நின்றனன். அப்போது நமதிளவல் சட்டென்றெழுந்து மற்றவன் மேற் பாய்ந்தான்.

"இப்பயலுக்கு என்ன பிடிவாதம்! உன் தலைமேல் நான் மீண்டு மடித்து உன்னை யமலோகம் அனுப்பும் வரையில் நீ சும்மாவிருக்க மாட்டாய்போலும்!" என்று சொல்லிக் கொண்டே மீண்டும் போரை யாரம்பித்தான்.

இருவர்க்கும் பிரமாதமான போர் நிகழ்ந்தது. ஒருவன் ஒருவனுக்கு ஈடு தாழ்த்தியில்லை யென்று சொல்லும்படியான அவ்வளவு கடுமையாய் இருவரும் யுத்தஞ்செய்தனர். அப்போது "நிறுத்துங்கள், சண்டையை நிறுத்துங்கள்!" என்று ஒரு சத்தங் கேட்டு இருவரும் திரும்பிப் பார்க்க, குதிரைவீரர் சிலர் அவர்களை நோக்கி

வேகமாய் வருவதைக் கண்டனர். அவ்வீரர்க்குத் தலைவனாயிருப்பவர் கருணுபார் எனத் தெரிந்ததும் சுஜினவல் அளவற்ற ஆச்சர்யப் பட்டான். சித்ரன் என்பானும் இரண்டு மூன்று ஆட்களுடன் அங்கே இருந்தனன். செவ்வாரினமாய் கருணுபாரும் வீரர்களும் அங்கேவந்திராவிட்டால், அவ்விருவரில் யாரேனும் இறந்து விடுவர் என்பது திண்ணம். கதை கதையின் போக்கும் வேறுவிதமாயிருந்திருக்கும். நல்ல காலம் அவ்வீரர்கள் அங்கேவந்து தோன்றினர்.

---

## அதிகாரம் 13.

### வழிகாட்டி.

மதிவீரனோடு இறுதியில் சண்டைசெய்து கொண்டிருந்தவன் கருணுபாரைக் கண்டதும் தன் தலை சிராயைக்கழற்றினன். என்ன ஆச்சர்யம்! அம்மனிதன் பிரபு குலத்தவனுகிய பாவலனே! அவன் தன் வாளை கருணுபாரிடம் கொடுத்து, “கருணுபாரே, நான் என்னை உமது வசம் ஒப்புவிக்கிறேன். ஆயினும் நான் சொல்வதைக் கேளும். கடவுளை முன்னிட்டேனும் துரைராஜும் பிரபுவைக் காப்பாற்றும்.” என்றுன்.

“துரைராஜும் பிரபுவா? அவர் எப்படி இங்கு வந்தார்? இவ்விஷயம் அரசருக்குத்தெரிந்தால் கெடுதலாய் முடியுமே!” என்றுன் வில்வீரர் தலைவன்.

“கேள்வி யொன்றுங் கேட்காதீர்! எல்லாம் என்னுடைய தப்பிதம். அமலாம்பாளை பலாத்காரமாய்க் கொண்டுபோய், அவளை மணந்து தனவந்தனுகி விடலாமென்று நானிங்கு வந்தேன். அதனுல் நேர்ந்ததைப் பார்த்தீரா? உமது வீரரைச் சற்றே விலகி

க்கச் சொல்லும்: மற்றவர்கள் அவளைப் பார்க்கலாகாது.'' என்று பாலகன் துரைராஜனுடைய முகத்தை மூடியிருந்த வஸ்திரத்தை யெடுத்துவிட்டு அதன் மேல் தண்ணீர் தெளித்து மூர்ச்சை தெளிவிக்க முயன்றான்.

இதற்கிடையில் மதிவீரன் நடந்தவைகளை ஆச்சர்யத்துடன் பார்த்து நின்றான். ஒரு இராஜகுமாரனைப் போரில் வீழ்த்தி, வீர தீரனாகிய பாலகனோடு தான் யுத்தம் புரிந்ததாகத் தெரிந்துகொண்டான். இவை அவனுக்குப் பெருமையைக் கொடுக்கவல்லதேனும் அரசர் என்ன நினைப்பாரோ என்றஞ்சினான்.

துரைராஜன் மூர்ச்சை தெளிந்து பாலகனும் கருணையாளும் பேசிக்கொள்வதைக் கவனித்தனன். துரைராஜன் தனக்குத் துணையாக வந்தவரே ஆனபடியால் அவருடைய பேரைக் குறிப்பிடவேண்டிய தருணமிதும் என்று பாலகன் கருணையாளனிடம் பரிந்து பேசினன். "பாலகா, உன் வேண்டுகோளுக் கிணங்க நான் சந்தோஷமாய் நடந்துகொள்வேன். ஆனால் உன் தொந்தக் காரியத்தினிமித்தம் இராஜகுமாரனை இந்த விபத்தில் சிக்கவைத்தாய் என்று நீ சொல்வது நம்பத் தக்கதல்ல.'' என்று கருணையாளன் தலையசைத்துக்கொண்டு சந்தேகத்துடன் சொன்னான்.

துரைராஜன்:-கருணையாளனே, நீர் சொல்வது வாஸ்தவந்தான். அமலாம்பாளைக் கொண்டுபோய் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று நினைத்தவன் நானே, இது பாலகனுக்குப் பிரியமேயில்லை.

பாலகன்:-நான் சொல்லியது பொய்யென்று கருணையாளப் பிரபுவிடம் நீர் ஏன் சொன்னீர்? எனக்குக் கெடுதல் நேர்ந்தால் தங்களுக் கென்ன?

துரை:-அன்பா, உனது நன்மையைக்கோரியும் எனது கண்ணியத்தைக் காக்கவும் நான் உண்மை பேசவேண்டியிருந்தது.

பாலகன்:-ஏது கண்ணியமா? நீர் ஒரு பக்கீரட்டும் இளை ஞனல் குதிரையினின்றும் வீழ்த்தப்பட்டதை இந்த வீரர்கள் பார்த் திருக்கிறார்கள் என்பதை மறந்தீரோ?

கருணு:-அஃதோர் அவமானமாகாது. அவ்வாலிபன தைரிய மாய் நடந்து கொண்டான் என்பதில் எனக்குச் சந்தோஷமே. நல்லது, போனது போகட்டும், நீயும் துரைராஜும் பிரபுவும் குதிரை யேறி என்னைப் பின்பற்றி வரவேண்டும்.

துரை:-அம்பாதரிடம் ஒரு வார்த்தைப் பேச உத்திரவளிக்க மாட்டீரா?

"முடியவே முடியாது. நீர் செய்ய யோசிக்கும் காரியம் தலைகுதலானது. அதற்கு நான் இடங்கொடுத்தல் சரியல்ல." என்று கருணுபரன் மதிவீரன் பக்கந்திரும்பி, "வாலிபா, நீ உன் கடமையைச் செய்தாய். உடனே சென்று நீ மேற்கொண்டுள்ள கருமத்தைப் பூர்த்திசெய்." என்று கட்டளையிட்டான்.

அப்போது திரித்தன் விலவீரர் தலைவனைப் பார்த்து, "பிரபு வே, மன்னிக்கவேண்டும். அவ்வாலிபன் வேறு வழிகாட்டியைத் தெரிந்துகொள்ளட்டும். சுப்பனுக்கு வேலையிருக்கிறது. அவனில் லாமல் ஒன்றும் முடியாது". என்றுன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு சுப்பன் மதிவீரனை யணுகி, "ஐயா, இவ்வழியைப் பிடித்துக்கொண்டு நேரே செல்லும். சீக்கிரத்தில் புதிய வழிகாட்டியைச் சந்திப்பீர். இன்றைக்கு என் தலைவரை விட்டுப் பிரிந்திருக்க முடியாது. அநேக பெரிய மனுஷரை நான் தூக்கிலிட்டிருக்கிறேன். ஆனல்................ "என்று துரைராஜரைப் பார்த்தான். அவன் அவ்வாறு பார்த்தது அரச குலத்தினர் எவரையும் அதுகாறும் தூக்கிலிடவில்லை என்று குறையான வசனத்தை முடித்ததுபோலிருந்தது. பின்னர் அவன்

"அப்பா, நீ இவ்வுலகில் கீர்த்திமானென்று பேரெடுப்பாய் என்பது நிச்சயம்." என்று சத்தமாய்ச் சொல்லிக் கொண்டான்.

கருணாபரன் அருவருப்புடன் திரும்பி துரைராஜனையும் பாவகனையும் தன்னோடு வரும்படி ஏவினான். அவர்கள் போகையில், "எங்களைச் சித்திரப்புரிக்குக் கூட்டிப் போகிறீரா?" என்று பாவகன் மெதுவாய்க் கேட்டது மதிவீரன் காதில் விழுந்தது.

"இல்லையப்பா, இல்லை. குளத்தூருக்குக் கொண்டுபோகிறேன்." என்று கருணாபரன் பதிலளித்தான்.

குளத்தூர் என்றதும் நமது வாலிபனுக்குத் திகிலுண்டாயிற்று. ஏனெனில் அவ்வூரில் பெரிய காவற்கூடமிருந்தது அவனுக்குத் தெரியும். மிக்க மனவருத்தத்துடன் மற்றவர்களை அழைத்துக் கொண்டு பிரயாணமானான்.

மாதர்கள் ஏறியிருந்த வண்டி முன்னே சென்றது. கனகவல்லி அமர்ந்திருந்த பக்கத்தில் மதிவீரன் போய்க்கொண்டிருந்தான்.

அவள் அவனைப் பார்த்து, "யௌவன வீரரே, எங்களின் நிமித்தம் நீரடைந்த வெற்றிக்காக வருந்துகிறீரென்று நினைக்கிறேன்." என்றாள்.

மதிவீரன், "உங்களைக் காப்பதில் நான் செய்வது எதுவாயிருந்த போதிலும் அதற்கு வருந்தவே மாட்டேன். ஆனால் உங்களுக்கு யாதொரு விபத்தும் நேரிடாதென்று எனக்குத் தெரிந்திருந்தால், பாவகனையும் அந்த நிர்பாக்கிய துரைராஜும் பிரபுவையும், பயங்கரமான சிறைச்சாலைக்கு அனுப்புவதற்குக் காரணமாயிருப்பதினும், பாவகனுடைய வாளுக்கு இரையாயிருந்திருந்தால் நன்றாயிருக்கும்." என்று சூதுவாதின்றி மறுமொழி பகர்ந்தான்.

மூதியவன் அமலாம்பாள் பக்கந் திரும்பி, "அம்மா கண்டிருந்த துரைராஜரமே, அந்த வஞ்சக அரசன் நம்மை வெளியில் போகவர விட்டிருந்தால் என்ன நேர்ந்திருக்கும் தெரியுமா? நீ அந்த ராஜகுமாரனையாவது அல்லது பாவகரையாவது மணந்திருக்கலாம். இவ்வாலிபர் தன் கடமையை வெகு தீரமாய் செலுத்தினார் என்பது மெய்தான். ஆயினும் நம்மை மீட்க வந்த அப்பிரபுக்களை இவ்விளைஞர் தடுத்தது விசனத்துக்குரியதென்று நினைக்கிறேன்." என்றான்.

இம்மொழிகள் அமலாம்பாளுக்குப் பிடிக்கவில்லை. "நீங்களென்ன பரிகாசம் செய்கிறீர்களா? இல்லையேல், நம்மைக் காத்து இரக்ஷித்த தைரிய புருஷருக்கு நன்றி புரிவதற்குப் பதிலாய், அவரை அவமதிக்கிறீர் என்று சொல்லவேண்டும். அப்பிரபுக்கள் நம்மை மீட்டிருந்த போதிலும் அவர்களும் நாமும் காவல் வீரர் கையில் சிக்கியிருப்போமென்பது திண்ணம். இவ்வாலிபர் என்னுடைய வந்தனத்தை ஏற்றுக் கொள்வாரென்று நம்புகிறேன்." என்று கடைசி வசனத்தைச் சற்று மெதுவாகவே மொழிந்தாள். அதற்குப் பதிலளிக்க மதிவீரன் அமலாம்பாள் பக்கம் திரும்பியபோது அவன் முகத்தின் ஒரு பக்கத்தில் இரத்தம் ஒழுகுவதைக் கண்டு திடுக்கிட்டு, "ஐயோ, அவர் காயப்பட்டனரே! இரத்தம் பெருகுவதைப் பார். ஐயா, குதிரையைவிட்டு இறங்கும். இரத்தத்தைத் துடைத்து காயத்தைக் கட்டுவோம்." என்று வருத்தத்துடன் மொழிந்தாள்.

சொற்பமான காயமென்று மதிவீரன் எவ்வளவு சொல்லியும் அவள் கேளாததால் குதிரையை விட்டு இறங்கி பாதையடியில் உட்கார, கன்னிகை அவனுடைய காயத்தைத் துடைத்து சுத்தஞ் செய்தனள். இளையவளும் தன்னுடைய கைக்குட்டையால் அதைக் கட்டினள்.

தனக்காகக் காயம்பட்ட அந்த வீரன்மீது இரக்கமும் நன்றியும் அமலாம்பாள் மனதில் தோன்ற அவை அவள் முகத்தில் பிரதிபிம்பித்தன. மதிவீரன் முகம் அச்சமயத்தில் மிக அழகு வாய்ந்ததென அவள் புத்தியில் பட்டது. குலத்திலும், அந்தஸ்திலும் அவளும் மதிவீரனும் அதிக வித்தியாசமுடையவரேனும், யௌவனத்திலும் வனப்பிலும் அவர்கள் ஒத்தேயிருந்தனர். ஆகவே அவர்களுக்குள் பரஸ்பர ஸ்நேகம் அச்சமயத்தில் உதித்தது சகஜமே. அது முதல் மகிகாட்டினவன் அமலாம்பாளின் நினைவாகவே இருந்தனன். அவ்விளமாதும் தன்னை விவாகம் செய்துகொள்ளும்படித் தூண்டிய உயர்குல பிரபுக்கள் ஒருவரிடமும் காட்டாத வாஞ்சையை இவனிடம் காட்ட ஆரம்பித்தாள்.

கனகவல்லியும் அவனுடைய முகவசீகரத்திலும் வீரதீரத்திலும் ஈடுபட்டவனாய் அவனை நேசிக்கத் தொடங்கினன். "உமது காயத்தைக் கட்ட அமலா தன் கைக்குட்டையைக் கொடுத்துதவினாள். உமது தைரியத்தை மெச்சி பரிசாக நானொன்று தருகின்றேன், பெற்றுக்கொள்ளவும்." என்று தன் குடும்பக் குறிகள் அமைந்துள்ள ஓர் உயர்ந்த கைக்குட்டையை அவனிடம் கொடுத்தான்.

அக்கால வழக்கத்தின்படி அதைத் தன்கரத்தில் கட்டிக்கொண்டான். மதிவீரன் ஆயினும் அதற்குப் பதிலாய் அமலாம்பாள் கைக்குட்டையை அவன் கரத்தில் அணிய நேர்ந்திருந்தால் அவனுக்கு அதிக சந்தோஷமாயிருந்திருக்கும்.

இவ்வாறு அவர்கள் வழி நடக்கையில், மதிவீரன் மாதர் ஏறியிருந்த வண்டியினருகிலேயே சென்றான். அப்போது திடீரெனத் தூரத்திலூதும் எக்காள தொனி அவர்கள் செவியில் கேட்க, கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர்களுக் கெதிரில் ஒருவன்

மட்டமான ஒரு குதிரைமேல் ஏறித் தங்களை நோக்கி வருவதைக் கண்டனர்.

அவன் ஓரன்னியன். அவன் அணிந்திருந்த ஆடையாபரணங் களைக் கொண்டு அவன் குறக்கூட்டத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லக்கூடியதா யிருந்தது. அவன் இடுப்பில் கத்தியொன்றைச் சொருகி யிருந்தான். அவன் முகம் கருத்துப் பார்ப்பதற்கு விகாரமாயிருந்தது. அவன் பார்த்த பார்வை, அவனைக் கபடன் என்றும், எத்தகைய பாதகத்தையுஞ் செய்யத் துணிந்தவன் என்றுங் காட்டிற்று.

மதிவீரன், "எங்களைத் தேடிக்கொண்டுதான் வந்தாயோ?" என்று அவனைக் கேட்டான். ஆம் என்பதுபோல் வந்தவன் தலை யசைத்தான்.

மதி :-என்னத்திற்காக?

அன்னியன் :-உங்களை முல்லையூருக்கு அழைத்துப் போவதற்காகவே.

"இவனுங் குறவனே. இந்த ஜாதியாருடைய நடவடிக்கைகளை யறிந்திருந்தும், அரசர் இவர்களை நம்புகிற தாச்சர்யமல்லவா?" என்று மாதர் இருவரும் பேசிக்கொண்டனர்.

மதி :-உன்னை நான் எப்படி நம்புவது, எங்களுக்கு வழிகாட்டியாக நேமிக்கப்பட்டவன் என்பதற் கேதேனும் குறிப்புரை யுண்டா?.

அன்னியன் :-"வீரன் பன்றியைக் கொன்றான், அரசன் பெருமையைக் கொண்டான்".

மதிவீரன், "சரிதான். ஜாக்கிரதையாய் நல்லப் பாதைகளைக் காட்டிக்கொண்டு போ." என்று மங்கையர் பக்கம் திரும்பி "இவனே நாம் எதிர்பார்த்த மனிதன் என்று நான் நிச்சயமாய்த் தெரிந்துகொண்டேன். ஏனெனில் எனக்கு மாசருக்குமே தெரிந்த குறிப்புரையை அவன் எனக்குச் சொன்னான்." என்று மொழிந்தான்.

---

## அதிகாரம் 14.

### காடோடி.

மதிவீரன் வண்டியைவிட்டு வழிகாட்டியிடம் போய் அவனைப் பின்வருமாறு வினவினான்.

மதி:-நீ குறஜாதியைச் சேர்ந்தவனல்லவா?

வழிகாட்டி:-ஆம்.

மதி:-உனக்குச் சம்பாதனை எப்படி?

வழிகாட்டி.-ஒரு விதத்திலல்ல, பலவிதத்திலும் சம்பாதிப்பேன் என் சம்பாதனை சமயத்துக்குத் தகுந்தாப்போலிருக்கும்.

மதி:-உன் பேரென்ன?

வழிகாட்டி :—இருளன் என்றென்னை யழைப்பார்கள்.

மதி:-உண்மைக் குத்தார முடையவனாயிருப்பாயா? உன் உயிர் என் கையில் இருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்.

இருளன்:-சாகத் துணிந்தே இருக்கிறேன்.

மதி :-மணமில்லாதிருந்தால், நீ உன்னைக் குத்தகையுடையவ ளாய்க் கூறிக்கொள்வாயா?

இருளன்:-மணமின்றி உன்னைக் குத்தகையுடையவளாக்கியிருக்க வேன், இல்லையா.

மதி :-பின்னே உன்னைக் கட்டுப்படுத்தியதுதான் என்ன?

இருளன் :-அன்பு. ஆனால் நான் உபகாரம் கடமைப்பட்டிருக்கி றேன்.

மதி :-எப்படி?

இருளன்:-சித்திரப் புரியில் மரத்தில் தொங்கிக் கொண்டிருந் தவனின் உயிரைக் காப்பாற்றிவிட்டது நினைவிருக்கிறதா? அவன் என் சகோதரன் தான்.

மதிவீரன் வழிகாட்டியை விட்டுப் பிரிந்து மற்றவர்களோடு சேர்ந்துகொண்டான். இருளன் மட்டில் அவனுக்குக் கொஞ்ச மேனும் நம்பிக்கையில்லை; அவனுக்குத் துணையாய் வந்திருந்த மற்ற ஆட்களும் பயமற்ற போக்குடையவர்களென்று அறிந்துகொண் டான். "இதுவும் நல்லதுதான், வழியில் ஏதாவது விபத்து நேரு மாயின், அவ்வழகிய பெண்ணை நானே காப்பாற்றவேண்டியிருக்கும். அதனால் அவள் எனக்கே கடமைப்பட்டவளாவாள்," என்று தன க்குள்ளாகவே சொல்லிக்கொண்டான்.

ஆதலால் அவன் [illegible] ஆட்களைச் சில நூறுகஜதூர மாய்ப் [illegible] வைத்தான். வெகு சமயங்களில் அவ்வழகியுட னிருந்து அப்பெண்மணியோடு பேசிக்கொண்டே போவான். ஆனால் அடிக்கடி இருளனை பக்கத்தில் வரச் செய்துகொண்டே வழியைப்பற்றிய விபரங்களைக் கேட்டறிந்துகொண்டே செல் வான்.

இவ்வாறு அவர்கள் பெரிய நகரங்களை விலக்கி, ஜன நடமாட்டமில்லாத பாட்டைகளைப் பிடித்து ஒருவாறாய் பிரயாணஞ் செய்தனர். வழியில் ஆங்காங்கு குறக்கூட்டங்களையும், வீரர்களையும், கள்ளர்களையுஞ் சந்தித்தனர். ஆனால் மாது பிரயாணிகளுக்கு அவர்களால் யாதொரு தொந்தரையுமில்லை. சில சமயங்களில் விஜயசேனனுடைய குதிரை வீரரைக் காண நேரிட்டபோது, மதிவீரன் அரசன் தந்த குறிப்புரையை வசனிக்கவே, அன்னார் பிரயாணிகளை இடைஞ்சலின்றிப் போக விடுத்தனர்.

அவர்கள் இராக்காலங்களில் விசேஷமாய்த் தங்குமிடம் வழி நெடுகிலுமிருந்த மடங்களே. அங்கே அவர்களைத் திருயாத்திரைக்காரர் என மதித்து மற்ற விபரங்களை விசாரிக்காமல் இடந்தருவது வழக்கம். மாதர் இருவரும் ஒரு மடத்தை யடைந்ததும் களைப்பாறத் தங்கள் விடுதிக்குப் போய்விட, மதிவீரனே அவர்களுக்கு வேண்டிய சௌகர்யங்களைக் கவனிப்பான்.

ஆனால் வழிகாட்டியாகிய இருளனால் மதிவீரன் பெரிதுங் கஷ்டப்பட்டான். அவன் ஒரு நாடோடி யானமையால், சன்னியாசிகள் அவனை மடத்துக்குள் சேர்ப்பதில்லை. ஆதலால் அவன் மடத்துக்கு வெளியே தங்கவேண்டியிருந்தது. ஆனால் மதிவீரனுக்கு அவனுதவி யவசியமானமையால் அவனை நல்ல விதமாய் நடத்தவேண்டியிருந்தது. மேலும் அவன் யாரோடு பேசுகிறான், என்ன பேசுகிறான் என்று அவன் செய்கைகளையும் வெகு ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டியிருந்தது. அவன் மடத்துக்கு வெளியில் தங்கினால், மதிவீரன் அவனைக் கண்காணிக்க முடியாமற் போகுமல்லவா? இவ்வாறு தனது கண்ணிற்படாமல் இருக்கவேண்டுமென இருளன் சமயந் தேடிக்கொண்டிருப்பதாக மதிவீரன் சந்தேகித்தான். மடத்துக்குச் சொந்தமான வெளியறைகளில் அவனுக்கு இடங்கொடுத்தால் அங்கே அவன் சும்மா இருப்பதில்லை. ஆ

சூதும் பாவிவதும் சன்னியாசிகளுக்குப் பிடிக்காத சேஷ்டைகளைச் செய்வதுமாய் அவன் காலத்தைப் போக்குவான். இரண்டொரு தடவையில் அவன் யாருக்கு மடங்காமல் தன்னிஷ்டப்படி ஆடிப் பாடியிருக்கையில், மதிவீரனே வந்து அவனைக் கண்டிக்கவேண்டியதாயிற்று. அச்சிறுபயல் இவ்வாறு நடப்பதால், அவனை மடாதிபதி எங்கே மடத்தெல்லையைவிட்டு அப்புறப்படுத்தி விடுவாரோ என்று மதிவீரன் அஞ்சவும் நேரிட்டது. அவனை வெளியி லனுப்பக் கூடாதென்றுந் தன் விருப்பத்துக்கு மடாதிபதியை இணங்கச்செய்வது சிலவிடங்களில் எமப்பிரயத்தன மாகிவிட்டது.

அவர்கள் பயணப்பட்ட பத்தாவது தினம் நாமூர் என்னும் ஸ்தலத்தை யணுகிக்கொண்டிருக்கையில், இருளனைத் தன் கண் முன்பாகவே வைத்திருக்க வேண்டுமென மதிவீரன் எடுத்துக் கொண்ட பிரயாசை யனைத்தும் வியர்த்தமாயிற்று. அவர்கள் அன்று தங்கின மடத்தின் தலைவர் கொஞ்சங் கண்டிப்பானவர். மாதரிருவரும் வழக்கம்போல் அவர்களுக்கென்று விடப்பட்டிருந்த அறைக்குச் சென்றனர். குறவன் மடத்தின் வெளியிடத்திருந்த ஒரு சிற்றறைக்கு அனுப்பப்பட்டான்; மடாதிபதி மதிவீரனைத் தன்னறைக்கு அழைத்துச் சென்றார். கடந்த இரண்டு தினங்களாக மதிவீரனுக்குக் கிடைத்த செய்திகள் கிலேசத்தைத் தந்தன. இனிப் பிரயாணம் கஷ்டமாக இருக்கும் என நினைத்தான். முல்லையூர் போய்ச்சேர்ந்த போதிலும், அங்கே மாதர் ஆபத்தின்றி யிருத்தல் கூடுமோவென சந்தேகித்தான். முல்லையூரின் நிலைமைதா னென்னவென்று மடாதிபதியை வினவினன்.

மடாதிபதி :-முல்லையூர் குடிகள் செல்வமிகுந்தவர் என்றுனக்குத் தெரியுமே. முல்லையூர் சமரவர்மருடைய ஆதிக்கத்துக்குட்பட்டது. அவர் ஏதாவது புதிய வரி இறுக்க வேண்டுமென்றால், அவருக்கும் குடிகளுக்கும் சச்சரவுதான். அநேகத் தடவைகளில் அவர்கள் அவருக்கு விரோதமாய்க் கிளம்பிக் கலகஞ் செய்திருக்கின்ற

வர். மீண்டும் இன்னும் ஒருதரம் அவர்கள் அவ்வாறு கலகஞ் செய்வரேல், நகரத்தை யடியோடு நாசமாக்கி விடுவதாகச் சொல்லி யிருக்கிறார்.

மதி :-நான் கேள்விப்பட்டதிலிருந்து அவர் சொன்ன சொல் தவறாதவர் என்று தெரிகிறது. ஆதலால் முல்லையூர் குடிகள் கல கஞ் செய்யாமல் ஜாக்கிரதையா யிருப்பார்கள் என்று நினைக்கி றேன்.

மடா :-அப்படிதான் நானும் நினைக்கிறேன். முல்லையூர் அதி பதி சமாதானத்தை நாடியே உழைத்து வருகிறார். ஆனால், (இங் கே மடாதிபதி மேற்கொண்டு ஒன்றும் சொல்லாமல் தயங்குகிறார். பின்னர் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு மெதுவாய்ப் பேசலா னார்.) மாதல நாட்டரசரின் தூதுவர் அவ்வூர் குடிகளைக் கலகஞ் செய்யும்படி இரகசியத்தில் தூண்டுவதாக வதந்தி. பலவிதமான பாதகங்களைத் துணிந்துசெய்து மந்திர நாட்டுக்கு அளவற்ற இன் னலை விளைத்துவரும் பிரபுகுலத்தைச் சேர்ந்த ஒரு மனிதனைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய். அவன் பேர் வில்லியன ; காலாடி வில்லிய னென்றும் சொல்லுவார்கள்.

மதி :-ஆம், கேள்விப்பட்டிருக்கிறேன்.

மடா :-அவனிடம் ஆயிரம் ஆட்களுக்குமேலிருக்கிறார்கள். அவர்களைத் துணைகொண்டு மந்திர நாட்டதிபதியையும் முல்லையூர் அதிகாரியையும் எதிர்த்து வருகிறான். கொள்ளையடிப்பதே அவன் பிழைப்பு ; பழிபாவத்துக் கஞ்சாப் பாதகன்.

மதி :-மந்திர நாட்டதிபதியால் அவனைப் பிடிப்பதற்கு முடி யவில்லை யென்பது ஆச்சர்யமே.

மடா:-சமரவர்மர் மாதல நாட்டோடு போர்புரிய பரமனூரில் இராணுவங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறாராம். வில்லியனை

சம்பக்கூடாது. இச்சமயத்தில் முல்லையூர் குடிகளைக் கலகஞ்செய்யும்படித் தூண்டினும் தூண்டிவிடலாம்.

மதி:-ஆனால் முல்லையூர் அதிகாரியால் கலகத்தை அடக்கமுடியாதா? போதிய சைனியங்கள் அவரிடமில்லையா?

மடா:-அவரிடம் சைனியமில்லாமலில்லை. சமரவர்மரும் அவருக்கு வேண்டிய உதவிபுரிவார் என்பது திண்ணம். மேலும் வி லியன் அவரிடம் வளர்ந்தவன்; அநேக நன்மைகள் பெற்றவன். ஆனால் அவன் ஒரு காலத்தில் அதிகாரியின் முக்கிய வேலைக்கார ஒருவனைக் கொன்றுவிட்டான். அதனிமித்தம் அவனை ஊரைவிட்டுத் துரத்திவிட்டார். அது முதல் அவன் அவருக்கு ஜென்மப் பகைவனாயிருந்து வருகிறான்.

மதி:-அப்படியானால் முல்லையூர் அதிகாரியும் ஆபத்திலேதானிருக்கிறாராக்கும்.

மடா:-சமீபத்தில் விபத்தொன்றுமில்லை. அவரிடம் தகுந்த சைனியமுண்டு. அவருக்குதவியாக சுமார் ஐந்நூறு வீரரைச் சமரவர்மர் அனுப்பியிருக்கிறதாக நேற்றுதான் கேள்விப்பட்டேன்.

அச்சமயத்தில் ஒரு சன்னியாசி அவர்களிருந்த அறைக்குள் அவசரமாய்ப் பிரவேசித்து குறப்பயல் தொந்தரை கொடுப்பதாக பிராது செய்துகொண்டார். சன்னியாசிகள் இராப்போசனம் அருந்துகையில் திருட்டுத்தனமாக உணவில் அவன் ஏதோ மயக்கமருந்தைக் கலந்துவிட்டதாகவும் அதனால் அவர்கள் மயக்க முற்றுக் கிடப்பதாகவுஞ் சொன்னார்.

மடாதிபதிக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே அறையை விட்டுக் கீழே இறங்கிப்போய், இவனைப் பிடித்து நைப்புடைத்து மடத்தெல்லைக் கப்பால் துரத்தும்படி சன்னியாசிகளுக்குக்

கட்டளையிட்டார். இருளன் வெளியே துரத்தப்படுவது மதிவீரனுக்குப் பிரியமில்லையேனும், அச்சமயத்தில் அதைத் தடுக்க அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

சன்னியாசிகள் இருளனைப் பிடித்துத் தூணிற் கட்டிச் சாட்டைகொண்டடித்தனர். பின்னர் மடாதிபதியின் கட்டளையின்மேல் அவன் கட்டுகளை அவிழ்த்துவிட்டு வெளியே துரத்திவிட்டனர்.

அப்போது மதிவீரன் மனதில் சந்தேகம் உண்டாயிற்று. இருளன் யாரோடோ போகவேண்டுமென்கிற எண்ணத்துடனிருந்தவனென்றும், பகலில் சந்தர்ப்பம் வாய்க்காததால், இரவிலாவது போகவேண்டுமென்றே இந்தச் சூழ்ச்சியை எடுத்துத் தன்னை அப்புறப்படுத்திக் கொண்டனன் என்றும் அவன் புத்தியிற்பட்டது. வழிகாட்டியைப் பின்பற்றிப் போய் அவன் செய்கைகளை மறைந்திருந்து தெரிந்துகொள்ளவேண்டுமெனத் தீர்மானித்தான் நமதிளவல். அப்படியே மடத்தை விட்டு இருளன் அகன்றதும், மதிவீரன் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் அவனைத் தொடர்ந்து சென்றான்.

---

## அதிகாரம் 15.

### வேவுக்கு மேல் வேவு.

சந்திரன் மங்கலாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் அக்கிராமத்தின் பிரதான தெருவினூடே குறவன் ஓடுவது, மதிவீரனுக்குத் தெரிந்தது. அவன் தன் கண்ணுக்கு மறையாமல் பார்த்துக்கொண்டே நமதிளவல் வேகமாய்ச் சென்றான். தெருவைக் கடந்து அதற்கப்பாலுள்ள பசும் புல் நிறைந்த மைதானத்தின் வழியாய் இருளன் ஓடுகையில் மற்றவன் அவனை நெரு

க்கிவிட்டான். ஆனால் மதிவீரன் அவன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருந்து அவன் செய்வதைக் கவனிக்க வேண்டுமென்று நினைத்தவனாதலால், தன்னை யவனுக்குக் காட்டிக்கொள்ளாமல் தொலையிலேயே யிருந்தனன்.

இருளனோ நிற்காமலும் பின்னால் திரும்பிப் பாராமலும் ஓடி அக்கிராமத்துக் கருகிலிருந்த ஒரு சிற்றாற்றை யடைந்தான். அவ்வாற்றின் இருமருங்கிலும் மரங்கள் வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன. அங்கே நின்று தன் கொம்பை எடுத்து அதிக ஓசைபடாமல் ஊதினான். அப்போது கொஞ்ச தூரத்திலிருந்து அதே மாதிரி யோசைக் கேட்டது.

இதற்கிடையில் அவனை வேவுபார்க்கச் சென்றவன் சற்றுத் தொலையில் ஆற்றிலிறங்கி புதர்களிடை மறைந்து மறைந்து இருளன் நின்ற இடத்துக்கருகில் வந்து விட்டனன். அங்கே இருளனும் மற்றொருவனும் பேசிக்கொண்டது அவன் செவியில் நன்றாய் விழுந்தது. உடனே அரவங்காட்டாமல் கரையோரமிருந்த ஒரு மரத்தின் மேலேறி கிளைகள் மத்தியில் உட்கார்ந்துகொண்டு அவர்கள் பேசிக்கொள்வதைக் கூர்ந்து கவனித்தான்.

தானமர்ந்திருந்த உன்னத ஸ்தானத்திலிருந்து பார்க்கும்போது, இருளன் போர்வீரனைப்போன்ற கிடாத்திரனான ஒரு மனிதனுடன் பேசுவது மதிவீரனுக்கு நன்றாய்த் தெரிந்தது. அன்னியன் ஆயுதபாணியாய், தன் தலைவனடையாளமாகிய வெள்ளியால் செய்யப்பட்ட சிறிய புலித்தலை யொன்றை கவசத்தின்மேல் மார்பண்டை யணிந்திருந்தனன். அவன் காலாடி வில்லியனுடைய ஆட்களில் ஒருவனாயிருக்கவேண்டுமென மலைநாட்டினவன் யூகித்துக் கொண்டனன்.

அன்னியன்:-ஏண்டா, இவ்வளவு தாமதம்? உனக்காக எத்தனை நாள் காத்துக்கொண்டிருப்பது? மூன்றிரவுகளாய் உன்னை எதிர்பார்த்த வண்ணம் இங்கே பதுங்கியிருக்கிறேனே.

இருளன்:-வர முடியவில்லை. நான் என்னசெய்வேன்? மலைநாட்டிளைஞன் ஒருவன் வந்திருக்கிறான். அவன் என்னை அப்படி இப்படி யசையவும் விடேன் என்கிறான். உண்மை தெரிந்துவிட்டால், அவன் என்னை இங்கேயே கொன்று விடுவதுமன்றி, அவ்விரு மாதர்களையும் அழைத்துக் கொண்டு மாதலநாட்டுக்குத் திரும்பி விடுவான்.

அன்னியன்:-நல்லது, நாம் மூன்று பேரிருக்கிறோம். நாளைக்கே அவர்களை எதிர்த்துப் பெண்களை யடித்துக்கொண்டுபோய் விடுவோமே.

இருளன்:-உன் யோசனை அவ்வளவு சரியானதல்ல. இந்த இளைஞன் பாவகன் முதலிய பிரபுக்களிடம் சண்டை செய்து வெற்றி பெற்று மீண்டவன். குறித்த இடத்தில் பதுங்கியிருந்து எதிர்ப்பதே உத்தமம். இரண்டு வழிகள் வந்துகூடும் இடத்தில் பதுங்கியிருக்கவேண்டும், இல்லையேல் முயற்சிசெய்யவே கூடாது.

அன்னியன்:-என்ன நமது தலைவனது மணாளியை விட்டுவிடுவதா? அப்படி செய்வதினும் நான் நரகத்துள் போகத் துணிவேன். நாம் மேற்கொண்டுள்ள காரியம் நிறைவேறிவிட்டால், நாமெல்லோரும் பிரபுக்களைப்போல் இஷ்டம்போ லிருக்கலாமே. வழிகள் கூடுமிடத்துக்கு அவர்களைக் கொண்டுவா. நீ வழி தெரியாதவன் போல் விசாரித்துக்கொண்டிருக்க, அவர்கள் மரத்தடியிலிறங்கிச் சற்றே இளைப்பாறுவார்கள். அப்போது நாங்கள் அவர்களை எதிர்த்துக் காரியத்தை முடித்துக்கொள்வோம்.

சேநான்:-சரி, அப்படியே ஆகட்டும். ஆனால் ஒரு விஷயம் ஞாபகத்திலிருக்கவேண்டும். அவ்விருளனுக்கு ஏதாவது தீமை நேர்ந்தாலோ, நான் விடேன். ஏனெனில் அவன் என் இப்போதைய சகோதரன்மேல் இரக்கங்காட்டிய சகோதரனாவன்.

பதுங்கியிருந்து எதிர்ப்பதற்கென்று குறிக்கப்பட்ட இடம் ஐந்து மைல் தூரத்திலிருந்தது. அது மாபாவதி நதியின் வடகரையிலிருந்தமையால், மாதரும் அவர்தம் பரிவாரங்களும் தென்கரையிலுள்ள ரஸ்தாவில் போகநேர்ந்தால் அவர்களை எதிர்ப்பதற்காகச் சில வீரரை வைக்கவேண்டுமென்றான் அவ்வீரன்.

இருளன்:-சற்றே யோசித்தனன், பின்னர், "இல்லை. நாலு சைனியங்கள் நீ வைக்கும் ஆட்களைப் பார்த்துவிட்டால் காரியம் கெட்டேபோகும். மேலும் மாதர் வடகரை வழியாய்ப் போவார்கள் என்பது நிச்சயம். அவர்களுக்கெல்லாம் வழிகாட்டி மலைநாட்டினருள் வழி தெரியாதபோது எனையன்றி வேறெவரையும் விரும்புகிறதில்லை. ஏனெனில் அவனிடம் என்னை மதிப்பினவர் வார்த்தைகளை, அவரை நன்றாய் அறியும் வரையில், எவரும் சந்தேகியார். நான் போய் வருகிறேன். நான் இனி தாமதித்தால் மோசம் வந்துவிடும். மலைநாட்டான் சந்தேகிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்." என்று விடைபெற்றுக்கொண்டு, அவ்விடத்தை விட்டகன்றான்.

அவர்கள் இருவரும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்ததும், மதிவீரன் மரத்தைவிட்டுக் கீழே குதித்தான். நடக்கப்போகும் அபாயமான காரியம் அவன் மனதைக் கலக்கஞ்செய்தது. அவன் இருதயம் படபடவென் றடித்துக்கொண்டது. அவன் மடத்தை நோக்கி நடக்கையில் விபத்தை விலக்கு மார்க்கமென்னவென்று சிந்தித்துக்கொண்டே சென்றனன். இருளன் பஞ்சகத்துக்குத் தண்டனை

மரணமே; ஆனால் தன் உயிரைக் காக்கும் விருப்பமுடையவனை இவனும் எவ்வாறு கொல்வான்? அவனைத் துரத்திவிட்டு, வேறொரு வழிகாட்டியை வைத்துக்கொண்டால், இருளன் உடனே வில்லியிடஞ் சென்று மதிவீரனுடைய விஷயங்களைத் தெரிவித்து விடுவான். ஆதலால் அவனையே வழிகாட்டியாக வைத்துக்கொள்வதே சரியென்றும், தன் பாதுகாவலிலிருக்கும் மாதருக் காபத்தொன்றும் நேராதிருப்பதற்கான முன் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்வதென்றும் வடகரையைப் பிடித்துக்கொண்டு செல்லாமல் தென்கரை வழியாய்ப் போய் முல்லையூரைச் சேர்வதென்றும் தீர்மானித்தான் நமது வீரசிகாமணி.

---

## அதிகாரம் 16.

### சூதி சொல்லுதல்.

மறுநாள் காலையில் மதிவீரனும் மாதரும் மடத்தைவிட்டுப் புறப்பட்டனர். இருளனும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர்களோடு வந்து சேர்ந்துகொண்டான்.

குறப்பயல் அன்னியனோடு பேசிக்கொண்டிருந்த ஆற்றங்கரை பக்கமாக அவர்கள் போகு மார்க்கம் இருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் மதிவீரன் ஒளிந்து கொண்டிருந்த மாமரத்தைத் தாண்டிச் சென்றனர்.

அப்போது மதிவீரன் இருளனைப் பார்த்து, "குறப்பயலே, நேற்றிரவை எங்கே கழித்தாய்?" என்று சமதியிற் கேட்டான்.

"ஒரு மாட்டுக் கொட்டகையில்" என்று உடனே பதிலளித்தான் இருளன்.

"பெரியோர் கட்டளையில் இருக்கிறபடியை யறிந்து, தகுந்த விதமாய் நடந்துகொள்ளவேண்டுமென்று நான் சொல்லவில்லையா? நீ ஒரு திருட்டுப் பயல். எங்களுக்கு உண்மையாய் நடந்துகொள்ளவில்லையென்று சந்தேகித்தேனே, என் வாளாயுதம் உன் மார்பிற் பாயும் என்பதை மறவாதே." என்று சொல்லி மதிவீரன் மாதரண்டை சென்றனன். நேரிடவிருக்கும் விபத்தை நினைக்க நினைக்க, அவன் மனது மிகவாய் கலங்கிய படியால், மங்கையரோடு உல்லாசமாய்ச் சம்பாஷிக்க முடியவில்லை. அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பதுபோல், அவன மனதிற் குடிகொண்ட கவலை அவன் முகத்தில் தோன்றியது. எப்போதும்போல் மதிவீரன் பேசாமல், இடையிடையே பதிலளிப்பதும தலையசைப்பதுமாய் மௌனஞ் சாதிப்பதை அம்மாதரிருவரும் கண்டு கொண்டனர்.

"என்றுமில்லாமல் இன்று மட்டும் நமது தோழர் மௌனஞ் சாதிப்பதின் காரணந் தெரியவில்லையே." என்றுள் கனகவல்லி.

"ஐயா, தங்கள் உடம்புக்கென்ன?" என்று அமலாம்பாள மிகப் பரிவுடன் வினவினள்.

மதி:-உயர்குலத்துதித்த உத்தம மங்கையரே! இப்போது என்மேல் உங்களுக்கிருக்கும் நம்பிக்கையின் அளவைக் கண்டறியும் சந்தர்ப்பம வாய்த்திருப்பதால், எதார்த்தத்தைக் கூறவேண்டுமே என்று சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். அதனால்தான் இந்த மௌனம்.

கனக:-நீர் சொல்லுவதொன்றும் விளங்கவில்லை. வழியில் ஏதாவது விபத்து நேருமே என்று அஞ்சுகிறீரா?

அமலா:-தங்கள் முகத்தைப் பார்க்கும்போதே தெரிகிறது. அப்படி ஏதாவது ஆபத்துண்டானுல், எங்கள் கதி யென்ன?

மதி:-கெடுதலொன்றும் நேராது. பயப்படவேண்டாம். என்னை முற்றிலும் நம்பக்கூடுமோ ?

கனக:-நாங்கள் உம்மை எவ்வளவு தூரம் நம்பவேண்டும் ?

அமலா:-நானோ உம்மை முற்றிலும் நம்பியிருக்கிறேன். ஐயந்தனை ஒன்றுமில்லை.

மதி:-நீர் என்னை முழுதும் நம்பியதற்காக உமக்கு வந்தனம். மாயாவதி நதியின் தென்கரை வழியாக முல்லையூருக்குப் போக யோசித்திருக்கிறேன். இந்த யோசனை அரசர் கட்டளைக்கு முற்று மாறானதென்று எனக்குத் தெரியும். வழிகாட்டிக்கு அவர் கொடுத்திருக்கும் ஆக்கினை வடகரை வழியாய்ப் போகவேண்டுமென்பதே. ஆனால் அப்பக்கத்தில் கள்வர் பயமுண்டென நேற்றிரவு மடத்திற் கேள்விப்பட்டேன். ஆதலால் மார்க்கத்தை மாற்றுவதே சரியெனத் தீர்மானித்திருக்கிறேன். உமது யோசனையென்ன ?

அமலா:-என் யோசனையா ? நீர் செய்ய நினைத்திருப்பதுவே சரி !

கனக:-அமலா, இளைஞர் சொல்வதென்னவோ நம்பத்தகுந்த காரியந்தான். அவர் நல்லெண்ணமுடையவர் என்பதிற் சந்தேகமேயில்லை. ஆயினும் அரசர் கட்டளையை மீறுவது சரியல்ல. அவர் இவ்விஷயத்தைப்பற்றி எவ்வளவு வற்புறுத்திப் பேசினார் என்பதை மறந்தனையா ?

அமலா:-அரசர் கட்டளைக் கடிபணிய வேண்டுமோ ? சுயநலப் பிரியமும் குரூர சிந்தையுமுடைய விஜயசேனர் வார்த்தைகளையும் இந்த யௌவன வீரருடைய வார்த்தைகளையும் ஒருங்கே வைத்து ஒப்பிடுவதா ? அவ்வாறு செய்வதால் சுத்த வீரராகிய நமது தோழரை நாம் அவமதித்தது போலாகுமே !

"ஐயனே, நீர் செய்த அன்பு மொழிகளுக்காக கடவுள் உம்மைக் காப்பாராக!" என்று மதிவீரனுரைத்து, குதிரையைத் தட்டிவிட்டு இருளன் பக்கம் போய்ச் சேர்ந்தான்.

"இப்போது அந்த நாய் என்னைப் பார்த்தும் குலைக்கவில்லை. ஏனெனில் அவன் என் தொண்டையைப் பிடிக்கும்போதுதான் என்னை அடிமையாய் நலைத்துவிடுவனென்று நினைக்கின்றான் போலும்." என்று தனக்குள்ளாகவே நினைத்துக்கொண்டு, குறவனைப் பார்த்து, "அப்பா இருளா, உன் குலத்தார் ரேகை சாஸ்திரத்தில் தேர்ந்தவரென்று சொல்லிக் கொள்ளுகிறார்களே. இங்கே உன் சாமர்த்தியத்தைப் பார்ப்போம். என் கையைப் பார்த்துக் குறி சொல்லக்கூடுமா?" என்று தன் கரத்தை அவன் முன் நீட்டினான்.

இருளனும் மதிவீரன் உள்ளங் கையிலுள்ள ரேகைகளை கூர்ந்து நோக்கிய வண்ணம், "உமக்கு கல்யாணத்தால் அதிக லாபமுண்டு. அதனால் நீர் பெரிய தனவந்தரும், பிரபுவும் ஆவீர். உமக்குக் கொஞ்ச காலத்தில் பேராபத்தொன்றிருக்கிறதாகத் தெரிகிறது. அதினின்றும் உமது நண்பன் ஒருவன் உம்மைக் காப்பாற்றுவான்." என்று தனக்குத் தெரிந்ததைச் சொன்னான்.

மதி:-அந்நண்பன் யார்? நீ தானோ?

இரு:-என்னைப்பற்றிய விஷயம் நானே தெரிந்து சொல்ல முடியாது.

மதி:-அப்படியானால் என்புத்தியில் தோன்றுவதைச் சொல்லுகிறேன், கேள். இருளா, எனக்கு நேரப்போகும் விபத்தானது ஆற்றின் வடகரையில்தான். ஆதலால் அதைத் தவிர்த்து தென்கரை வழியாக முல்லையூருக்குப் போவேன்.

இரு:-நீர் சொல்வது சரிதான். ஆனல் விஜயசேன மஹாராஜா சொல்லியபடி நீர் செய்யாமல் உமதிஷ்டப் பிரகாரம் நடந்து கொண்டதற்கு நானல்லவோ உயிரிழக்க வேண்டிவரும்.

மதி:-யாதொரு விபத்து மின்றி பிரயாணத்தின் முடிவை எய்தினால் அரசர் வேறு வழியாகச் சென்றதற்கு கோபங்கொள்ளார்.

இரு:-அரசர் உம்மிடம் சொன்னதுபோலவே அவருடைய எண்ணமும் இருக்குமென்று உமக்கு நிச்சயமாய்த் தெரிந்தால் நீர் சொல்வது போலவே நடக்கும். அவர் தமக்கு மிகுந்த கவலைக்கிடமான விஷயத்தைச் சாதாரணமாய் மற்றவர்களிடம் வெளியிடுகிறதில்லை.

மதி:-நீ நினைப்பது வீண் சந்தேகம். அதைக்கவனிப்பவன் நானல்ல. என் கடமை இம்மாதரை முல்லையூருக்குக் கொண்டு சேர்ப்பதே. மாயாவதியின் தென்கரை வழியாகப் போவதால் என் கடமையை நிறைவேற்றக் கூடும் என்று நினைக்கிறேன்.

இரு:-உமதிஷ்டம், வடகரையே போவதும், தென்கரையே போவதும், எல்லாம் எனக்கொன்றுதான். எந்த வழிபோனாலும் நான் வழிகாட்ட தயாரா யிருக்கிறேன். உம்முடைய எஜமானருக்கு நீரே கணக்கு சொல்லவேண்டும்.

இருளன் இவ்வாறு பேசியதில் மதிவீரனுக்குச் சந்தோஷமே; ஏனெனில் அவனுதவி அவ்வன்னிய நாட்டில் அவசியம் வேண்டியிருந்தது.

மாயாவதி நதியின் தென்கரை வழியாய்ப் பிரயாணஞ் செய்து சுலபமாக மறுநாள் மாலை மதிவீரனும் மாதரும் தாங்கள் கருதிய இடம் போய்ச் சேர்ந்தனர். முல்லையூர் அதிபதியாகிய பூபாலன் அச்சமயத்தில் நகருக்கு வெளியே யிருந்த தனது அழகிய கோட்டையிற் போய் சௌக்கியத்துக்காக வசித்து வந்தான். மேலும்

முல்லையூர் குடிகள் தங்கள் சுவாதீனத்தை விடுத்து அன்னிய நாட்டிக் குட்பட்டிருக்கும் காரணத்தால், கலகஞ்செய்து தன்னை வந்து பிடிப்பரென எதிர்ப்பார்க்கள் என்னும் பயமும் பூபாலனுக்கிருந்தது. அதனுக்தான் அவன் நகரைவிட்டு வெளிவந்து வசித்தது. மதிவீரன் பார்க்கும்போது கோட்டையைச் சுற்றி போர்வீரர் காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

உயர்குல மாதரிருவரும் அவர்கள் பதவிக் கேற்றவண்ணம் பூபாலனால் வரவேற்கப்பட்டனர். முல்லையூர் அதிபதியாகிய பூபாலன் அன்பும் உதாரகுணமுமுடைய உத்தமசீலன்; சுற்றுப் பக்கங்களிலிருந்த அதிகாரிகளுக் கெல்லாம் அவனிடம் மதிப்பதிகம். தன வந்தராகிய தனது குடிகளை அவன் கண்டிப்பாய் நடத்தாமல் தயவாய்ப் பரிபாலித்து வந்தமையால், அவர்கள் அவனை நேசிப்பதற்குப் பதிலாய், அவனுக்கு விரோதமாகக் கலகஞ் செய்யத் துணிந்திருந்தனர். அவன் சமரவர்மனுடைய அந்தரங்க நண்பன். முல்லையூரில் கலகம் ஏற்படும் என்று சமரவர்மனுக்குத் தெரியுமாகையால், அவன் பூபாலனுக்கு உதவிசெய்ய எப்போதும் தயாராக இருந்தனன்.

கனகவல்லியையும் அமலாம்பாளையும் தன்னுற் கூடியவரையில் பிரயாசைப்பட்டுக் காப்பதுடன், அவர்களுக்காகச் சமரவர்மனிடம் பரிந்து பேசுவதாகப் பூபாலன் வாக்களித்தான். "பெண்மணிகளே, நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். என்னுயிரைப் போலவே உங்களை மதித்துக் காப்பாற்றுவேன். நீங்கள் பிரத்தியேகமான இடத்தில் போய் வசிப்பது கூடாது. முல்லையூர் அபாயம் நிறைந்த ஊர். என் கோட்டைக்கு வெளியில் உங்களைக் காப்பதென்றும் அசாத்தியம். ஆதலால் நீங்கள் இங்கேயே தங்கியிருப்பது தான் உத்தமம்." என்று பூபாலன் அம்மங்கைமாரைத் தன் மனைவிமக்களிருக்கும் அந்தப்புரத்திற் கொண்டுபோய்விட்டு மதிவீரனண்டை வந்தனன்.

# அதிகாரம் 17.

## முல்லையூர்.

கடந்த சில தினங்களாய் அமலாம்பாளோடிருக்கும் பாக்கியம் பெற்ற மதிவீரன் பூபாலன் கோட்டையில் அவளை விட்டுப் பிரிய நேர்ந்ததே என்று மனம் வருந்தினான். தான் முல்லையூர் வந்து சேர்ந்த செய்தியை விஜயசேனருக்குத் தெரிவிக்கும் பொருட்டு, ஓர் ஆள்வசம் நிருபம் ஒன்றனுப்பிவிட்டு, கோட்டையில் ஓர் அறைக்குள் ஜன்னலண்டையமர்ந்து மனக்கவலையுடன் ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தனன். அமலாம்பாளைப் பகிரங்கமாய்க் காதலித்து விவாகஞ்செய்துகொள்ளத் தகுந்த ஆஸ்தியும் பதவியும் தனக்கில்லாமற் போயிற்றே என்று விசனப்பட்டான்.

அப்போது அவன் தோளின்மேல் யாரோ கை வைத்தது போல் தெரியவே, திரும்பிப் பார்க்க, குறவன் தன் பக்கல் நிற்பதை யுணர்ந்தான். சமீபத்தில் மாதர்க்குச் செய்ய விருந்த வஞ்சகத்தையிட்டு இருளனை மதிவீரன் வெறுத்தான். ஆதலால் கடுகடுத்த முகத்துடன், "என்னவேண்டும்? உடனே சொல்லிவிட்டுப்போ. என்முன் நிற்காதே. காலாடி வில்லியனை நாடிப்போ, அல்லது வேறெங்கேனும் ஒழிந்துபோ. இனி என் கண்முன் வர முயலாதே! தெரியுமா?" என்று கோபமாய்ப் பேசினான்.

இருளன் ஆச்சர்யத்துடன், "ஆ, காலாடிவில்லியனா? நீர் பிரயாணத்தின்போது மார்க்கத்தை மாற்றியது, எல்லாந் தெரிந்துகொண்டுதான் போலும். ஆனால் பொறும். நான் ஒரு மடையன்! இப்போதுதான் தெரிகிறது. மரத்தண்டையிருந்த ஓடையருகில் நாம் வருகையில், மாமரத்தை நீர் உற்று நோக்கினீரே. ஆம், அந்த

யாமத்தில் இரவில் ஒருவர் முனித்துக்கொண்டு உரத்துக் கேட்கலாம். மதிவீரரே, என்னுடைய சூழ்ச்சியைப் பகைப்படுத்தினீர், காளை வந்தான். ஆனால் நீர் உமக்கு வர இருந்த பாக்கியத்தைக் கெடுத்துக் கொண்டீர். நீர் பிடிவாதமாயிருக் கிராவிட்டால், நான் குறி சொல்லியபடி எல்லாம் நிறைவேறியிருக்கும். நீர் என் சகோத ரனுடைய உயிரைக் காப்பாற்ற முயன்றதற்காக நான் உமக்குக் கடமைப்பட்டவனல்லவா? இவ்வளவு நடந்த பின்னும் என் நன்றியைக் காட்ட முயல்வது உமக் காச்சர்யமாயிருக்கும். மீண்டும் கூடிய சீக்கிரத்தில் உம்மை வந்து காண்பேன். போய்வருகிறேன். உம்மோடு வந்த மாதரிடம் சென்று விடைபெறப் போகிறேன்.'' என்றான்.

``நீயா மாதரிடம் போவது? உன்னை அவர்களிருக்கும் அறைக்குள் பிரவேசிக்க விடார்கள் என்பது நிச்சயம்,'' என்று வியப்புடன் மொழிந்தான் மதிவீரன்.

``இவ்வளவுதானா உமக்குத் தெரிந்தது. அவர்களுடைய தோழியாகிய மங்கம்மாள் என்னை அழைத்துப் போவாள்.'' என்று இருளன் வெளியே போகத்திரும்பினான். மீண்டும் என்னவோ நினைத்துக் கொண்டு மதிவீரனை நோக்கி, ``உமது மனதி லிருப்பதெனக்குத் தெரியும். அது உமது முனிச்செவே காட்டி நின்றது. ஆனால் என் உதவியால் மட்டுமே உமதெண்ணம் பலிக் கும் என்பதை நம்பும். மாதரை வசப்படுத்துவது சுலபமான காரியமல்ல. விஜயசேனர் ஆசராயிருப்பதுபோல நீர் என் பிரபுவாயிருந்தலாகாதா? ``பிரபு'' பட்டம் உமக்கும் பொருத்த முடையதே.'' என்று பதில் ஒன்றும் எதிர்பாராமல் இருளன் அறையை விட்டகன்றான்.

மதிவீரன் உடனே எழுந்து அவனைப் பின்பற்றி சென்றான். இருளன் செயல் சந்தேகத்துக் கிடமாகவே யிருந்தது. அவன் வேக

மாய் நடந்து கோட்டையின் பின்பக்கமாயச் சென்று ஒரு சிறு கதவைத் திறந்து கொண்டு தோட்டத்திற்குள் புகுந்தான். அங்கிருந்த ஒரு கொடிவழியைப் பற்றி இருளன் போவதை அவன் பின்னால் வந்து கொண்டிருந்த மதிவீரன் கவனித்தான்.

இரண்டுபக்கங்களில் கோட்டையின் கட்டடங்களும், மற்ற இரண்டு பக்கங்களில் உயர்ந்த மதில்சுவர்களும் அத்தோட்டத்தைச் சூழ்ந்திருந்தன. இருளன் தோட்டத்தைக் கடந்து, சம்பங்கிக் கொடி படர்ந்து மறைத்துக்கொண்டிருந்த கட்டடத்தினருகே போயினன். கொடிகளை விலக்கிக்கொண்டு ஒரு சிறு கதவைத் திறந்துகொண்டு கோட்டைக்குள் நுழைந்தான். அங்கிருந்து குறவன் ஜெயங்கொண்டதின் அறிகுறியாய மதிவீரனைத் திரும்பிப் பார்த்து நகைத்தான். இருளனுக்காகக் கதவைத் திறந்தவள் மங்கம்மாள் என்னும் தாதியென்றும், குறப்பயல் உயர்குல மாதரைக் காண்பேன் என்று சொன்னதை நிறைவேற்றுவது நிச்சயமென்றும் மதிவீரன் அப்போதுதான் தெரிந்துகொண்டான்.

மாதர்க்கு விரோதமாய் இருளன் செய்திருந்த வஞ்சக சூழ்ச்சியைப்பற்றி அவர்களிடம் அப்பொழுது சொல்லாமலே யிருந்தது தப்பிதமென்று மதிவீரன் தன்னையே நிந்தித்துக் கொண்டான். தன் காதல் நிறைவேறும் வண்ணம் தனக் குதவி செய்வதாகக் குறவன் சொன்னது அவன் கோபத்தைப் பெருக்கிற்று. இத்தகைய உபாயத்தால் அமலாம்பாளை அடைதல் அவமானத்துக்குரிய காரியமென்று நினைத்தான். "இதெல்லாம் திருட்டுத்தனம், அவன் மாதரை ஏமாற்றியே பார்க்கப் போயிருக்கிறான். அதனால் கெடுதல் நேரிடுமென்பது நிச்சயம். நான் மங்கம்மாள் மூலமாய் அப்பெண்மணிகளைப் பார்த்து இருளனைப்பற்றி எச்சரித்தல் வேண்டும். முக்கியமாய் அமலாம்பாளுக்கு யாதொரு கெடுதியும் நேராமல் பார்ப்பது என் கடமை." என்று தனக்குள்ளாகவே பேசிக்கொண்டான்.

பின்னர் தோட்டத்தைவிட்டகன்று திருவைப் பாலத்தைத் தாண்டி முல்லையூரை நோக்கி நடந்தான். அக்காலத்தில் முல்லையூர் செல்வத்திலும், பெருமையிலும் சிறப்பு வாய்ந்த நகரம். அந்நகருக்குள் புகுந்து அங்கே நடக்கும் வியாபாரம் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டே போகையில் அமலாம்பாளையும், இருளனையும் அச்சமயத்தில் மறக்க நேர்ந்தது. கடைத்தெருவில் பரபரப்புடன் அங்குமிங்கும் சென்று வியாபாரம் செய்யும் கூட்டமும் அந்நகரின் அளவற்ற செல்வத்தின் அறிகுறிகளும் அவன் மனதைக் கவர்ந்தன.

அவன் கடைவீதியில் வேடிக்கைப் பார்த்த வண்ணம் போய்க் கொண்டிருக்கையில் தனவந்தராகிய அநேக குடிகள் தன்னைக் கவனிப்பதாக அவன் புத்தியில் பட்டது. அவர்கள் ஆங்காங்கு கூடி தன்னை நோக்கிய வண்ணம் ஏதேதோ வென்று பேசிக்கொள் வதுபோல் தோன்றிற்று. அவர்கள் மலை நாட்டினவலை அக்கறை கலந்த மரியாதையுடன் உற்றுநோக்கினர். கொஞ்ச நேரத்திற் கெல்லாம் அவர்களனைவரும் அவனை [illegible]ந்துகொண்டு பின் பற்றலாயினர்.

மதிவீரன் சுற்றுமுற்றும் பார்த்தான். நீதியதிபன் பதவியின் அடையாளமணிந்த ஒரு கனவானைக் கண்டதும் அவனைப் பார்த்து, ''ஐயா, இத்தனைபேர் என்னைச் சூழ்ந்தவர் என்னிடத்தில் என்ன அதிசயத்தைக் கண்டார்கள்? என் உடையில், அல்லது தோற்றத்தில் ஏதாவது விசேஷமுண்டா?'' என்று கேட்டான்.

பசுபதி யென்னும் அந்நீதியதிபன், ''அப்படிக் கொன்றுமில்லை. நாங்கள் பார்த்து மரியாதை செய்ய ஆசிக்கும் ஒன்றைத் தவிர மற்றொரு விசேஷமும் உம்முடைய உடையிலும், தோற்றத்திலும் நாங்கள் காணவில்லை.'' எனப் பதிலளித்தான்.

மதி :-நீர் பேசுவது மரியாதையாகவே இருக்கிறது. ஆனால் நீர் சொன்ன விஷயத்தின் பொருள் விளங்கவில்லை.

பசுபதி :-விளக்கவில்லையென்று என்னிடம் கடிக்காதீர். நான்தான் பசுபதி என்னும் நீதியதிபன். இதோ நிற்கும் அரங்கநாதனும் என்னைப்போலவே நீதியதிபர்தான்.

பெருந்தன்மையும் காம்பீரத் தோற்றமுமுடைய அரங்கநாதன் என்பான் சற்றே முன்னேறி வந்து கோபங்கொண்டவன்போல், "நேசரே, நாமிருக்கும் இடம் சந்தைத்தெருவென்பதை மறந்தீர் போலும். உமது அல்லது எனது இல்லத்துக்குள் அவரைக் கூட்டிப்போய் நமது கூட்டாளியைப்பற்றி இந்தக் கனவான் என்ன சொல்லப் போகிறாரென்பதை கேட்போம்." என்றான்.

மதிவீரனுக்கு எல்லாம் அதிசயமாயிருந்தது. பொறுமையை மறந்தவனாய், "செய்தி யொன்றும் என்னிடமில்லை. இக்கூட்டத்தை விலக்கி என்னைப் போகவிடும். அதுதான் நான் உங்களைக் கேட்டுக்கொள்வது." என்றான்.

அரங்கநாதன் :-நல்லதையா, உமது ரகசியத்தை வெளியிட மாட்டீராக்கும். இம்முல்லையூரில் நீர் இன்னாரென்று தெரிவித்துக்கொள்ள உமக்குப் பிரியமில்லையேல், விஜயசேன மகாராஜாவிடம் காவல்புரியும் மலைநாட்டு வில்வீரனுடைய தலைச்சீராவை வெளியரங்கமாய் ஏன் அணிந்துகொண்டு வரவேண்டும்?

மதி :-மலைநாட்டு வில்வீரனாய் நானிருப்பதினால் உமக்கென்ன?

"அவரே ஒத்துக்கொண்டார். முல்லையூர் சுவாதீனத்தைப் பாதுகாக்கும் விஜயசேன வள்ளலாரின் வில்வீரரென்று அவரே ஒத்துக்கொண்டிருக்கிறார்." என்று அரங்கநாதனும் பசுபதியும் அங்கு கூடியிருந்த ஜனங்களைப்பார்த்து கூவினார்கள்.

"விஜயசேனர் நீடூழி வாழ்க! செத்தாலும் நமது கலை நினைவை விடலாகாது. வரி கொடுக்கமாட்டோம். வில்லியன் நீடூழி வாழ்க! சமரவர்மனும் பூபாலனும் ஒழியவேண்டும்!" என்று அக்கூட்டத்திலிருந்தவர்கள் இரைச்சலிட்டுக் கூவினார்கள். இக்கூச்சலைக் கேட்டதும் மதிவீரன் பிரமித்துவிட்டான். பின்னர் அவன் ஒருவாறு தேறி அதன் பொருளை யறிந்துகொண்டு தனக்குள்ளாகவே ஒரு சூழ்ச்சி செய்தான்.

பாவகன் வாளினால் தன் தலைசிராய் பிளவுபட வில்வீரர்களின் சிராயொன்றை அவன் அணிந்துகொள்ள நேர்ந்த சம்பவத்தை முற்றுமே மறந்துவிட்டான். முல்லையூர் குடிகள் கலகப் பிரியராய் இருப்பதற்கு உதவியாய் நின்றவர் விஜயசேனரானபடியால் அவர்கள் மலைநாட்டு வில்வீரன் தங்கள் ஊருக்கு வந்திருப்பது விஜயசேனர் தங்களுக்குப் பகிரங்கமாய் உதவிசெய்யத் தீர்மானித்திருப்பதின் அறிகுறியென்றும், அவருடைய சைனியங்கள் தங்களுக் குதவியாக பின்னால் வந்து கொண்டிருக்கின்றனவென்றும் நம்பினார்கள்.

அவர்கள் அவ்வாறு நினைப்பது தவறென்று அவர்களுக்கு எடுத்துக் காட்டுவதால் பயனில்லையென்றறிந்த மதிவீரன் தன்னை நகர மண்டபத்துக்குக் கூட்டிக்கொண்டு போகும்படிச் சொன்னான். போகும்போது தன்னை எவ்வாறு விடுவித்துக் கொள்வதென்று யோசித்தான். அவனைச் சுற்றிலும் ஜனக் கூட்டம். அவன் இருகைகளையும் பசுபதியும் அரங்கநாதனும் பிடித்துக்கொண்டிருந்தனர். தப்பிப்போவது அசாத்தியம்போல் தோன்றிற்று.

இந்தக் கஷ்ட நிலைமையில் மதிவீரனுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. பசுபதி, அரங்கநாதன் என்னும் இருவரையும் நோக்கி, "நண்பரே, நான் வில்வீரர் தலைச்சிராயைத் தெரியாமல் அணிந்து கொண்டு வந்து விட்டேன். அதனால

என்னுடைய இரகசிய வருகையை இந்நகர வாசிகள் தெரிந்து கொண்டது விசனிக்கத் தக்கது. உங்கள் செவியில் மட்டும் விழக் கூடிய சில இரகசியங்களை அரசர் என்னிடம் ஒப்படைத்திருக்கிறார். என்னை நகர மாளிகைக்குக் கொண்டுபோய்ப் பேசும்படி வற்புறுத்தினால், அந்த இரகசியங்களைச் சொல்லவேண்டிவரும். அவற்றைக் குடிகள் அறிவது யுக்தமல்ல." என்று சமயோசிதமாய்ப் பேசினான்.

கலகக்காரருக்குத் தலைவராகிய அவ்விருவரும், அதிகார மனைத்தையும் தாமே வகிக்கவேண்டு மென்னுங் கருத்தினராய், அச்சமயம் மதிவீரன் நகரைவிட்டுப் போய்விட்டால், அன்றிரவு ஒருவருக்குந் தெரியாமல் அவன் தங்களை வந்து கண்டு இரகசியங்களைச் சொல்லச் சுலபமாயிருக்கும் என்று தங்களுக்குள் தீர்மானித்துக் கொண்டனர்.

இவ்வாறு பேசிக்கொண்டு வருகையில் பசுபதியின் வீடு தென்படவே, மதிவீரனை யழைத்துக்கொண்டு பசுபதியும் அரங்கநாதனும் அவ்வீட்டுக்குள் நுழைந்தனர். ஜனக்கூட்டம் வெளியில் நின்றது. மதிவீரன் உடனே தன் உடையைக் கழற்றி, வேலைக்காரனைப் போல் மாறுவேடமணிந்து, பசுபதியின் குமாரத்தியாகிய தருமவதி வழிகாட்ட பின்புறவாயிலாகச் சென்று மாயாவதி யாற்றங்கரையிலிருந்த படகொன்றி லேறிக்கொண்டு அக்கரை போய்ச் சேர்ந்தான். பசுபதியும் வீட்டை விட்டு வெளியில வந்து கூட்டத்தைப் பார்த்து, அரசருடைய தூதுவன் தற்சமயம் அவசர அலுவலினிமித்தம் போய்விட்டதாகவும், பின்னால் யாவுந் தெரியவரும் என்றும் சமாதானஞ் சொல்லி யனுப்பிவிட்டனன். கூட்டங்கலைந்து ஜனங்களும் அவரவர் வீடு போயினர்.

நமதிளவலும் கோட்டைக்கு அரை மைல் தொலையில் படகினின்றும் இறங்கி, கோட்டையின் பிரதான வாயிலை நோக்கிப்

போகையில், மதில் சுவரிலுள்ள ஒரு சிறிய கதவைத் திறந்து கொண்டு இருவன் வெளியில் வந்து, அங்கே காத்துக் கொண்டிருந்த படைவீரர் முல்லையூரை நோக்கிப் போவதைக் கண்டான். இவ்வளவு நேரம் அப்பாதகப்பயல் உயர்குல மாதரிடம் இருந்து தான் வருகிறானெனச் சந்தேகித்துக் கோபங்கொண்டனன்.

மதிவீரன் கோட்டைக்குள் புகுந்து சபைமண்டபத்துக்கு வந்ததும், அங்கே அவனுக்குப் போசனம் பரிமாற வேலைக்காரர் தயாராயிருந்தனர். பின்னர் பூபாலனும் அங்கே வந்துசேர்ந்தான். அறுசுவையன்னம் இருவருக்கும் படைக்கப்பட்டது. இருவரும் பேசிக்கொண்டே உணவருந்தினர். அப்போது மதிவீரன் தான் நகருக்குள் சென்றபோது அங்கு நடந்த சம்பவத்தை விபரமாய்ப் பூபாலனுக் கெடுத்துரைத்தான். பூபாலன் அதைக் கேட்டுக் கொண்டு மௌனமாயிருந்து பின்னர், "சமரவர்மர் அனுப்புவதாகச் சொல்லியிருக்கும் சைன்னியங்கள் எப்போது வருமோ தெரியவில்லையே! கடவுள் கிருபையால் அவை வந்துவிட்டால் எவ்வளவோ நன்றாயிருக்கும்!" என்று சஞ்சலத்துடன் பேசினான்.

"இது விஷயத்தில் நீர் ஏன் கவலைப்படவேண்டும்? தங்களிடம் வேண்டிய வீரர்கள் இல்லையா? முல்லையூர் வாசிகள் பாமர ஜனங்கள் தானே; அவர்கள் தேர்ச்சிபெற்ற வீரர் முன் நிற்பார்களா?" என்று மதிவீரன் கேட்டான்.

பூபாலன் ஒன்றும் பேசவில்லை. அவனுடைய உத்தியோகஸ்தரில் ஒருவன், "முல்லையூர் வாசிகள் தென்னாட்டில் மிகப் பராக்கிரம் வாய்ந்த வீரர் என்பது உமக்குத் தெரியாது போலும். அவர்கள் செய்த கலகத்துக்காக சமரவர்மர் அவர்களை இருமுறை தண்டித்திருந்தும், வில்வீரன் வருகையைக் கண்டு மீண்டும் கலகஞ் செய்ய யோசனை செய்கின்றனரே. இதைக் கொண்டே அவர்கள

துணிச்சல் எத்தகையினதென்று விளங்கவில்லையா? கலகம் நேரும் என்பது திண்ணம். இரத்தஞ் சிந்த அவர்கள் அஞ்சமாட்டார்கள். ஆகது கோட்டையினின்றும் போகக்கூடியவர்கள் எல்லாம் போய்விடுவதே உத்தமம். அடைக்கலம் புகுந்திருக்கும் மாதரிருவரும் அதே அபிப்பிராயமுடையவர்களாகவே இருக்கின்றனர். தாங்கள் அபாயமில்லாத வேறிடத்தை நாடிச் செல்ல யோசித்திருப்பதாக விஜயசேனருக்கு நிருபம் விடுத்திருப்பதாகவுங் கேள்வி.” என்றான்.

---

## அதிகாரம் 18.

---

### பேரில்லா நிருபம்.

போஜனை முடிந்ததும், கோட்டையின் உத்தியோகஸ்தன் ஒருவன் மதிவீரனைத் தோட்டத்துக் குலாவ அழைத்துச் சென்றான். இவ்வாறு சென்றதில் மதிவீரனுக்குத் திருப்தியே; ஏனெனில் அமலாம்பாளைத் தோட்டத்திலிருந்த வண்ணம் ஒரு சமயம் பார்க்க நேரினும் நேரலாம் என்று அவன் நினைத்தான். தோட்டத்துக்குள் நுழைந்ததும் அவன் கோட்டை மேற்பலகணிகளை ஜாக்கிறதையாய்ப் பார்த்து வந்தானே யொழிய, அவனோடு வந்தவனுடைய பேச்சில் கவனஞ் சென்றிலது. சற்று நேரத்துக்கெல்லாம் தோழன் ஏதோ அலுவலினிமித்தம் மதிவீரனை விட்டுப் போயினன். பிரியமானால் மதிவீரன் இன்னும் இரண்டு மணிநேரம் வரையில் அங்கேயே உலாவலாம். அவனைத் தொந்தரைச் செய்வார் எவருமிருந்திலர்.

தனியாய் விடப்பட்டதும் அவ்விளவல் ஒவ்வொரு ஜன்னலையும் சோதிப்பவன்போல் கூர்ந்து கவனித்தான். இறுதியில் புறத்தே வாயிலுக்கு மேலிருந்த பலகணியை விசேஷ விதமாய்க் கவனித்துப் பார்த்தான். ஒன்றுந் தென்படவில்லை. இருட்டின் சமயம் தன் மனதைக் கவர்ந்த அந்த ஜன்னலையே கடைசி தடவையாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மதிவீரன் போகலாமென்று திரும்பக் காலடி எடுத்து வைத்தான். திடீரென அவன் தலைக்கு மேல யாரோ இருமுகிற சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். ஒரு பலகணி கதவு திறக்கப்பட்டு ஒரு பெண்பிள்ளையின் கரம் எதையோ ஒன்றை வெளியிற் போடுவதுபோல் தெரிந்தது. அது சுவரோரமாயிருந்த புதரின்மேல் விழுந்தது. உடனே அவன் அங்கு சென்று பார்க்கும்போது அது ஒரு காகிதச் சுருளெனக் கண்டான்; அதை எடுத்துக்கொண்டு, அதில் எழுதியிருக்கும் விஷயத்தைப் படித்துப் பார்க்குமாறு, சற்றுத் தூரத்திலிருந்த ஒரு கற்குகைக் குப் போயினன்.

அக்கிருபம் பின் வருமாறு: "உமது விழிகள் திடமாய்த் தெரிவித்ததை நான் தெரிந்து கொண்டேன் என்று நினைக்கிறேன். அந்த உபத்திரவம் மனிதருக்குத் துணிச்சலைத் தருகிறது. அநேகர் தூரத்துவசத் திடமாயிருப்பதினும், ஒருவருடைய நன்றியை நம்பி அவருடைய பாதுகாவலை நாடுவதே மேல். விபத்துக்கஞ்சா ஒருவனுக்காக நீர் எதையுஞ் செய்வீர் என்பதுண்மையாகும். நாளை காலையில் வெண்பாகை யணிந்து இந்தத் தோட்டத்திற்கு வரவும். வந்தனம்." அமலாம்பாளின் தலைவிருதுகள் பதிக்கப் பெற்ற ஒரு கணையாழி அக்கிருபத்துக்குள் வைக்கப்பட்டிருந்தது.

இதைக் கண்டதும் மதிவீரன் அளவற்ற ஆனந்த மடைந்தான். தன்னுதவியை நாடிய மாதைக் காப்பதில் உயிரை விடக் கவும் பின்வாங்கலாகாதென்று, அவன் விருப்பம் நிறைவேறுவதற்

கடைநூறாய் விற்பவை எத்தகையினவேனும், அவற்றைத் திரண மாய் மதித்தான்.

அன்றிரவு மதிவீரனுக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. பொழுது விடிந்து சூரியோதயமாவதற்குள் வெண்பாகை யணிந்து சங்கேதப்படி தோட்டத்துக்கு வந்தான். சுமார் இரண்டு மணி சகவாசம் காத்திருந்த பிறகு இருளன் நுழைந்த வாயிலுக்கு மேலுள்ள ஜன்னலண்டை வீணை வாசிக்கு மோசை கேட்கவே, மதிவீரன் அப்பக்கம் பார்த்தான். வீணையுங் கையுமாய் அமலாம் பாள் தோன்றி, மதிவீரனைப் பார்த்து தலைவணங்கிப் புன்னகை புரிந்து மறைந்தனள்.

தனக்கு முன்னால் கிடைத்த கையொப்பமில்லா நிருபத்தை வரைந்தவள் அமலாம்பாளே என்று நிச்சயித்துக் கொண்டான். அவளுக்குச் சமீபத்தில் யாதொரு விபத்துமில்லையாதலால், அவளு டைய கட்டளைக் கெதிர்பார்த்து, அது கிடைத்ததும் அதன்படி நடப்பதற்குச் சித்தமாயிருக்க வேண்டுமெனத் தனக்குள் தீர்மானி த்துக் கொண்டான். ஆனால் தான் நினைத்ததற்கு விரோதமாய்ச் சீக்கிரத்திலேயே அவன் இக்காரியத்தில் பிரவேசிக்க வேண்டி யிருந்தது.

முன்னூருக்கு வந்த நான்காவது நாள் இரவு, மதிவீரன் இனி விஜயசேனரிடம் சேவை செய்யப் பிரியமில்லையென்று நிருபம் அனுப்ப ஏற்பாடு செய்தான். விஜயசேனர் இருளனோடு வஞ்சகச் சூழ்ச்சிகள் செய்த விஷயமே அவன் இவ்வாறு நடந்துகொள் வதற்குக் காரணம் என்று விஜ்வீரா தலைவனுக்கு எழுதினான். பின்னர் அவன் படுக்கைக்குச் சென்று நித்திரை போயினன். நித்திரையில் அமலாம்பாளோடு தனிமையாய் உலாவிக்கொண்டே காதல் மொழிகள் கூறுவதாய்க் கனவுகண்டு அகமகிழ்ந்தனன்.

அப்போது ஏதோ ஆரவார சத்தம் அவன் செவியில் திடீரெனக் கேட்கவே, திடுக்கிட்டெழுந்து ஜன்னல் வழியாய் வெளியில் பார்த்தான். தோட்டத்தில் சந்தடியொன்றுமில்லை. எங்கும் அமைதியாயிருந்தது. ஆனால் திறந்த ஜன்னல் வழியாய் அவன் காதில் விழுந்த பேரிரைச்சலைக் கொண்டு, பெருங் கூட்டமொன்று கோட்டையை முற்றுகை யிட்டதென நினைத்தான். மிகுந்த பரபரப்புடன் ஆடையணிந்து கொண்டு வெளியே புறப்பட எத்தனிக்கையில், அறையின் கதவைத் தட்டுஞ் சத்தம் கேட்டதும், இருளன் உள்ளே நுழைந்தான்.

"உமது அதிர்ஷ்டம் நீர் இப்போது செய்யும் தீர்மானத்தைப் பொருத்தது!" என்று முன் பின் பாராமல் இருளன் தீவிரமாய் மொழிந்தான்.

"திருட்டுப் பயலே; எங்களைச் சுற்றிலும் துரோகம் நிறைந்திருக்கிறது. நீயும் துரோகிகளில் ஒருவன் என்பதில் ஐயமில்லை." என்றான் மதிவீரன்.

"பைத்தியமா? உம்மைக் காட்டிக் கொடுப்பதால் எனக்கென்ன பலன்? கேளும். முல்லையூர் வாசிகள் கலகத்தை யாரம்பித்து விட்டார்கள். காலாடி வில்லியர் அவர்களுக்குத் தலைவனாயிருந்து நடத்துகிறான். எதிர்ப்பதிற் பிரயோசனமில்லை. உமக்குரிய பெருமாட்டியைக் காப்பாற்றும் எண்ணமிருந்தால், கணையாழியை அனுப்பியவர்பேரால் சொல்லுகிறேன், என்னைப் பின்பற்றிவாரும்." என்று இருளன் சொன்னான்.

"அப்படியானால் சரி, அம்மாளுக்காக நான் எதையுஞ் செய்யத் துணிந்திருக்கிறேன். வழிகாட்டிச் செல்." என்றான் நம்பிளவல்.

"என்னோடு வாரும். இருளன் நன்றியைக் காட்டுங்காலமிதுவே. ஒருயர்குல மாது உமது மனைவியாகுங் காலமும்

இதுவே." என்று இருளன் மொழிய, மதிவீரன் தன் வாளையுருவிக் கொண்டு, "இதோ வந்து விட்டேன்." என்று புறப்பட்டான்.

குறவன் படிகட்டுகளில் இறங்கி மதிவீரனை யழைத்துக்கொண்டு தோட்டத்துக்கு வந்தான். அங்கே கோட்டையின் எதிர்பக்கத்திலிருந்து வரும் ஆரவாரச் சத்தம் நன்றாய்க் கேட்டது. மாதர் வசிக்கும் அந்தப்புர வாயிலண்டை சென்று இருளன் ஏதோ சைகை செய்ய, கருப்பு முக மூடியணிந்த இரண்டு பெண்பிள்ளைகள் வெளியில் வந்தனர். அவர்களில் ஒருவளை மதிவீரன் கைப் பற்றவே, அவள் தேக முழுதும் பயத்தால் நடுக்குற்றிருந்ததாகத் தெரிந்தது. மற்றவளைக் குறவன் அழைத்துக்கொண்டு தோட்டத்தைக் கடந்து கோட்டையின் அகழியை நோக்கி நடந்தனன். மதிவீரனும் தான் பற்றிய மாதை நடத்திக்கொண்டு இருளனைப் பின்பற்றினன்.

நால்வரும் படகேறி அகழியைக் கடக்கையில் அவர்களுக்குப் பின்னால்கேட்கும் சத்தம் அதிகரித்துக் கொண்டிருந்தது. எதிரிகள் கோட்டையைப் பிடித்துவிட்டனரோ என்று சந்தேகிக்க வேண்டியதாயிற்று. பூபாலனுக்குதவியாக மதிவீரன் திரும்பிப்போக விரும்பினன். ஆனால் அமலாம்பாளோடிருப்பதுவே அவன் கடமையென்றுபட்டது.

இருளன் :-வேகமாய் நடந்து அதோ தெரியும் புதரண்டை காத்துக் கொண்டிருக்கும் குதிரைகள் மீதேறி தப்பியோடுங்கள்.

மதிவீரன் :-அங்கே இரண்டு குதிரைகள் தாம் இருக்கின்றன.

இருளன் :-அவை போதும். நீங்களிருவரும் செம்பநத்திப் போய்ச் சேருங்கள். மங்கம்மாள் என் கூட்டத்தோடிருப்பாள்.

"மங்கம்மாளா! இவள் என் அண்ணன் மகளல்லவா?" என்றாள் மதிவீரன் பக்கத்தில் நின்ற சீமாட்டி.

"மங்கம்மாள் தான். இரண்டு சீமாட்டிகளையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டால் காலடி வில்லியன் என்னைச் சும்மா விடுவானா? அதனால்தான் இருவரையும் அழைத்துவரத் துணியவில்லை." என்று இருளன் அமைதியாய்ப் பதிலளித்தான்.

"பாதகா! ஆயினும் பாதகமில்லை. கனகவல்லியைக் காப்பாற்ற நான் திரும்பிப் போகிறேன்," என்று மதிவீரன் சொல்ல, அவன் அருகில் நின்ற மங்கை சஞ்சலம் நிறைந்த குரலில், "நான் தான் கனகவல்லி. என்னைக் காப்பாற்றியதற்காக வந்தனமளிக்கிறேன்." என்றாள்.

"என்ன! தங்கிவிட்டது அமலாம்பாளா?" என்று பயித்தியம் கொண்டவன்போல் கூவி கோட்டையை நோக்கிப்போக எத்தனிக்கையில் இருளன் அவன் கரத்தைப் பிடித்திழுத்து, "நான் சொல்வதைக் கேளும். நீர் போகுமிடம் யமலோகமென்பதை மறந்தீரோ? கனகவல்லியம்மாளை நீர் தெரியாமலிருக்க அவர்களுடைய அடையாள கைகுட்டையை நீரே அவிழ்த்துக் கொண்டிருந்தீர்?" என்று கேட்டான்.

மதிவீரன் பதிலொன்றும் மொழியாமல் இருளன் பிடியினின்றும் திமிறிக்கொண்டு கோட்டையை நோக்கி ஓடினான். அப்போது இருளன் கனகவல்லியைத் திரும்பிப் பார்க்க அவள் அச்சத்தாலும், அவமானத்தாலும் மதிமயங்கி பூமியில் விழுந்தாள். "அம்மா, பயப்படாதீர். தப்பிதம் நடந்தது நடந்து விட்டது. அதற்காக வருந்துவதில் பயனில்லை. என்னோடு வாரும். இவ்விருளனைப்

பார்க்கினும் மிகச் சிறந்த கணவனை உமக்குக் கொடுக்கிறேன்." என்றான் இருளன்.

பேதை கனகவல்லி வீண் டம்பத்துக் காசைப்பட்டவள். தற்புகழ்ச்சியில் அவளுக்கு விருப்பமதிகம். அச்சமயத்தில் அவளுக்குக் கோபம் பொங்கிவிட்டது. "அடா சண்டாளா! என்ன காரியம் செய்துவிட்டாய்? அல்லாளியனே எனக்குரிய மணாளனென்று ஜோசியம் சொன்னாயே. உன்னால்தானே நானக் கடிதத்தை எழுதினேன். என்னைப் போலும் புத்தியில்லாப் பேதையுமுண்டோ." என்று அலறி அழ ஆரம்பித்தாள்.

"நானென்ன செய்வேன்? உமது கைகுட்டையே இந்தத் தலைநாதலுக்குக் காரணம். எழுந்து என்னைப் பின்பற்றி வாரும். அழுவதும் அலறுவதும் என்னிடம் செல்லா என்பது ஞாபகத்திலிருக்கட்டும்." என்றான் இருளன்.

"நான் இவ்விடத்தைவிட்டு அசையவே மாட்டேன்." என்று கனகவல்லி பிடிவாதமாய்ப் பேசினாள்.

"கடவுளறியச் சொல்லுகிறேன். நீர் இவ்விடத்தை விட்டுப் போகத்தான் வேண்டும்." என்று குரவன் கோபித்துச் சொல்ல, கோட்டையினின்றும் ஜெயக்குறியான ஆரவார முழக்கமும் அச்சமும் திகிலும் நிறைந்த கூக்குரலும் கலந்த பெருஞ்சத்தம் அவர்கள் காதில் விழுந்தது "அம்மா கேட்டீர்களா? கோட்டையிலிருப்பதற்குப் பதிலாய் நீர் இவ்விடத்திலிருப்பது உமது முன்னோர் செய்த பூஜாபலனுக்கும். அம்மா என்னை நம்புங்கள். நான் ஒரு தீங்கும் செய்யமாட்டேன். உமக்கு யாதொரு பொல்லாப்பும் வாரா வண்ணம் உம்மைக் காப்பாற்றி தகுந்த கணவனைத் தேடி வைக்கிறேன்." என்று இருளன் மொழிந்தான்.

கனகவல்லி திகில் பிடித்தவளாய் ஒன்றும் செய்யத் தோன்றாமல் எழுந்து நிற்கவே இருளனும் மங்கம்மாளும் அவளைப் பிடித்துக் கொண்டு, அழைத்துச் சென்றனர். அப்போது அவளை எங்கு கொண்டுபோக விரும்பினாலும் தடுத்துச் சொல்லும் சக்தி யில்லாத நிலைமையில் இருந்தனள்.

மங்கம்மாள் தாழ்ந்த குரலில், "நீர் செய்த சூழ்ச்சி தப்பானதென்று நான் அப்போதே நினைத்தேன். இளையவளை மறைத்து வந்திருந்தால் அவள் நமக்கு என்றும் கடமைப்பட்டவளாய் தனது கோட்டையிலும் இடந்தருவாள்." என்று இருளனைப் பார்த்து மொழிந்தாள்.

"பெண்ணே, நீ சொல்வது சரிதான். ஆனால் அமலாம்பாள் அக்கடிதத்தை எழுத மனமொப்புவாளா? மேலும் அவ்விளைஞனுக்கு நான் கடமைப்பட்டவன். அவன் அமலாம்பாளை விவாகஞ் செய்துகொண்டால், அவளுடைய கல்யாணத்தில் அக்கறை கொண்டவர்களாகிய காலாடி வில்லியன், சமரவர்மன், விஜயசேனர் முதலியோர் அவனுக்கு எதிரியாய்விடுவார் என்பதை மறந்துவிட்டனையோ? நல்லது, என் ஏற்பாடு தவறிவிட்டது மெய்தான். என்ன செய்வது? உன்னைக் கொண்டு நாம் தப்பிப் போகப் பார்க்கவேண்டும். இந்தம்மாளை வில்லியனிடம் சேர்ப்பதே யுத்தமெனத் தோன்றுகிறது. அப்படியே செய்வோம், வா." என்று இருளன் மொழிந்தான்.

# அதிகாரம் 19.

## சூறையாடல்.

முல்லையூர் கோட்டையிலிருந்த வீரர்கள் தம்மால் கூடியவரையில் கலகக்காரரை எதிர்த்துக் கோட்டையைக் காக்க முயன்றனர். ஆனால் முல்லையூர் வாசிகள் தொகையில் பெருத்தவர்களானமையால், அவர்கள் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கோட்டையின் வெளிப்புறங்களைக் கைப்பற்றினர். பின்னர் சுலபமாகக் கோட்டைக்குள் புகுந்து அங்கிருந்தவர்களைப் பிடித்து இம்சிக்கவும், கையிற் சிக்கிய பொருளை அபகரிக்கவுந் தொடங்கினர். அச்சமயத்தில் தான் மதிவீரன் அமலாம்பாளைத் தேடிக்கொண்டு கோட்டைக்குள் நுழைய முயன்றது.

அவ்யௌவன வீரன் கோட்டை மதிலண்டை வருகையில், மனிதர் சுவரினின்றும் அகழியில் தள்ளப்படுவதைக் கண்டான். ஆனால் அவன் தைரியத்தை இழக்காமல், அகழியிற் குதித்து நீந்திக்கொண்டே இழுவைப் பாலத்தண்டை வந்து சேர்ந்தான். அப்போது காலாடி வில்லியனுடைய வீரரில் ஒருவன் வாளை வீசிக்கொண்டு அவனை எதிர்த்தான்.

“என்னடா, நான் இன்னானென்று தெரியவில்லையா? உன் பக்கத்தா ளொருவனுக்கு உதவி செய்வது இப்படிதானோ? வா, வாளை புறமிலிட்டு, என்னைக்கரையேற்று.” என்று மதிவீரன் அதிகாரத் தொனியுடன் மொழிந்தான்.

வீரன் சற்றுத் தயங்கி, பின்னர் மதிவீரனைப் பிடித்துப் பாலத்தின்மேல் விட்டான். உடனே நமதிளவல் வேறொன்றும்

பேசுவதற்கு முதலா யிடங்கொடாமல், "உனக்குப் பொருள் வேண்டுமானால் மேல் கோபுரத்துக்குப் போ. நானும் வருகிறேன். அங்கேதான் பூபாலன் பொக்கிஷம் இருக்கிறது." என்று கூவினான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவர்கள் யாவரும் அத்திசையை நோக்கி யோடினர். மதிவீரன் கருதி வந்த இடம் அதற்கெதிர் பக்கத்தில் இருந்தது. கலகக்காரரில் ஒருவனைப்போல் நடித்துத் தோட்டத்துக்குள் புகுந்தனன். அநேகர் பொக்கிஷத்தை நாடிப் போய் விட்டனர்; சிலர் பூபாலனைப் பிடிக்க முயன்றனர். இந்தச் சந்தடியில் மதிவீரனைக் கவனிப்பார் எவருமில்லை.

ஆனால் கொஞ்ச நேரத்துக்குப் பின் சிலர் அவனை வந்து எதிர்த்தனர். அப்போது அவர்களுக்குத் தகுந்த சமாதானஞ் சொல்லித் தப்பித்துக்கொண்டான்.

மதிவீரன் மாதர் வசித்த பாகத்தை நெருங்கிப் பார்க்கையில் வழியெல்லாம் பிணங்கள் கிடந்தன. இரண்டு பிணங்களை எடுத்து ஒரு புறங்கிடத்திவிட்டு, மூன்றாவது பிணத்தைத் தாண்டிப்போக எத்தனிக்கையில், யாரோ தன் காலைப் பிடித்தது போலிருக்கக் குனிந்து பார்த்தான். பிணம்போற் கிடந்த அம்மனிதன், "நான் தான் பசுபதி யென்னும் நீதிபதியன். என்னைக் காப்பாற்று." என்று கெஞ்சி மன்றாடினான்.

தான் கருதிவந்த காரியம் கைகூடுவதற்குப் பசுபதி துணையாயிருக்கக்கூடும் என்னும் எண்ணத்துடன், மதிவீரன் அவனைத் தூக்கி நிறுத்தினன். அவனும் உடனே, "நீ யார் பக்கம்?" என்று கேட்டான்.

"விஜயசேனர் பக்கம்!" என்றான் நமதிணைவல்,

"என்ன, மலை நாட்டு வில்வீரரோ நீ? நல்ல வேளை எனக்கிவ் விரவு ஒரு நண்பன் அகப்பட்டான். நீ எங்கு வேண்டுமானாலும் போ. நானும் வருகிறேன்." என்றான் பசுபதி.

இருவரும் படியேறிச் சென்றனர். மேலே சென்று அறைகளை யெல்லாம் சோதித்தான். பெட்டிகள் உடைபட்டுச் சாமான்கள் எங்கே பார்த்தாலுஞ் சிதருண்டு கிடந்தன. இங்கு மங்கும் பிணங்கள் கிடப்பதையுங் கண்டான். பசுபதியைவிட்டுப் பாய்ந்தோடி மதிவீரன் பைத்தியங் கொண்டவன்போல் தான் தேடிவந்த பொருளைக் காணும் பொருட்டு பரபரப்புடன் வேலை செய்தான். அவன் சோதித்த அறைகள் எல்லாம் வெறுமையா யிருந்தன. கடைசியில் ஒரு அறையில் மினுக்கு மினுக்கென்று விளக்கொளி தெரிந்தது. உடனே அவ்வறைக்குள் நுழைந்து பார்த்தான். அங்கே பயத்தால் நடுநடுங்கிப் பாதி உயிர் பரிகொடுத்தவள்போல் பரனைப் பார்த்து ஜெபித்துக் கொண்டிருந்த ஒரு பெண் மாது மதிவீரன் கதவை யுடைத்துக்கொண்டு நுழைந்த சத்தங் கேட்டதும் இனி தப்பிக்க மார்க்கமில்லை யென்றெண்ணிப் பயந்து மூர்ச்சையாயினள். அப் பெண்மணியே அமலாம்பாளென்று தெரிந்துகொண்ட மதிவீரனுக்கு அச்சமயம் உண்டான ஆனந்தத்தைச் சொல்லவும் கூடுமா? உடனே அவளைத் தூக்கி நிறுத்தி இனிபயமில்லை என்று தேற்றினன்.

அம்மாது மயக்கந் தெளிந்து தன் பக்கல் நிற்பவன் மதிவீரனென்றறிந்து, "அன்பரே, என் முன் நிற்பது நீர்தானோ? அப்படியாயின் நான் தப்பிப் பிழைப்பேன் என்னும் நம்பிக்கையுண்டு. எனது நண்பரனைவரும் என்னைக் கைவிட்டனர் என்றல்லவோ நினைத்தேன். இனி என்னைத் தனியே விட்டுப் போகாதீர்!" என்றாள்.

"போகவே மாட்டேன், பயப்படாதே," என்று இளைஞன் சேனாதிபன் பக்கமாகத் திரும்பி, "ஐயா இம்மாதைக் காப்பாற்றுவதற்கு நீர் உதவி செய்தல்வேண்டும். உங்கள் அன்பராகிய விஜய சேன மகாராஜா இம்மங்கையை என் பாதுகாவலில் வைத்துப் பினார். ஆதலால் அவளுக்கு யாதொரு கெடுதலும் வராமல் காப்பாற்றவேண்டியது உங்கள் கடமை. இல்லையேல் முல்லையூர் விஜய சேனர் உதவியைப் பெறுது. முக்கியமாய்க் காலாடி வில்லியனிடம் அவள் அகப்படவே கூடாது. தெரிகிறதா?" என்றான்.

பசுபதி தன்னாலியன்ற மட்டும் உதவி செய்வதாக வாக்களித்தான். இதற்கிடையில் கோட்டையில் ஆரவாரம் வரவரக் குறைந்து கொண்டே வந்தது. அப்போது பசுபதியினொருவன் அங்கே வந்து ஏதோ ஆலோசனை செய்யும் பொருட்டுக் காலாடி வில்லியன் கூப்பிடுவதாகச் சொன்னான். "முல்லையூர் கோட்டையை இந்தக் கள்ளப் பயலே தன் வாசந்தலமாக்கிக் கொள்வான் போலிருக்கிறது. காலாடி வில்லியன் செய்யும் அக்கிரமங்களைப் பார்த்தால், நம்மவர்பாடு கஷ்டந்தான். பூபாலனை அவர்கள் பிடித்துச் செய்த அக்கிரமத்தை என்னென்பேன்!" என்றான்.

பசுபதி:-அடே, நாம் உடனே நகருக்குப் போகவேண்டும். இனி ஒரு கணமேனும் இக்கோட்டையில் தாமதியேன்.

ஆள்:-எஜமானரே, கோட்டை வாயில்களெல்லாம் மூடப்பட்டிருக்கின்றனவே. மேலும் கோட்டையின் நான்கு பக்கங்களிலும் வீரர் காவல் புரிகின்றனர்.

பசுபதி:-ஆனால் நம்போலும் கண்ணியவான்களைக் கைதிகளாக்க அவனுக்கு என்ன அதிகாரம் உண்டு?

ஆய் :-அஃதென்னவோ, எனக்கொன்றுந் தெரியாது. கோட்டையை எதிர்த்தபோது யாரோ இரண்டு உயர்குல மாதர் தப்பிச் சென்றனராம். அதனால்தான் காலாடி வில்லியன் கோபவெறி கொண்டலைகிறான். இப்போது குடிவெறியுந் தலைக்கேறியிருக்கிறது.''

பசுபதிக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. அமலாம்பாளோடு கோட்டையினின்றுந் தப்பித்தோடுவதற்கு இதுவே தகுந்த சமயம் என்றும், இது தவறினால் வேறு சந்தர்ப்பம் கிடைப்பதருமை யென்றும் மதிவீரன் நினைத்தான். "ஐயா, யோசிக்கவேண்டாம். காலாடி வில்லியனிடம் தைரியமாய்ச் சென்று, நீரும், உமது தோழனும், ஆளும், குமாரத்தியும் நகருக்குப் போக வேண்டுமெனக் கேளும்.'' என்று மொழிந்தான்.

பசுபதி :-சரிதான், என் தோழன் யார் ?

மதி :-தற்சமயம் நான்தான் தோழன்.

பசுபதி :-மாதலநாட் டரசனுடைய தூதுவனல்லவா நீ ?

மதி :-ஆம், ஆனால் என் தூது முல்லையூர் அதிகாரிகளுக்கேயானமையின், முல்லையூரில்தான் செய்தியை வெளிவிடுவேன். உமது தோழனைப்போல் என்னை இரகசியமாக இக்கோட்டையினின்றும் போய்விட ஏற்பாடு செய்தல் வேண்டும்.

பசுபதி :-நல்லது என் குமாரத்தி யென்றாயே. அதன் விபரம் என்ன ?

மதி :-இப்பெண்மணி கோட்டையிலிருக்குமளவும் உம்மைத் தந்தையென்றே கூப்பிடுவாள்.

அப்போது அமலாம்பாள் பசுபதியின் பாதத்தில் வீழ்ந்து, "ஐயா, இச்சமயம் நீரே எனக்குத் தஞ்சம். என்னை யுமது மகளாகப் பாவித்துக் காப்பாற்றவேண்டும்," என்று கெஞ்சிக் கேட்டனள்.

பசுபதியினுள்ளம் இரக்கத்தால் உருகி, "நல்லது, அம்மாது தன் முகத்தை நன்றாய் மூடி முக்காடிட்டுக் கொள்ளட்டும். அவள் என் குமாரத்தியே யாவள்." என்றான்.

"சபாஷ்! ஆபத்சகாயன் என்றால் உமக்கே தகும். பயப்படாமல் தைரியமாய் முன்னோக்கிப்போம்," என்று மதிவீரன் உற்சாகத்துடன் மொழிந்தான்.

காலாடி வில்லியன் தன் தோழருடன் குடித்து வெறித்துக் கொண்டிருந்த சபா மண்டபத்தை நோக்கி நால்வரும் போகையில், அமலாம்பாள் மதிவீரனைப் பார்த்து, "அன்பரே, இன்றிரவு நான் தப்பிப் பிழைப்பனேயாகில், என் உயிருள்ளளவும் உமது தீரச் செய்கையை மறக்கவேமாட்டேன். ஆனால் நான் உம்மைக் கேட்டுக்கொள்வதொன்று. அதாவது, இப்பாதகர் கையில் நான் சிக்குவதைப் பார்க்கிலும், உமது வாளை எனது மார்பில் புதைப்பதே மேல்," என்று மொழிந்தாள்.

மதிவீரன் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் என்று மொழிவது போல் அவள் கரத்தைபிடித்து மெதுவா யழுத்தினான். அவன் மேல் சார்ந்த வண்ணம் அச்சத்துடன் பசுபதி முதலியோர் முன்னே போக, அமலாம்பாள் சபா மண்டபத்துக்குள் நுழைந்தாள்.

# அதிகாரம் 20.

---

## பூபலான் கதி.

சபாமண்டபம் பார்க்கப் பயங்கரமாயிருந்தது. சாமான்கள் யாவும் அலங்கோலையாய்ச் சிதருண்டு கிடந்தன. மண்டபத்தின் மத்தியில் போடப்பட்டிருந்த மேசை யண்டை காலாடி வில்லியன் அமர்ந்திருந்தனன். கோர ரூபமுடைய அக்கள்வர் தலைவன் ஆயுதபாணியாய் அங்கே உட்கார்ந்திருந்தது, பயங்கரமான ஒரு பூதம் அங்கே பிரசன்னமாயது போலிருந்தது. அவனிடங் குடி கொண்டிருந்த துற்குணங்கள் யாவும் அவன் முகத்தில் விளங்கின. அவன் கன்னங்கள் தடித்து, அவன் கண்கள் சிவந்து தோன்றின. அவன் முகத்தின் பயங்கரம், சிப்பை யறியாத அவனுடைய தாடியால் அதிகரித்தது.

அவனுடைய வீரர் அவனைச் சுற்றி யுட்கார்ந்து கொண்டு குடித்துக் கொண்டிருந்தனர். முல்லையூர் வாசிகளில் சிலரும் அவர்களுக்குள்ளிருந்தனர். உயர்குலத்தினராகிய சிலர் இப்பாதகனோடு என் சம்பந்தப்பட்டோம் என்று வருந்துபவர்போல், மற்றவர்களோடு கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்றனர். வீரர் யாவரும் குடிமயக்கேறி வாயில் வந்தவாறு பேசிக்கொண்டும், பாடிக்கொண்டு மிருந்தனர்.

பசுபதி இக்காட்சியைக் கண்டு பயந்தனனேனும், அப்பயத்தை வெளிக் காட்டாமல், அன்றடைந்த வெற்றியைப்பற்றி புகழ்ந்து பேசினான். "நல்லது, பசுபதியாரே, கடைசியில் ஜெயதேவி நமது பக்கமே நின்றான்; ஆனால் உமது பக்கத்தில் நிற்கும் அவ்வழகிய

மாது யார்? முகமூடியை எடுத்துவிடும், பார்ப்போம்.” என்றான் காலாடி வில்லியன்.

பசுபதி:-என் மகள்! அவள் முகமூடி யணிந்திருப்பதற்காக மன்னிக்கவேண்டும்.

காலாடி:-தற்சமயம் அப்படியே இருக்கட்டும். ஐயா, அதிகாரியே இப்படி வந்து என் பக்கத்தில் உட்காரும். வீரரே, பூபாலனைக்கொண்டு வாரும்.

பசுபதி ஏதோ சொல்லிக்கொண்டே வீரர்கள் பக்கத்தில் உட்கார்ந்தான். அவனோடு வந்தவர்கள் அவன் பக்கத்திலேயே நின்றனர். காலாடி வில்லியனுடைய தங்கை மகனும், அவனால் மிகவாய் நேசிக்கப்பட்டவனுமாகிய ஓரழகிய வாலிபன் அருகில் அமர்ந்திருப்பதை மதிவீரன் பார்த்து ஏதாவது கஷ்டம் நேர்ந்தால், அப்பையனைத் தூக்கிக்கொண்டு போய்விடுவதென்று யோசனை செய்துகொண்டே அவன் பக்கத்தில் அமர்ந்தான்.

அப்போது மண்டபத்தில் ஒரு குழப்பமுண்டாயிற்று. சில வீரர் பூபாலனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்தனர். அதற்குப் பின் அங்கு சம்பவித்தக் காக்ஷி பயங்கரத்துக்குரியதாம். ஆரம்பத்தில் காலாடி வில்லியன் பூபாலனுடைய முகவசீகரத்தில் ஈடுபட்டவன்போல் தோன்றினான். ஆனால் அவன் எதிரில் மீதியாயிருந்த சாராயத்தை யருந்திய பின் அவன் பழைய சுபாவம் திரும்பி வந்துவிட்டது. “அடே, முருகா, தயாராயிருக்கிறாயா?” என்று ஒரு கொலைஞனைப் பார்த்துக் கேட்டான். முருகன் பதில் சொல்லாமல் தன் வாளை தூக்கிக்கொண்டு நின்றான்.

“ஏ, பூபாலா, அம்மனிதனைப் பார். உன்னை மீட்டுக்கொள்வதற்கு என்ன யோசனை செய்கிறாய்?” என்று வில்லியன் கடூரமாய் மொழிந்தான்.

சொலைஞனை வருத்தத்துடன் நோக்கி, "காலாடி வில்லியா, நான் சொல்வதைக் கேள். முல்லையூரில் கலகத்தை உண்டுபண்ணினாய். என்னை அவசங்கையாய் நடத்தி என் அரண்மனையைப் பிடித்துக்கொண்டாய். என் குடிகளைக் கொன்று, என் தட்டுமுட்டு சாமான்களைக் கொள்ளையாடினாய். கடவுள் உன்னை சும்மாவிடுவாரா?" என்று தைரியமாய்ப் பேசிக்கொண்டு வருகையில், "முடிந்ததா" என்று தரையை உதைத்து வில்லியன் கூவினான்.

"நான் என் பிரார்த்தனைகளை இன்னும் கூறவில்லையே." என்றான் பூபாலன்.

"அப்படியானால் உடனே சொல், கேட்போம். தாமதிக்காதே." என்று கர்ச்சித்தான் வில்லியன்.

"என்னுடைய பிரார்த்தனைகள் இவைதாம். உனது கள்வர் கூட்டத்தைக் கலைத்து நீ திருடிய சொத்தை ஏழைகளுக்குத் தானஞ் செய்துவிட்டு காஷாயம் அணிந்து காட்டுக்குச் செல்." என்று பூபாலன் கூறினான்.

ஆச்சரியமும் கோபமும் ஒருங்கே உண்டாக குரூர சிந்தையுடைய அக்கள்வர் தலைவன் மெதுவாயெழுந்து சொலைஞனைப் பார்த்தான். முகுந்தன் உடனே வாளை வீசி பூபாலனைக் கொன்று வீழ்த்தினான்.

இதைக் கண்ட முல்லையூரார் திடுக்கிட்டெழுந்து வில்லியனை வாயில் வந்தவாறு பேசிக்கொண்டே பழிக்குப் பழிவாங்குவோமெனக் கூவினர். உடனே வில்லியன் மதங்கொண்ட யானையைப் போல், "முல்லையூர் நாய்களே, வில்லியனை யாரென்று நினைத்தீர்கள்? அவனோடு சமர்புரிய உங்களுக்குத் தைரியமுண்டா? ஏ,

வீரர்களே, என்ன சும்மா நிற்கிறீர்கள்? உங்கள் வேலையைப்பாருங்கள்." என்று கதறினான்.

உடனே அவன் கூட்டாளிகள் தங்கள் வாளை முல்லையூர் வாசிகளுடைய கழுத்தண்டை நீட்டி நின்றனர். மதிவீரன் பார்த்தான். இத்தகைய சம்பவத்தை அவன் எதிர்பார்க்கவில்லை ஆயினும் அவன் தைரியத்தைக் கைவிடாமல் அவன் பக்கத்திலிருந்த வில்லியனின் கழுத்தண்டை தன் கத்தியை நீட்டி, "ஆ, ஆ, இந்த வேலை செய்யத்தான் காத்திருந்தாயோ? அப்படியானால் இதோ என் வேலையை காட்டுகிறேன், பார்." என்றான்.

வில்லியன் பயந்துபோய், "இல், இல். விளையாட்டுக்குச் செய்தேன். முல்லையூர் வாசிகளாகிய என் நண்பர்களுக்கு நான் தீங்கிழைப்பேனென்று நினைக்கிறாயா? வீரரே, வாளை உறையிலிட்டு பிணத்தைத் தூக்கிச் செல்லுங்கள். நாம் குடித்து அசயமிழந்தோம்." என்று சற்று தணிவாகவே பேசினான்.

வில்லியனுட்களும், முல்லையூர் வாசிகளும் ஒருவரொருவரை விழித்துப் பார்த்தனர். அப்போது மதிவீரன், "காலாடி வில்லியா, முல்லையூர் வாசிகளே, நான் சொல்வதைக் கேளுங்கள். விஜயசேன மன்னனுடைய ஊழியன் நான். உங்களுடைய நடவடிக்கைகளைக் கவனித்து அரசருக்குத் தெரிவிக்கவே நான் இங்கிருக்கிறேன். நீங்கள் நடந்துகொள்வது வெறிகொண்ட மனிதர்களைப்போல் இருக்கிறது. நான் இதை உங்களிடம் எதிர்பார்க்கவேயில்லை. சமரவர்மனுடைய சைனியங்கள் சீக்கிரம் உங்களை வந்தெதிர்க்கும். அப்போது விஜயசேனருதவி உங்களுக்கு வேண்டுமென விரும்பினால் நீங்கள் வேறுவிதமாக நடந்துகொள்ள வேண்டுமென நினைக்கிறேன். முல்லையூர் வாசிகளனைவரும் உடனே நகருக்குத் திரும்பிப் போவதே உத்தமம்." என்று சமயோசிதமாய்ப் பேசினான்.

பசுபதியினாட்கள் மதிவீரன் பேசியதே சரியென்று ஆமோதிப்பவர்போல் கரகோஷஞ் செய்து ஆர்ப்பரித்தனர்.

வில்லியன் கண்கள் கோபத்தால் பிரகாசித்தன. அவன் தன் வாளைப் பிடித்தான். ஆனால் அவனுடைய வீரரின் முகக்குறிப்பைக் கண்டதும் அவன் கோபம் ஒருவாறு தணிந்தது. விஜயசேனர் வில்லியனுக்கு இரகசியத்தில் உதவி செய்வது அவர்களுக்குத் தெரியும். சமரவர்மன் பூபாலன் கொலைக்குப் பழிவாங்க முயல்வான். ஆகவே முல்லையூர் வாசிகளையும் விஜயசேனரையும் பகையாக்கிக் கொள்வது அபாயகரமானதல்லவா? தன் குரூரச் செய்கைக்கு இனி எவரும் இடங்கொடார் என்றறிந்த வில்லியன், தனது நண்பராகிய முல்லையூர் வாசிகள் தம்மிஷ்டப்படி கோட்டையினின்று போகலாமென்றும், மறுதினம் மற்ற விஷயங்களைப் பற்றி யோசனைசெய்து கொள்ளலாமென்றும் சொன்னான்.

இதைக் கேட்டதும் உடனே கோட்டையை விட்டகன்றவன் பசுபதியே. "ஆடே, என்னைப் பின்பற்றி வாருங்கள். கூடிய சீக்கிரத்தில் இக்கள்வர் குகையினின்றும் தப்பிப் போவோம்." என்றான். முல்லையூர் வாசிகளில் அநேகர் அவன் மாதிரியைப் பின்பற்றிக் கோட்டையை விட்டு வெளியேறினர்.

மதிவீரன் அச்சமயத்தில் அமலாம்பாளைத் திடப்படுத்துவான் கருதி, "என்ன யோசிக்கிறாய்? உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டான்.

"என் உடம்புக் கொன்றுமில்லை. நிற்க வேண்டாம். தாமதஞ் செய்யாமல் இவ்விடத்தை விட்டு ஓடிவிடுவோம்." என்று பதிலளித்தாள்.

அவள் பேசிக்கொண்டே துரிதமாய் நடக்க முயன்றாள். ஆனால் அவள் களைப்பு மேலிட்டு நடக்க முடியாமல் விழுந்து

விழுவாள் போலிருந்தது. அச்சமயம் மதிவீரன் அவளைப் பிடித்துத் தூக்கிப் போயில்லாவிட்டால், அவள் அங்கேயே விழுந்திருப்பாள் என்பது திண்ணம்.

வேகமாய்ச் சென்று ஆற்றங்கரையை யடைந்தனர். அங்கே ஒரு படகிலேறி எல்லோரும் பசுபதியின் தோட்டம் வந்து சேர்ந்தனர். உடனே பசுபதி தன் மகளை யழைத்து மதிமயங்கி நடக்க முடியாமலிருக்கும் மங்கையர் திலகத்தை யழைத்துப்போய் வேண்டிய உபசாரணை செய்யும்படி ஏவினன். பின்னர் அவன் மதிவீரனை அழைத்துப்போய் இரவைக் கழிப்பதற்குச் சௌகர்யமான ஓர் அறையில் விட்டுச் சென்றான்.

---

## அதிகாரம் 21.

---

### தப்பியோடல்.

நமதினவல் அன்றிரவு நன்றாய்த் தூங்கினன். விடிந்து வெகுநேரமட்டும் துயில் நீங்கவில்லை. சுமார் ஏழு மணிக்கு அவன் படுக்கை விட்டெழுந்து ஆடை யணிந்துகொண்டிருக்கையில், பசுபதி அறைக்குள் வந்து, அயலாம்பாள் பயணத்துக்குச் சித்தமாயிருப்பதாகத் தெரிவித்தான். "அம்மாது உமக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனள். நீர் எந்த வழியாய்ப் போகத் தீர்மானித்திருக்கிறீரோ என்றறிய விரும்புகிறாள். நீர் இப்போது வேறுடை யணிந்து கொள்ளவேண்டும். இராணுவ உயர் குலமாதர் யாத்திரைக்காரரைப்போல் உடையணிந்து ஒரு மலைநாட்டினருளின் பாதுகாவலில் பிரயாணஞ் செய்வதாக நகரில் வதந்தி வந்திருக்கிறது. அம்மாதரில் ஒருவளை ஓர் குறவன் தாம்வக்கரின் கோட்டைக்கு

அழைத்து வந்ததாகவும் பேசிக்கொள்ளுகிருர்கள். மேலும் நீர் துரோகியல்லவென்றும், இளங் கன்னிகையை அபகரித்துப் போய் விட்டதாகவும் குறவன் வில்லியனிடம் சொன்னுனும். வில்லியன் முல்லையூர் வாசிகள்மேல் கடுங்கோபமாயிருந்தபோதிலும், மெய் யாகவே நல்ல மனிதனென்றும், அவனைக் கொண்டே முல்லையூர் சுவாதீனம் பெறவேண்டுமென்றும் ஜனங்கள் நம்புகிருர்கள். சகராமனை எதிர்க்க வில்லியன் உதவி அவசியம என்பதே அவர் கள் அபிப்பிராயம்." என்றான்.

தானும், அமலாம்பாளும் மாறுவேடம் புனைந்து உடனே பிரயாணப்படவேண்டுமென மதிவீரன் நினைத்தான். பசுபதிய வனை யழைத்துப்போய்ச் செலவுக்கு வேண்டிய பணங்கொடுத் தான். பின்னர் இருவரும் கூடத்துக்கு வந்தபோது அந்நாட்டுக் கிராமப் பெண்ணைப்போல் உடைதரித்து அமலாம்பாள் நிற்பதைக் கண்டனர். மதிவீரன் அமலாம்பாள் கரத்தைப் பிடித்து முத்த மிட்டான். அப்போது அமலாம்பாள், "ஐயா, நாம் உடனே இந் நண்பரிடம் விடைபெற நேரவேண்டும். நீர் உமது உடையை மாற்றிக்கொண்டு என்னோடு புறப்படவேண்டும். என்னைப்போலும் நிர்ப்பாக்கிய மாதொருத்தியைக் கைவிடமாட்டீர் என்று நம்புகிறேன்." என்றாள்.

"உன்னைக் கைவிடுவதா? உன்னைக் காப்பதில் உலகத்தின் மறுகோடிக்குப் போகவேண்டுமாயினும் போகத் துணிந்திருக்கி றேன்! நீ எங்கு போனபோதிலும், நான் உன்னைக் காப்பாற்று வேன்!" என்றான் மதிவீரன்.

நாட்டுப்புறத்தான்போல் மாறுவேடம் பூண்டு மதிவீரன் பிர யாணத்துக்குச் சித்தமானான். அவனும் அமலாம்பாளும் ஒரு வண்டியி லேறிக்கொள்ள, நகரின் மேல்வாயில் பக்கம் ஒருவன்

வண்டியை யோட்டிச் சென்றான். நகருக்கு வெளியில் பசுபதியின் ஆட்களில் ஒருவன் வழிகாட்டியாய் அவர்களோடு சேர்ந்து கொண்டான். அமலாம்பாள் தன் ஜெமீனுக்குப் போய்ச் சேருவதே உத்தமம் எனத் தீர்மானித்து, தன் விருப்பத்தைத் தெரிவித்தாள்.

மதிவீரன்:-போகுமிடம் இன்னதென்று தீர்மானித்து விட்டனை போலும்?

அமலாம்பாள்:-ஆம், நண்பரே! என் ஜெமீனுக்குப் போய்விடுவதே உத்தமம் என்று நினைக்கிறேன். சமரவர்மர் பாதுகாவலை மேல். மற்ற அரசரை நம்புவது வீண்.

மதிவீரன்:-அப்படியானால் சமரவர்மர் பார்த்திருக்கும் கணவரை மணக்கச் சம்மதந்தானோ?

அமலா:-இல்லை, இல்லை, ஒருபோதும் இல்லை! சமரவர்மர் என் ஜெமீன் நிலங்களை எடுத்துக் கொள்ளட்டும்; என்னைச் சிறையிலடைக்கட்டும்; மற்றும் என்ன வேண்டுமானாலுஞ் செய்யட்டும். நான் என்னமோ அவர் தேடிய புருஷனை மணக்கச் சம்மதியேன். இது நிச்சயம்.

மதி:-நீ ஏன் உன் கோட்டைக்குப் போய், உன் வீரர்களை வைத்துக்கொண்டு சமரவர்மரை உன் விருப்பத்தின்படி நடக்கும்படி கேட்கலாகாது?

அமலா:-அந்தோ! நயவஞ்சகராகிய விஜயசேனரும் அதே யோசனைதான் சொன்னார். அதனால் அவர் அநுகூலமுடையவரா மென்றெண்ணினேன். ஆனால் குறப்பய லொருவன் அச்சங்கதியைச் சமரவர்மருக்குத் தெரிவித்து அவர் வாயில் மண்ணைப் போட்டான். என் கோட்டைக் கொத்தளங்களைச் சமரவர்மர் பிடித்துக்கொண்டு

தன் வசமாக்கிக் கொண்டார். அவைகளை அவருடைய வீரர் காவல் புரிகின்றனர். இனி நான் அவருக்கு விரோதமாக நடக்கமாட்டேன். என் தலைவராகிய அவருக்குப் பணிந்துவிடுவேன். கனகவல்லியும் இவ்வாறே செய்திருப்பாளென்று நம்புகிறேன்.

மதிவீரனுக்கு அப்போதுதான் கனகவல்லியின் நினைவு வந்தது. அமலாம்பாளைக் காப்பாற்ற வேண்டும் என்னும் எண்ணமே அவன் சிந்தையில் குடிகொண்டிருந்தமையால், அங்கே அவளைப்பற்றி நினைக்க இடம் பெறவில்லை. அவள் கதி என்னவாயிற்றென்று அமலாம்பாளுக்குத் தெரியவே தெரியாது. அவளைப்பற்றி யறிய அவ்விளமாது விரும்பவே மதிவீரன் கோட்டையில் தான் கண்ட விஷயங்களையும், பசுபதியின் வீட்டில் கேள்விப்பட்ட சேதியையும் விபரமாய்ச் சொன்னான்.

“நண்பரே, நீர் திரும்பி வந்திராவிட்டால், நான் அக்கள்ளப் பதரின் மனைவியாயிருப்பேன். என்ன நிற்பாக்கியம்! என் அத்தையின் கதியை என்னென்பேன்! இவ்வளவுக்கும் மங்கம்மாள் என்னுந் தோழியே காரணம். அவள்தான் இருளன் முதலியோரை எங்களுக் கறிமுகமாக்கினவள். நாங்கள் விஜயசேனனிடம் சரணாகதியடையும்படி இப்பாதகனைக் கொண்டு அவரே சூழ்ச்சி செய்தார் என்று இப்போதுதான் தெரிகிறது. அந்தோ! என் அத்தையின் கதி என்னவாயிருக்கும் என்று நினைக்கிறீர்?” என்று அவ்விள நங்கை மிக்க விசனத்தோடு கேட்டாள்.

மதிவீரன் அவளுக்குக் கெடுதல் செய்வதால் கள்வருக்கு நஷ்டமொழிய லாபமில்லையென்றும், அவளை யொன்றுஞ் செய்யாமல் நல்லபடியாய் வைத்திருந்தால் ஏராளமான மீட்புப்பணம் பறிக்கலாமென்னும் எண்ணம் அவர்களுக் கிருக்கும் என்றும் சொல்லி அவளைத் தேற்றினான்.

இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டே பிரயாணிகள் வழிநடந்தனர். அச்சந்தர்ப்பத்தில் அவ்விரு காதலரும் சம அந்தஸ்துடைய வராகி விட்டனர். அமலாம்பாள் குலத்திலும் செல்வத்திலும் மதிவீரனைவிட மிக மேலானவள் என்பதுண்மைதான். ஆனால் இச்சமயத்தில் அவள் அவனைப்போலவே வறுமையான நிலைமையில் இருந்ததுடன், அவளுடைய உயிரும் மானமும் அவன் கையில் இருந்தன. அவ்விருவரும் காதலைப்பற்றிப் பேசவில்லையாயினும், அவர்கள் மனதென்னவோ காதலுணர்ச்சி நிறைந்திருந்தது.

பிற்பகல் இரண்டு மணியிருக்கும். காலாடி வில்லியனுடைய ஆட்கள் துரத்திக்கொண்டு வருவதாக வழிகாட்டி எச்சரித்தான். மதிவீரன் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் தூசியெழும்ப, இரண்டொரு குதிரைவீரர் வருவது கண்ணுக்குப்புலப்பட்டது. மதிவீரன், "என்னேச அமலா, என் வாளைவிட வேறு ஆயுதம் என்னிடம் இல்லை. இதைக்கொண்டு நான் உனக்காகப் போரிட முடியாதாகையால், தப்பியோடுவதே உத்தமம். அவர்கள் வருமுன் அதோ தெரியும் காட்டுக்குள் நுழைந்து விடுவோமானால், அவர்கள் கையிலகப்படாமல் தப்பித்துக்கொள்ளலாம்." என்றான்.

களைத்த குதிரையின் உதவியால் எவ்வளவு வேகமாய் ஓடக் கூடுமோ அவ்வளவு வேகமாய் காட்டை நோக்கி வண்டியைச் செலுத்தினர். வில்லியனாட்களும் வேகமாகவே வந்து கொண்டிருந்தனர். மதிவீரன் வண்டி காட்டுக்குக் கால் மயில் தூரம் வரும்போது, திடீரெனக் காட்டிலிருந்து சிலவீரர் எதிர் நோக்கி வந்தனர்.

"அவர்கள் மந்திரநாட்டு வீரர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் பிடித்திருக்கும் கொடி சிரகத்தாமப் பிரபுவினுடையது. நான் அவர்களுதவியை நாடுவேன்." என்று அமலாம்பாள் மொழிந்தாள்.

மூவரும் சிரகத்தாமருடைய வீரர்களோடு சேர்ந்துகொண்டனர். அமலாம்பாள் சிரகத்தாமரைப் பார்த்து, "பிரபோ, நான்தான் அமலாம்பாள். என்னைக் காப்பது உமது கடமை." என்றாள்.

"அப்படியே ஆகட்டும் அம்மா." என்று வேறொன்றும் பேசாமல் தூரத்திலிருந்துவருவோரை எதிர்க்கும்படித் தன்னாட்களுக்குத்திரவிட்டு, தானும் அவர்களுக்குத் தலைமையாயிருந்து குதிரையைத் தட்டிவிட்டான். காலாடி வில்லியனாட்கள் ஐந்து நிமிஷங்களில் முறியடிக்கப்பட்டு, மாண்டவர் போக மீதியாயிருந்தோர் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓட்டம் பிடித்தனர்.

சிரகத்தாமன் அமலாம்பாளிருந்த விடத்துக்குத் திரும்பிவந்து, "அம்மா, நான் இவ்விடம் வந்தது நல்லதாயிற்று." என்றான்.

அமலா:-ஐயா, நான் தங்களுடன் முதலில் பேசவேண்டிய தொன்றுளது. நீர் என்னை கைதியாகத்தான் அழைத்துப்போக உத்தேசமோ? எங்கே கொண்டுபோகிறீர்?

சிரக:-சமரவர்மர் இப்போது பரமனூர் அரண்மனையில் இருக்கிறார். அங்கேதான் உன்னை அழைத்துப்போக யோசனை.

அமலா:-இம்மனிதன் எங்களுக்கு வழிகாட்டியாய் வந்தவன். அவன் முல்லையூர் திரும்ப உத்திரவளிக்கவேண்டும்.

சிரக:-நல்லது, அப்படியே போகட்டும். நீ கேட்க வேண்டியது வேறேதேனும் இருந்தால் சொல்லிவிடு.

அமலா:-வேறொன்றுமில்லை. அதோ நிற்கின்றாரே, அவ்வாலிபரைத் தாங்களறிவீரோ? அவர் மட்டில் நீர் தயவாயிருக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிரக:-உம்! நீ சொல்லுமாப்போல் நான் அவனிடந் தயை காட்ட அவன் செய்த நன்மையென்ன?

அமலா :-அவர் என்னுயிரைக் காத்த வீரர்.

சிரக:-உம்! உன் உயிரையா? அம்மா நீ அவனுக்குக் கடமைப்பட நேர்ந்தது விசனிக்கத்தக்கதாம். ஆயினும், என் செய்வது? போனது போகட்டும். அவன் யோக்கியனாயிருந்தால், என் வீரரில் ஒருவனாக அவனை வைத்துக் கொள்வேன். அவனுக்கு யாதொரு தீங்கும் வாராவண்ணம் பார்ப்பது என் கடமை. ஆனால் இனிமேல உன்னைப் பாதுகாப்பது என் கடமையே யொழிய அவனுடையதல்ல. அவனுக்கு வேறு வேலை கொடுப்பேன்.

மதிவீரன் இனி சும்மா விருக்கக் கூடாதென்றும் எண்ணத்துடன், "ஐயா, என் பேர் மதிவீரன். அரசருடைய மெய்க் காப்பாளர் சைன்யத்தைச் சேர்ந்த வில்வீரன் நான்." என்றான்.

"நல்லதப்பா! நீ சொல்லிய சங்கதிக்கு வந்தனம்! வில் வீரரே, என்வீரருடன் சேர்ந்து கொண்டு முன் வரிசையில் போக வேண்டும் தெரியுமா?" என்று சிரகத்தாயன் மொழிந்தான்.

அவன் உத்திரவின்படி மதிவீரன் முன் வரிசைக்குச்சென்று, "ஐயா, நான் உமது கைதியா அல்லது சுவாதீனத்துடன் இருக்கின்றேனா? தயவு செய்து சொல்லும்." என்று தைரியமாய்க் கேட்டான்.

சிரக:-உன் கேள்விக்குப் பதிலாக நான் ஒரு கேள்வி கேட்கிறேன். மாதலநாடும், மந்திரநாடும் இப்போது சமாதானமாயிருக்கின்றனவா?

மதி:-அச்சங்கதி உமக்குத்தான் தெரியவேண்டும். நான் மாதலநாட்டை விட்டுப்போய் அநேக நாளாகிறது. ஆகலால் சங்கதியொன்றும் எனக்குத் தெரிய நியாயமில்லை.

சிரக:-கடந்த ஒருவாரமாக சமரவர்மருடன் பாசறையில் நான் இருந்து வருகிறேன். எனக்கும் ஒரு சங்கதியுந் தெரியாது. ஆக

லால் நான் தற்சமயம் உன்னை ஒர் கைதியாகவே பாவித்தல் வேண்டும். இதோ நிற்கும் மாதுக்கு நீ மெய்யாகவே உதவி புரிந்திருந்தால், நான் கேட்கும் கேள்விகளுக்குத் தகுந்த விடையளித்தால், நீ நன்மை யடைவாய்.

"அமலாம்பாளைக் கேளுங்கள் தெரியும். நான் செய்த உதவிக்கு அவர்களே சாக்ஷி. நான் அளிக்கும் விடைகளைக்கொண்டு நீரே தெரிந்துகொள்ளலாம்." என்று மதிவீரன் பதிலளித்தான்.

"உம். என்ன கர்வம்?" என்று சிரகத்தாமன் தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டு, வெளிப்படையாய், "அமலாம்பாளோடு நீ எவ்வளவு காலமாக இருந்து வருகிறாய்?" என்று கேட்டான்.

"மாதலநாட்டிலிருந்து முல்லையூருக்கு புறப்பட்ட காலமுதல் நான் அவர்களுக்குத் துணையாயிருந்து வருகிறேன்."

"ஓ, ஓ! சித்திரப்புரியிலிருந்து ஓடிய தினமுதற் கொண்டா? மலைநாட்டு வீரரில் ஒருவன் நீ அமலாம்பாளுக்குத் துணையாய்ப் போயினை என்றால் விஜயசேனருடைய கட்டளையின் பேரில்தான் நீ அவ்வாறு நடந்திருக்கவேண்டும்."

விஜயசேனரின் வஞ்சக சூழ்ச்சியை அறிந்த மதிவீரன் அவருக்குக் கடமைப்பட்டிருக்கக் காரணமில்லையேனும் அவர் தன்னிடம் வைத்த நம்பிக்கைக்கு மாறாய் நடக்க பிரியப்படவில்லை. ஆதலால் அவன் தன் ராணுவத் தலைவருடைய உத்தரவின்பேரில் நடந்துகொண்டதாகவும், மற்றபடி தனக்கு யாதொன்றும் தெரியாதென்றாக கூறினான்.

"இருக்கலாம். ஆனால் உயர்குல மாதரிருவரும் தப்பியோடினரென்று விஜயசேனர் சொல்லிவருவது நம்பத்தக்கதல்ல. ஏனெனில் அவருடைய மெய்க்காப்பாளரில் ஒருவனே அம்மாதர்க்குத்

துணையாய்ச் சென்றனன். இருக்கட்டும். மாதவை மறைத்துக் கொண்டு நீ எங்கே போனாய்?" என்று சிரகத்தாமன் கேட்டான்.

மதி:-ஐயா, அப்பெண்களிருவரும் காலஞ்சென்ற முல்லையூரதிபதியின் பாதுகாவலை நாடிச்சென்றனர்.

சிரக:-காலஞ்சென்றனரா? எப்படி?

மதி:-அவர் கொல்லப்பட்டார்.

சிரக:-கொல்லப்பட்டனரா? நீ சொல்வது நம்பக் கூடியதாயில்லை.

மதி:-காலாடி வில்லியனும், முல்லையூர் வாசிகளும் அவர் கோட்டையைத் தாக்கிப் பிடித்துக்கொண்டு அவரைக் கொலை செய்ததை நானே நேரிற் பார்த்தேன்.

சிரக:-என்ன அநியாயம்! முல்லையூரில் கலகமா? அதிபதி கொல்லப்பட்டாரா? இது விஜயசேனர் வேலையல்லவா? சொல்.

மதி:-எனக்கொன்றுந் தெரியாது. நானவர்களை எதிர்த்திருப்பேன். ஆனால் நூற்றுக்கணக்கா யவர்களிருக்க தனியனாகிய என்னால் என்ன செய்யக்கூடும்? ஆதலால் அமலாம்பாளைக் காப்பாற்றுவதிலேயே நான் கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டியதாயிற்று.

சிரக:-நீ சொல்வதை நான் நம்புகிறேன். அந்தோ, முல்லையூரதிபதியின் கதி இப்படியாயிருந்தது? சமரவர்மர் பழிவாங்காமல் விடார். முல்லையூருக்குக் கேடுகாலம் கிட்டிவிட்டது.

பின்னர் முல்லையூரில் நடந்த விஷயங்களனைத்தையும் விபரமாய்க் கேட்டுத் தெரிந்து கொண்டான். அப்போதுதான் கனகவல்லி அங்கே இல்லாதது அவன் ஞாபகத்துக்கு வர மதிவீரனை வினவினன்.

கோட்டையைத் தாக்கும்போது அவள் தப்பி யோடினதாக வும், பிறகு காலாடி வில்லியன் வசம் சிக்கிக்கொண்டதாகவும் தெரி வித்தான்.

“அப்படியானால் அவன் பணத்துக்காக அவளை விவாகஞ் செய்துகொள்வான். பணப்பைகள் வெறுமையானதும் அவளை யடித் தோட்டிவிடுவான்.” என்று சீரகத்தாமன் சொல்லி, மாதர் சித்திரப்புரியிலிருந்து புறப்பட்டதுமுதல் வழியில் நேர்ந்தவை களைப்பற்றி மதிவீரனிடம் பலக் கேள்விகளைக் கேட்டான். அவை களுக்கு மதிவீரனளித்த விடைகளைக் கொண்டும், அவன் முகத்தி லுண்டான மாற்றங்களைக் கொண்டும் கூரிய அறிவினனாகிய சீரகத் தாமன், “உம். நான் நினைத்ததுபோலவே யிருக்கிறது. அவளாவது புத்திசாலித்தனமாய் நடந்துகொண்டிருப்பாள் என்று நம்புகிறேன். ஏ, வீரா, நீ முன்னே போ, நான் அமலாம்பாளைக் கண்டு பேச வேண்டும். ஆனால் நீ போகுமுன் ஒரு வார்த்தை. உன் பிரயா ணம் மனோகரமாகவே யிருந்திருக்க வேண்டும். இளைஞா, அதை மறந்துவிடு. அமலாம்பாள் ஓர் உயர்குல ஸ்திரீ என்பதை ஞாபகப் படுத்திக்கொள்.” என்றான்.

மதிவீரன் மனதிலெழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு, “ஐயா, வேண்டும்போது உமது ஆலோசனையை நான் கேட்டுக் கொள்கிறேன். உம்மைவிட உயர்ந்த குலத்தினராகிய துரைராஜும் பிரபுவோடும், உம்மிலும் சிறந்த வீரராகிய பாவகரோடும் நான் சண்டை செய்திருக்கிறேன் என்பதை மறக்கவேண்டாம்.’ என் றான்.

“நல்லதப்பா, ஆயினும் உன்னோடு எதிர்த்தவர்களுடைய அந் தஸ்திற்கும் உன்னுடைய அந்தஸ்திற்கும் உள்ள வித்தியாசம் எப் பவும் போகாது.” என்று சொல்லி சீரகத்தாமன் அமலாம்பாளை நாடிச் சென்றனன்.

அவனிடம் அவன் பேசிய விஷயங்கள் அவளுக்கு உசித மாயப் பிடிக்கவில்லை.

அன்றுமாலை அவர்களெல்லோரும் சேந்தனூர் என்னும் ஊருக்கு வந்துசேர்ந்தனர். அமலாம்பாள் பயத்தாலும், களைப்பாலும் பிரயாணஞ் செய்வதற்கு முடியாதவளாயிருந்தபடியால் அவளை அங்கே ஒரு பிரபுவின் வீட்டில் விட்டுவிட்டு சிரகத்தாமன் மதிவீரனை யழைத்துக்கொண்டு முல்லையூர் செய்தியைச் சமரவல்லியினிடம் உடனே தெரிவிக்க வேண்டுமென்றும் எண்ணத்துடன் பாமனூருக்குப் பிரயாணமாயினன்.

---

## அதிகாரம் 22.

---

### அழையா வீட்டுக்கு நுழையா சம்பந்தி.

அன்றிரவு பிரயாணஞ் செய்கையில் மதிவீரன மனம் தன் காதலியை விட்டுப்பிரிய நேர்ந்ததே என மிகவும் வருந்தியது. அமலாம்பாளின் இனிய வசனங்களும் பார்வையுமே அவனுக்கு ஆறுதலைத் தந்தன. நடுச்சாமத்துக்குப் பிறகு அவனுக்குக் களை மேலிட்டமையால், பாதி உறக்கத்துடன் சவாரி செய்துபோயினன்.

நடுவில் ஒரு கிராமத்தில் நான்கு மணி நேரம் சிரகத்தாமனும் அவன் பரிவாரங்களும் தங்கி களையாறினர். மதிவீரன் எழுந்து கொஞ்சம் போசனம் உட்கொண்டபின் கவலை நீங்கி பழைய மனிதனானான். நம்பிக்கை பிறந்து என்ன நேரினும் தைரியத்தைக் கைவிடுவதில்லை யென்று தனக்குள்ளாகவே தீர்மானஞ் செய்து கொண்டான். சிரகத்தாமன் அன்றிரவு அவனை நடத்தின விதத்தைப்

பற்றிப் பரிகாசமாய்ப் பேசவே, அதற்குத் தகுந்தாப்போல் மதிவீரன் மரியாதையாகவும் சாதுர்யமாகவும் பதிலளித்தனன். அதனால் சிரகத்தாமனுக்கு மதிவீரன்மேல் நல்லபிப்பிராயம் உண்டாயிற்று. கடைசியில் மதிவீரன் விஜயசேனருடைய சேவையை விட்டு நீங்கினால் சமரவர்மரிடம் வேலைக் கமர்த்துவதாகச் சிரகத்தாமன் வாக்களித்தான். ஆனால் மதிவீரன் அதற்கொப்புக் கொள்ள அச்சமயம் இடந்தரவில்லை.

கடைசியில் அவர்கள் பரமனூருக்கு இரண்டு மைல் தூரத்தில் சமரவர்மர் சைனியங்கள் தங்கியிருக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தனர். விஜயசேனரின் சேனையும் எல்லைக்கப்பால் சமரவர்மனை எதிர்ப்பதற்காகத் தங்கியிருப்பதாகக் கேள்வி.

சமவெளியில் ஆழமான ஆற்றின்மேல் கட்டப்பட்ட பரமனூர் கோட்டை அத்தேசத்தில் மிக்க பலமுடையதென்று சொல்வர். சிரகத்தாமனும் மற்றவர்களும் கோட்டையை நோக்கிப் போகையில் காட்டின் வெளியிடத்தில் இருவரைச் சந்தித்தனர். அவர்களோடிருந்த சேவகரைக் கொண்டு, அன்னார் உயர்குல மாந்தரெனச் சொல்லவேண்டியிருந்தது. அவ்விருவரும் சிரகத்தாமனைக் கண்டதும் தங்கள் குதிரைகளைத் தட்டிவிட்டு அவனை நோக்கி வந்தனர்.

“சிரகத்தாமரே, என்ன விசேஷம்? செய்தி! செய்தி! நீர் கேட்கிறீரா அல்லது நாங்கள் சொல்லட்டுமா?” என்று கேட்டனர்.

அவர்களில் முதியவன் அம்பலவாணப் பிரபு. அவன் முகத்தில் எப்போதும் விசனக் குறியிருந்துகொண்டே யிருந்தது. அவனுடனிருந்த கோமேதகன் சமரவர்மனுடைய ஆலோசனை சபையங்கத்தினரில் ஒருவன்.

"சிரகத்தாமரே கேளும். விஜயசேனர் பரமனூருக்கு வந்திருக்கிறார்." என்றான் கோமேதகன்.

சிரகத்தாமன் மிகுந்த ஆச்சரியமடைந்து, "என்ன, சமரவர்மர் போரிடாமல் பின்னடைந்துவிட்டனரா என்ன? மாதல நாட்டார் பரமனூர் கோட்டையை முற்றுகை போட்டனரா?" என்று வினவினான்.

"இல்லை. சமரவர்மர் சைனியங்கள் நகரவேயில்லை. ஆயினும் விஜயசேன மகாராஜா இப்போது பரமனூரில் இருக்கிறார்." என்றான் அம்பலவாணன்.

கோமேதகன்:-உண்மையைச் சொல்லுகிறேன் கேளும். நீர் பரமனூரை விட்டுப்போகையில், மாதல நாட்டுப்பிரதிநிதிகள் நமது பிரதிநிதிகளைக்கண்டு பேசி ஒருவித முடிவுக்கும் வராமல் திரும்பிவிட்ட செய்தி உமக்குத் தெரிந்திருக்குமே?

சிரக:-மெய்தான். கட்டாயம் போர் நிகழுமென்றல்லவோ நினைத்தேன்.

கோமே:-இன்னுந் தாமதிக்கச் சமரவர்மருக்குப் பிரியமில்லை. அரசரை எதிர்ப்பதென ஆலோசனை சபை தீர்மானித்தது. அப்போது திடீரென மாதலநாட்டுத் தூதுவனொருவன் பரமனூருக்கு வந்தான். ஒருக்கால் விஜயசேனரே போர் தொடங்கிவிட்டதாகச் சொல்லியனுப்பிவிட்டனரோ என்று சந்தேகித்தோம். உடனே ஆலோசனை சபை கூடிற்று. என்ன ஆச்சர்யம்! மாதல நாட்டு மன்னர் சமரவர்மரைச் சந்தித்துப் பேசும் பொருட்டு வந்து கொண்டிருப்பதாகவும், அவரே நேரில் வந்து எல்லா விஷயங்களையும் திருப்திகரமாக முடிவு செய்ய யோசித்திருப்பதாகவும் அத்தூதுவன் தெரிவித்தான்.

சிரக:-நீங்கள் சொல்வ தாச்சர்யமாயிருக்கிறது. தனது தலைவர்மீது துவேஷங்கொண்டு நமது பக்கமாயிருக்கும் பால

சுந்தரம் சமரவர்மர் தன் விருப்பத்தின்படி விஷயங்களைச் சீர் செய்து கொள்வதற்குத் தகுந்த விதமாய் யாவற்றையும் ஏற்பாடு செய்வதாகச் சொன்னானே. ஆனால் விஜயசேனர் தானே வந்து நம்மிடம் சிக்குவாரென நான் எதிர்பார்க்கவேயில்லை. நமது தலைவர் என்ன சொன்னார்?

கோமே:-அவர் சொன்னதாவது: "நல்லெண்ணத்துடன் விஜயசேனர் நம்மிடம் வந்தால், அவரை மனப்பூர்வமாய் வரவேற்போம். ஆனால் அவர் மனதில் குரோதத்தை வைத்துக்கொண்டு வெளிக்குமட்டும் சிநேகப்பான்மையாய் நடந்துகொண்டால், அவருக்கே கெடுதல்." என்று அவரை முன்சென்று வரவேற்கும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார்.

அம்பல:-சுமார் இருபது முப்பது வில்வீரரும், சில பிரபுக்களும் விஜயசேனருடன் வந்தனர். அவர்களுக்குள் ஜோசியன் கந்தசாமியும் ஒருவன்.

சீரக:-அந்த ஜோசியப் பயல் பாலசுந்தரத்தோடு கலந்து ஏதோ சூழ்ச்சி செய்துகொண்டுவருகிறான். விஜயசேனரைப் பரமனூருக்கு வரும்படித் தூண்டியவன் அவனே என்று சந்தேகிக்கிறேன்.

கோமே:-துரைராஜனும், பாவகனும் அரசனோடிருந்தனர். அவ்விருவரும் சிறையிலிருந்தனராம். அரசர் அவர்களை விடுவித்துத் தன்னுடன் அழைத்து வந்திருக்கிறார். உலகநாதனும் வந்திருக்கிறான். ஆனால் அவர்களணிந்திருந்த ஆடையாதிகளைப் பார்க்கும்போது விஜயசேனரை ஒரு கோமுட்டி என்றே சொல்ல வேண்டியிருந்தது.

சீரக:-அவர் எங்கே தங்கியிருக்கிறார்?

கோமே:-அவர் விருப்பத்தின்படியே பரமனூர் கோட்டையில் அவருக்கு விருந்து வைக்கப்பட்டிருக்கிறது.

சிரக:-விளக்கில் தானே வந்து விழும் விட்டிற் பூச்சியைப் போல், அவர் இங்கு வந்து சிக்கிக்கொண்டனர் போலும்!

கோமே:-நல்லது, சிரகத்தாமரே எங்கள் செய்தி சொல்லியாயிற்று. நீர் என்ன நினைக்கிறீர்?

சிரக:-நான் நினைப்பதா? நான் சொல்லப்போகும் செய்தியைக் கேட்டதும், விஜயசேனர் இங்கே வந்தது தவறென்று நீங்களே நினைப்பீர்கள்.

பின்னர் முல்லையூரில் நடந்த சம்பவங்களை விவரமாய் அவர்களுக்கு எடுத்துரைத்தான். இவ்வாறு பேசிக்கொண்டே சோம நதிக்கரையண்டை வந்து சேர்ந்தனர். எதிர்கரையில் சமரவர்மர் சேனை கூடாரமடித்திருப்பதை மதிவீரன் கண்டான்.

---

## அதிகாரம் 23.

---

### விஜயசேனர் சமரவர்மனைக் கண்டு பேசுதல்.

அரசர் ஒருவர் ஒருவரைக் கண்டு பேசுகையில் தமது பதவிக்கேற்றவாறு மரியாதையுடன் கோபமின்றிப் பேசுவது வழக்கம். மனவெரிச்சல் ஏதேனும் இருந்தபோதிலும் அதை வெளிகாட்டலாகாது.

சமரவர்மன் முன்கோபி; சமயம் அறிந்து நடந்துகொள்பவனல்ல. ஆயினும் விஜயசேனன் அவனிடம் கப்பம் வாங்கும் அரச

னதலால், அவனை மரியாதையாக நடத்தக் கடமைப்பட்டவன்: மேலும் அரசன் விருந்தாடியாக வந்திருக்கிறான் என்பதையும் மறக்கலாகாது. விருந்தோம்பல் அரசர்க்குரிய உயர் குணங்களில் ஒன்றாம்.

சமரவர்மன் தன் பரிவாரங்கள் புடை சூழ, விஜயசேனனை வரவேற்கும் பொருட்டுச் செல்லும்போது, தன் அந்தஸ்துக் கேற்ப சிறந்த ஆடையாபரணங்கள் அணிந்து குதிரை மீது போயினன் அவனுடைய பரிவாரங்கள் அணிந்திருந்த ஆடையாபரணங்கள் சமரவர்மன் வெளியாடம்பாரங்களில் மிகப் பிரீதியுடையவன் எனக் காட்டின. அதற்கு நேர் விரோதமாய் விஜயசேனன் ஓர் பழைய போர்வையை மேலே போட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பின்பற்றி வந்தவர்களும் அவனைப் போலவே கேவலமாயிருந்தனர். சமரவர்மன் அரசனை யணுகியதும் தன் அசுவத்தினின்றும் குதித்திறங்கி, அரசனைக் கைலாகுகொடுத்து குதிரையினின்றும் இறக்கினான்.

இருவரும் முகமன் கூறி யோக க்ஷேமங்கள் விசாரித்தனர். வெளிக்கு அன்புடையவர்போல் தோற்றிய போதிலும், இருவருள்ளத்திலும் பகைமை இருந்ததென்ப துண்மை. விஜயசேனன் இயல்பாகவே கபடன்; சமரவர்மனுக்கோ தன் உள்ளத்திலிருப்பதை மறைப்பது கஷ்டமாயிருந்தது. அரசன்தான் இவ்வாறு துணிந்து சமரவர்மனைக் காணவந்திருக்கக் கூடாதென்று மனம் வருந்தினான்; வந்தது வந்தாயிற்று, சமரவர்மனோடு சர்வ ஜாக்கிரதையுடன் நடந்துகொண்டு தன் காரியத்தைக் கொண்டுபோக வேண்டுமென்று நினைத்தான்.

“நான் உன்னை வந்து முன்னதாகவே பார்க்கவில்லையே என்று வருந்துகிறேன். சமரவர்மா, நமக்குள் இருக்கும் சச்சரவை நான்

கவனிப்பவனல்ல என்பதற்கு, என்வருகையே சாட்சி. என் மாதல நாட்டினின்றும் துரத்தப்பட்டு இங்குவந்து வசிக்கையில் நீயும் உன் தந்தையும் என் மாட்டுக் காட்டிய அன்பை மறத்தலுங் கூடுமோ?" என்று விஜயசேனன் மொழிந்தனன்.

சமரவர்மன் புன்னகைகொள்ள முயன்றான். "கபடர்க்கரசன் இவனே! அந்நன்றிக்குப் பிரதிநன்றி காட்டிவிட்டனனே!" என்று தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டனன்.

"தேசப்பிரஷ்டனாகிய என்னை நீ எவ்வளவோ உதார குணத்துடன் நடத்தினாய்! அதை நான் மறக்கவுங் கூடுமோ?" என்று அரசன் மீண்டுங் கூறினான்.

தன்னோடு மிக்க வாஞ்சையுடன் நண்பனைப்போல் நடந்துகொள்ளமுயலும் அரசன் மொழிகளைக் கேட்டது சமரவர்மனுக்குத் தானாகவே சிரிப்பு வந்துவிட்டது. அவன் அவ்வாறு முகமலர்ச்சியுடனே இருப்பதை நற்குறியாகக் கொண்டு அதுதான் சமயமென்று, விஜயசேனன் தன் சமர்த்தையெல்லாங் காட்டி விநோதமாகப் பேசிக்கொண்டு வந்தான். அப்படியாவது தான் எண்ணி வந்த காரியத்தைச் சாதித்துக்கொண்டு போகவேண்டுமென்பது அரசன் கருத்து. பின்னர் நடந்த பெருவிருந்தின்போது அரசன் சமரவர்மனை மகிழ்விப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தான்.

விருந்து நடக்கும்போது, தன்னால் தேசப்பிரஷ்டஞ் செய்யப்பட்ட அநேக மாதல நாட்டுப் பிரபுக்கள் பந்தியிலமர்ந்திருப்பதை அரசன் கண்டு அச்சங்கொண்டான். அவர்களுக்குப் பயந்தே அவன் தனக்குக் கோட்டையிலேயே விடுதி வேண்டுமெனக் கேட்டது.

ஆய்ந்தோய்ந்து பாராமல், விளக்கொளியில் பாய்ந்து விழும் விட்டிற் பூச்சியைப்போல், விஜயசேனன் தானாகவே வந்து பகைவர் கையில் சிக்கிக்கொண்டான். திசைதப்பியுழலும் மாலுமியைப்

போல, அவன் அதிஜாக்கிரதையுடனும் முன்யோசனையுடனும் நடந்துகொண்டான். அவன் எடுத்துக்கொண்ட ஜாக்கிரதையால் சமரவர்மனும் தன் மனதிலெழுந்த கலிஞ்சினத்தை யடக்கவேண்டியதாயிற்று. இருவரும் விருந்து எப்போது முடியும் என்று கவலையாயிருந்தனர். சமரவர்மன் அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு தன் மாளிகைக்குச் சென்றதும், மனதில் இதுகாறும் அடக்கிவைத்திருந்த கோபத்தை வெளிக்காட்டலாயினன்.

விஜயசேனனோ அரண்மனை பிரபுக்கள் புடை சூழ, கோட்டைக்குச் சென்றான். கோட்டைவாயிலில் ஆயுதபாணிகளான வீரர் வந்து வரவேற்று அரசனை அழைத்துச் சென்றனர். விஜயசேனருடைய சாதுர்யமான பேச்சில் ஈடுபட்டு சந்தோஷித்தவர்களாய் அந்நாட்டுப் பிரபுக்கள் தந்தம் இல்லம் ஏகினர். கோட்டையின் ஒரு மூலையில் இருந்த ஒருன்னத கோபுரத்தண்டை அரசனை யழைத்துப் போய்விட்டனர். அரசன் தன்னாட்களில் இரண்டொருவரே தன் பக்கத்தில் நிற்பதைக் கண்டனன். கோபுரத்தின் சுவர்கள் மிக்கக் கனமானவை. அதிலிருந்த சிறிய ஜன்னல்களில் இருப்புக் கம்பிகள் குறுக்கே போடப்பட்டிருந்தன.

விஜயசேனனுக்கு அதைக் கண்டதும் ஒருவித நடுக்கம் உண்டாகி, "இதுவல்லவே என் விடுதி?" என்று கேட்டான்.

"இல்லை, இல்லை. அங்கேயா போவது? அக்கோபுரம் ஒரு காலத்தில் சிறைச்சாலையாக விருந்தது. அங்கே அநேகக் கொலைகள் நடந்திருக்கின்றன. இராக்காலங்களில் நூதனமான வெளிச்சங் காணப்படுகின்றனவாம். சில சமயங்களில் சத்தமுங் கேட்கின்றதாம். இந்த அடிக்கட்டடத்தில் தங்கள் விடுதி சித்தஞ் செய்யப்பட்டிருக்கிறது" என்றான் கோட்டையின் காரியஸ்தன்.

இருளடர்ந்திருந்த அவ்வீதியை நோக்கி அரசன் சென்றான். அங்கே வில்வீரரிற் சிலரும் கருணையாளனும் காத்துக் கொண்டிருந்தனர். விஜயசேனன் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் அறைக்குள் நுழைந்தான். அறை வாசற்படியில் வாகுசன் காவல் புரிந்து கொண்டிருந்தான்.

விஜயசேனன் வாகுசனைக் கண்டதும், "என் மருகனிடமிருந்து ஏதாவது செய்தி கிடைத்ததா? அவன் இரு கைதிகளை என்னிடம் அனுப்பின பிற்பாடு, அவனைப்பற்றித் தகவல் ஒன்றும் தெரியவில்லை." என்று கேட்டான்.

"மதிவீரனிடமிருந்து வந்த ஓர் ஆளை இன்று மாலை பார்த்தேன். முல்லையூர் அதிபதி வசம் அவன் அழைத்துப் போன மாதரை ஒப்புவித்தனனாம்." என்றான் வாகுசன்.

"தேவன் ஸ்துதிக்கப் படுவாராக!" என்று அரசன் மொழிந்தான். அவன் செய்த சூழ்ச்சி நிறைவேறவில்லை என்று அவனுக்குத் தெரிந்தபோதிலும், அதனால் ஏற்பட்ட மன எரிச்சலை வெளியே காட்டாமல், தன் சூழ்ச்சி நிறைவேறினதுபோல் திருப்தி கொண்டவனாய் வெளிக்குத் தோன்றினான். அவன் மனதினின்றும் பெரும் பாரம் கழிந்ததுபோல் பெருமூச்செறிந்தான்.

பின்னர் அங்கேயிருந்த நாற்காலிகள் ஒன்றில் அரசனமர்ந்து, மிகக் களைப்படைந்தவன்போல் தன் ஊழியரையெல்லாம் அனுப்பி விட்டான். அப்போது உலகநாதன் மட்டும் சற்றே ஒதுங்கி நின்று, சந்தடியின்றி அரசனை யணுகினன். அரசன் மௌனமாயிருந்தனன். அவ்வாறு அவன் எப்போதும் இருந்ததில்லை. அவன் படுக்கையைச் சீர்படுத்திக் கொண்டிருந்த உலகநாதன், "அண்ணலே, தாங்கள் இன்று செய்ததுபோல் என்றும் போர் செய்ததை நான்

பார்த்ததேயில்லை. அப்படியிருந்தும் போரில் தோற்றவர்போல் இருக்கிறீர்களே." என்று தைரியமாய் மொழிந்தான்.

விஜயசேனன் தலை நிமிர்ந்து பார்த்து, "போரா! காளை மட்டிட்டேன் பொருதேன் என்றால் பொருந்தும். சமரவர்மன் ஒரு காளைமாட்டைப்போல் முரட்டுத்தன முள்ளவன். ஆயினும் அவனை நான் வெகு சாமர்த்தியமாய் ஏய்த்துவிட்டேன். அமலாம்பாள், கனகவல்லி என்னும் மாதர் விஷயமாய் நான் செய்திருந்த சூழ்ச்சி தவறிவிட்டதில் எனக்குச் சந்தோஷமே. முல்லையூரில் கலகம் கோவில்லை என்றதை கேள்வி." என்றான்.

உலக:-காரணமில்லாமல் தாங்கள் சந்தோஷப்படுகிறீர்களா? தாங்கள் விரும்பிய சூழ்ச்சிகள் நிறைவேறாதது விசனிக்கத்தக்கதே.

விஜய:-நண்பா, சமரவர்மனைப்பற்றி எனக்கு இதற்குமுன் தெரியாத விஷயங்களை இன்று தெரிந்து கொண்டேன். யாவும் தனக்கு அனுகூலமாயிருக்கின்றனவென்று அவன் நினைக்குமளவும், அவன் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் போகப் பின்வாங்கான். மாதரிருவரும் முல்லையூர் போய்ச் சேர்வதற்குள், கள்ளர் கையில் சிக்கினும் சிக்கலாம் என்று ஜாடையாய்ச் சொன்னேன். அவனுக்குடனே உண்டான கோபத்தை யென்னென்பேன்! அச்சமயத்தில் காலாடி வில்லியன் ஜெயமடைந்தான் என்னும் செய்தி அவன் காதில் விழுந்ததோ, என் தலை தப்புவது அரிதாகும். அவனுடைய உத்திரவின்றி இளையவளை மணஞ்செய்பவனைச் சித்திரவதை செய்து கொல்வதாகப் பயமுறுத்தினான்.

உலக:-முல்லையூரில் கலகமென்று கேள்விப்பட்டாலும் சமரவர்மர் அவ்வாறே கோபங்கொள்வர் என்பதும் நிச்சயம்.

விஜய:-அதற்கென்ன சந்தேகம்? ஆனால் நான் இதை உரத் திரமாணித்ததும், முல்லைபுரியில் தற்சமயம் கலகம் செய்யக்கூடா தென்று தூதுவர் மூலமாய்ச் சொல்லியனுப்பினேன்.

உலக:-தாங்கள் இங்கு வந்ததால் நமது காரியம் ஒன்றும் கெட்டுப்போகாமல் இருந்தால் போதுமானது. இதற்குமேல் நான் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை.

விஜய:-தோல்வியடையும் வரையில் நம்பிக்கை யிழக்தலாகாது. இந்த மூடனுடைய கோபத்தை மூட்டும்படியாய் ஒன்றும் சம்பவியாவிட்டால், நான் ஜெயமடைவது நிச்சயம், அல்லது, நான் பலிக்கைக்குப் போகிறேன். நாம் தைரியமாயிருந்து காரியத்தைச் சாதிக்கவேண்டும். இதற்குமேல் நாம் செய்யக்கூடியது வேறொன்றுமில்லை. சமரவர்மன் காளை மாடுகளைப்போல் எதிரியைத் தாக்கும்போது கண்ணை மூடிக்கொள்ளுகிறான். சமயம் பார்த்து என் காரியத்தை முடித்துக்கொள்ளவேண்டும்.

---

## அதிகாரம் 24.

### சமரவர்மன் கோபம்.

மறுதினம் மாதலநாட்டரசன் சமரவர்மனுடைய முக்கிய உத்தியோகஸ்தரின் நட்பைப் பெற முயன்றனன். அவர்களோடு முகஸ்துதியாகப் பேசியும், விலையுயர்ந்த வெகுமதிகளை யவர்களுக்குக் கொடுத்தும், தன் காரியத்தைச் சாதிக்க முயன்றான். அன்று நடந்த வேட்டையின்போது அவர்களில் சிலருடன் இரகசியத்தில் பேசக்கூடுமாயிருந்தது. அவர்களில் அம்பலவாணனும், கோபேத

களும் முக்கியமானவர்கள். இவ்வாறு சமரவர்மனுடைய மந்திரிகளைச் சரிப்படுத்திக்கொண்டு தன் காரியத்தைச் சாதிக்கவேண்டும் என்னும் நோக்கத்துடன்தான் விஜயசேனன் பரமபுரிக்கு வந்தனன். பாதலநாட்டுக்குச் சாதகமான ஒரு கக்ஷியை மந்திரநாட்டுதன் மனையிலேயே தன சொந்த முயற்சியால் விஜயசேனன் ஏற்படுத்திவிட்டான்.

வேட்டை முடிந்து நகருக்குத் திரும்பியதும், விஜயசேனனுக்கு ஒரு பெரிய விருந்து நடந்தது. பந்தியமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தன் உத்தியோகஸ்தரில் இருவர் இல்லாமையைக் கண்டு, சமரவர்மன் அவர்கள் எங்கே என்று கேட்டான்.

“அம்பலவாணரும், கோமேதகரும் வேட்டையினின்றும் இன்னும் மீளவில்லை.” என்று வேலைக்காரரில் ஒருவன் விடை பகர்ந்தான்.

அப்போது இரண்டு பிரபுக்கள் போசன மண்டபத்துக்குள் வந்து, அரசரை வணங்கிவிட்டு, ஒருபக்கம் சென்று பந்தியமர்ந்தனர்.

“என்னவிது, ஐயன்மீர், ஏது உங்கள் வேட்டை உங்களை வெகு தூரம் கொண்டு போய்விட்டதுபோலும். உங்கள் முகங்கள் வாடியிருக்கின்றனவே, என்ன காரணம்? இழவுக்குச்சென்று திரும்பினவர்கள்போல் இருக்கிறீர்களே.” என்றான் சமரவர்மன்.

அவன் அவ்வாறு பேசுகையில், எல்லோரும் அவ்விருவரையும் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் முகத்தில் குடிகொண்டிருந்த துக்கக் குறியானது, அங்கே இருந்தோரின் நகைப்பையும் குதூகலத்தையும் தணிக்க, அவர்கள் ஒருவர் ஒருவருடன் கசகசவென்று என்னமோ, ஏதோவென்று பேசிக்கொண்டனர்.

"என்ன, ஒன்றும் பேசாமல் இருக்கிறீர்கள்? இதன் பொருள் விளங்கவில்லையே." என்று சமரவர்மன் கேட்டான்.

"அண்ணலே, காட்டைவிட்டுத் திரும்பிவர இருக்கையில், சிரகத்தாமப் பிரபுவைக் கண்டோம்." என்று கோமேதகன் மொழிந்தான்.

"எப்படி? இதற்குள்ளாகத் திரும்பிவிட்டாரா? முல்லையூரதிபதிக் குதவியாகவல்லவோ அவரை அனுப்பினேன்? அங்கே ஒன்றும் விசேஷமில்லையே?" என்று சமரவர்மன் வினவினான்.

"தன் செய்தியைத் தங்களிடம் தனியாய் மொழியச் சிரகத்தாமர் காத்துக்கொண்டிருக்கிறார்." என்று கோமேதகன் பதிலளித்தான்.

"சிரகத்தாமர் உடனே வரட்டும். முல்லையூர் பக்கத்திலிருந்து அவர் வருகிறபடியால், அவர் சொல்லவேண்டியதில் இரகசியம் ஒன்றுமில்லை. உடனே வரச்சொல்." என்றான் சமரவர்மன்.

யாரோ ஒருவன் சிரகத்தாமனை யழைக்கச் சென்றான். சமரவர்மன் மனதில் எழுந்த பேருணர்ச்சி அவன் முகத்தில் பிரதிபிம்பித்தது. அவன் வாயிலையே இமைக் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். விருந்தினரும் என்ன செய்தி கொண்டுவரப் போகிறானோ என்று கவலையுடன் சமரவர்மனை நோக்கின வண்ணம் ஆவலாயிருந்தனர். விஜயசேனன் மட்டுமே கவலையொன்றும் இல்லாதவன்போல், அங்கேயிருந்த கோணங்கியுடன் வேடிக்கையாக வார்த்தையாடிக் கொண்டிருந்தான்.

கடைசியில் சிரகத்தாமன் வந்தான். உடனே சமரவர்மன், "முல்லையூரிலிருந்து என்ன செய்தி கொண்டுவந்தீர்?" என்று கேட்டான்.

"நான் சொல்லப் போகும் விஷயம் விருந்தாளின் சமயத்துக் கேற்றதல்ல. ஐயனே இஃதல்ல அச்செய்தியைத் தெரிவிக்கும் இடம்." என்று சிரகத்தாமன் விசனத்துடன் விடையகர்ந்தான்.

"சொல்லும், ஐயா, சொல்லும். செய்தி இன்னதென்று நான் அநேகமாய்த் தெரிந்துகொண்டேன். முல்லையூரில் கலகம் என்பதுதானே சொல்லப் போகிறீர்." என்றான் பொறுமையைப் புறங்கண்ட புரவலன்.

சிரக:-அண்ணலே, தாங்கள் நினைத்தது சரியே.

சமர:-அப்படியானால் மதிகேடராகிய முல்லையூர் வாசிகள் மீண்டும் கலகத்தை யாரம்பித்துவிட்டனரா? நல்ல சமயத்தில் தான் இக்கலகம் நேர்ந்திருக்கிறது; ஏனெனில் அந்நகர் விஷயமாய் நான் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்று மன்னவரை யாலோசனை கேட்பதற்குச் சந்தர்ப்பம் வாய்த்ததற்குச் சந்தோஷிக்கிறேன். வேறேதேனும் செய்தியுண்டா?

சிரக:-ஆம் அண்ணலே, வேறு செய்தி யொன்றுளது: அதை நான் எப்படி யுரைப்பேன்? காலாடி வில்லியன் முல்லையூர் வாசிகளுடன் சேர்ந்து கொண்டு, கோட்டையைப் பிடித்து, அதிபதியை அக்கோட்டையின் ஆஸ்தான மண்டபத்திலேயே கொன்று விட்டனனாம்.

சமர:-முல்லையூர் அதிபதி கொல்லப்பட்டனரா? சிரகத்தாமரே, இது முடியாதகாரியம். நான் நம்பமாட்டேன்.

சிரக:-அந்தோ, நான் சொல்வதுண்மை; மாதலநாட்டு மன்னவரின் வில்வீரன் ஒருவன் தான் நேரே பார்த்ததாக என்னிடம் சொன்னான்.

சமரவர்மன் ஆவேசம் கொண்டவன் போல் எழுந்து நின்று கண்களில் தீப்பொறி பறக்க, "இப்பாதகச் செய்கைக்கு மாதலகோட்டரசர் உதவியாயிருக்கல் வேண்டும். ஐயன்மீர், கதவுகளை மூடுங்கள்; அன்னியர் எவரும் தமதாசனத்தை விட்டசையலாகாது. மந்திர நாட்டாரே, உங்கள் வாளையுருவிக் கொள்ளுங்கள்." என்று கூவிக்கொண்டே, விஜயசேனர் பக்கந்திரும்பித் தன் வாளின்மேல் கையை வைத்தான். அரசன் பயப்படவுமில்லை, தன்னைக் காத்துக் கொள்ள முயலவுமில்லை. "நண்பனே, சடுதியில் வந்த துர்ப்பாக்கிய செய்தியால் உன் புத்தி பேதலித்துவிட்டது போலும்." என்று சாவதானமாய் மொழிந்தான்.

"இல்லை, இல்லை. அச்செய்தி தான் இதுகாறும் அடக்கி வைத்திருந்த நியாயமான கோபத்தை இப்போது தூண்டிவிட்டிருக்கிறது. உம்மையும் நம்பலாமா? துரோக சிந்தையுடையவரென்பதை யான் அறியேனோ? உம்மை என்வசம் கொண்டுசேர்த்த கடவுளுக்குத் தோஸ்திரம்!" என்று பயங்கரமாய்ப் பதிலளித்தான் சமரவர்மன்.

அவன் வாளைப் பிடித்தபடி விடுபடவில்லை. ஆனால் தன்னை எதிர்க்காத சத்துருவின்மேல் வாளை வீச அவனுக்கு மனம் வரவில்லை.

இதற்கிடையில் மண்டபம் முழுதும் ஒரே குழப்பமாயிருந்தது. மாதலகோட்டைப் பிரபுக்கள் வெகு சிலரே. ஆயினும் அவர்கள் தைரியத்தைக் கைவிடாமல் ஆசனங்களை விட்டெழுந்து தமது அரசரைக் காக்க முயன்றனர். அப்போது அங்கே கேட்ட ஆரவாரத்தினிடையில் பாவகன் குரல் நன்றாய்க் கேட்டது. அவன் சமரவர்மனைப் பார்த்து, "ஐயா, சமரவர்மரே, நீர் மாதலகோட்டைக் குடியினவர் என்பதை மறந்தீரோ? உமது விருந்தினராய் நாங்கள்

மாதலநாட்டினரல்லவா? எங்கள் மன்னவரை யெதிர்க்க நீர் கர போவீர்களானல், நாங்கள் பழிவாங்காமல் விடோம். நண்பரே வாருங்கள், பாவகனைச்சுற்றி நின்று போருக் காயத்தமாயிருங்கள்!'' என்றான்.

அவன் பேசுகையில், கருணைபாலன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அரசனுக்கும் சமரவர்மனுக்கும் இடையில் வந்து நின்று தன் வாளை யுருவிக்கொண்டான். "நான் அவருடைய தந்தைக்காகவும் பாட்டனருக்காகவும் போரிட்டவன். இச்சமயத்தில் அவரைக் காக்க நான் தவறவுங் கூடுமோ?'' என்று மொழிந்தான்.

சமரவர்மன் உருவினவாளை உறையிலிடவில்லை. மாதலநாட்டாரைக் கொன்று சங்காரஞ் செய்யும்படி உத்திரவிடுவான் போலிருந்தது. அப்போது சீரகத்தாமன் திடீரென மந்திரநாட்டதிபதியின் எதிரில் வந்து நின்று "ஆண்டவனே, நீர் செய்வதை இன்னதென்று யோசித்துச் செய்யும். பதருத காரியம் சிதருது! விருந்தோம்பல் அரசர்க்குரிய முக்கிய லட்சணங்களில் ஒன்று. உமது விருந்ினரும் தலைவருமாகிய மன்னவருடைய குருதியை உம இல்லத்திலேயே சிந்தாதீர்!'' என்று எக்காளத்தொனியைப்போல் உரத்த சத்தமாய்ப் பேசினன்.

"சீரகத்தாமரே, என்முன் நிற்கவேண்டாம். உடனே போய் விடும்.'' என்று சமரவர்மன் கடுமையாய் மொழிந்தான்.

"அண்ணலே, உமது கோபம் நியாயமானதே யாயினும், அதைக் கடிவாள மில்லாத குதிரையாய் விட்டுவிடலாகாதென்று பிரார்த்திக்கிறேன். மாதலநாட்டுக் கனவான்களே, நீங்கள் எங்களை எதிர்க்க முயல்வது வீண். இரத்தஞ் சிந்துவது சரியல்ல. பொறுமை வேண்டும்.'' என்று சீரகத்தாமன் மீண்டும் சொன்னன்.

விஜயசேனன் அப்போதும் அமைதியைக் கைவிடவில்லை. "அவர் சொல்வதுவே நியாயம்; பாவகரே, கருணாபரரே, பொறுமையாயிருங்கள். பொறுத்தார் அரசாள்வர் என்னும் முதுமொழியை மறக்கலாமா? அவசரப்பட்டு இரத்தப் பழிக்காளாகாதீர். சமரவர்மர் தன் பிரிய நண்பருடைய மரணத்துக்காக வருந்துகிறார். பயங்கரத்துக்குரிய இப்பெரிய பாதகச் செயலில் அவருடைய அரசரும் பந்துவுமாகிய நானும் சம்பந்தப்பட்டிருக்கிறதாக, அவர் சந்தேகிக்கிறார். அவர் வேண்டுமானால் என்னைக் கொல்லட்டும், நீங்கள் ஏன் வீணாய் மடியவேண்டும்?" என்று சாவதானமாகக் கேட்டார்.

சமரவர்மன் தரையைப் பார்த்தவண்ணம் நின்றான். கடைசியில் தலை நிமிர்ந்து, "சீரகத்தாமரே, நீ சொல்வது சரிதான். இப்பேரரசரிடம் நான் பட்டிருக்கும் கடனை அவசரப்பட்டுத் தீர்க்க முடியாது. என் நீதியை உலகமுழுதும் அறியுமாறு நான் நடந்து கொள்வேன். மாதலநாட்டுப் பிரபுக்களே, உங்கள் ஆயுதங்களை என் உத்தியோகஸ்தரிடம் கொடுத்து விடவேண்டும்." என்றான்.

"எங்கள் அரசர் பெருமானுக்கு யாதொரு கெடுதலும் சம்பவியாதென்று உறுதிமொழி தந்தாலொழிய எங்கள் ஆயுதத்தைக் கொடுக்க முடியாது. இது நிச்சயம்." என்று பாவகன் தைரியமாய் மொழிந்தான்.

"மாதலநாட்டு மன்னர் உத்திரவிட்டாலொழிய, மலைநாட்டு வில்வீரர் தங்கள் ஆயுதங்களைக் கீழே வையார்" என்றான் கருணாபரன்.

"பாவகரே, உண்மையுள்ள கருணாபரரே, எதிர்ப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. நான் தவறியிருந்தாலல்லவோ அஞ்சவேண்டும்.

எதிர்ப்பதால் அநேகர் வீணே உயிரிழக்க வேண்டிவரும். உங்கள் ஆயுதங்களைக் கொடுத்து விடுங்கள்." என்று விஜயசேனர் கட்டளையிட்டார்.

கருணாபரன் அரசன் உத்திரவின்படி தன் வாளைக் கழட்டிச் சீரகத்தாமனிடம் எறிந்து, "எடுத்துக்கொள்ளும்! நியாயம் விளங்காத இடத்தில் இவ்வாறு செய்தல் அவமானமாகாது." என்று சொன்னான்.

சமரவர்மன் அளவற்ற ஆத்திரத்தால் பேசவும் நாவெழவில்லை. ஆயினும் அவன் வீரத்தன்மை வாய்ந்தவனாகையால் சுத்தவீரன் மொழிந்த வசனம் அவன் மனதைக்குத்த, "பிரபுக்களே, நில்லுங்கள்! உங்கள் வாளை வைத்துக் கொள்ளுங்கள். அவைகளைப் பிரயோகிக்கவில்லை என்று மட்டும் வாக்களித்தால் போதும். விஜயசேனரே, நீர் என் கைதியென்று நினைத்துக் கொள்ளும். கொலையில் சம்பந்தப்பட்டதாக உமது பேரில் குற்றமிருக்கிறது. சீரகத்தாமரே, அவரைக் கோட்டையின் கோபுரத்துக்குக் கொண்டுபோம். வேண்டுமானால் அவர் தமது ஆட்கள் அறுவரைக் கூட்டிப் போகட்டும்." என்று அரசனே கோபத்துடன் ஒரு தடவை பார்த்துவிட்டு சரேலென்று கூடத்தை விட்டகன்றான்.

விஜயசேனர் அங்கு நின்றவர்களிடம் சமரவர்மன் கடுஞ் சினத்துக்காளாகி வருந்தினமையால், அதிதி யென்பதை மறந்து பேசியதைப் பொருட்படுத்தாமல் தன் பதவிக்கேற்ப அவர்கள் நடந்து கொள்வார்கள் என்று தான் நம்புவதாகச் சொன்னான். சீரகத்தாமன் தன் எஜமானர் கட்டளையின்படி நடத்துவதே தன் கடமையென்று, சமாதானத்தை யுண்டு பண்ண நாங்கள் கூடிய பிரயாசைப்படுவோம். ஆனால் எங்கள் தலைவர் கட்டளையை மீறக்கூடாது

னை, விஜயசேனனையும் நிர்த்தன், வாருசன முதலிய அனைவரை யும் காவலர் புடைசூழ அழைத்துக்கொண்டு கோபுரத்தை நோக்கி நடந்தான்.

---

## அதிகாரம் 25.

---

### கந்தசாமியின் தந்திரம்.

நாற்பது போர்வீரர் உருவியவாளை கையிற் பிடித்தவராய்க் காவல புரிந்துகொண்டு விஜயசேனரோடு கோட்டைக்கு வந்தனர்.

கோட்டைக்குள் புகுந்து முற்றத்தைக் கடந்துபோகையில், விஜயசேனன் திரும்பிப்பார்த்தான். வாருசன் பக்கத்தில் வருவதைக் கண்டு "என் பழைய நண்பனே! நீயா இங்கே வருவது? அப்படியானால் என்னோடு என்குடிகளில் பிரமாணிக்கமுள்ள ஒருவனாவது இருக்கிறான் என்று ஆறுதலடைகின்றேன்," என்றான்.

இதைக் கேட்டதும் உலகநாதனும் நிர்த்தனும் தாங்களும் அரசனுடைய உண்மைக்குத்தாருடைய ஊழியரே என்று மெதுவாகச் சொன்னார்கள்.

கோட்டைக் கோபுரத்தின் பெருங்கதவுகள் திறக்கப்பட்டன. ஆறுவீரர் கையில் தீவர்த்திகள் ஏந்தி உள்ளே புகுந்து வழிகாட்டினர். எல்லோரும் கற்படிகளமைந்த குறுகிய படிக்கட்டுகளின்

வழியாய் மேலே ஏறிச்சென்றனர். அங்கே இருந்த இருப்புக் கதவுகளைத் திறந்துகொண்டு கோபுரத்தின் பிரதான மண்டபத்துக்குள் நுழைந்தனர். வெகு காலமாய் அங்கே எவரும் வசிக்காததால், எங்கும் தூசுபடிந்திருந்தது. முன்னதாகவே அவ்விடத்தைச் சுத்தஞ்செய்து அரசருக்கென்று சித்தப்படுத்தாததற்குக் கோட்டை காரியஸ்தன் வருத்தப்பட்டுக் கொண்டான்.

முற்காலத்தில் அங்கே ஓரரசன் கொல்லப்பட்ட செய்தி அரசன் காதில்விழுந்தது. அதைப்பற்றி அவன் காரியஸ்தனைக் கேட்க, "அண்ணலே, இவ்விடத்திலல்ல அவர் கொல்லப்பட்டது. அதோ தெரியும் அறையில்." என்றான்.

பின்னர் பக்கத்து அறையைத் திறந்துவிட்டு, அதை அரசன் வசிக்கத் தகுந்த விதமாய்ச் சுத்தப்படுத்தினான்.

"சிரகத்தாமரே, உமது தலைவர் என்ன செய்ய யோசித்திருக்கிறார்?" என்று கவலை நிறைந்த குரலில் விஜயசேனன் வினவினான்.

சிரக :—ஐயனே, முல்லையூர் அதிபதி அநியாயமாய்க் கொல்லப்பட்ட செய்தி எங்கள் தலைவருக்குக் கோபத்தைத் தராமல் இருக்குமா? தங்கள் ஆட்களால் தூண்டப்பட்டே இக்கலகம் உண்டாயிற்றென்று அவர் நினைப்பதற்குக் காரணமில்லாமலில்லையென்று தாங்கள் மறுக்கக்கூடுமா? ஆனால் ஒன்று, எங்கள் எஜமானர் மனதில் ஒன்றும் வாக்கிலொன்றும் வைப்பவரல்லர். அவர் நயவஞ்சகத்தில் பிரவேசியார். எது செய்தபோதிலும் பட்டப்பகலில் செய்வாரேயொழிய களவு தொழில் அவரிடங்கிடையாது. அவர் இந்த விஷயத்தில் கடுமையைக் காட்டலாகாதென்பதே எமது விருப்பு.

விஜய:—சிரகத்தாமரே, உம்மைப்போலும் மதிநுட்பமுள்ள மந்திரிகளாகவுடைய அரசனுடைய பாக்கியமே பாக்கியம்! உங்களைப் போன்றவர்கள் என்னிடமிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும்! நல்லது, தயவுசெய்து எனது ஜோசியனை சந்திரமௌலியை இங்கே அனுப்பிவையும்.

சிரக:—அவன் இங்கே வருவதற்கு யாதொரு தடையுமில்லை. ஆனால்; இங்கே வருகிறவர்கள் மீண்டும் வெளியில் வர உத்திரவில்லை. அண்ணலே, உத்திரவுபெற்றுக் கொள்ளுகிறேன்.

சிரகத்தாமன் அரசனை விட்டகன்றதும் காவல்வீரர் இங்குமங்கும் சென்று தத்தம் இடங்களில் நிற்கும் சத்தங்கேட்டது. கடைசியில் எங்கும் நிசப்தமாயிருந்தது.

உலகநாதனும் நிரித்தனும் அரசன் அறையில் இருந்தனர். விஜயசேனன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் கூடத்துக்குச் சென்று தூங்காமல் விழித்திருங்கள். இன்றிரவு செய்ய வேண்டிய முக்கியவேலை ஒன்றுண்டு. ஆதலால் ஜாக்கிரதையாயிருங்கள்." என்றான்.

அப்படியே உலகநாதனும் நிரித்தனும் வெளியே வந்தனர். கூடத்தில் வாருணனும் நிரித்தனுடனும் குளிர்காய்ந்து கொண்டிருந்தனர். வந்தவிருவரும் அவர்களோடு சேர்ந்து குளிர் காய்ந்தவண்ணம் மௌனமாய் உட்கார்ந்திருந்தனர்.

அப்போது அறைக்குள் இருந்த அரசன் விஜயசேனன் தனிமையாய்த் தன்னிலைமையை நினைத்து வருந்தினான். இதுகாறும் மனதில் மறைந்திருந்த உணர்ச்சிகள் இப்போது வெளியே வந்தன. இன்னது செய்வதென்று தோன்றாமல் இங்குமங்கும் உலாவிக்

கொண்டே யிருந்தான். கடைசியில் பக்கத்தறையை நோக்கிய வண்ணம் அரசன் பின்வருமாறு பேசினான்.

“எனக்கு முன்னிருந்த மன்னன் இங்கே கொல்லப்பட்டான்! என்னை ஜனங்கள் என்னவென்று சொல்வார்கள்? முல்லையூர் வாசிகளும் காலாடி வில்லியனும் பொறுமையாயிருப்பர் என்றெண்ணி மனப்பால் குடித்த மடையன் என்று என்னைக் கூப்பிடாரா? சமரவர்மன் நியாயத்துக்குக் கட்டுப்படுவான் என்று நம்பினேனே! ஆனால் அப்பாதகப்பயல் கந்தசாமியைச் சும்மாவிடுவதா? இவ்வளவுக்குங் காரணம் அப்பயலும் பாலசுந்தரமுமே. இந்த ஆபத்திலிருந்து நான் தப்பிப்போய் விட்டால், பாலசுந்தரத்தைத் துலைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன். கந்தசாமி என் கையில் சிக்கியிருக்கிறான். என்னைச் சிறைவாசஞ் செய்யும்படி விட்டு வேடிக்கை பார்க்கும் அந்த ஜோசியப்பயலைத் தண்டியாமல் விடேன். இராஜப்பதவி இன்னும் என்னை விட்டகலவில்லை என்பதை அவன் அறியான் போலும்.” என்று கதவைத் திறந்து கொண்டு வாருசனை யழைத்தான்.

“நண்பா, நான் சாவேனோ பிழைப்பேனோ தெரியாது. நான் சாவதாயிருந்தால் என் பகைவரையும் நண்பரையும் சன்மானிக்காமல் போதல் கூடாது. நான் சன்மானிக்க விரும்பும் நண்பன் நீயே; பகைவன் கந்தசாமி. அவன் பொய் வார்த்தைகளால் என்னை இக்கதிக் குள்ளாக்கினான். அவனை இங்கே வரும்படி பணித்திருக்கிறேன். சமயம் வாய்த்தபோது அவனைப்பிடித்து உன் வாளாயுதத்துக்கு இரையாக்குவாய். நான் சொல்வது தெரிகிறதா?” என்று கேட்டான்.

“அண்ணலே தெரிகிறது. ஆனால் இவ்வேலை என்னைச் சேர்ந்ததல்லவே. ஒரு மனிதனைக் காரணமின்றிக் கொலை செய்ய

என்னால் முடியாது. அவன் இராஜத்துரோகியாயின் திரித்தன் கையால் மாளட்டும். அவ்வேலைக்குரியவன் திரித்தனே." என்று வாருசன் மறுமொழி பகர்ந்தான்.

"நீ சொல்வதுஞ் சரிதான். மற்றவர்கள் பிரவேசியாவண்ணம் வெளியிலிருந்து நீ காவல் செய். கத்தசாம் வந்ததும் கதவை மூடிக்கொண்டு வெளியே உருவிய வாளுடன் காவல்புரிவாய். ஒருவரையும் உள்ளே விடாதே. நீ போய் திரித்தனை யனுப்பு." என்று விஜயசேனன் கட்டளையிட்டான்.

வாருசன் அறையை விட்டு நீங்கின சில நிமிஷங்களுக்குப் பின் திரித்தன் அறைக்குள் நுழைந்தான். "ஐயா, வருக! நமது நிலைமையைப்பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

"சமரவர்மரிடமிருந்து நமக்கனுசரணையான கட்டளை யொன்றும் வராதவரையில் நாம் மரண தண்டனை விதிக்கப் பட்டவர்கள் என்றுதான் நினைக்கவேண்டும்." என்று திரித்தன் பதிலளித்தான்.

"இந்த ஆபத்தினின்றும் தப்பினும் தப்பாவிடினும் நாம் இக்கஷ்டத்தில் வந்து சிக்குவதற்குக் காரணமாயிருந்தவன் தப்பிப் போகவிடலாகாது. திரித்தா, கடைசி வரையில் எனக்குத் துணையாய் நிற்கவேண்டும். தெரியுமா?" என்றான் விஜயசேனான்.

"அப்படியே; என் உயிர் உள்ள வரையில் எப்போதும் எவ்விடத்தும் தங்களுக்குதவியாகவே இருப்பேன்." என்று திரித்தன் பதிலளித்தான்.

விஜய:-ஐயா, யானும் உன்னிடம் எதிர்பார்ப்பதும் அதுவே. உன் துணைவர் யார்? நமது வேலைக்குத் தகுந்தவராயிருந்தால்

வேண்டும். அப்பாதகன் பலசாலி. கூச்சலிடுவான். வாளுடன் கதவண்டை காவலிருப்பான். உலகநாதனே இந்த வேலைக் குதவ மாட்டான்.

திரித்தன்:-சுப்பனும் வீரனும் என்னோடிருக்கின்றனர். அவர்கள் நமது வேலைக்குத் தகுந்தவர்களென்று நான் சொல்லவேண்டியதில்லை, நாங்கள் மூவரும் செத்தாலும் பிழைத்தாலும் தங்களோடுதான் என்று தீர்மானித்திருக்கிறோம். ஆனால் தங்கள் விரோதி யாரென்று சொல்லவில்லையே.

விஜய:-கந்தசாமிதான். இந்தப் பேரைக் கேட்டதும் திகைக்கிறாய். இதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. நயவஞ்சகத்தால் அப்பயல் நம்மை ஏமாற்றிவிட்டான். அவனால்தான் நாம் இக்கதிக்குள்ளாகியிருக்கிறோம். நம்மைக் காத்துக்கொள்ளும் வகையின்றி சமரவர்மன் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறோம்.

திரித்தன்:-பழிவாங்க வேண்டியதுதான். அவனை யழிப்பதே சரி, என் உயிர்போனாலும் அவசியமில்லை.

விஜய:-நல்லது, திரித்தா. கந்தசாமி என் அறையை விட்டு வெளியில் வரும்போது அவனைக் கொன்று விடு. அப்பாதகனை நான் மீண்டும் பார்ப்பேன். மரணம் நெருங்கியிருப்பதை அவன் அறிந்து முகம் வெளுப்பதைக் காண எனக்குப் பிரியம். அவனைக் கொல்ல வேண்டுமென்பது என் விருப்பமானால், அவன் என்னிடம் விடைபெற்றுப் போகையில் "தலைக்குமேல் வானம் உண்டு." என்று சொல்வேன். ஆனால், "சமாதானத்துடன் போ." என்று சொல்வேனேயாகில், அவனைக் கொல்ல விரும்பவில்லையென்று தெரிந்துகொள். போய்ச் சித்தமாயிரு.

திரித்தன் அரசனிடம் விடைபெற்று வெளியே சென்றான். அங்கே தன்னாட்களை யழைத்து, "அடே அப்பா, தைரியமாயிருங்கள்.

அரசர் உமக்கோர் சிறந்த வேலை வைத்திருக்கிறார். கந்தசாமியை யமனுலக னுப்பவேண்டும். சுப்பா, அதோ இருக்கும் உத்திரத்தில் கப்பியைக் கட்டு. வீரா, உன் இடுப்பில் இருக்கும் கயிற்றை கப்பியில் மாட்டு. கந்தசாமி இங்கே வரும்போது அவனிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருப்பேன். சமயம் பார்த்து உங்கள் வேலையை முடித்துவிடுங்கள்." என்றான்.

"அப்படியே" என்றார்கள் திருத்தனுக்குத் தகுந்த கூட்டாளாகிய சுப்பனும் வீரனும்.

இப்படியிருக்க, விஜயசேனன் வேண்டுகோளுக் கிணங்க, சேரகத்தாமன் கந்தசாமியைத் தேடி யழைத்து வரும்படி தன்னாள் ஒருவனை யனுப்பினான். அந்த ஆளுக்குக் கந்தசாமியின் பழக்க வழக்கங்கள் தெரியுமாதலால், அவன் நேரே பரமனூரிலிருந்த முக்கியமான சாராயக் கடைக்குச் சென்றான். அங்கே கந்தசாமி ஒரு பெண் பிள்ளையுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

"நான் சொல்லுஞ் செய்தி நிச்சயமானதென்று நம்பு." என்று அம்மாது கந்தசாமியிடஞ் சொல்லிவிட்டு, அக் கடையிலிருந்த ஜனக் கும்பலிற் புகுந்து மறைந்தனள்.

வந்தவன் அவனை நெருங்கி, "ஐயா, உம்மை விஜயசேன மகாராஜா அழைத்துவரச் சொன்னார். அதற்காகவே நான் வந்திருக்கிறேன்." என்றான்.

கந்தசாமி அவனை சந்தேகத்துடன் உற்று நோக்கினான். "அகாலமான இந்நேரத்தில் நீ வந்திருக்கிறாய். உன்னை நான் நம்புவதெப்படி? நான் வரமாட்டேனென்றால்?" என்று கேட்டான்.

"சோமதத்தமர் உன்னைக் கொண்டுபோகவென்று பத்து வீரரை யனுப்பியிருக்கிறார்." என்றான் வந்த ஆள்.

தப்பிப்போக வழியில்லையென்று கண்ட கந்தசாமி, "அரசர் எனக்கேதேனும் தீங்கிழைப்பார் என்று நினைக்கிறாயா?" என்று கேட்டான்.

"அது விஷயம் என்னைவிட உனக்கே நன்றாய்த் தெரிய வேண்டும். பொறியில் சிக்கிய கிழ எலி கடிக்கும் என்பதை மறவாதே." என்றான் மற்றவன்.

கந்தசாமி இதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. வந்தவனைப் பின்பற்றிச் சென்றான். விஜயசேனன் அடைபட்டிருந்த கோபுரத்துக்குள் நுழைந்ததும் திரித்தனைக் கண்டான். அவன் அரசன் அறைக்குப் போகையில் கம்பியுங் கயிறுந் தொங்குவதைப் பார்த்தான். ஆபத்தென்று அவன் புத்தியில் பட்டு, அதற்குத் தகுந்தாற்போல நடந்துகொள்ள வேண்டுமெனத் தனக்குள்ளாகவே தீர்மானித்துக் கொண்டான்.

கந்தசாமி தைரியமாய் அரசன் முன் போய் நின்றான். தான் சொன்ன ஜோஸியம் பலிக்காமல் போய்விட்டபடியால் அரசன் கோபமாயிருப்பானே என்று அவன் அஞ்சவேயில்லை.

"இன்னமேலே, கிரகங்கள் யாவுந் தங்களுக் கனுகூலமாயிருக்கக்கடவன." என்றான்.

"இந்த அறையைச் சுற்றிப்பார். கிரகங்கள் என்னை ஏமாற்றி விட்டனவா இல்லையா சொல், பார்ப்போம். நீ சொன்ன வார்த்தைகள் என்ன? நாம் இருக்கும் நிலைமை என்ன? நான் இவ்வாறிருப்பது உனக்கு வெட்கமா யில்லையா?" என்று அரசன் கேட்டான்.

கந்தசாமி:-தாங்கள் மேற்கொண்ட கருமத்தைச் சாதிப்பதற்குள் கஷ்ட நஷ்டங்கள் நேருவது சகஜம். எனுவ ஐயா! புயலுங் காற்றுமின்றி மாலுமி கப்பலைக் கரைசேர்க்கவில்லையென்று பிரயாணி அவனைக் கோபித்துக்கொள்வது போலிருக்கிறது உமது கோபம். இது மதியீனமல்லவா?

விஜய:-கப்பல் உடைந்துபோனுல் என்னாகும்? நான் காட்டுமூத்து சிறையிலிருக்கிறேன். என் உயிருக்கும் உலை வைத்திருக்கிறது. இல்லை, இல்லை, நான் ஏமாந்து போனேன். நீ ஒரு மோசக்காரன். உன் ஜோசிய மனைத்தும் சனமே. போ, போ, என் முன் நிற்காதே. உன் பாதகச் செயலுக்குக் கடவுள் உன்னைத் தண்டிப்பார். தலைக்குமேல் வானமுண்டு.

கந்தசாமி:-தாங்கள் மேற்கொண்டிருக்கும் கருமம் பலிக்குமா பலிக்காதா என்று சொல்லமுடியுமே யொழிய; அதற் கிடையூறுயுள்ளவைகளை விலக்க என்னுலாகுமா? அது கடவுள் சித்தமே.

விஜய:-மலைநாட்டரசன் தான் மேற்கொண்ட காரியத்தைச் சாதித்து எனது தன்மைக்குப் பங்கம் வராமல் காப்பான் என்று சொன்னுய். ஆனுல் அவன் செய்திருப்பது, சமரவர்மனுக்கு என் மேலிருக்கும் அவநம்பிக்கையை அதிக மாக்கிவிடும் போலிருக்கிறது. அதனுல் எனக்குக் கெடுதியுண்டாவது திண்ணம். அப்படியானுல் உன் ஜோசியம் பொய்தானே.

கந்த:-நியாயமான காரியத்தில் அவன் உண்மைக் குதாரமுடையவனுயிருப்பான் என்று சொன்னேனே. அவன் அவ்வாறு நடக்கவில்லையா? அநியாயத்துக் குடன்படான் என்று சொன்னேன். அதுவும் உண்மையென்று இருவனைக் கேட்டால் தெரிகிறது.

இதைக் கேட்டதும் அரசன் முகம் கோபத்தாலும் வெட்கத்தாலும் சிவந்தது.

கந்த:-கிரகங்கள் அவனுக்கு நேரவிருந்த அபாயத்தைக் காட்டினவென்று சொன்னேன். அவன் பாதையில் பிரயாணத்தின் போது அபாயங்கள் இருந்ததில்லையா? மேலும் அனுப்பியவர்க்கு அநுகூலமுண்டாகுமென அவை தெரிவித்ததாகச் சொன்னேன். இதன் உண்மை தங்களுக்குக் கூடிய சீக்கிரம் தெரியவரும்.

விஜய:-அநுகூலமா? என்றாய்ச் சொன்னாய்? அவமானமும் சிறைவாசமுந்தான் கைமேற் பலனாய்க் கிடைத்திருக்கின்றன. உன் இருமாப்பை என்னென்பேன்! நல்லது நீ போகலாம். எனக்குச் செய்த தீமைக்குப் பழிவாங்காமல் விடேன். நினக்குமேல் மரணமுண்டு.

கந்தசாமி போகத் திரும்பினான். அப்போது அரசன் அவனை நிறுத்தி, "ஒரு கேள்வி. அதற்கு மட்டும் பதிலளித்துப் போ. உன் ஜோசியத் திறமையைச் சோதிக்கவேண்டும். உன் மரணம் எப்போது நேரும் என்று சொல்லக்கூடுமோ?" என்றான்.

கந்த:-தங்கள் மரணத்துக்கு முதனாள் நான் சாவேன்.

விஜய:-என்ன சொல்லுகிறாய்?, பொறு, பொறு. என் மரணமும் உன் மரணமும் அவ்வளவு நெருங்கிய சம்பந்தம் உடையன என்று சொன்னாய்?

கந்த:-மத்தியில் இருப்பது ஒரே தினந்தான்.

விஜயசேனன் எழுந்து கந்தசாமியின் தோளின்மேல் கையை வைத்துக்கொண்டு, "கந்தசாமி, நான் உனக்கோர் நல்ல ஜெனானு விருந்து வந்திருக்கிறேன். நான் கேட்பதற்குப் பதில்சொல். உன்னுடைய சாஸ்திரத்தில் ஏதேனுமுண்டா? இந்த மலைகாட் டினானுன் போய்க்குக்கும் விஷயம் எனக்குச் சாதகமாய் முடியுமா? நம்மிருவருமிருவ் அவ்வளவு நெருங்கிய சம்பந்தமுடையவரா? ஏனது நிலைமையிலிருப்பார்க்கு மெய்மை அத்தியாவசியமென்று தெரிய வில்லையா?" என்று கேட்டான்.

கந்த:-நான் சொன்ன துண்மையே. தங்களுக்குக் கோபம் பிறந்து என்னுயிருக்கே கெடுதல் நேர்ந்தாலும் நேரட்டுமென்று பயப்படாமலே உண்மை யுரைத்தேன்.

விஜய:-கந்தசாமி, நானு துவளாத செய்பவன்? என்னை நீ இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. எனை, மெய்த்தன்றுவா அல்லது உன் சாஸ்திரத்தில் உண்மையுண்டா? சொல்.

கந்த:-துன்னையேலே, நாள் போகப்போக, நான் சொல்வதின் உண்மை தெரியவரும். இரண்டொரு நாள் பொறுமையாயிருந் தால், மலைகாட்டினானைப் பற்றி நான் சொல்வது மெய்யா, பொய்யா என்று தெரிந்து கொள்ளலாம். நான் மீண்டும் சொல் கிறேன். நான் சொன்ன மறுதினம் அதே நேரத்தில தங்களுக்கு அ னம் சம்பவிக்கும் என்பது நிச்சயம். வேண்டுமானால் சோதித்துப் பாருங்கள்.

விஜயசேனன் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. கந்தசாமி யை யழைத்துக்கொண்டு வாயிலண்டை வந்து, "மற்ற விஷயங்க

யை யாவை மருதிணை பேசிக்கொள்ளலாம். ஆதலால் கந்தசாமி, சகோதரனுடன் போ.' என்றான்.

திரித்தன் எங்கே தன் கருத்தை அறியாமல் வேலையை முடித்துவிடுவானோ என்று பயந்து, அரசன் ஜோசியனை வெளியே கொண்டுவந்துவிட்டுத் திரித்தனுக்கு மறைவாய்ச் சைகை செய்து போயினன்.

கந்தசாமி அங்கேயிருந்த ஆட்களருகில் வந்து பார்த்து சந்தேகத்துடன் அவர்களை நோக்கினவண்ணம், தன் இடுப்பில் மறைவாய்ச் சொருகி வைத்திருந்த உடைவாளைத் தொட்டுப் பார்த்தான். அங்கே வாருசன் அயர்ந்து நித்திரைசெய்து கொண்டிருந்தனன், உலகநாதன் முகம் வெளுத்து ஏதோ கவலையில் மூழ்கினவனாய்க் காணப்பட்டான். திரித்தனும் அவனுடைய ஆட்களும் தங்கள் சூது வேலையைச் செய்யச் சித்தமாயிருப்பதுபோல் தோற்றினர். இவ்வாறு மேற்கூறிய மனிதர்களோடு கந்தசாமி அன்றிரவைக் கழித்தான்.

மறுநாள் காலை அரசன் எழுந்து, உலகநாதன் அறைக்குச் சென்றான். என்ன மாற்றம்! விஜயசேனன் அன்றிரவு கவலையின் பலனாய், அவன் முகம் முற்றும் மாறிவிட்டது. மந்திரோபாட்டிப் பிரயுக்தங்களைத் தன்வசந் திருப்ப அவன் செய்த முயற்சிகளையெல்லாம் விவரமாய் எடுத்துக் கூறினான். கூடிய சீக்கிரம் கோட்டையைவிட்டு வெளியேறி அவ்வாறே செய்யும்படி உலகநாதனுக்குக் கட்டளையிட்டான்.

பின்னர் ஜோசியனை அழைத்தான் மன்னவன். அவனுக்குக் கந்தசாமியிடம் மீண்டும் சம்சயம் உண்டாகிவிட்டது. ஆதலால் அவனோடு வெகுநேரம் ஆலோசனை செய்தான். அதன்

பலனாக அவன் மனஞ் சற்றே தைரியங்கொண்டது. மகாநா சேனுஞ் சென்று சேகத்தாமன் அச்சனைப் பார்க்கும்போது, அவன் முகத்தில் விளங்கிய அமைதியைக் கண்டு வந்தவனே ஆச்சரியப்பட்டான். ஏனெனில் அன்றிரவு சமரவர்மன் மனமிருந்த நிலைமை விஜயசேன னுயிர்க்கே முடிவு சேர்ந்திருக்கும் என்று சேகத்தாமன் அறிந்திருந்தான்.

---

## அதிகாரம் 26.

---

### அவமானம்.

விஜயசேனனைக்கண்டு பேசிப்போன அன்றிரவு சமரவர்மனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அவன் படுக்கையறையில் காவலிருந்த அம்பலவாணனும் சோமேதகனும் தங்கள் எஜமானனுடைய மன நிலைமையைக் கவனித்து வந்தனர். மன வருத்தம், கோபம், பழிவாங்கும் எண்ணம், முதலியன அவனிடம் மாறிமாறிப் போராடின.

அவன் தன்னுடையைக் கிழித்து படுக்கையைச் சேர மறந்தான். இருந்து இருந்து அவனுக்குக் கோபம் வர, கூட்டிலடைபட்ட சிங்கத்தைப்போல் கதறினான். சில சமயங்களில் அங்கே இருந்தவரிடம் விடாமல் பேசினான். இவற்றையெல்லாம் கண்டவர்கள் அவனுக்கு எங்கே புத்தி பேதலித்து விடுமோ என்றஞ்சினார்கள். தன் சொந்தக்காரனான பூபாலனுடைய கதியை நினைத்துச் சிறு பிள்ளைபோல் அழுதான். பின்னர் காலாடி வில்லியன்,

முல்லையூர்க் குடிகள், விசேஷமாய்க் கலகத்திற்கும் காரணமாயிருந்தவன் முதலியோரைப் பழிவாங்காமல் விடுவதில்லையென்று பயமுறுத்திப் பேசினான்.

இப்படியே அவன் மறுதினத்தையும் இரவையும் கழித்தான். சமரவர்மன் ஒன்றும் புசிக்கவுமில்லை, குடிக்கவுமில்லை; அணிந்திருந்த உடையை முதலாய் மாற்றவுமில்லை. அவன் நடந்துகொண்ட விதத்தில் அவனுக்குக் கட்டாயம் பைத்தியம் பிடித்துவிடும் என்று நினைத்தனர். ஆனால் வரவர அவன் கோபாவேசம் குறைந்துகொண்டு வந்தது; தன் அமைச்சர்களின் ஆலோசனைக்குச் செவிசாய்க்கத் தொடங்கினான். எவரேனும் அச்சமயம் பழிவாங்கத்தான் வேண்டுமென்று சொல்லியிருந்தால் சமரவர்மன் உடனே அவ்வாறு செய்திருப்பான் என்பது திண்ணம். ஆனால் மந்திரநாட்டுப் பிரபுக்களோ, அரசனிடம் தங்களுக்கியல்பாயிருந்த மரியாதையாலோ, அல்லது நம்பிக்கை துரோகம் செய்யக்கூடாதென்னும் எண்ணத்தாலோ, அல்லது தாங்கள் விஜயசேனரிடம் பெற்ற வெகுமதிக்குப் பிரதி நன்றி காட்ட வேண்டுமென்னுங் கடமையை உணர்ந்ததாலோ தங்கள் அதிபதியைப் பொறுமையாயிருக்கும்படித் தூண்டினர்.

பூபாலன் மரணத்துக்கு விஜயசேனர் பிணையல்லவாதலால், அவருக்கிழைக்குந் தீங்கு மாதலநாட்டிற்கும், மந்திரநாட்டிற்கும் கெடுதலுண்டாகுமென சோமேதகன் வாதித்தான். அம்பலவாணன், சிரகத்தாமன் முதலியோரும் அதை யாமோதித்தே பேசினர். சிரகத்தாமன் மந்திரநாட்டிற் கனுகூலமான சாதன உடன்படிக்கையொன்றில் விஜயசேனன் கையொப்பம் வாங்கிக் கொண்டு அவனை அனுப்பிவிடுவதே உத்தமம் என்று வற்புறுத்தினான்.

சமரவர்மன் தளகர்த்தன் கூறிய மொழிகளை ஊன்றிக்கவனித்த வண்ணம் கேட்டுக் கொண்டிருந்தான். காலாடி வில்லியன் செய்த அக்கிரமத்தில் விஜயசேனன் சம்பந்தப்படவில்லையென்று சிரகத்தாமன் சொன்னபோது, சமரவர்மன் தலை நிமிர்த்து அவனைக் கோபக் குறியுடன் நோக்கி, "சிரகத்தாமா, மாளவ நாட்டின் பண வோசை உன் காதிலும் கேட்கின்றதோ? முல்லையூர் கலகத்திற்கு காரணம் விஜயசேனன் அல்லவென்று திட்டமாய்ச் சொல்லத் துணிச்சல் உனக்கேனும் உண்டா?" என்று சிங்கம்போல் கர்ச்சித்தான்.

"ஐயனே, பொன்பயிற்சியைவிட வாட்பயிற்சியே என் காதுக்குரியது. இக் கலகங்களுக்கு விஜயசேனன் ஆவியில் செய்த சூழ்ச்சியே காரணம் என்பதை எவரும் மறுக்கார். ஆனால் பூபாலனைக் கொல்லும்போது, விஜயசேனன் ஆட்களில் ஒருவன் இவ்வாறு செய்கை கூடாதென்று எல்லோரு மறியப் பகிரங்கமாகச் சொன்னானாம். தங்களுக்குப் பிரியமானால் அவனைக் கொண்டுவந்து தங்கள்முன் விடுகிறேன். தாங்களே அவன் வாய்ப் பிறப்பைத் தெரிந்து கொள்ளலாம்," என்றான் சிரகத்தாமன்.

"நல்லது, அவனைக் கொண்டுவா. சமரவர்மன் கோபமோடிருந்தபோதிலும் நீதியைக் கைவிடான் என்பதை மறந்தனையோ? விஜயசேனனை நானே நேரில் பார்த்து அவன் மேற் குற்றஞ் சாட்டி, அதற்குப் பரிகாரஞ் செய்யும்படி கேட்கிறேன். ஆனால் பகல் ஒரு மணிக்கு உன் சாட்சியைக் கோட்டைக்குச் சித்தமாய்க் கொண்டுவந்து வைத்திரு." என்று மந்திர சாட்டையெறி மொழிந்து அவனை விட்டகன்றான்.

"விஜயசேனர் பிழைப்பதும், மந்திர நாட்டின் கௌரவமும் இன்றையப் பகல் நடவடிக்கையைப் பொறுத்ததாம். மதிலின் மேலிருக்கும் பூனை எப்பக்கம் குதிக்குமோ, யாரறிவார்? சோமே தகா, கோட்டைக்கு விரைந்து சென்று, நடக்கப்போகுஞ் சங்கதி யை விஜயசேனருக்குத் தெரிவி. இந்த மலைநாட்டு வீரன் தன் அரசனுக்கு விரோதமாய் எதையும் உளறிவிடான் என்று நம்புகி றேன்." என்றான் அம்பலவாணன்.

"அவ்விளைஞன் புத்திசாலியாகவே தோற்றுகிறான். தைரி யசாலியேனும் சமயத்துக்குத் தகுந்தாப்போல் நடந்து கொள்வான் என்று நினைக்கிறேன். நான் போய் அவனையும், ஆம்ரபாலியை யுந் தேடிக்கொண்டு வரவேண்டும்." என்று சீக்கிரமாய்ப் போனான். அம்பலவாணன் சொன்னவாறு சோமேதகன் விஜய சேனன் அடைபட்டிருந்த கோட்டை கோபுரத்தை நாடிச்சென் றான். அங்கே விஜயசேனன் சோமேதகன் சொன்ன சங்கதியைக் கேட்டதும் அவனைப் புகழ்ந்து பேச ஆரம்பித்தான். "எனக்கு உன்னைப்போலும் தோழர்கள் இருப்பின் எவ்வளவோ நன்றாயிருக் கும். அப்போது நான் இத்தகைய துன்பத்தில் அகப்படுவேனா? ஆனால் நீயோ சமரவர்மன் பணியாளன். அவனுக்கும் எனக்கும் சமாதானத்தை யுண்டுபண்ணுவையேல், நீ உன் எஜமானனுடைய நன்மையைக் காத்தவனாவாய். இவ்வாறு நடந்துகொள்வதால் எங் களிருவர்க்கும் நன்மையுண்டாகும். நானும் நன்றியுடையனவேன். உன் எஜமானன் என்னிடம் எதிர்பார்ப்பதென்ன?" என்று கேட்டான் சிறைவாசஞ் செய்யும் செம்மல்.

"அண்ணலே, சமரவர்மர் என்னிடம் ஒன்றும் சொல்லியனுப்ப வில்லை. அவரே தன் விருப்பத்தைச் சீக்கிரம் நேரில் தெரிவிப்

ளர். தன் பிராணனுக்கு இவ் வஞ்சனைகளுக்குத் தங்கள் உடன்படவேண்டுமென்று நினைக்கிறேன். ஆதலால், இவ [illegible] கொடுத்துவிடும்படி கேட்டார்." என்று கோமேதகன் சொல்லினான்.

"நீ தான் எதிர்பார்த்திருந்ததே." என்று விஜயசேனன்.

கோமேதகன் :-முன்னிலுள்ள [illegible] [illegible] யோருடனே யாதொரு சம்பந்தமும் வைக்கலாகாது.

விஜய:-அல்லது, தப்பவே செய்யத் தடை சொன்னதில்லை.

கோமே:-சகலர்களுக்கு விரோதமாக அவர் எதிர்த்து நின்று விலக்கவில்லையென்று ஜாமின் கொடுக்கும்படி கேட்கிறார்.

விஜய:-அதற்கு சம்மதமே. [illegible] அல்லது இன்னும் வேறேதேனும் உண்டா?

கோமே:-தனது ராச்சியம் [illegible] விலக்கவேண்டுமென [illegible] விரும்புகிறார்.

இதைக் கேட்டதும் விஜயசேனனுக்குக் கோபம் வந்துவிட்டது. தன்னிருக்கையை விட்டெழுந்து, "அவன் என்னை யாரென்று நினைத்தான்! எனது [illegible] போதும். என்னிடமா இத்தனை பேச்சு?" என்று கேட்டான்.

கோமே:-முன்னிலுள்ள பக்கத்தில் சகலர்களுக்கும் [illegible] அவருக்கு விரோதமாகச் சகலரும் செய்யும்படி தாங்கள் [illegible] [illegible] தன் [illegible] னர்.

விஜய :-கோமேதகா, உனது எஜமானர் இந்த நிபந்தனைகளில் ஒன்றையும் விட்டுக் கொடுக்கமாட்டாரோ?

கோமே :-அதென்னமோ, எனக்குத் தெரியாது. தங்களுக்கு இவைகள் முன்னதாகத் தெரிந்திருந்தால், அவற்றிற் கேற்றவாறு நடந்து கொள்வீர்கள் என்றே உங்களை எச்சரிக்க வந்தேன்.

விஜய :-நல்லது, யோசனை செய்வோம். உன் எஜமானன் நிபந்தனைகள் முடிந்துவிட்டதா? வேறொன்றுமில்லையே.

கோமே :-மற்றொரு சங்கதியுமுண்டு, அண்ணலே. அமலாம்பாளை துரைராஜர் மணந்துகொள்ள விரும்புகிறார். அவ்விவாகத்துக்குத் தாங்கள் யாதொரு விக்கினமும் செய்யமாட்டீர்கள் என்று சமரவர்மர் எதிர்பார்க்கிறார்.

விஜய :-முடியவே முடியாது. என் மகள் உயிரோடிருக்குமளவும் துரைராஜன் மற்றொருவனை விவாகஞ் செய்யச் சம்மதியேன்.

கோமே :-நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் அவ்விவாகத்தைத் தடுக்கத் தங்களுக்கு வல்லமையுண்டா என்பதை யோசித்துப் பாருங்கள்.

விஜய :-கோமேதகா, இந்தக் கல்யாணத்தால் என் இராச்சியத்துக்கே அழிவுண்டாகும். எனக்கிருக்கும் ஒரு பையன் நோயாளி. அவனுக்குப் பிறகு துரைராஜனே பட்டத்துக் குரியவன். துரைராஜனுக்கு என் மகளைக் கல்யாணஞ் செய்து பார்க்கவேண்டுமென்பதே என் வாழ்வின் கோரிக்கை. அதற்காக நான் எவ்வளவோ சூழ்ச்சி செய்தேன்; சண்டை யிட்டேன்; கடவுளைப் பார்த்து மன்றாடினேன். ஆனால், கோமேதகா, இந்த ஒரு நிபந்தனைக்கு

கட்டும் நான் கட்டுப்படமாட்டேன். நீயே நினைத்துப்பார். சமர வர்மனைத் திருப்திசெய்ய வேறென்ன வேண்டுமானாலுஞ் செய் வேன். அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வது உங்கள் கடமை. இந்த விபரத்தினை மட்டும் கேட்காமலிருக்கும்படி செய்யவேண் டும். தெரிகிறதா?

சோமே:- அண்ணலே, தங்கள் தயவும் எனக்குத் தெரியாத தல்ல. என் அனுதாபம் ஒரு புறமிருக்க, நீங்கள் செய்யவேண்டிய தொன்றுண்டு. சமரவர்மனை ஆசனத்தில் எப்படியாவது சகிப் பதற்றப் பார்க்கவேண்டும். அவர் போன வழியே விடுவது உசி தம் என்று நினைக்கிறேன். அவரை எதிர்க்காவிட்டால், அவர் கோபம் தணிந்துவிடும். அப்போது அவர் ஆனைமாரித் தங்களை அன்புடன் நடத்துவார். இதை மட்டும் ஞாபகத்திலேயாய் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். தாங்கள் சாலாடி வில்லியவனையும் முல்லை யூர் வாசிகளையும் கைவிடமாட்டீர் என்று நிரூபித்தாலும் அவர் புத்தியிற் பட்டதோ, சமாசாரம் தீர்வாக்கான.

விஜய:- இவர்களுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமில்லை யென்று எத்தனை தரம் வேண்டுமானாலுஞ் சத்தியஞ் செய்யத் தயா ராயிருக்கிறேன்.

சோமே:- கலகத்தை யடக்கி, அதற்குக் காரண கர்த்தர்களைத் தண்டிப்பதற்கு தாங்கள் உதவி செய்யவேண்டுமென்று கேட்பார்.

விஜய:- அது எனக்கு சௌகரியக் குறைவல்லவா?

சோமே:- தாங்கள் மாட்டேனென்றால், ஆபத்தாய் முடியும். முல்லையூர் வாசிகள் கலகஞ் செய்தால் இனி மாதவ காட்டார் உதவி செய்வார்கள் என்று அவர்களுக்கும் பகிரங்கமாய்த் தெரிக்க

வேண்டுமென்பதே அவர் கருத்து. மந்தரநாட்டார் பழிவாங்க எண்ணங்கொண்டால் மாதலநாட்டார் அதில் பிரவேசிக்கமாட்டார் என்றும் அவ்வூரார் தெரிந்துகொள்ள வேண்டுமாம். இது தான் சமரவர்மர் தீர்மானம்.

விஜய:-கோமேதகா, நான் கொஞ்சம் தாமதப்படுத்தினால், முல்லையூரார் சமரவர்மனை எதிர்த்து நிற்கமாட்டார்கள் என்று நினைக்கின்றாய்? நான் திறந்து சொல்லுகிறேன் என்று தப்பர்த்தங்கொள்ளாதே. அவ்வூரார் தொகையில் பெருத்தவர்கள்; நிலையாய் நின்று போர்புரிபவர்.

கோமே:-மாதலநாட்டிலிருந்து ஆயிரம் வில்வீரர் போயிருந்தால், அவர்கள் ஏதாவது செய்திருக்கலாம். அவர்களுக் குதவியில்லையேல் அவர்களால் தமது நகரைக் காக்க முடியுமா? சமரவர்மனால் ஏற்கனவே பழுதுபட்டிருக்கும் கோட்டை மதில்கள் இன்னும் அப்படியே யிருக்கின்றன.

விஜய:-மதியீனர்! தமது பாதுகாப்பின் மட்டில் அவர்கள் இவ்வளவு அஜாக்கிரதையா யிருந்தால், என்னுதவிக்கும் பாத்திரமானவர்களல்ல. அவர்களை முன்னிட்டு நான் சமரவர்மனைப் பகைத்துக்கொள்ளமாட்டேன்.

கோமே:-மற்றொரு விஷயமிருக்கிறதே. அது உங்களுக்கு வருத்தத்தை தரத்தக்கதென்று நினைக்கிறேன்.

விஜய:-ஆ, அதென்ன, கல்யாண விஷயந்தானே? என் மகளுக்கும் துரைராஜனுக்கும் ஏற்பாடு செய்திருக்கும் விவாகபந்தனத்தை யுடைக்க நான் சம்மதியேன். ஏனெனில் இந்த ஏற்பாட்டிற் கிணங்கினால், மாதல நாட்டை என்னிடமிருந்தும் எனது

சக்தியாரிடமிருந்தும் பிரிக்கவியலாது போனாலும், என் மகன் இளமையில் இறந்துவிடுவான். அப்போது பட்டத்துக்குரியவர் என் குடும்பத்திலிருக்கமாட்டார்கள். நான் இரவும் பகலும் இவ் விவாகத்தைப்பற்றியே சிந்தை செய்துகொண்டிருக்கிறேன். சோமேதகா, இந்த விபத்தினுக்கு மட்டும் நான் கட்டுப்படேன்.

சோமே:- அமலாம்பாள் வேறொருவனைக் காதலித்திருக்கிறுளாதலால் துரைராஜனை மணக்கச் சம்மதியாள் என்று நான் தங்களுக்கு ருசுப்பித்துவிட்டால், சமரவர்மர் விபத்தினுக்குச் சம்மதிப்பீர்களா?

விஜயசேனன் பெருமூச்செறிந்தான். "அந்தோ, என்பா, அவள் காதலா? துரைராஜனையே மணமுடித்துக்கொள்ளும்படி சமரவர்மன் அவளைப் பலவந்தப் படுத்துவான். மேலும் துரைராஜன் காதல் சாமான்யமா? அதை அவள் மறப்பாள் என்று நான் நினைக்கவேயில்லை." என்று சந்தேகத்துடன் சொன்னான்.

சோமே:- அண்ணலே, தங்களுக்கு அமலாம்பாளுடைய பிடிவாத குணந் தெரியாது. வழியில் அவளுக்கு அளவற்ற உதவி புரிந்து, அவளை அபாயத்தினின்றுங் காப்பாற்றிய ஒரு யௌவன புருஷன்மேல் அவள் தன் முழுக் காதலையுஞ் செலுத்தியிருப்பதாகச் சேகரசமர் சொன்னார்.

விஜய:- ஆ, அப்படியா? அவன்தான் எனது மலைநாட்டு வில்வீரரின் ஒருவனாகிய மதிவீரன்.

சோமே:- அவன்தான் என்று நினைக்கிறேன். அவனும் அமலாம்பாளும் கைதி செய்யப்பட்டிருக்கின்றனர்.

விஜய :-கடவுளுக்குத் தோத்திரம்! அவ்வாலிபன் கதியும் எனது கதியும் பிணிக்கப்பட்டிருக்கின்றனவென்று கிரகங்கள் மூலமாய் அறிந்து கந்தசாமி சொன்னது சரிதான். அமலாம்பாள் அவன் விஷயத்தில் அவ்வளவு பற்றுதல் வைத்திருப்ப துண்மையானால், அவன் சமரவர்மன் சொற்படி நடவான் என்பது திண்ணம். அப்போது மதிவீரன் எனக்கு நன்மை செய்தவனாவான். நல்லது கோமேதகா, உன் எஜமானன் கருத்தைச் சொல்லி முடித்தனையா?

கோமே :-அவர் மனதில் தற்சமயம் குடிகொண்டிருக்கும் கருத்தை வெளியிட்டேன். ஆனால் ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. என் எஜமானருடைய குணந்தான் தங்களுக்குத் தெரியுமே. அவர் சமயத்துக்குச் சமயம் மாறக் கூடியவர். முன் கோபமுடையவர். தாங்கள் முல்லையூராருடனும் காலாடி வில்லியனுடனும் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தகுந்த ருசுக்கள் கிடைத்துவிட்டால், அவர் என்ன செய்வாரோ, சொல்லமுடியாது. அங்கிருந்து ஒரு விசேஷ செயதியும் வந்திருக்கிறது. காலாடி வில்லியன் கனகவல்லியை விவாகஞ் செய்துகொண்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கள்வர் தலைவன் பரமனாருக்கு ஒரு தூதுவனை அனுப்பியிருப்பதாகவுங் கேள்வி. அது நிசமானால் சமரவர்மர்க்கு கோபமதிகரிக்கும் என்பது நிச்சயம். ஆதலால், அண்ணலே, ஜாக்கிரதையாயிருத்தல்வேண்டும். சந்தர்ப்பத்துக்கேற்ப நடந்து கொள்ளுங்கள். எங்கள் எஜமானருக்குக் கோபமுண்டாகாமல் பார்ப்பது முக்கியமென்பதை மறக்கவேண்டாம்.

விஜய :-கோமேதகா, மந்திரகாட் டதிபதியிடம் வேலை பார்த்துச் சலித்தப்போதும் காலம்வரும், அப்போது விஜயசேனன் உயி

கொடிருந்தால், மாதவாசட் டாண்மனையில் உன்னை பாதுகாக்கக் கூடிய சன்பனெனுநவன் இருக்கிறான் என்று நினைத்துக்கொள். வந்தனம்!

சோமேதகன் விடைபெற்றுக்கொண்டு, அவ்வறையை விட்டகன்றான்.

## அதிகாரம் 27.

### காதலர் சந்தித்தல்.

விஜயசேனனும் சமரவர்மனும் சந்திப்பதற்கு முந்தின நாள் உலகநாதன் வெகு பரபரப்புடன் வேலை செய்துகொண்டிருந்தான். மந்திரநாட்டுப் பிரபுக்களைக்கண்டு பேசினான். அவர்களுக்குச் சன்மான மளிப்பதாகச் சொல்லி, அவர்களைத் தன் வசந் திருப்ப முயன்றான். சமரவர்மனால் ஏதாவது கெடுதலுண்டாவதாயிருந்தால், அவர்களைக்கொண்டு அதைத் தடுத்துவிடலாமென்பது அவன் எண்ணம். அவன் வீடுவீடாய் நுழைந்து மந்திரநாட்டுப் பிரபுக்கள் ஒவ்வொருவரையும் பார்த்தான். சிரகத்தாமனுடைய அநுக்கிரகத்தால் கருணாபரன் மதிவீரனைக்கண்டு பேசும்படி ஏற்பாடு செய்தான்.

மலைநாட்டு வீரர் இருவரும் சந்தித்ததும், "மதிவீரா, நீ இப்போது ஒரு பிரக்கியாதிபெற்ற மனிதனாய் விட்டாய். விஜயசேனனுடைய மலைநாட்டு வில்வீரர் சைனியத்தில் சேர்ந்தது உனக்கநுகூலமென்றே நினைக்கிறேன்." என்றான் கருணாபரன்.

மதிவீரன் தலைகுனிந்த வண்ணம், "மெய்தான், ஐயா. ஆனால் சீக்கிரத்தில் நான் அந்த வேலையினின்றும் விலகிக்கொள்ள வேண்டு மென்றிருக்கிறேன்." என்று பதிலளித்தான்.

கருணாகரன் முகம் வருத்தத்தால் மாறுபட்டது. "ஏ, வாலிபா, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்றபடி இதற்குள்ளாக உன் காரியத்தைச் சீர்படுத்திக்கொள்ளும் வழியைச் செவ்வைப் படுத்திக் கொண்டாயாக்கும். நீ செய்த பிரயாணத்தால் விஜய சேனரைப்பற்றிச் சில கட்டுக் கதைகளைச் சொல்லக் கற்றுக்கொண் டாயாக்கும். அவற்றைச் சமரவர்மருக்குச் சொல்லிக் காரியத்தைக் கொண்டுபோகப்பார்க்கிறாய். பேஷ்! நல்ல பெருந்தன்மை!" என்று வெறுப்புடன் பேசினான்.

மதிவீரன் :-விஜயசேனருக்கு விரோதமாய் நடப்பவன் நா னல்ல. சித்திரவதை செய்தபோதிலும் அவருக்குக் கெடுதலாக ஒரு வார்த்தையும் என் வாயினின்றும் வராது. அவரிடம் நான் சேவை செய்கையில் கண்டதை ஒன்றையும் வெளியிடக்கூடாதென்ற கட்டுப்பாடுண்டென்பதை நான் அறியாதவனல்ல. ஆனால் அந்தச் சேவை எனக்கு வேண்டவே வேண்டாம். அதனால் எதிரி களோடு சண்டை செய்வதொருபுறமிருக்க, நண்பர்களும் ஒளிந் திருந்து எதிர்ப்பார்கள் என்னும் விபத்துக்காளாக வேண்டியிருக்கிறது.

கருணாகரன் :-வாலிபா, நீ சொல்லும் விஷயம் எனக்குந் தெரியும். உனக்கு வழியில் நேர்ந்த விபத்துக்கு விஜயசேனரே காரணம் என்று நினைக்கிறாய்போலும்!

மதி :-ஆபத்தா? உயிரை யொட்டியது. அதிர்ஷ்ட வசத்தால் தப்பித்துக்கொண்டேன். அரசர் அதில் சம்பந்தப்பட்

டப்போ, என்னவோ எனக்குத் தெரியாது. அவர் மனசாட்சிக்கே தெரியும். என் கஷ்டதசையாய்த் திரிகையில், என்னை வரவேற்று ஆதரித்தார். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கவேண்டும். அவருடைய கஷ்ட காலத்தில் அவருக்கு விரோதமாகப் பேசி, அவருடைய கஷ்டத்தை விர்த்தி செய்யமாட்டேன். அவர்மேல கூறுங் குறைகள் நியாய விரோதமாயிருக்கின்றன. அவைகளை எடுத்துச் சொல்வோர் அவருடைய எதிரிகள் என்றும் எனக்குத் தெரியும்.

கருணா:-மதிவீரா, மலைநாட்டு மாந்தரின் குணம் உன்னை விட்டகலுமா? உன மொழிகளைக் கேட்டுச் சந்தோஷிக்கிறேன். அல்லது, உன எண்ணங்கள் அரசருக்குத் தெரியுமா? ஏனெனில் பாவம்! அவர் இப்போதிருக்கும் ஆபத்தான நிலைமையில், அவருக்குதவியாய் நிற்கக் கூடியவர்கள் யார் என்றறிகில் அவருக்கு ஆறுதலைத்தரும்.

மதி:-அவரிடம் நான் சொல்லவில்லை. ஆனால் என் கருத்தை ஜோசியர் அறிவார்.

கருணா:-தம்பி, உன நல்ல எண்ணத்துக்குக் கடவுள் உன்னைக் கடாட்சிப்பாராக. வில்வீரர் சைனியத்தை ஏனிதற்குள் விட்டுவிடவேண்டும்? ஏனெனில் கூடிய சீக்கிரத்தில் பெரும் போர் நிகழும் என்றெதிர்பார்க்கிறேன். அப்போது உன் பராக்கிரமத்தைக் காட்டிப் புகழடையலாமே.

மதி:-பிரபோ, சற்று நில்லும். நான் உம்மிடம் சொல்ல வேண்டியது தோன்றினது. இச்சங்கதிகளை என்னிடமிருந்து தெரிந்துகொண்ட ஒரு பெண் பிள்ளையிருக்கிறாள். அவள் இப்போது மறைவிடத்தில் இருக்கவேண்டும். அவள் சமரவர்மனைப் பார்க்கலாகாது. விஜயசேனருக்கு அவள் கட்டுப்பட்டவளல்லாத

லால், அவளால் அரசருக்குக் கெடுதல் உண்டாகலாம். இரகசியத்தைக் காப்பாற்றவேண்டிய காரணமேயில்லை. ஆதலால் தயவு செய்து சிரகத்தாமனிடம், நான் அவளைக் கண்டு பேச உத்தரவு வாங்கிக்கொடுத்தல் வேண்டும். நான் மட்டும் ஒரு தடவை அவளைப் பார்த்து விட்டால், அவள் இது விஷயத்தில் ஒன்றுமறியாதவள்போல் மௌனஞ்சாதிப்பாள் என்பது திண்ணம். அவள் யாரென்று உமக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவள்தான் அமலாம்பாள் என்னும் உயர்குலமாது.

கருணாபரன் வெகுநேரம் யோசனையிலாழ்ந்தான். பின்னர் தலையை ஒருவாறு அசைத்துக்கொண்டே, "இதன் மர்மம் எனக்கொன்றும் விளங்கவில்லை. அமலாம்பாள் என்னும் உயர்குலமாது! அவளைக்கண்டு பேசவேண்டுமென்கிறாய்! அநுபவமில்லாத மலைக்காட்டிளைஞனாகிய நீ சொல்லுவதுபோல் அம்மாது கேட்பாள் என்று நம்புகிறாய். இது முடியுங் காரியமா? எனக்கென்னவோ சந்தேகம், சந்தேகமே. ஆயினும் சிரகத்தாமனிடம் பேசுகிறேன். சமரவர்மா குணத்தை யவன் அறிந்திருப்பதால், உன் வேண்டுகோளுக் கிணங்குவானென்று நினைக்கிறேன்." என்று தன் தோள்களை யசைத்துக் கொண்டே வெளியிற்சென்றான்.

சில நிமிஷங்கள் கழிந்து கருணாபரன் மீண்டும் மதிவீரன் அறைக்குள் நுழைந்து, "அப்பா, மதிவீரா, சிரகத்தாமனைக் கண்டு பேசினேன். உன் வேண்டுகோளுக் கிணங்குபவனாய்த் தோற்றவில்லை. இந்த இராச்சியத்தின் நன்மையும், அரசரின் கௌரவமும் இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்டிராவிட்டால், அமலாம்பாளின் காலடிச் சுவடுகளை முதலாய் நீ பார்க்கவே முடியாது. ஆனால், மதிவீரா, தைரியத்தைக் கைவிடாதே. காதல் இடையூறுக் கஞ்சாது. நல்லது, உடனே புறப்பட்டு என்னோடு வா, நீ அவளைக் கொஞ்ச நேரந்தான் பார்க்கலாம். ஆனால் அந்த நேரத்தை வீ

லாது உபயோகித்துக்கொள்ளவேண்டுமென்று எனக்கு நன்கறியும்.'' என்று பரிகாசக்குரலில் பேசினன்.

மதிவீரனுக்கு அது அவ்வளவாய்ப் பிடிக்கவில்லை. ஆயினும் அமலாம்பாளை ஏகாந்தமாகக் காண சந்தர்ப்பம் கிடைத்ததாகக் கருதி அகமகிழ்ந்து, ஒன்றும் பேசாமல் கருணைபரரோடு அமலாம்பாளிருக்குமிடஞ் சென்றனர். அங்கே சிரகத்தாமன அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

சிரகத்தாமன்:—ஏ, வாலிபா, உன் பிரயாணத்தில் அறிமுகமான பெண் பிள்ளையைப் பார்க்கவேண்டுமோ?

மதிவீரன்:—ஆம், ஐயா, அம்மாளைத் தனியாய்ப் பார்க்க வேண்டும்.

சிரக:—முடியவே முடியாது. கருணைபரரே, என் நண்பரின் குமாரத்தியாகிய அமலாம்பாள் இவ்விளைஞன்மேல் காதல் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதற்கிடம் கொடுத்தலாகாது. அவளைத் தனியாய்ச் சந்திக்கச் சம்மதியேன்.

மதி:-அப்படியானால், நான் அமலாம்பாளோடு உங்கள் முன்னிலையில் பேசமுடியாது. நான் துணிந்து எதிர்பார்க்கவு முடியாத காரியத்தை நீங்களே சொல்லிவிட்டீர்கள்.

கருணைபரன், ''நண்பா, நீ முன் யோசனையின்றி நடந்துகொண்டிருக்கிறாய். ஆனாலும் சிரகத்தாமரே, இவன் அமலாம்பாளோடு பேசியே தீரவேண்டும். இந்தச் சமயத்தில்தானா தடைகள் செய்வது?'' என்று சிரகத்தாமனைக் கரம் பிடித்திழுத்துக்கொண்டு வெளியே போயினர்.

உடனே அமலாம்பாளும் மதிவீரனிருந்த அறைக்குள் மற்றொரு பக்கத்திலிருந்து வந்து, அவன் தனியாய் நிற்பதைப் பார்த்து, "என் நண்பரே, என்னைக் காப்பாற்றிய மகானுபாவரே, என் அன்பரே!" என்று, தன் கரத்தை நீட்டினாள். மதிவீரன் நீட்டிய கரத்தைப் பிடித்து முத்தமிட்டான். அவள் அவ்வாறு செய்வதற்கிடம் கொடுத்தனளேனும், "அன்பா, நாம் மறுபடியும் சந்திக்க நேர்ந்தால், நீர் என் கரத்தை முத்தி செய்யச் சம்மதியேன்." என்று அவனைக் கண்டிப்பதுபோல் கடைக்கண்ணால் பார்த்துப் புன் சிரிப்புடன் புகன்றாள்.

கடைசியில் அவள் சற்றே விலகி நின்று, "நீர் ஏதோ என்னிடம் கேட்கப் போவதாகக் கருணாகரர் சொன்னார். நியாயமான காரியமா யிருந்தால் நான் கொடுக்க மறுக்கேன் என்று உமக்கே தெரியும். ஓ என் அன்ப, அவசரத்தில் ஒன்றையும் சொல்லிவிடாதிர்." என்று அப்பெண்மணி பயத்தால் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே, "அன்ப, மற்றவர்கள் காதில் விழுவதால் நமக்குக் கெடுதியை யுண்டு பண்ணக் கூடிய தொன்றையும் சொல்லி விடப்போகிறீர்! ஜாக்கிரதை." என்று எச்சரித்தாள்.

மதி:-என் மனதிற் குகந்த மாதரசே! அஞ்சாதே. நான் அவ்வாறு ஒன்றும் பேசிவிடமாட்டேன். உனக்கும் எனக்குமிடையிலிருக்கும் வித்தியாசத்தை நான் அறியாதவனல்ல. என்னைப் போலும் ஏழையொருவன், ஆனால் குலத்திற் குறைந்தவனல்ல, உனது காதலைப் பெற்றேனென்று உனது பந்து மித்திரர் உன்மேல் குறைகூறும்படி நான் வைத்துக்கொள்ளமாட்டேன்.

அமலா:-ஜாக்கிரதை! அதைப்பற்றி இங்கே பேசவே வேண்டாம். நீர் பேசவந்த காரியம் யாது? சொல்லும் நண்பரே.

மதி:-சுயகுலத்தைப் பாராட்டி உனக்கு விரோதமாய் நடந்துகொண்ட ஒருவரை மன்னிக்கும்படி உன்னைக் கேட்கிறேன்.

நான் சொல்வதைக் கொஞ்சங் கவனி. விஜயசேனனை நீ கலகஞ் சகரென்றும், நம்பிக்கை துரோகியென்றும் சொல்லவேயில்லை, அதை நான் மறுக்கப்போகிறதில்லை. இப்போது நீ அவருக்கு விரோதமாய், உன்னை யோடி விடும்படி யாகவோபித்துக் காவாடி விக்கியவரீடஞ் சிக்கும்படி சூழ்ச்சி செய்ததாகச் சாட்சியுங் கொடுப்பையேல், அவரைக் கொன்று விடுவார்கள் அல்லது சிம்மாதனத்தினின்றும் நீக்கிவிடுவார்கள். அப்படிக்கில்லா விட்டால் மந்திரநாட்டுக்கும் மாதவநாட்டுக்கும் போராவது கட்டாயம் நிகழும். அதைத் தடுக்கக் கூடியவள் நீயே.

அமலா:-என்றால் அத்தகைய தீங்கொன்றும் நேராது, நிச்சயம். ஆனால் நான் எவ்வாறு நடந்துகொள்வதென்று சொல்வீரா?

மதி:-உனக்கு நன்றாய்த் தெரிந்ததை மட்டுஞ் சொல்லு, மற்றதொன்றும் பேசாதே. அவர்மேல் குற்றமொன்றும் ருசுவாகாத வரையில், மந்திரநாட்டார் அவரை மாசற்றவராகவே மதிக்க வேண்டும்.

அப்போது மணியடித்தது. "நாம் பிரியவேண்டும் என்பதற் கடையாளம், இந்த மணி. அன்ப, என்னை மறக்காதீர். உம்மையும் நீர் எனக்குச் செய்த உதவியையும் நான் என்றும் மறவேன்." என்று அமலாம்பாள் விசனத்தோடு மொழிந்தாள்.

அதற்குமேல் அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை. பிரிவாற்றாமையால் வருந்தி அவள் மீண்டும் தன்கரத்தை நீட்டினள். மதிவீரன் அதைப்பற்றி முத்தமிட்டான். அப்போது கருணாகரனும், சிரகத்தாமனும் அறைக்குள் வந்தார்கள். சிரகத்தாமன் கோபத்துடன் "அமலா, உடனே உன் அறைக்குப்போ!" என்றான்; அம்மாதரசியும் அப்படியே விரைவில் சென்றாள். அப்போது சிரகத்தாமன் மதிவீரனைப் பார்த்து, "ஏ, வாலிபா, ஒரு நாள் வரும்.

அப்போது அரசர் உன் தயவுக்குக் காத்துக்கொண்டிருக்கப் போவதில்லை. அப்போது ஒருயர்குல மாதைக் காதலிக்கத் துணிந்த உனக்குத் தகுந்த . .'' என்று முடிப்பதற்குள்ளாகக் கருணாகரன் குறுக்கிட்டு, ''இது வல்ல சமயம் இவ்வாறு பேசுவதற்கு. மதிவீரா, உன் விடுதிக்குச் செல். சிரகத்தாமா, கோபத்தை யடக்கு. மதிவீரன் அம்மங்கைக்குச் சமானமானவனே. அவனும் உயர்குலத் துதித்தவன்தான், ஆனால் அவன் வறிஞன் என்பதை மறுக்கேன்'' என்றான்.

சிரகத்தாமன் நடந்துபோனதைப்பற்றிப் பேசுவதால் பயனில்லையென்றும், ஆனால் அவ்விருவரும் இனி சந்திக்கலாகாதென்றும் சொல்லி விடைபெற்றுக்கொண்டான். அப்போது, ''சிரகத்தாமா, எந்தக் காரியத்திலும் அவ்வளவு நிச்சயமாயிருத்தற்கூடாது. என்ன நடக்குமோ பார்ப்போம்.'' என்றான்.

ஏற்கெனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி அன்று சமரவர்மன் தனது மெய்க்காப்பாளர் புடைசூழ கோட்டை கோபுரத்திலிருந்து ஆஸ்தான மண்டபத்துக்குள் நுழைந்தான். அங்கே அமர்ந்திருந்த விஜயசேனன் எழுந்து வெகு காம்பீரத்துடன் நின்றான். அவன் முகத்தில் விளங்கிய அமைதியைக் கண்டதும் வேகமாய் மண்டபத்துக்குள் நுழைந்த சமரவர்மனுடைய தீவிரத்தை ஒருவாறு அடக்கிவிட்டது. அவன் மனதில் கோபமும், பழிவாங்கும் எண்ணமுமிருந்தபோதிலும் விஜயசேனனுடைய பதவிக்கேற்றவாறு அவனை நடத்துவதெனத் தீர்மானித்தான். அவன் குரல் கொஞ்சம் கம்மியிருந்தது, அவயவங்கள் நடுங்கின; முகத்தைச் சுளித்துக் கொண்டும், உதட்டைக் கடித்துக்கொண்டும் அவன் இருந்தமாதிரியில் அவன் மனதில் கோபம் நிறைந்திருந்ததாகத் தெரிந்தது. அரசன் அஞ்சினான், ஆயினும் அமைதியோடு சமரவர்மன் கோபத்தை எதிர்ப்பதெனத் தீர்மானித்தான்.

இருவரும் கோபுரத்தை விட்டு வெளியே வந்தார்கள். பின்னர் முற்றத்தைக் கடந்து ஆஸ்தான மண்டபம் சேர்ந்தனர். அங்கே பதவிக்கேற்றவாறு போடப்பட்டிருந்த ஆசனங்களில் அவரவர் அமர சுமார் இருபது பிரபுக்கள் வீற்றிருந்தனர்.

சமரவர்மன் எழுந்து அரசனை வணங்கி பின்வருமாறு பேசினன். "பிரபுக்களே, சபையோரே, நமது நாட்டில கொஞ்சகாலமாகக் கலகங்களிருந்து வருவது உங்களுக்குத் தெரியும். அமலாம்பாளும் அவள் அத்தையும் நமது நாட்டை விட்டோடி அன்னிய தேசத்தில் அடைக்கலம் புகுந்தனர். அதனுல் நமக்கு அவமானம் நேர்ந்திருக்கிறதென்று நாம் சொல்லவேண்டியதில்லை. முல்லையூரதிபதியாகிய எனது தமையன் அநியாயமாய்க் கொல்லப்பட்டிருக்கிறார். முல்லையூர் வாசிகள் கலகம் விளைத்து வருகிறார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் வல்லபம் மிகுந்த ஒருவர் என்று சொல்லப்படுகிறது. இது உண்மையானல் இக்கஷ்டங்களுக்கெல்லாம் மூல காரணத்தை நாமே அழிக்கலாகாதா?" என்று பற்களைக் கடித்தான். அங்கேயிருந்த பிரபுக்கள் நடுங்கினார்கள். அரசன் முகம் வெளுத்தது. ஆயினும் தைரியத்தைக் கைவிடாமல் விஜயசேனன் சபையோரைப் பார்த்து சொல்வான்:-

"சபையோரே, என் மனதில் உள்ளதைத் திறந்து சொல்லி விடுகிறேன். இவற்றிற்கெல்லாம் காரணம் ஒருவர் என்று சமரவர் குறிப்பிட்டது என்னையே. அவருக்கு விரோதமாக இத்தகைய காரியங்களில் நான் தலையிட்டவனாக இருந்தால், துணிந்து இங்கே வருவேனா? சொல்லுங்கள். முல்லையூரின் சம்பவித்த அக்கிரமங்களுக்குக் காரணமான அயோக்கியர் என் நாமத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் அவ்வாறு செய்வதற்கு நான் அனுமதித்தவனேயல்ல. இரண்டு பேதைமாதர் என்னிடம் தஞ்சமென்று வந்தால் நான் அவர்களை வரவழைத்தேனே

னது பொருள்படுமா? அவர்களை மாதலநாட்டிற்குக் காவலோடு அனுப்புவது மரியாதை யல்லவென்றே முல்லையூர் அதிபதியிடம் ஒப்புவித்தேன். அவர் அம்மாதரையும் அவர்கள் தலைவரையும் சமாதானப்படுத்துவாரென்று நம்பினேன். ஆகவே என் எண்ணங்கள் கண்ணியமானவை; சமரவர்மரின் சந்தேகங்கள் நியாயமானவையல்ல." என்று முடித்தான்.

உடனே சமரவர்மன், "அண்ணலே, இவ்விஷயங்களை விசாரணை செய்யவேண்டும். அதன் பின்னரே ஒருவித முடிவுக்கு வரக்கூடும். அமலாம்பாள் சொல்லப்போவதைச் சற்றே கேட்போமாக." என்றான்.

அவ்விளமாதை சிரகத்தாமன் அழைத்துவந்து சபையில் நிறுத்தினான். அவளை சமரவர்மன் சினந்த முகத்துடன் நோக்கி, "ஏ, பெண்ணே, இரண்டு நாடுகளுக்கு மிடையில் கலகம் உண்டு பண்ணக் காரணமாயிருந்த நீ என்ன சொல்லப் போகிறாய்? அப்படி உட்காரு. உனது ஜென்ம தேசத்தைவிட்டு ஓடினதற்குக் காரணமென்னவென்று சாவதானமாய் சொல், கேட்போம்." என்றான்.

அமலா:-தாங்கள் எனக்கென்றேற்படுத்தியிருந்த புருஷனை மணஞ் செய்துகொள்ள எனக்குப் பிரியமில்லை. அதனால்தான் மாதலநாட்டு மன்னரின் அடைக்கலத்தை நாடினேன்.

சமர:-மாதலநாட்டரசர் உன்னைக் காப்பாற்றுவதாக உறுதிமொழி கிடைத்ததல்லவா?

அமலா:-அவர் காப்பாற்றுவரென்று நினைத்தேன். அப்படியில்லாவிட்டால் அவ்வாறு நடந்து கொண்டிருக்க மாட்டேன்.

அச்சமயத்தில் சமரவர்மன் விஜயசேனனைப் பார்த்து ஒருவாறு புன்னகை கொண்டான். அரசன் அதைக் கவனியாதவன் போலி ருந்த போதிலும் உள்ளத்தில் பயமதிகரித்தது.

அமலாம்பாள், "விஜயசேன மன்னருடைய கள்ளம் எனது இரகசிய அத்தை மூலமாய்த் தெரியவந்தது. அவனுக் குச் செய்தி கொண்டுவந்தவர்கள் சம்பந்தருக்குத்தான் உறவினென்று பின்னால் தெரிந்து கொண்டேன். அவர்களெப்போதும் பஞ்சமா பாதகர் உலகில் கிடைத்தற்கரிது" என்று பயங்கரமான இருளன் முதலியவர்களின் வஞ்சக சூழ்ச்சியை விளக்கியுரைத்து, தாக்கு தியில் செய்தி கொண்டுவந்த ருப்பன் விஜயசேனனுடைய ஆளைப் போல் நடிக்கக்கூடியவன் என்று மொழிந்தாள்.

அமலாம்பாள் பேசி முடித்ததும் எல்லோரும் மௌனமாயிரு ந்தனர். சமரவர்மன் கோபத்தோடு பூமியைப் பார்த்தான். கடை சியில் தலை நிமிர்ந்து, "விஜயசேனர் இம்மாதரை வரவழைக்கவில்லை யென்றால், தனது அரண்மனையில் இவர்களுக்கு ஏன் இடங்கொடுத் தாரென்று சொல்வாரா?" என்று கேட்டான்.

"அவர்கள் கிழமைக் கிரமம் இடங்கொடுத்தேன். ஆனால் நாட் டின்மேல் உமது நண்பராகிய பூபாலனிடம் அவர்களை ஒப்பித்து விட்டேன்," என்று பதிலளித்தான்.

இந்தப் பதிலால் திருப்தியடையாத சமரவர்மன், "விஜயசே னரே, இந்த வெண்மையாது அரசர்க்குள் கலக மூட்டுவதற்கு வழி யில்லாமலிருக்கும் பொருட்டு இவனுக்கு உடனே விசாரம் முடி ப்பது நல்லதல்லவா? சொல்லும்." என்று கேட்டான். இந்தக் கேள்வி பிறக்குமென்று முன்னதாகவே அறிந்திருந்த விஜயசே னன் அமைதியாய் சிரித்தான். அப்போது அமலாம்பாள் தன

இருக்கையை விட்டெழுந்து முன்னோக்கி வந்து சமரவர்மன் பாதத்தில் விழுந்து, "மகாராட்டிர மாவீரனனேலே, தமது அனுமதியின்றி தேசத்தைவிட்டு போனதற்கு என்ன தண்டனை விதித்தபோதிலும் அனுபவிக்கக் காத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய மாளிகை, ஆஸ்திபாஸ்தி முதலியவற்றைத் தங்களிடம் ஒப்பித்துவிடுகிறேன். எனக்கு அன்ன வஸ்திரம் அளித்தால் நான் என் உயிருள்ளளவும் ஏகாந்தமாயிருந்து ஒண்டியாகவே காலத்தைக் கழிக்கிறேன்." என்று மன்றாடினான்.

சமர:-அமலா, எழுந்திரு. உன்னுடைய சொத்துக்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதல்ல என் கருத்து. அதற்கு மாறாய் உனக்கு மேற்கொண்டு அதிகம் அளிப்பேன்.

அமலா:-அந்தோ, ஆண்டவனே, உமது வெறுப்பைவிட என் மைத்துனனுக்கே அதிகமாய் அஞ்சுகிறேன். ஏனெனில்...

சமர:-என்ன, எப்போதும் என் விருப்பத்துக்கு இணங்காம லிருப்பதே உனது வழக்கமோ? உடனே இவ்விடத்தைவிட்டு அப்புறம் போ. பின்னால் பார்த்துக்கொள்ளுகிறேன்.

சேகந்தாமன் அவனை யழைத்துக்கொண்டு வெளியே சென்றான். பின்னர் மதிவீரன் சபை முன் வந்து நின்றான். அவன் தன் மாமன் கொடுத்த ஆடையை அணிந்து வில் வீரர்க்குரிய ஆயுதங்களோடு வணங்கினான். அவன் இளமையும் வனப்பும் அச்சபையாரின் கவனத்தைக் கவர்ந்தன. வஞ்சகனாகிய விஜயசேனன் அவ்விளைஞனைத் தன் காரியத்துக்குத் தெரிந்துகொண்டிருப்பானென்று எவரும் சுலபமாய் நம்பக்கூடியதாயில்லை. சமரவர்மன் கட்டளையிட்டதின்பேரில் அவன் உயர்குல மாதரை முல்லையூருக்கு அழைத்துச் சென்ற விபரத்தைக் கூறினான்.

சயமா :-அரசர் உத்திரவின்படி நடந்தாயா?

மதி :-இல்லை. மாயாவதி நதிக்கரையின் இடது பக்கம் சென்றேன். அவ்வழிதான் மூங்கிலூருக்குச் சமீபத்திலிருக்கிறது.

சயமா :-அவ்வாறு மாறியதற்குக் காரணம் என்ன?

மதி:-ஏனென்றால், எனக்கு வழி காட்டிய மனிதனை நான் நம்பவில்லை.

சயமா :-ஏ, என் கேள்விகளைக் கவனித்துப் பதில் கூறு. சரியான பதில் சொல்லாவிட்டால், தூக்குக்கிரையாவாய், ஜாக்கிரதை. உனக்கு வழிகாட்டியவன் யார்? அவனை யனுப்பினது யார்? அவன்மேல் ஏன் சந்தேகங் கொண்டாய்?

மதி :-அவன் பேர் இருளன். அவனை யனுப்பினது நிரித்தன. எனது பாதுகாவலில் இருந்த மாதரைக் கொடிய வில்லியன் கையில் பிடித்துக் கொடுக்கும் பொருட்டு, அவனாட்களில் ஒருவனாகிய இருளன் சூழ்ச்சி செய்ததை நான் அறிய நேர்ந்தது.

சயமா :-நல்லது, அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்களே, அப்போது விஜயசேனர் அதில் சம்பந்தப்பட்டிருப்பதாகப் பேசிக் கொண்டார்களா?

மதி :-அப்படி அப்பாதகர் பேசிக்கொண்டபோதிலும் நான் நம்புவேனா? அந்த மாதர்களைக் காக்கும்படி அரசர் என்னை அனுப்பியிருக்கிறார். என்னால் கூடிய பிரயாசைப்பட்டு அவருடைய கட்டளையை நிறைவேற்றினேன். அரசர் நல்லெண்ணத்துடன் ஏவினார்; நானும் நல்லெண்ணத்துடன் அவர் உத்திரவின்படி நடந்தேன்.

அப்போது விஜயசேனர் பெருமூச்செறிந்தார். சமரவர்மனுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. "நீ பிரமாணிக்கமுள்ள தூதுவன் என்றெனக்குத் தெரியும். ஏ வாலிபா, நான் சொல்வதைக் கேள். முல்லையூர் தெருக்களில் கலகக்காரரின் தலைவனாகப் பவனி வரும்படி உனக்கு அநுமதி தந்தது யார்? முல்லையூரதிபதியை அநியாயமாய்க் கொன்ற பின்னர் அக்கொலைப்பாதகரிடையில் விஜயசேனருடைய பிரதிநிதிபோல் நீ ஏன் பேசினாய்?" என்று கேட்டான்.

மதி:-முல்லையூரில் நான் விஜயசேனருடைய தூதுவனென்று சொல்லிக் கொள்ளவில்லை. ஜனங்களே என்னை அவ்வாறு மதித்து, நான் என்ன சொல்லி மறுத்தபோதிலும் கேட்கவில்லை. பூபாலருடைய ஆட்களிடம் இதைச் சொல்லி எச்சரித்தேன். ஆனால் நான் தூதுவன்போல் பின்னால் நடித்தது அமலாம்பாளையும் என்னையும் காப்பாற்றிக் கொள்வதற்கே. ஆகவே முல்லையூர் குடிகளுக்கு நான் மாதலகாட்டிலிருந்து ஒரு செய்தியும் கொண்டு போகவுமில்லை, அங்கே கலகத்தை யாதரிக்கவுமில்லை.

சேர:-வாலிபா, நீ நடந்துகொண்ட விதம் மெச்சத்தக்கதே. நீ செய்த காரியத்துக்காக விஜயசேனர் மீது குறை கூறுவது அநியாய விரோதமாகும்.

அங்கே இருந்த மற்ற பிரபுக்களும் கடைசியில் கூறிய மொழிகளை யாமோதிப்பதுபோல தலையை யசைத்துக் கொண்டனர். விஜயசேனன் முகம் மலர்ந்தது. சமரவர்மனுக்கோ கோபம் அதிகரித்து அங்கிருந்தவர்களை விறைக்கப் பார்த்தான். என்ன நேருமோ என்று எல்லோரும் அஞ்சிக் கொண்டிருக்கையில், கோமேத

கன் வந்து முல்லையூரிலிருந்து யாரோ ஒரு தூதன் வந்திருப்பதாக மொழிந்தான். உடனே சமரவர்மன் அவனை யழைத்து வரும்படி கட்டளையிட்டான்.

கலகக்காரரின் தூதுவன் யாராயிருக்கலாம் என்றறிய எல்லோரும் ஆவலாயிருந்தனர். அவன் அணிந்திருந்த உடுப்பைக் கொண்டே காலாடி வில்லியனுடைய ஆள் என்று தெரிந்தது.

"ஏ, நீ யார்?" என்று சமரவர்மன் கேட்டான்.

தூதுவன்:-முல்லையூர் அதிபதியாகிய வில்லியப் பிரபுவின தூதுவன் யான். அவர்தான் கனகவல்லி யம்மாளை மணந்தவர்.

தூதுவனுடைய தைரியத்தைக் கண்டாச்சரியப்பட்ட சமரவர்மன் திகைத்து நின்றான். அவன் மனதிலெழுந்த கோபாவேசத்தை வெளிக்காட்ட மனமில்லாதவனாய்த் தலைகுனிந்த வண்ணமிருந்தான்.

தூதுவன்:-நீர் இதற்குமுன் செய்ததுபோல் அனாவசியமாகிய முல்லையூர் விஷயத்தில் தலையிடக் கூடாதென்று எனது எஜமானர் பேரால் சொல்லுகிறேன். மேலும் எங்கள் எஜமானரை முல்லையூர் அதிகாரியாக நீர் அங்கீகரிக்கவேண்டும்.

சமர:-முடிந்ததா? அல்லது இன்னும் ஏதாவது சொல்லப் போகிறாயா?

தூதுவன்:-முடியவில்லை. கனகவல்லிக்குச் சொந்தமான கோட்டையில் நீர் வைத்திருக்குஞ் சேனையை எடுத்துவிட்டு, அவர்களுக்குச் சேர வேண்டியதை எங்கள் எஜமானரிடங் கொடுத்து விடவேண்டும்.

சமரவர்மன் "என்ன உதாரகுணம்! பேஷ்! உம்முடையன் ஸ்தானத்தில் நானிருக்கப் பிரியப்படேன். நம்மவர் அவனுக்கு

வேண்டிய அளவு கயிறு கொடுப்பது என்னத்துக்கென்று அம்மூடனுக்குத் தெரியவில்லை. அக்கயிற்றைக் கொண்டு அவன் தூக்கில் தொங்கவேண்டியதுதான்." என்று அங்கு நின்ற விதூஷகன் சிரகத்தாமனிடம் சொன்னான்.

தூதுவன்:-மற்றுமொரு செய்தி. எங்கள் எஜமானருடைய நண்பராகிய விஜயசேன மகாராஜாவை நீர் சிறையிலடைத்திருப்பதாக வதந்தி. இஃதுண்மையானால், அவரை உடனே விடுதலை செய்யவேண்டும். இல்லையேல் அவருடைய பகைக் குட்படவேண்டும்.

சமர:-முடிந்ததா? இவ்வளவுதானா அல்லது இன்னும் ஏதாவதுண்டா?

தூதுவன்:-இவ்வளவுதான். தங்களுடைய பதிலுக் கெதிர் பார்த்திருக்கிறேன்.

"இப்போது பரலோகமறிய........." என்று சமரவர்மன் முடிப்பதற்குள்ளாக, விஜயசேனன் தனது ஆசனம் விட்டெழுந்து அதிகாரத் தொனியுடன், "நண்பரே, மன்னிக்க வேண்டும். இந்தக் கள்ளப் பயலுடைய மொழிகளுக்கு முதலில் பதிலளிப்பது என் கடமை. ஏ, காலாடி வில்லியனிடம் போய்ச் சொல். விஜயசேன மகாராஜா தனது பந்துவாகிய முல்லையூரதிபதியைக் கொன்றதற்காகப் பழிவாங்கும் பொருட்டு, சைனியத்துடன் முல்லையூருக்கு வருகிறார் என்று சொல். வில்லியன் அவர் கையில் சிக்கினால், அவன் அவரை நண்பரென்றழைத்த இறுமாப்புக்காக, அவனைத் தூக்கில் தொங்கவைத்து வேடிக்கைப் பார்ப்பார் என்று சொல்." என்று மொழிந்தான்.

"ஏ, நானும் அவனைச் சும்மா விடேன் என்று சொல், போ. ஆயினும் இரு, போகாதே. வீரரே இவனைக் கொண்டுபோய் நையப் புடைத்துத் துரத்தி விடுங்கள்." என்று சமரவர்மன் மொழிந்தான்.

தூதவன் பயத்தால் நடுங்கினான். ஏனெனில் அப்போது இருந்த வேட்டை நாய்களை மகேந்திர நாட்டுப்பதியின் கட்டளையைத் தெரிந்துகொண்டவைபோல் குலைத்தன.

"நல்ல வேலை. நாய்களை அவிழ்த்து விடுங்கள். அவனைப் போகவிட்டுத் துரத்திச் செல்லட்டும்." என்றான் மகேந்திர நாட்டுப் பதி.

"இருக்கட்டும். என்னை ஒரு காட்டு மிருகமாய் மதித்து விட்டீர்கள்! ஆயினும் நான் கொஞ்ச தூரம் ஓடினபின் நாய்களை விடுவீர்களா?" என்று அத்தூதவன் தைரியமாய்க் கேட்டான்.

"நீ ஒரு புழுவுக்குச் சமானம். என்றாலும் வேண்டுமானால் 60 கெஜ தூரம் ஓடு." என்று சமரவர்மன் சபையோரைப் பார்த்து, "வாருங்கள்." என்று மொழிந்தான். சபை கலைந்தது. வேடிக்கை பார்ப்பதற்காக எல்லோரும் வெளியில் வந்தனர்.

தூதவன் பயத்தால் தன்னப்பட்டு ஓட்டம் பிடித்தான். கொஞ்ச தூரஞ் சென்றதும் நாய்களை அவிழ்த்து விட்டார்கள். அவை அவனைத் துரத்திக்கொண்டு காற்றினும் வேகமாய் ஓடின. அங்கே இருந்தவர்கள் எல்லாரிலும் விஜயசேனனே அந்த வேடிக்கையைப் பார்த்து அதிக உவப்படைந்தான். ஏனென்றால் அந்த விதத்திலாவது சமரவர்மனுடைய கோபம் ஒருவாறு அடங்குமென்பது அவன் நம்பிக்கை. அவன் சந்தோஷத்தால் பூரித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்; தன் கரத்தை சமரவர்மன் தோளில் போட்டுக்கொண்டு வேடிக்கைப் பார்த்தான்.

கடைசியில் நாய்கள் தூதனைப்பற்றி கிழித்துக் கடித்துத் தின்றன. "அவைகளைக்கொண்டு போங்கள். அவன் நன்றாய் ஓடி

யைபயால் அவனைக் கொல்வது அழகல்ல." என்று சமரவர்மன் சொல்லியிராவிட்டால் அந்நாய்கள் அவனைக் கொன்றே யிருக்கும்.

சில உத்தியோகஸ்தர் நாய்களைப் பிடித்துக்கொள்வதில் கவனஞ் செலுத்தினார்கள். அப்போது சமரவர்மனும் பராக்காயிருந்தமையால், விஜயசேனன் செய்வதைக் கவனிக்கவில்லை. உலகநாதன் அரசன் பக்கம் வந்து, "ஆதவன் குறவனாகிய இருளன் என்று தெரிந்துகொண்டேன். அவன் சமரவர்மனோடு பேசலாகாது." என்று அவன் காதில் ஓதினான்.

"செத்தவர்கள் கோள்குண்டுணி பேசமாட்டார்கள்." என்று அரசன் மொழிந்தான்.

உலகநாதனுடைய தூண்டுதலால் கிரீத்தன் என்னும் காவல் தலைவன், விஜயசேனன், சமரவர்மன் முதலியோர் முன் வந்து நின்று, "ஐயன்மீர், அப்பயலை என்னிடம் ஒப்புவிக்கக் கோருகிறேன். அவன் மாதல நாட்டைச் சேர்ந்தவன். தப்பியோடிய குற்றவாளி. அநேக குற்றங்களுக்காக அவனைத் தேடிக்கொண்டிருக்கிறேன்." என்று பணிவாய் மொழிந்தான்.

"போதுமப்பா, போதும். மாதலநாட்டு மன்னவருக்கு அவன் சொந்தமானவன். நீங்கள் அவனை என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்டான் சமரவர்மன்.

"என் இஷ்டத்துக்கு விட்டுவிட்டால் அவனைக் கழுத்தில் சுருக்கிட்டு மரத்தில் தொங்கவிடுவதைப் பார்க்க எனக்குப் பிரியம்." என்று விஜயசேனன் வேடிக்கையாய் மொழிந்தான்.

சமரவர்மனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "விஜயசேனரே; நீர் வேடிக்கையான தோழர்தான். நீர் அப்படியே உண்மைக்குத் தாரமுடைய அரசராயிருந்தால், எவ்வளவோ, நன்றாயிருக்கும்!

ளாம் இருவரும் [illegible] தும் மறப்பதில்லை.'' என்று எழுதியிருந்தான்.

விஜய:-இப்போதுதான் என்ன, நாம் அவ்வாறு [illegible] முடியாதா? [illegible] ஒரு [illegible] அதன்படியே [illegible] கூறுகிறேன்.

சமர:-இல்லை, [illegible] வில்லியனாயம், [illegible] எனக்குத் துணையாய் இருப்பீரா?

விஜய:-என் சைனியங்களைக் கூடத் தருவேன்.

சமர:-உமது சைனிய முழுவதும் வேண்டியதில்லை. [illegible] வில்வீரரும் மற்றுஞ் சில சாதாரண வீரரும் இருந்தால் போதுமானது. பெருஞ் சேனை வந்தால் ... ...

விஜய:-விபத்தாய் முடியுமோ? [illegible] எனக்குச் [illegible] தெரியாதோ? சொல்லு.

சமர:-துரைராஜனுக்கு [illegible] செய்துவிட யோசித்திருக்கிறேன். உமக்குச் சம்மதந்தானா?

விஜய:-சமரஸிம்ம, இந்த காரியத்தில் நீ [illegible] யல்ல. துரைராஜன் என் [illegible] செய்து [illegible] செய்து விட்டேன். இது [illegible] பிடிவாதஞ் செய்யாதே. இதைவிட்டு மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவோம்.

சமர:-அதைகளைப் பற்றி [illegible] தில் பேசுவ. ஆனால் இந்த விஷயத்துக்கு நீர் சம்மதியாவிட்டால், உமது [illegible] வேண்டியதுதான்.

விஜய:-என்ன செய்கிறது? நீதான் ஒரே பிடியாயிருக்கிறாய். உன் இஷ்டப்படியே யாகட்டும். ஆனால் இருதாரத்தாரும் கல்யாணத்துக்குச் சம்மதித்து விட்டால் எனக்குஞ் சம்மதமே.

சமரா:-மற்ற விஷயங்களை எனது மந்திரிமார் பார்த்துக்கொள்வார்கள். நாமிருவரும் இனிமேல் நண்பரே.

விஜய:-தேவன் ஸ்துதிக்கப்படுவாராக! (உலகநாதனைப் பார்த்து.) ஏ, குறப்பயலைத் தண்டிக்கும்படி திரித்தனுக்குச் சொல்லு. சீக்கிரம் வேலையை முடிக்கட்டும்.

அரசரிருவரும் சமாதானமாய்ப் போய்விட்டார்களானபடியால், விஜயசேனன் சிறைவாசம் நீங்கி, தாராளமாய் எங்கும் போகவும் வரவுமாக இருந்தான். ஆயினும் தன் மேலிருக்குஞ் சந்தேகம் முற்றும் நீங்கவில்லையென்று அவனுக்குத் தெரியும்.

அதிகாரம் வகிப்போர் சில சமயங்களில் தங்கள் மனோரதத்தை நிறைவேற்றக் கீழோர் உதவியை நாடுகிறார்கள். காரியம் முடிந்ததும், அவர்கள் எக்கேடு கெட்டால்தான் என்ன என்று இருந்துவிடுகிறார்கள். இருளன் என்னும் குறப்பயலின் கதியுமதுவே. திரித்தன் தன்னாட்களுடன் குறவனைக் கொலைக்களம் கூட்டிச் சென்றான்.

காட்டையணுகி, அங்கேயிருந்த ஒரு மரத்தில் அவனைத் தூக்கவிட ஆயத்தஞ் செய்தார்கள். அதுவன் தனக்கு வழிகாட்டியாய் வந்த குறப்பயலெனச் சந்தேகித்து மதிவீரன் அவர்கள் பின்னாற் சென்றான். அப்போது இருளன் அவனைப் பார்த்துவிட்டான்.

உடனே கொலைஞரைப் பார்த்து அந்த மலைநாட்டு வில்வீரனோடு சில நிமிஷங்கள் பேச உத்தாரமளிக்க வேண்டுமென்று கேட்க, அவர்களும் மதிவீரன் அரசனுக்கு வேண்டியவனெனத்

தெரிந்துகொண்டு, அவன் வேண்டுகோளுக் கிணங்கினர். பின்னர் அவன் தனிமையிற் பேசவேண்டுமெனச் சில பொன் நாணயங்களை அவர்களுக்குக் கொடுக்கவே அவர்களும் சம்மதித்து, மதிவீரனை யழைத்து அவனிடம் விட்டு அப்பால்சென்றனர்.

"ஐயா, ஒரு விண்ணப்பம்!" என்றான் இருளன்.

"அஃதென்ன? சொல். உன் திருட்டுத்தனத்தை நான் அறியாதவனல்ல." என்றான் மதிவீரன்.

இருளன்:-நீர் என் சகோதரனைக் கிரங்கியதை முன்னிட்டு, நான் உம்மை நேசித்தேன். பணக்காரப் பெண்ணை நீர் கல்யாணஞ் செய்துகொள்ள நான் உதவி செய்திருப்பேன். ஆனால் அது தவறிவிட்டது. காலாடி வில்லியனுடையவும் அரசருடையவும் சன்மானங்களைப் பெறவிரும்பியே நானிங்கு வந்தேன். அரசரிடம் ஒரு முக்கிய இரகசியஞ் சொல்ல வேண்டியிருக்கிறது.

மதி:-பணத்துக்காகவா இவ்வாறு துணிந்தாய்?

இருளன்:-என்ன செய்கிறது? அதுவே என் பிழைப்பு. காலாடி வில்லியன் முன்னொரு தடவை நாதி மகேசம்மாள் மூலமாய அரசருக்குச் செய்தி சொல்லி யனுப்பினான். அச்செய்தியை ஜோசியன் தெரிந்துகொண்டு, தனது ஜோசியத் திறமையை அரசனிடங் காட்டினான். ஆனால் நான் இப்போது சொல்வதைக் கேளும். காலாடி வில்லியன் பூபாலர் பணத்தைக்கொண்டு பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டிருக்கிறான். ஆனால் அவனுக்குச் சமரவர்மனோடு போர் புரியப் பிரியமில்லை. முல்லையூர் முற்றுகையிலும் அவன் கெலிக்கப் போகிறதில்லை. அவன் ஏற்பாடு என்னவென்றால் சமரவர்மனை முல்லையூர் முன் பாளையம் இறங்கும்படி விட்டு, இரவில் எதிர்க்கவேண்டுமென்பதே. மாதலநாட்டு வீரருடைமைத்

தரித்த மனிதரைக்கொண்டு, சமரவர்மனை மயக்கி, இரா வேளையில் குழப்பத்தை யுண்டு பண்ணிவிட்டால், கோட்டைக்குள் மாதல சாட்டார் அநேகர் இருப்பதாக அவன் நினைத்துக் கலங்க நேரிடும். விஜயசேனர் தம்மிடம் இருக்கும் வீரரைக் கொண்டு உதவி செய்தால் சமரவர்மனைத் தோற்கடித்து விடலாம் என்பது வில்லியன் எண்ணம். இதுதான் எனது இரகசியம். இதை நீர் எப்படி வேண்டுமானாலும் உபயோகித்துக் கொள்ளும்.

மதி :-இது ஒரு முக்கிய செய்திதான். வேறேதேனும் உண்டா? சொல், நேரமாகிறது.

இருளன் :-இதோ ஒரு கடிதம் காலாடி வில்லியனுடைய பேதை மனைவியிடமிருந்து கொண்டுவந்திருக்கிறேன். இதை விலாசதாரிடம் சேர்த்துவிடவேண்டும். இதை நீர் மனமுவந்து செய்வீர் என்றெனக்குத் தெரியும்.

மதிவீரன் வருத்தத்தோடு அவனை விட்டகன்றான். இருளனை உடனே கொலைஞர் தூக்கிலிட்டு யமனுலகுக் கனுப்பினர்.

---

## அதிகாரம் 29.

---

### நல்ல வெகுமதி.

மதிவீரன் பரமனூருக்குத் திரும்பி வந்தபோது அங்கே அரசவை கூடி ஆலோசனை நடந்துகொண்டிருந்தது. அவனுடைய எதிர் கால வாழ்வு அதன் முடிவை பொருத்திருந்தது. முல்லையூருக்கு படை

யெடுத்துப் போக எத்தனை வீரர் வேண்டுமென்பதைப்பற்றி விஜய சேனன் சமரவர்மனோடு கலந்து ஆலோசித்துக் கொண்டிருந்தான். மாதலநாட்டார் அநேகரை தன்னோடு அழைத்துப் போகலாகாது என்னும் எண்ணம் சமரவர்மனுக்கு இருப்பதாக அரசன் நிச்சய மாய் தெரிந்துகொண்டான். எப்படியாவது அவனுடைய நல்ல எண்ணத்தை சம்பாதிப்பதே சரியென்னும் கவலை அரசன் மனதில் போராடிற்று.

விஜயசேனன் சமரவர்மனுக்கு எவ்வளவுதான் பணிந்து போனபோதிலும் கந்தசாமியோடு கலந்து பாலசுந்தரம் தன்னைக் காட்டிக் கொடுத்ததற்காக அவன்மேல் பழிவாங்க வேண்டுமென்று ஆவலாயிருந்தான். மாதலநாட்டு சேனைகளை திரட்டுவதற்காக உத் திரவுபெற்று திரிந்தனை ஏவி பாலசுந்தரத்தைப் பிடித்து சிறையி லடைக்கும்படியாக அரசன் கட்டளையிட்டான்.

யுத்தத்திற்கு யாவும் சித்தமாயின. பின், விஜயசேனனை மந்திரி ருட்டிபதி யழைத்து துரைராஜனுக்கும் அமலாம்பாளுக்கும் நடக் கப்போகும் விவாகத்தை பகிரங்கமாய் அங்கீகரிக்கும்படி கேட் டான். விஜயசேனன் பெருமூச்செறிந்து அதற்கு உடன்பட்டான்.

“சேகத்தாமன் துரைராஜனைக் கண்டு பேசினான். துரைரா ஜன் ராஜகுடும்பத்தில் சம்பந்தம் செய்யும் கௌரவத்தைப்பற்றி இஞ்சித்தேனும் கவலை யில்லாதவனாய் அமலாம்பாளை கலியாணம் செய்யத் தயாராயிருக்கிறான்,” என்றான் சமரவர்மன்.

“நன்றியில்லாப் பயல்! உமது விருப்பத்தின்படியே யாகட் டும். ஆனால் அமலாம்பாளின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டீ ரா”? என்று அரசன் கேட்டான்.

"அதைப்பற்றி உமக்கேன் கவலை!" என்று சமரவர்மன் சொல்ல, துரைராஜனும் அமலாம்பாளும் அங்கே வந்தனர். சமரவர்மன் அவர்கள் சம்மதத்தை விசாரித்துக் கொண்டிருந்தான். அப்போது விஜயசேனன் மௌனமாயிருந்தான். மாதலநாட்டுக்கும் மந்திரநாட்டுக்கும் இருக்கவேண்டிய சிநேகப்பான்மைக்கு இந்த விவாகம் அவசியம் போலும்!

அமலாம்பாளை விவாகம் செய்யப் போவதால் துரைராஜன் மனதில் எழுந்த ஆனந்தத்தை விஜயசேனனுக்கு வெளிக்காட்டாமல் மறைக்கவேண்டுமென அவன் எவ்வளவுதான் முயன்றும் பயன்படவில்லை. அந்த மகிழ்ச்சியை ஒருவாறு அடக்கிக்கொண்டு தனது அண்ணல் கட்டளையின் பிரகாரம் நடப்பதே தனது கடமை என்று சொல்லி நின்றான்.

"துரைராஜா, என் குடும்பத்தில் பெண் கொள்ளும்படி உனக்கு ஏற்பாடு செய்திருப்பதை நான் ஞாபகப்படுத்த வேண்டியது அனாவசியமென்று நினைக்கிறேன். ஆனால் வேறு வகையான விவாகம் எனக்கும் எனது நண்பருக்கும் இருக்கவேண்டிய சிநேகப்பான்மைக்கு இன்றியமையாதது என நினைப்பதால் எனது ஏற்பாடுகளை நான் விட்டுக்கொடுக்க வேண்டியதுதான்," என்றான் விஜயசேனன்.

துரைராஜன் முழந்தாட்படியிட்டு அவனைப் பாராமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு அரசனது கரத்தைப்பற்றி முத்தமிட்டான்.

சமரவர்மன் அமலாம்பாள் பக்கம் திரும்பி அவளிடம் தான் செய்திருக்கும் ஏற்பாட்டைக் கூறினான்.

"அண்ணலே, தங்கள் கட்டளையின்படி நான் நடக்கக் காத்திருக்கிறேன்." என்று அவ்விளமாது தைரியமாய் மொழிகையில்

அவளை மேற்கொண்டு ஒன்றும் பேசவிடாமல், "போதும், போதும். மற்றவைகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்." என்று சமரவர்மன் விஜயசேனனைப் பார்த்து "அரசே, இன்று பிற்பகல் வேட்டைக்குப் போகலாமா?" என்று வினவினான்.

நமது இளம்பாவை சமரவர்மன் தனது மனதிலிருப்பதைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ளவில்லையென்று கண்டாள். உடனே அவனைப் பார்த்து, "அண்ணலே, நான் சொல்வதை முற்றும் கேளும். என் சொத்தை எல்லாம் உங்கள் பாதத்தில் சமர்ப்பித்து விடுகிறேன். அடியாள் நடத்தை அவைகளை வைத்திருப்பதற்கு யோக்கியதையல்ல என்று நீங்கள் நினைத்தால் அவைகளை உங்களிடம் ஒப்புவித்துவிடுகிறேன்," என்று பணிவாய் மொழிந்தாள்.

"என்ன சொன்னான்? யாரிடம் பேசுகிறாயென்று இம்மூடப் பெண் அறியவில்லைபோலும்!" என்று சமரவர்மன் கோபங்கொண்டு காலால் பூமியை உதைத்தான்.

அவன் பயமுறுத்தலுக்கு அஞ்சாத இளங்கன்னிகை, "ஆண்டவனே, என் பூமியின்மீதுதான் தங்களுக்கு அதிகாரமுண்டு. அதைக் கொடுத்துவிட நான் தயாராயிருக்கிறேன். ஆனால் தங்களுக்கு என் தேகத்தின்மீது யாதொரு அதிகாரமுமில்லை. நான் உலகத்தைத் துறந்து சன்னியாசம் மேற்கொள்ள விரும்புகிறேன்." என்று மொழிந்தாள்.

அப்போது மந்திரகாட்டதிபதிக்குண்டான ஆத்திரத்துக்கும் ஆச்சரியத்துக்கும் அளவே இல்லை. "நீ சொல்வது சுத்தப் பொய். நீ ஏதோ கள்ளத்தனமான எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு இவ்வாறு பேசுகிறாய். துரைராஜன் பிரபுவே, இவளை நீரே மணந்துகொள்ளீர். இது நிச்சயம். அவசியமானால் நானே

அவள் காதைப் பிடித்து இழுத்துக் கொண்டுவந்து உம்மிடம் சேர்ப்பேன்." என்று கூவினான்.

அங்கே மௌனமாய் நின்ற சீரகத்தாமன் மனைவி தன்னைப் போலும் ஒருமங்கை அவமானத்துக்குள்ளாகி வருந்துவதைக் காணச் சகியாமல், "அண்ணலே, தாங்கள் மொழிந்தது தங்கள் பதவிக் கேற்றதல்ல. ஒரு பெண்பிள்ளையைப் பலவந்தமாய் விவாகம் செய்துகொடுத்தல் அநியாயமாகும்." என்று மொழிந்தாள்.

உடனே பாவகன் எழுந்து, "துரைராஜன் பிரபுவும் அமலாம்பாள் விருப்பத்துக்கு விரோதமாய் அவளை விவாகம் செய்துகொள்வது அவருடைய கௌரவத்துக்கு அழகாகாது." என்றான்.

"துரைராஜா, அவள் எனக்குக் கீழ்ப்படிதல் அவசியம் என்னும் பாடத்தை அவளுக்குக் கற்றுக்கொடுக்கிறேன் பார்." என்று சமரவர்மன் தடுத்துச் சொன்னான்.

"அண்ணலே, நீங்கள் சொல்வதற்கு மாறாய்ப் பேசுகிறேன் என்று கோபம் வேண்டாம். பகிரங்கமாக அப்பெண்மணி என்னை விரும்பவில்லை என்று சொன்ன பிறகு நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்வதிலும் அபகீர்த்தி வேறு வேண்டுமோ?" என்று துரைராஜன் பணிவாய் மொழிந்தான்.

சமரவர்மன் துரைராஜனையும், விஜயசேனனையும் கோபாவேசத்துடன் நோக்கினான். அவன் கொண்ட எண்ணம் நிறைவேறாமல் போனதற்காக விஜயசேனன் அந்தரங்கத்தில் சந்தோஷமாயிருப்பான் என்னும் நினைவு அவன் மனவெரிச்சலை அதிகமாக்கிற்று.

அவன் தனது காரியதரிசியைப் பார்த்து, "கீழ்ப்படிதலின்றித் தனது அரசனையே எதிர்க்கத் துணிந்த இந்தப் பதிவிரதையைச் சிறை

யிலடைத்து, அவளுடைய ஆஸ்தி யனைத்தையும் தனக்குத்தனது சேர்த்துக்கொள்வதென்று உத்திரவு எழுது." என்றான்.

எல்லோரும் மௌனமா யிருந்தனர். பின்னர் சிரகத்தாமன் எழுந்து, "அண்ணலே, தாங்கள் செய்வதை யோசித்துச் செய்யும். மந்திராட்டிக் கவமதிப் பொன்றும் உண்டாக்கலாகாது. அமலாம்பாள் தப்பிதஞ் செய்திருந்தால், அவள் பதவிக் கேற்ப, அவளைத் தண்டியுங்கள்." என்று பணிவாய்க் கூறினன்.

சமரவர்மன் சற்றே யோசனை செய்தான். தன்னை யோட்டுவோனுக்குப் பணிந்து நடப்பதா அல்லது அவனை எதிர்த்துத் தனது கொம்புகளால் தூக்கி யெறிவதா என்னும் யோசனையுடன் முறைத்துப் பார்க்கும் காளை மாட்டைப்போல் சிற்றரசன் சிரகத்தாமனைப் பார்த்தான். தனது மந்திராலோசனை சபையார் சிரகத்தாமன் சொன்னதை ஆதரிக்கும் எண்ணமுடையவர்களா யிருப்பதாகத் தெரிந்துகொண்டான். தான் அவசரப்பட்டு மொழிந்ததை பொருத்தமுடையனவல்ல வென்றறிய அவனுக்கே வெட்கமாயிருந்தது.

கடைசியில், "சிரகத்தாமா, நீ சொல்வது சரிதான். நான் அவசரப்பட்டு மொழிந்து விட்டேன். நான் சொல்வதைக் கேள். அவன் முல்லையூரக் கோடியபிர பூபாலருடைய அகால மரணத்துக்கு மூல காரணம். ஆதலால் காலாடி வில்லியனுடைய சிரத்தைக் கொய்துகொண்டு வருகிறவனே அமலாம்பாள் மணாளனாவான். அவனுங் கூடாதென்று அவள் மறுப்பாளேல், அவளுடைய ஆஸ்தியை அவனுக்குக் கொடுத்துவிடுவது அநீதியாகாது. பிறகு அவள் தன்னிஷ்டப்படி நடந்துகொள்ளட்டும்." என்று காம்பீரமாய் மொழிந்தான்.

"ஐயனே, தங்களுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ் செய்து மரித்தவரின் புத்திரி நான் என்பதை யோசித்துப் பாரும். என்னைப் போரில் வெற்றிபெறும் எந்த வீரனுக்கேனும் மணம்புரிவிக்கத் துணிந்தது நீதியாகுமா?" என்று அமலாம்பாள் அமைதியுடன் கேட்டாள்.

"உன் தந்தையை முன்னிட்டுச் சொல்லுகிறேன். உன்னை விவாகஞ் செய்துகொள்பவன் உயர் குலத் துதித்த சுத்த வீரனுயிருத்தல் வேண்டும். அவன் ஏழையா யிருந்தால் அவசியமில்லை. இதுதான் எனது முடிவான தீர்மானம்." என்று சமரவர்மன் சொன்னான்.

இந்த நிபந்தனை எல்லோருக்கும் பிடித்திருந்தது. அமலாம்பாள் அதற்குமேல் ஒன்றும் சொல்வதற்கில்லை. தனது சபையோர் தன் தீர்மானத்தை யாமோதிப்பதாக உணர்ந்த சமரவர்மன் மனவெரிச்சல் தணிந்தது.

"எனக்கு விவாகமாய்விட்டது. ஆயினும் காலாடி வில்லியன் சிரத்தை நானே கொய்து கொண்டுவர முயல்வேன்." என்றான் சிரகத்தாமன்.

"சிரகத்தாமா, அப்படியே செய். நீ வெற்றியடைந்தால் அமலாம்பாள் கரத்தைப் பிடித்து உனக்கு வேண்டிய பிரபுவுக் களிக்கலாமன்றோ?" என்று சமரவர்மன் வேடிக்கையாகப் பேசினான்.

"மாதல நாட்டுப் பிரபுக்கள் இந்த ஏற்பாட்டினின்றும் விலக்கப்பட்டவர்கள் அல்லவே?" என்று பாவகன் கேட்டான்.

"பாவகா, அப்படிக் கொன்றுமில்லை. அமலாம்பாளை மணம்புரியும் மாதல நாட்டான் மந்திரநாட்டானுதல் வேண்டும்." என்று சமரவர்மன் விடை பகர்ந்தான்.

"போதும். நான் ஒருபோதும் மந்திரகாட்டான் ஆகேன், மாதலகாட்டிலேயே சாவேன். ஆயினும் அம்மாதரசியின் சார்பாக நானும் ஒரு கை பார்க்கிறேன்." என்றான் பாலகன்.

சீரகத்தாமன் மனைவி அமலாம்பாளைத் தன் அருகில் அழைத்து ஆறுதல் மொழி கூறினான். அவள் மனதுக்குகந்த மாப்பிள்ளையே சுந்த வீரனுடைப் போரில் வெற்றியடைந்து காலாடி வில்லியன் சிரத்தைக் கொண்டுவரவுங் கூடும் என்று அவளைத் தேற்றினான். காதல் சமயத்தில் துரும்பையுந் துணையாகப் பிடித்தல் கூடுமன்றோ? இந்த நம்பிக்கை யொன்றே அப்பாலகையின் மனச் சஞ்சலத்தை ஒருவாறு போக்கவல்ல கருவியா யிருந்தது.

---

## அதிகாரம் 30.

### போர் நிகழ்ச்சி.

பாலசுந்தரம் சிறையி லடைக்கப்பட்டு வருந்துவதாக அறிந்து விஜயசேனன் சந்தோஷித்தான். சங்கேதப்படி அவன் ஒரு சிறிய சைனியத்துடன் சில நாளைக்குப் பிறகு சமரவர்மனோடு வந்து சேர்ந்து கொண்டான். தனது மகளை துரைராஜனுக்கு விவாகஞ்செய்து வைத்தலிலே யென்னும் தீர்மானத்துடன் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். தான் தனது பிரபுக்களுடன் சமரவர்மனுக்கடியில் சேவை செய்ய நேர்ந்ததற்கு வருந்தினானேனும் நாளடைவில் தனது நிலைமை சீர்படுமென்னும் நம்பிக்கை அவனை விட்டகலவில்லை.

அறுவடை காலம் முடிந்த பிறகு ஒரு நாள் விஜயசேனனும், சமரவர்மனும் தங்கள் சைனியங்களுடன் பரமனூரிலிருந்து முல்லையூருக்குப் புறப்பட்டார்கள். சேனாவீரர் பரமனூர் ராஜ வீதியில் போய்க்கொண்டிருக்கையில் உப்பரிகைகளிலிருந்து உயர்குல மாதர் பலர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களில் நமது அமலாம்பாளும் ஒருவள். அவ்வீரர்களுக்குள் மிகவும் சிறப்புடன் விளங்கியவர்கள் மலைநாட்டு வில்வீரர். அவர்கள் சைனியம் போய்க்கொண்டிருக்கும்போது மதிவீரன் அமலாம்பாள் நின்ற உப்பரிகை யண்டை வந்ததும் கனகவல்லி எழுதிய கடிதத்தைத் தனது ஈட்டி முனையில்வைத்து மேலே நீட்டினான்.

அதைக் கண்டதும் சிரகத்தாமன் கோபங் கொண்டு ஏதோ மொழிந்தான். உடனே அவன் பக்கத்தில் நின்ற யாவகன், "சிரகத்தாமரே, கோபம் வேண்டாம். இளைஞன் தைரியசாலி, ஆனால் கெட்ட எண்ண முடையவனல்ல." என்றான். அப்போது அமலாம்பாள், "தினையளவு காரியத்தை மலையாக்கிவிடுகிறீர்கள். அது என் நிர்ப்பாக்கிய அத்தையிட மிருந்து வந்த கடிதம். அவள் கதி வருத்தத்துக் குரியதேனும் அவள் மட்டும் சந்தோஷமாயிருப்பதாகவே தெரிகிறது." என்று சொன்னாள்.

"காலாடி வில்லியன் மனைவி என்ன சொல்லுகிறாள்? வாசி கேட்போம்." என்றான் சிரகத்தாமன்.

துரதிர்ஷ்ட வசமாய் கனகவல்லி கள்வர் தலைவனின் கரத்தில் சிக்கிக்கொண்டபோதிலும், மன நிம்மதியை இழந்து விடாமல் சந்தோஷமா யிருப்பதாகவே தெரிந்தது. "என் கணவனைப் போலும் தைரியசாலிகள் இக்காலத்தில் கிடைப்ப தரிது. அவரிடம் குறைகளிருந்தபோதிலும், அவைகள் அவ்வளவு கேவலமானவை யல்ல. நீ மந்திர நாட்டினின்றும் தப்பித்துக்கொண்டு முல்லையூருக்கு வந்துவிட்டால் நன்றாயிருக்கும். இங்கே உன்னை மணப்

பத்து ஒரு பிரபு தயாராயிருக்கிறார். நீ வந்துவிட முயற்சி செய்வாயென்று நம்புகிறேன்,'' என்று கடிதத்தில் எழுதியிருந்தது.

பாலகனுடைய குல விருதுகளைப் போரில் தனது கணவன் அணிந்துகொள்ளப் போவதாகக் கனகவல்லி கடிதத்தில் குறிப்பிட்டிருந்த வசனத்தை வாசித்துக் காட்டவில்லை. காலாடி வில்லியனை மதிவீரன் கொன்று தன்னை யடையும் பாக்கியம் பெறுவானா என்று அமலாம்பாள் யோசித்தாள். அந்த முயற்சியில் அவன் வெற்றி பெறுவதற்குத் தன்னாற்கூடிய உதவி செய்வதென்று தீர்மானித்துக்கொண்டாள். கனகவல்லியின் கடிதத்தில் படிக்காமல் விட்ட பாகத்தை எழுதுகோலால் குறிப்பிட்டு ''பாலகனுடைய குல விருதுகளுக்கு அஞ்சாமல் எதிர்த்துத் திக்கற்ற இருமாதரைக் காப்பாற்றிய வீரசிகாமணி அதே விருதுகளை குரூரச்சிந்தையுடைய கள்ளப் பயலொருவன் அணிந்துகொண்டிருந்தால் அஞ்சமாட்டார் என்பது திண்ணம்.'' என்று அக்கடிதத்தில் தன் கைப்பட எழுதி சைனியங்கள் பரமனூரைவிட்டு வெளியே வருதற்குள் அது மதிவீரன் கையில் சேரும்படியாக ஏற்பாடு செய்தாள். அதைப் பெற்ற மதிவீரன் ஆனந்த சாகரத்திலாழ்ந்தவனாய் கீர்த்தியும் காதலும் ஒருங்கே கிடைக்கக்கூடிய வழி தன்னெதிரில் திறந்திருப்பதைக் கண்டான். காலாடியைக் கொன்றால்தான் அவன் எண்ணம் நிறைவேறும். போர் நிகழும்போது அவனைத் தெரிந்துகொள்வதற்கான இரகசியம் மதிவீரன் கையில் இருந்த விஷயம் அவன் நம்பிக்கையை தூண்டி மனோரதத்தை நிறைவேற்றுவித்தது.

காலாடி வில்லியன் போரில் செய்ய யோசித்திருந்த சூழ்ச்சி இருளன் மூலியமாய் மதிவீரன் கேள்விப்பட்டிருந்தான். அதனால் தன் பக்கத்து சேனை அழிவுற நேரும் என அஞ்சி அவன் சூழ்ச்சியைத் தனது எஜமானரிடம் தெரிவித்துவிட வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டான், விஜயசேனனிடம் மட்டும் அதைத

தெரிவித்தால் அவன் சில சமயம் சமரவர்மனுக்கு விரோதமாக நடந்துகொள்ளக்கூடும் என்றெண்ணி இருவரும் ஒரே இடத்தில் இருக்கும் சமயம் பார்த்துச் சொல்லவேண்டுமென்று நினைத்தான்.

இதற்கிடையில் சைனியங்கள் முல்லையூர் எல்லைப்புறம் போய்ச்சேர்ந்தன. வீரர்களிற் சிலர் ஆங்காங்கு சூறையாடிக் குடிகளுக்குத் துன்பத்தை விளைத்தமையால் முல்லையூர் வாசிகள் எல்லோரும் காலாடி வில்லியனுக்குச் சாதகமா யிருந்தனர். விஜயசேனன் வீரர்கள் இந்தச் சூறையாட்டத்தில் கலந்துகொள்ளாம லிருந்ததைக் கண்ட சமரவர்மன் மாதலநாட்டு வீரர் முல்லையூர் வாசிகளிடம் அனுதாபங் காட்டக்கூடும் என்று சந்தேகித்தான்.

கடைசியில் சைனியங்கள் முல்லையூர் கோட்டைக் கெதிரில் பாளைய மிறங்கின. பூபாலன் இருந்த கோட்டையை அழித்துவிட்டு, காலாடி வில்லியன் முல்லையூருக்குள் இருப்பதாகத் தெரிந்தது. போர் முகத்தில் எதிர்த்து சண்டை செய்வது விபத்தான காரியமென்று அஞ்சி வில்லியன் தன் சேனையை நகருக்குள்ளேயே வைத்திருந்தான்.

முல்லையூர் குடிகள் முற்றுகைக்கு ஆயத்தமா யிருந்தனர். மந்திரநாட்டு வீரரில் சிலர் முல்லையூரைச் சுலபத்தில் பிடித்துவிடலாமென்று நினைத்து பழுதுபட்டிருந்த நகர மதில்களின் ஒரு பக்கத்து வழியாய் நகருக்குள் பிரவேசிக்க முயன்றனர். ஆனால் அங்கேயிருந்த நகர வாசிகள் அவர்களை யெதிர்த்து அநேகரைக் கொன்று மீதி பேரைத் துரத்திவிட்டார்கள்.

சமரவர்மன் இச்செய்தியை அறிந்து கடுங் கோபங் கொண்டான். அம்பலவாணனும், சிரகத்தாமனும் சென்று முல்லையூரரை எதிர்த்துத் துரத்தித் தங்கள் மனிதரைக் காப்பாற்றினார்கள். நகர் அருகாமையில் ஒரு சேனையை வைத்து காவல் புரியும்படி

செய்தனர். பின்னர் அம்பலவாணன் திரும்பிவந்து மந்திரகோட்டைச் சைனியத்திலிருந்த குழப்பத்தை ஒருவாறு சீர் செய்தான். மழை பெய்து கொண்டிருந்தமையால் தங்குவதற்கு இடம் வசதியாயில்லை. ஆயினும் அம்பலவாணன் நகருக்கு வெளியிலிருந்த ஒரு பெரிய வீட்டை யமர்த்தி அதில் சமரவர்மனையும், அவனுடைய மெய்க் காப்பாளரையும் குடியேற்றினான். அதற்குக் கொஞ்ச தூரத்தி லிருந்த மற்றொரு வீட்டில் மாதவகோட்டை மன்னன் தனது வில்வீர ரோடு குடி புகுந்தான். மாதவகோட்டை வீரர்க்குள் அவ்வளவு குழப் பம் ஏற்படவில்லை.

விஜயசேனன் செய்யவேண்டியது இன்னதென்று தெரிந்து கொள்ளும் பொருட்டு சமரவர்மன் இருப்பிடம் சென்றான். அவர் களிருவரும் தனித்திருப்பதை யறிந்து மதிவீரன் ஒரு முக்கிய செய்தியைத் தெரிவிக்கவேண்டுமென்று அங்கே போனான். காலாடி வில்லியனுடைய சூழ்ச்சியைக் கேள்விப்பட்டு விஜய சேனன் ஆச்சரியமடைந்தனனேனும் அதைத் தன்னிடம் மட்டும் தெரிவித்திருந்தால் நன்றாயிருக்கும் என்று நினைத்தான். ஆனால் சமரவர்மனுக்கும் அது தெரிந்து விட்டபடியால், அவன், "நண்பா எனது வீரர் தங்கள் கேடயத்தின்மேல் வெண் துகிலை யணியும்படி உத்திரவு செய்துவிடுகிறேன். யானும்சென்று ஆயுத மணிந்து போருக்குத் தயாரா யிருக்கிறேன்." என்று—.

விஜயசேனன் தன்னில்லம் அடைந்ததும் உலகநாதனை யழைத் து, "கேட்டாயா சங்கதியை? வில்லியன் சூழ்ச்சியை சமரவர் மன் இருக்கும்போது மதிவீரன் சொல்லியிருக்கக் கூடாது. என் னிடத்தில் தனித்துச் சொல்லியிருந்தால் சமயத்துக்கேற்ப நடந்து கொள்ளலாமன்றோ!" என்று மொழிந்தான்.

"சமரவர்மருக்குத் தெரிந்திருப்பது நல்லதுதான். நம்ம வீரர்க்குள் அநேகர் அவரை எதிர்க்க, அல்லது வில்லியனோடு

சோர்ந்துகொள்ள சம்மதியார்கள்." என்று உலகநாதன் பதிலளித்தான். அரசனும் அவன் சொன்ன சமாதானத்தால் திருப்தியடைந்து சமரவர்மனுக்கு உதவியாய் நின்று போர் செய்வதே சரியென்றும், அச்சமயத்தில் சதியாலோசனை செய்வது கெடுதலாய் முடியு மென்றும் சொல்லி, "மதிவீரன் போர் நிகழும்போது நமது வீரர்க்குமுன் னணியில் இருக்கட்டும். வில்லியன் ஏற்பாட்டின்படி இரவில் இன்றிரவு எதிர்பாராத சமயத்தில் அவன் வீரர்கள் நம்மை எதிர்த்தால் மதிவீரன் முன் னணியிலிருந்து தன்னு பராக்கிரமத்தைக் காட்டி வெற்றி யடையட்டும்." என்று உத்தரவிட்டான்.

வீரர்கள் நடந்துவந்த அலுப்பினால் இளைப்பாறிக் கொண்டிருந்தார்கள். அநேகர் தூங்கிவிட்டனர். எங்கும் நிசப்தமா யிருந்தது. மதிவீரனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. காலாடி வில்லியனைக் குறிப்பாய் அறிந்து கொல்லும் மார்க்கம் தனக்கு மட்டுமே தெரியுமாதலால் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் இருந்த இடம் நகருக்கு அருகாமையில் எங்கும் இருளடர்ந்திருந்தபோதிலும் நகர் பக்கத்திலிருந்து ஏதாவது சத்தம் உண்டாகிறதாவென்று வெகு ஜாக்கிரதையாய் செவி சாய்த்துக் கேட்டுக்கொண்டிருந்தான். நடுச் சாமத்துக்குப் பிறகு மணி மூன்றாயிற்று. எங்கும் நிறைந்திருந்த நிசப்தம் கொஞ்சமேனும் குறையவில்லை. கடைசியில் நகரில் ஏதோ சத்தமுண்டா யிருப்பதுபோல் மதிவீரன் புத்தியில் பட்டது. உற்றுக்கேட்டான். அது ஜனங்கள் பேசுவதால் உண்டாகும் சத்தமென்று முதலில் நிச்சயமாய் சொல்லமுடியவில்லை. ஆனால் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சத்தமதிகரிக்கவே நகரினின்றும் வீரர் வெளியேறி, தானிருக்கும் பக்கமாய் வருவது போல் இருந்தது. உடனே அவன் பின்னோக்கிச் சென்று தனது மாதுலனாகிய வாகுசனிடம் தன் சந்தேகத்தைத் தெரிவித்தான்.

அச்செயற் கிடைகட்டு வீரர்கள் பாவலே எல்லோரும் யுத்த சன்னத் தராய் எழுந்து நின்றனர். கருணாகரன் தாசனை அச்சரிக்க ஓர் ஆளை அனுப்பிவிட்டு நிலைமை கவித்து நின்றான். மனிதர் கூட்ட மாய நடந்துவரும் ஓசை நன்றாய்க் கேட்டது.

கருணாகரனிடம் விடைபெற்ற மதிவீரன் ஓசைபடாமல் முன் னுக்குச் சென்று எதிரிகளின் நிலைமையைக் கண்டறிய முயன் ருன். எங்கும் ஒரே இருட்டா யிருந்தமையால் ஒன்றுமே தெரிய வில்லை. ஆயினும் அவன் சென்ற கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இரண்டு மூன்று மனிதர் எதிர்கொண்டு வருவதாகத் தெரிந்தது. அவர்களிடஞ் சிக்காமல் தப்புவது அரிதென மதிவீரன் உணர்ந் தான். ஆதலால் அவன், "நீ எப்பக்கத்தைச் சேர்ந்தவன்?" என்று கூவினான். ஆளிருப்பதை யறியாத அம்மனிதர் திகைத் திட்டு, "முல்லையூர்—மாதல நாட்டார் பக்கம்." என்று பதி லுரைத்தனர். உடனே மதிவீரன் முன் பின் யோசியாமல் தன் துப்பாக்கியை நீட்டிச் சுட்டு ஒருவனை வீழ்த்தவே, ஆங்காங்கு கடுஞ் சத்தங்கேட்டது. மதிவீரன் திரும்பிப் போய் நடந்தவற் றைக் கருணாகரனிடம் உரைத்தான்.

"நல்ல தைரியசாலி பையன் நீ! உன் வீரச் செயலை மெச்சி னேன். வீரரே, நம்மை எதிர்க்க வருபவர் தொகை யதிகமாயிருக் கும் போலிருக்கிறது. ஆதலால் நாம் கொஞ்சம் பின்னடைந்து வீட்டின் முற்றத்தில் நிற்போம்." என்றான் வீரர் தலைவன்.

அப்படியே அவ்வீரர்கள் போயினர். அங்கே விஜயசேனன் சமரவர்மனிடம் போக அசுவம் ஏறுந் தருணம்.

"அண்ணலே, எங்கே பயணம்? தங்கள் மனிதர் மத்தியில் இருப்பதே தங்களுக்குச் சுகம். மற்ற இடங்கள் ஆபத்தானவை." என்றான் கருணாகரன்.

"நான் உடனே சமரவர்மனைப் போய்க் காணவேண்டும். எனது நல்லெண்ணம் அவனுக்கு நிச்சயமாய்த் தெரியவேண்டும். இல்லையேல் முல்லையூர் வீரரும் மந்திர நாட்டாரும் நம்மை எதிர்க்கச் சேரினும் சேரலாம். பாவலா, நமது சைனியத்தை நடத்து. கருணாகரரே இந்த வீட்டை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்." என்று உத்திரவிட்டு குதிரைமேல் ஏறிக்கொண்டு புறப்பட்டான்.

மதிவீரன் செய்த வேலையால் எதிரிகளிடையில் ஏற்பட்ட குழப்பத்தினிமித்தம், அவர்கள் உடனே முன்னேறிவரக் கூடுமாயில்லை. மதிவீரன் முதலில் வந்தவனைச் சுட்டிராவிட்டால், வில்லியன் ஆட்கள் விஜயசேனன் இருந்த வீட்டைத் தாக்கியிருப்பார்கள்.

சண்டையாரம்பித்தது. மந்திரநாட்டுச் சேனையின் ஒரு பாகம் போரிற் கலந்தது. முல்லையூரார் அரசன் இல்லத்தைத் தாக்கினார்கள். "முல்லையூர்", "சாலாடி" "மாதலநாடு" என்று பல விடங்களிலும் சத்தங் கேட்டது. மந்திரநாட்டார் இந்தச் சத்தத்தைக் கேட்டுத் திகைக்கலாயினர். சமரவர்மனுக்குக் கோபம் பிறந்து மாதலநாட்டாரைக் கொல்லும்படி உத்திரவிட்டான்.

ஆனால் அரசனும் சில வீரரும் சமரவர்மன் இருப்பிடத்துக்கு வரவே, சந்தேகம் நிவர்த்தியாகி, நம்பிக்கை யுதித்தது. மந்திர நாட்டுச் சேனை வெகு கடுமையாய்ப் போர் புரிந்தது. சமரவர்மனும் சமயாசமயங்களில் போரிற் கலந்து சாதாரண வீரனைப் போல் சண்டை செய்தான்.

அப்போது அங்கே தோற்றிய காட்சி பயங்கரத்துக்குரியது. இடது பக்கத்தில் நகரின் வெளிப்புறத்திலிருந்தவை யனைத்துந் தீக்கிரையாயின. மத்திய பாகத்தில் மாதல நாட்டார் எதிர்த்துப் போர் செய்துகொண்டிருந்தார்கள். முல்லையூரார் அவர்களை மேற்கொள்ள முடியாமல் தவித்தனர். இருபக்கத்திலும் வெற்றிதோல்

வியின்றி விடியுங்காலையும் போர் பலமாக நடந்தது. விடியுந் தருணத்தில் முல்லையூரார் எதிரியின் தாக்குதலைச் சகிக்கமாட்டாமல் பின்னடைவது போலிருந்தது.

விஜயசேனன் மதிவீரனைப் பார்த்து, "நமது சேனை முன்னேறிப்போகிறது. சைனியத்தின் ஒரு பாகத்தை நடத்திச் சென்று முல்லையூர் சேனை ஊருக்குள் போகாவண்ணம் தடுக்கும்படி ஏற்பாடு செய்தல் வேண்டுமெனப் பாவகனிடஞ் சொல்." என்று கட்டளையிட்டான்.

அரசனாக்ஞையைச் சிரமேற்கொண்டு பாவகனும் கருணாபரனும் சேனையை நடத்தி, மந்திரநாட்டாரை எதிர்த்துக் கொண்டிருந்த முல்லையூர் வீரரைப் பின்பக்கமாய்த் தாக்கினார்கள். பொழுது புலர்ந்தது. முல்லையூரினின்றும் சேனைகள் இன்னும் வந்துகொண்டிருப்பதாகத் தெரிந்தது.

"ஆ, என்ன சொல்வேன்! என் பக்கத்தில் இல்லாவிட்டால், நீ முல்லையூர் வீரரோடு கலந்துகொண்டிருப்பதாய் நினைப்பேன். உன்னைப்போல் தோன்றுபவன் பருத்த தேகத்தையுடையவனாயிருப்பதும் சந்தேகத்தை நீக்கும்." என்றான் கருணாபரன்.

"அப்பாதகன் தன் கேடயத்தில் எனது முகவிருதைத் தீட்டியிருக்கிறான். அப்பயலை என்ன செய்கிறேன் பார்." என்றான் பாவகன். அப்போது பக்கத்திலிருந்த மதிவீரன், "பழிவாங்கும் வேலையை எனக்கு விட்டுவிடும், ஐயா." என்றான்.

"உனக்கா, இளைஞா? நல்ல வேண்டுகோள்தான்! அக்கள்ளப் பயலை நானே கண்டிக்கவேண்டும். மாதலநாட்டு வீரரே, அதோ வரும் காலாடி யாட்களைத் தாக்குங்கள்." என்று பாவகன் ஏவினான்.

அப்படியே காலாடி யாட்களுடன் மாதலநாட்டு வீரர் சண்டை செய்தனர். எதிரிகளின் வரிசை சுவர்போல் நின்றது. மாதலநாட்டாரால் அதை உடைக்க முடியவில்லை. பாவகன் தன் குதி

ரையைத் தட்டிவிட்டு அவர்களோடு பொருதான். வரிசையைத் தாண்டி வில்லியனாட்களுக் கிடையில் புகுந்து கடும் போர் நிகழ்த்தினான். திரும்பிப் பார்க்கையில் மதிவீரன் தன் பக்கல் நின்று போர் புரிவதைக் கண்டாச்சரியமுற்றான்.

அவ்விரு வீரருடையவும் ஈட்டிகள் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் முறிந்துவிட்டன. உடனே வாளாயுதத்தை யெடுத்துக்கொண்டு கடும்போர் விளைத்து அநேகரை வீழ்த்தினர். பாலகனுடைய விருதுகளை யணிந்திருந்த மனிதன் நின்ற இடத்துக்குப்போக முயன்றனர். "மதிவீரா, உன் வேலையைப் பார். வாருசா, அப்பயலை விடாதே. ஆனால் என் விருதை யணிந்து கொண்டிருப்பவனை நானே எதிர்ப்பேன்." என்று கூவினான் பாலகன். அப்படியே மதிவீரனும் வாருசனும் செய்தார்கள்.

அச்சமயத்தில் மந்திரநாட்டாரை எதிர்த்துக்கொண்டிருந்த முல்லையூர் சேனை முறியடிக்கப்பட்டது. அதனுதவிக்காகவே காலடி வில்லியன் தனாட்களைக் கொண்டுவந்தது. முறியடிக்கப்பட்ட சேனை மாதலநாட்டாரை எதிர்த்தது. இதனால் ஏற்பட்ட குழப்பத்தில் எல்லோரும் நகர் பக்கமாய் நகர்ந்துகொண்டிருந்தனர். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் கோட்டை மதிலிலிருந்த பிளவின் வழியாக இருதரத்தாரும் சண்டை செய்த வண்ணமாக நகருக்குள் புகுந்தார்கள்.

இந்தக் குழப்பத்தில் மதிவீரன் எப்படியாவது தான் எண்ணிய கருமத்தைச் சாதிக்க வேண்டும் என்னும் கருத்துடன் பாலகன் விருதை யணிந்திருந்தவனை நெருங்க முயன்றான். பிளவுக்குள் புகுந்து போகுந் தருணத்தில் விருதணிந்த வீரனாகிய காலடி வில்லியன் சற்றே நின்றான். அவன் சரீர முழுதும் குருதியில் தோய்ந்திருந்தது. அவன் கையில் பெரிய தண்டத்தைப் பிடித்திருந்தான். அதனால் தன்னை எதிர்ப்போரை அடித்துச் சாய்த்த வண்ணம் அதைச் சுழற்றிக்கொண்டே யிருந்தான்.

அப்போது மதிவீரன் தன் குதிரையை விட்டிறங்கி, கையில் பிடித்த வாளுடன் வில்லியனை நெருங்கி, எதிர்க்கப் போகுந் தருணத்தில், ஒரு பேரிரைச்சல் கேட்டது. என்னவென்று பார்க்கும்போது, முற்றுகை போட்டிருந்த பாளையத்தின் பெரும்பாகம் கோட்டையின் மற்றொரு பக்கமாய் நகருக்குள் புகுந்துவிட்டதாகத் தெரிந்தது. காலாடி வில்லியன்பாடு கஷ்டமாய்விட்டது. அவன் தன்னாட்களை யழைத்துக்கொண்டு நகரின் மற்றொரு பாகத்துக்குச் சென்று மாயாவழி கதியிலிறங்கித் தப்பித்துக் கொள்வதெனத் தீர்மானித்தான். அவனருகிலிருந்த ஆட்கள் தமது தலைவனுக்கு யாதொரு விபத்தும் நேராவண்ணம் பொருது கொண்டிருந்தார்கள். காலாடி வில்லியன் தப்பித்துக் கொண்டிருப்பான். ஆனால் அவனையே இலக்காகக் கொண்டு துரத்திவந்த மதிவீரன், வாகுசன் முதலியோர் தப்பிப்போக விடுவாரா? மலைநாட்டினருளோடு தனியாகச் சண்டையிட இடங்கொடுக்கவில்லை. எங்கும் ஒரே குழப்பமாயிருந்தது. நகருக்குள்ளிருந்த பெண்பிள்ளைகள் கூக்குரலிட்டுக்கொண்டு பலதிக்குகளிலும் ஓடினர்.

காலாடி வில்லியனும் மலைநாட்டு வீரரும் போர்செய்த வண்ணம் போய்க்கொண்டிருந்த தெருவின் பின்கோடியில், “மாதவநாடு.” “மந்திரநாடு” என்று கூவுஞ் சத்தங்கேட்டுக் கள்வர் தலைவன் திகைத்திட்டான். அவன் தப்ப மார்க்கமில்லையென்று தெரிந்ததும் தன்னாட்களைப் பார்த்து, “தோழரே, எப்படியாவது தப்பியோடி பிழையுங்கள். நான் தப்பமுடியாது. காலம் நெருங்கிவிட்டது. நான் சாகுமுன் மலைநாட்டுப் பயல்களில் சிலரையேனும் நமனுக் கிரையாக்குவேன். ஏ, மலைநாட்டுப் பயல்களா! வாருங்கள் பார்ப்போம். இளைஞா, ஏது என்னையே தேடிவருவது? வா, தனிமையிற் போர்புரிவோம்!” என்று மதிவீரனைப் பார்த்துக் கூவினான்.

உடனே மதிவீரனும் காலாடியும் கை கலந்தனர். கள்வர் தலைவன் தண்டாயுதத்துக்குத் தப்புவ தருமையென்று நினைத்தனர்.

ஆனால் மதிவீரன் வெகு சாமர்த்தியமாக அவனடிகளை விலக்கிக்கொண்டு தனது வாளினால் அவனை இரண்டு மூன்று விடங்களில் குத்திக் காயப்படுத்தினான். இவ்வாறு வெகு நேரம் இருவரும் பொருதனர். கடைசியில் காலாடியின் பலங்குன்ற ஆரம்பித்தது. தேகத்தில்பட்ட காயங்களால் நேர்ந்த இரத்த நஷ்டத்தின் பலனாய் அவனின்ற இடம் இரத்தப் பிரவாகமாயிருந்தது. ஆயினும் போரில் இளைக்கவில்லை. மதிவீரன் வெற்றி நிச்சயம் என்று சொல்வதற்கில்லை. அச்சமயத்தில், "ஐயோ, ஐயோ!" என்னும் ஒரு பெண்பிள்ளையின் கூச்சல் நமதிளைஞன் செவியில் வீழ்ந்தது.

அவன் திரும்பிப் பார்த்தான். ஒரு காலத்தில் தனக்கு உதவி செய்த பசுபதியின் குமாரத்தியாகிய தருமவதி யென்னும் இளநங்கை ஒரு வீரன் கையில் சிக்கித் தவிப்பதைக்கண்டு, மதிவீரன், "ஏ, சற்று நில்." என்று தருமவதியை மீட்க வோடினான்.

"உன் இஷ்டப்படி நான் நிற்பேன் என்று நினைக்கிறாயோ?" என்று கள்வர் தலைவன் விட்டது போதுமென்னும் எண்ணத்துடன் தப்பியோட முயன்றான்.

அப்போது வாகுசன், "ஓ, ஓ, இதுதான் சமயமென்று ஓடப் பார்க்கிறாயோ? நானிருக்கிறேன் உன்னோடு போர் செய்ய. என் மருகனே இந்த வேலையைச் செய்து முடித்தால் நன்றாயிருக்கும்." என்று வில்லியனை எதிர்த்தான்.

தருமவதியை மீட்பது அவ்வளவு சுலபமான காரிய மல்லவென்றறிந்து, காலாடி வில்லியனைத் தன் கையால் கொல்லும் சந்தர்ப்பந் தவறிவிட்டதற்காக மதிவீரன் துக்கித்தான். கடைசியில் தருமவதியை மீட்டதும், அவன் காலாடியின் மேற் பாய எத்தனிக்கையில், தருமவதி, "ஐயா, என்னைத் தனியே விட்டுப் போகாதீர். உம

க்கும் உமது காதலி அமலாம்பாளுக்கும் ஒரு காலத்தில் அடைக்கலந் தந்த என் வீட்டிற்குக் கொண்டுபோய்விடும்." என்று மன்றாடினான்.

மதிவீரனால் மறுக்க முடியவில்லை. தன் நம்பிக்கை வீணாயிற்றே என்னும் வருத்தம் நிறைந்த மனத்தனாய்த் தருமவதியை யழைத்துக்கொண்டு பசுபதியின் வீட்டை நோக்கிநடந்தான்.

---

## அதிகாரம் 31.

### சன்மானம்.

இதற்கிடையில் விஜயசேனனும், சமரவர்மனும் நகருக்குள் புகுந்த சூரை யிடுவதை நிறுத்தி, பலதிக்குகளிலுஞ் சிதறியிருக்கும் சேனைகளை ஒன்று சேர்க்கும்படிக் கட்டளை யிட்டனர். பின்னர் இருவரும் மேற்கொண்டு என்ன செய்வதென ஆலோசிக்கும் பொருட்டு, நகர மாளிகைக்குச் சென்றனர்.

கருணாபரன் தன் வீரரைச் சேர்த்துக்கொண்டு வருகையில், நதியை நோக்கிச் செல்லும் வீதியில் வாகுசனைக் கண்டான். அவன் கையில் மனிதன் சிரமொன்றைப் பிடித்துக் கொண்டு நதியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

"ஏ, வாகுசா, என்ன செய்கிறாய்?" என்றான் கருணாபரன்.

"என் மருகன் ஆரம்பித்து அநேகமாய் முடித்துவிட்ட வேலையை நான் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறேன். இப்பயல் சாகுமுன் தன் சிரத்தை மாயாவதியில் எறிந்து விடும்படி கேட்டுக்கொண்டான்." என்று வாகுசன் பதிலளித்தான்.

கருணாபரன் அந்தத் தலையை யுற்று நோக்கினான். "அந்தத் தலையின் மர்மம் உனக்குத் தெரியாதுபோலும்! அதை ஆற்றில் எறிந்து விடாதே. ஒன்றும் பேசாமல் அதை யெடுத்துக்கொண்டு என்பிறகே வா." என்றான்.

விஜயசேனனும் சமரவர்மனும் நகர மாளிகையில் சண்டையின் போது விசேஷ விதமாய் சாமர்த்தியங் காட்டிப் போர் புரிந்தவர்களைச் சன்மானிக்கும் பொருட்டு விசாரணை செய்து கொண்டிருந்தனர். அநேகர் அமலாம்பாளையும் அவளுடைய சொத்துச் சுதந்தரங்களையும் அடையும் எண்ணத்துடன் போரில் தாம் நிகழ்த்திய வீரச் செயலை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தனர். சிரகத்தாமன் கள்வர் தலைவன் அணிந்திருந்த ஆயுத மொன்றை யடையாளமாய்க் காட்டினான். பாவகன் அவனுடைய கேடயத்தை வைத்துக் கொண்டு தனதுரிமையை எடுத்துச் சொன்னான். ஆனால் காலாடி வில்லியன் கதி என்னாயிற்றென்று எவராலுஞ் சொல்ல முடியாமல் தவித்தனர்.

அப்போது கருணாபரன் அங்கே கூடியிருந்த கும்பலை விலக்கிக் கொண்டு வாகுசனுடன் வந்து நின்று, "வீண் பேச்சு என்னத்திற்கு? காலாடியைக் கொன்றவனே அவன் சிரத்தைக் கொணர்ந்து காட்டக்கூடும்." என்று வாகுசன் வைத்திருந்த தலையை வாங்கி அவர்கள் எதிரில் எறிந்தான். உடனே எல்லோருந் திடுக்கிட்டெழுந்து பார்த்து கீழே கிடப்பது காலாடி வில்லியன் சிரமேயெனத் தெரிந்து கொண்டனர்.

சமரவர்மன் ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருந்தான். விஜயசேனன், "கருணாபரரே, இச் சிரத்தைக் கொணர்ந்தது நமது வில்வீரரில் ஒருவன்தானே?" என்று கேட்டான்.

"ஆம், அண்ணலே. நமது வாகுசன்தான்!" என்று பதிலளித்தான்.

சமர :-ஆனால் அவன் உயர்குலத்தோன்றானா? அவன் பிரபு வம்சமாயில்லாவிட்டால், நான் கொடுத்த வாக்குறுதி பயனற்றதாகும்.

கருணா :-வாருசன் பார்ப்பதற்கு விகாரமாயிருந்த போதிலும், அவன் பிரபு குலத்தைச் சேர்ந்தவன் என்பதுண்மை. அவன் வம்சம் மாதல மந்திரநாடுகளின் பிரபு குலங்களுக்கு எவ்விதத்திலும் குறைவானதல்ல.

சமர :-நல்லது, வேறு மார்க்கமில்லை. மந்திர நாட்டில் சிறந்த வம்சத்தி லுதித்த மாதரசி அந்த வீரனை விவாகஞ் செய்துகொள்ள வேண்டியதுதான். நான் சொன்ன சொல் தவறலாகாது.

கருணா :-தயவுசெய்து மன்னிக்கவேண்டும். நான் செய்திருக்கும் ஏற்பாடு எல்லோருக்குந் திருப்தியளிக்கக் கூடியது. என் யோசனையின்படி வாருசன் தன் உரிமையை தன் மருகனுக் களித்துவிட்டான். மேலும் காலாடி வில்லியனை எதிர்த்து வாருசனிடஞ் சிக்கும்படி செய்தது மதிவீரனே. விலக்கக் கூடாத அசந்தர்ப்பமொன்று நேர்ந்திரா விட்டால், அவனே கள்வர் தலைவனைக் கொன்றிருப்பான். மதிவீரனும் உயர்குலத் துதித்த உத்தம வீரனே.

விஜய :-மதிவீரனா? அவனைப் போலும் பராக்கிரமசாலியை நான் கண்டதில்லை. அவனுடைய முன் ஜாக்கிரதையே நம்மைக் காப்பாற்றிற்று. இரவில் நிகழ இருக்கும் எதிரியின் சூழ்ச்சியை நமக்குத் தெரிவித்து நம்மை எச்சரித்தவன் அவனல்லவா?

சமர :-அப்படியானால் நான் இதுகாறும் அவன்மேல் சந்தேகங் கொண்டது அநீதியாகும்.

பாவகன் :-அவன் ஒப்புவமையில்லாத சுத்த வீரன் என்பதற்கு நானே சாட்சி.

சிரக:-அதிர்ஷ்டமும் அவன் பக்கமாகவே இருந்துவந்திருக்க, அதற்கு மாறாய் நாம் நடப்பது பயனற்றதாகும்.

சமர:-இந்த வீரன் மட்டில் அமலாம்பாள் என்ன அபிப்பிராயத்தை உடையவளாயிருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அதற்கு முன் நாம் ஒன்றுந் தீர்மானித்து விடலாகாது.

சிரக:-அண்ணலே அதைப்பற்றி நமக்கு கவலை வேண்டியதில்லை. இவ் வாலிபனை மணந்து கொள்ளும்படி நீங்கள் ஆக்கியாபித்தால் அவள் மாட்டேன் என்று சொல்லப் போகிறதில்லை. பழம் நழுவிப் பாலில் விழுந்ததென்று சந்தோஷமாக உங்கள் கட்டளைக்குப் பணிந்து நடப்பாள் என்பது திண்ணம். மலைநாட்டிளவலாகிய மதிவீரன் தன் மனதுக் குகந்த மாதர் திலகத்தை யடையப் போகிறான். இனி யதைப்பற்றி நான் என்ன சொல்லக் கிடக்கிறது? புத்தி சாதுர்யமும், மனத்திடனும், வீரச் செயலுமே, செல்வம், உயர்பதவி, வனப்பு ஆகிய நல்வரங்களை மதிவீரனுக் களித்தன. ஆகவே அவனும் அவன் வெகு காலமாய்க் காதலித்து வரும் ஆரணங்கும் கூடிய சீக்கிரம் மணக்கோலம் பூண்டு மலரும் மணமும்போல், மணியும் ஒளியும்போல் பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்வார்களாக!

(முற்றிற்று.)